Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 117 | சர்வதேச மின் செய்தித்தாள் | மார்ச் 15 2026

# ஈகைத்தீபினில் வந்தமர்ந்தாள் ஒரு செந்தமிழ் மாது



## 19.03.1988 அன்று
# அன்னை பூபதி
## உண்ணா நோன்புப் போராட்டம் ஆரம்பித்த நாள்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Ontario Auto Tech
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட
என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
Please call & book an appointment before visiting... I will provide the adress after booking.....
437 423 5460
Silverprinthouse@gmail.com

உங்கள் விருப்பத்திற்கேற்ப
வீடு, வியாபாரம் வாங்க, விற்க
நம்பிக்கையுடன் நாடுங்கள்
ST
THINKING OF BUYING OR SELLING
Suresh Theivendram
Broker
416.890.7179
realtorsuresh@outlook.com

RIGHT AT HOME REALTY INC. RealtorGroup
JEY RASATHURAI
MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
MORTGAGE ALLIANCE
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers @
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca


## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**சீற்றங்கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# உன் மரணம் எம்மில் புது மூச்சாய்!

## லெப். இமெல்டா




இமல்டா!

ஒ என் இனிய தோழி! தமிழீழ விடுதலைப் போரில் உதிர்ந்து விட்ட புனித மலர்களில் ஒன்றாக நீயும் இணைந்து விட்டாயா? மலரவிருக்கும் தமிழீழம் எப்படி யெல்லாம் இருக்கவேண்டு மெனக் கனவு கண்டாய். உன் ஆசையெல்லாம் நிறைவேற முன்னரே உன் கனவுகளிற் குக் கரும்புள்ளி வைத்து உன்னை எம்மிடமிருந்து பிரித்த அந்தப் பாதகர்கள் யார்?

எமது இனத்தின் எதிரிகளான இனவெறி பிடித்த சிங்களக் கைக் கூலி இராணுவத்தினரா? அப்படியானால் கூட எமது மனம் கொஞ்சம் ஆறுதல் அடைந்திருக்கும் கனத்தில் எதிரிகளுடன் மோதி நீ கொண்ட இலட்சியத்திற்காக உன்னைத் தியாகம் செய்திருக்கின்றாய் என்று. ஆனால் எமது இரட்சகர்கள் என்ற போர்வையில் எமது மண்ணில் காலடி வைத்தவர்களின் தூரோகக் கரங்களினால் உன் கதை முடிக்கப் பட்டுவிட்டது என்பதை எண்ணும் போது என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை. உனது இறப்பில் உலகின் நான்காவது பெரிய இராணுவம் என்னதான் திருப்தி யைக் கண்டதோ?

என்றும் எமது போராட்டத்திற்காகக் குரல் கொடுக்கும் தமிழகத் தைக் கொண்டது இந்தியா உலகின் நான்காவது பெரிய இராணுவப் படை கொண்டது இந்தியா கண்ணியமான வீரர்களைக் கொண்டது இந்தியா என்றெல்லாம் நாம் அறிந் திருந்தோம். கடைசி விஷயம் எமது தவறான கணிப்பீடு என்பதைக் காலம் இப்போது எமக்கு உணர்த்தி யிருக்கிறது.

உன் மரணம் ஒன்றை மட்டும் எமக்குப் புலப்படுத்துகின்றது. “நேர் மையான எதிரியை விட வஞ்சகமான நண்பர்கள் ஆபத்தானவர்கள்.”

உன் நினைவுகளை என்னால் மறக்க முடியுமா? கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு போராளி இறுகிய மன முடையவனாக இருக்க வேண்டும். அப்போது தான் எல்லாவற் றையும் தாங்கிக் கொள்ளும் சக்தியை அவள் பெற்றிருப்பாள் என்று சிலர் நம்புகின்றார்கள். உண்மையில் மென்மையான இதயத்தைக் கொண்டவர்கள்தான் போராளிகள் எனப்படு வோர். தனது இனத்திற்கு இழைக்கப்படும் கொடு மைகளைக் கண்டும் அதைச் சகித்துக்கொள்ளும் கடினமான மனது இல்லாதவர்களே போராளிகளாகிறார்கள். மென்மையான மனதைக் கொண்டவர்கள் என்பதாலேயே நாம் எல்லாம் இணைந்து கொண்டோம்.

“பயிற்சியை முடித்துக் கொண்டு செல்லும் எம்மை சமூகம் சாதா ரண பெண்களாகப் பார்ப்பது கிடையாது. இப்படியான இழி நிலையைப் போக்கி எமது இலட்சியப் போராட்டத்தின் பங்காளிக ளாகத் தமிழீழப் பெண்கள் அனைவரையுமே மாற்ற வேண் டும். இது படிப்படியாகத் தான் சாத்தியமாகும். ஆனால் எப்படியும் இதை நடைமுறையில் நடத் திக்காட்ட வேண்டும்” என்றெல் லாம் அடிக்கடி கூறுவாயே. அதையெல்லாம் எண்ணிப் பார்க் கிறேன். உன் கனவுகள் நிஜமாகி வருகையில் நீ..

வலிமையை அகிம்சைப் போராட்டங்கள் மூலம் விடுதலை அடைந்து இன்று மகத்துவத்தை மறந்திருக்கும் பாரத நாட் டிற்கே அகிம்சைப் போராட்டத்தின் வலிமையை உணர்த்தியி ருக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உணர்த் தியிருக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த அத்தனை ஊர்வலங்களிலும் மறியல் போராட்டங்களிலும் தமிழீழப் பெண்களின் எழுச்சிமிகு பங்களிப்பைக் கண்டு உலகமே வியக்கிறது. உலகத்திலேயே தண்ணீர் கூட குடிக் காமல் உண்ணா நோன்பிருந்து தியாகியான முதல் பெண் பூபதி கணபதிப்பிள்ளை என்ற தமிழீழப் போராளிதான். அதே போல் வீரத்திலும் கூட (ஆயுதப் போராட்டத் தில்) நாம் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை வரலாறாக்கி விட்டோம்.

முறத்தால் புலியை விரட்டியவள் தமிழ்ப் பெண் என்று புற நானூறு கூறுகிறது. அது நடந்ததோ என்னவோ ஆனால் புலியாகவே மாறித் தம்மை எதிர்ப்பவர்களை புறமுதுகு காட்டி ஓடவைத்தவர்கள் தமிழீழப்பெண்கள் என்று புதிய காவியம் படைக்கப்படுகின்றது.

உன்னை நினைக்கையில் எமது நினைவுக்கு வருவது உனது சிரிப்புத் தான். நீ சிரிக்கத் தொடங்கினால் தொடர்ச்சியாகவே சிரிப்பாய். எனிதில் நிறுத்த மாட்டாய். இதற்கா சுவே “ஜென ரேற்றர்” என்று அழைப் போம் உன்னை. அந்த “ஜெனரேற்றர்“ சிரிப்பை பார்க்கவோ கேட் சுவோ முடியாத இடத்திற்கு போய் விட்டாயே நீ.

பள்ளிச் சீருடையுடன் வீட்டிலிருந்து புறப்பட்ட உனது வரலாறு இராணுவச் சீருடையுடன் முடிந்து விட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்காளியாக வேண்டும் என்ற ஆவலுடன் யாழ்ப்பாணத்தின் குருநகர்ப் பகுதியில் மத்தியதர குடும்பத்திலிருந்து வந்து இயக்கத்தில் இணைந்து கொண்ட வள் நீ நீயும் நானும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவர் வீட்டில் தான் முதன் முதலில் அறிமுகமானோம். எங்களைப் போலவே வேறு சில பெண்களும் அங்கே வந்து எம்முடன் இணைந் தனர். விரைவில் பயிற்சிக்காகக் கூட்டிச் செல்லப்படுவோம் என்ற செய்தி கிட்டியது. இது எமது மகிழ்ச்சியை அதிகரித்தது.

“பயிற்சி பெற்றுத் தமிழீழத்தில் ஆயுதம் தாங்கிப் போராடப் புறப் பட்ட முதல் பெண் போராளிகளா சுத்திகழ்வோம் நாம் தமிழீழத்தை மீட்டெடுத்து எமது வருங்காலச் சந்ததியினர் தலை நிமிர்ந்து வாழ வழி சமைப்போம்.” இப்படியான இனிமையான கனவுகள் உடன் பயிற்சி முகாம் நோக்கிப் புறப்பட்டோம். தமிழீழ விடுதலைக்கான இயக்கமென்று எண்ணிப் பெரு மைப்பட்டு நாம் இணைந்த இயக்கத்தின் சகோதரிகள் விடு தலைப் பாதையிலிருந்து விலகியிருக்கின்றார்கள். எமது எதிரியைத் தவறாக இனம் காட்டுகிறார்கள் என்ற உண்மை முகாம்களிற்கு வந்த பின்பு தான் எமக்குப் புரிந்தது. ஆம்! நாம் இனைந்து கொண்டது விடுதலைப் புலிகள் அமைப்பில் அல்ல. தமக்குத் தெரியாமலே சமூக விரோதக் கும்பல் ஒன்றில் சேர்ந்து விட்டோம். பயிற்சி முகாமில் தமது எதிரிகள் விடுதலைப் புலிகள் என்றே எமக்குப் போதித் தார்கள். தமிழீழ விடுதலையைத் தவிர ஏனைய விடயங்களில் தான் கூடிய அக்கறை செலுத்துகிறார்கள் என்ற உண்மை எமக்குத் தெரியவந்ததும் எமக்கு அதிர்ச் சியாகவே இருந்தது. ஆனால் நாங்கள் தமிழீழப் போராட் டத்தின் பங்காளிகளாக வேண்டுமாயின் உண்மையான, ஒரு தெளிவான தலைமையின் கீழ் தான் அணிதிரள வேண்டு மென்பதில் உறுதியாக இருந்தோம். அதனால் அந்த அமைப் பிலிருந்து விலகி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகொண்டோம். எமது நிலையை விளக்கி னோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடன் நாம் சந்தித்து உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஏற்கனவே இடம் பெற்ற போராட்ட அணுகுமுறைகள் சம்பந்தமாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு சம்பந்தமாகவும் எமக்கிருந்த சில சந்தேகங் களைக் கேட்டோம். அவரும் விளக்கமாகப் பதிலளித்தார். “இந்தப் போராட்டத்தில் நீங்கள் கஸ்டத்தையும் பட்டினியையும் தான் சந்திக்க வேண்டியிருக்கும். பயிற்சிகளோ மிகக் கடுமை யாக இருக்கும். ஆனால் இவை யெல்லாம் எமது எதிர்காலச் சந்ததியினரின் நலனிற்காகவே என்பதை நாம் உறுதியாக நம்பினால் இவை எல்லாம் ஓர் அற்ப விசயமாகவே இருக்கும். எதற்கும் சிந்தித்து முடிவெடுங்கள். எங்களைப் பொறுத்த வரை விடுதலைக்காகப் புறப்பட்ட எந்தப் போராளியையும் நடுத்தெரு வில் விட நாம் தயாரில்லை” என்று கூறினார். அத்துடன் உலகத் தின் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்ற விடுதலைப் பெண்கள் போராட்டங்களில் சாதித்த சாதனைகள் என்னென்ன வென்பதையும் எடுத்துரைத்தார்.

தலைவருடனான சந்திப்பிள் பின் நாம் புது உற்சாகம் மிகுந் தவர்களாகக் காணப்பட்டோம். “நாளை கூறும் முடிவும் இது வாகத்தானிருக்கும். அதை இன்றே கூறுகிறோம். எந்தக் கஸ்டத்தையும் சந்திக்க நாம் தயாராகவே இருக்கின்றோம்” என்று உறுதியாகக் கூறினோம்.

இதை அடுத்து தமிழீழ விடுத லைப் புலிகளின் பயிற்சி முகாமில் தான் எத்தனை விதமான அனுபவங்கள். அந்த இனிமையான நாட்கள் எமது நினைவில் என்றும் பசுமையானவையே!



பயிற்சியின்போது இராணுவ ரீதியாக ஆண்களிற்கு நாங்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்தோம். முகாமில் குறும்புச் செய்கைகள் மூலம் நீ இருக்கும் இடத்தையே கலகலப்பாக்கி விடுவாய். முகாமில் எம்மிடையே சின்னச் சின்னப் பிரச்சினைகள் வரும்போது அங்கே சமரசம் செய்வதற்கு நீ தோன்றி விடுவாய். எமது முகாமிற்குத் தேவையான சாப்பாடு மற்றும் பொருட்கள் எமது முகாம் அமைந்திருந்த ஒரு குறிப்பிட்ட இடத்தை வாகனத்தின் மூலம் வந்தடையும். அங்கிருந்து அவற்றை நாமே சுமந்து செல்லவேண்டும். அப்போது எல் லாம் எமது வேலையில் கடினம் தெரியாமலிருப்பதற்காகவே "ஜோக்" அடித்துக்கொண்டே வருவாய், உனது கலகலப்பான போக்கினால் எமது வேலை கடினமான தாகத் தோன்றாது.

ஒரு முறை எம்மால் வெட்டப் பட்ட சுமார் 20 அடி ஆழமுள்ள கிடங்குக்குக் கீழே இருந்த வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட கல்லொன்றை வெளியே எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது மிகவும் பெரியது. பாரமானது. "இதைத் தூக்க நான் எனது பையன்களை அனுப்புகிறேன்." என பொன்னம்மான் சொல்லவே "இது எம்மால் முடியும்" என நீ பொன்னம்மானி டம் சொன்னாய் "இல்லை முடியாது. இதற்குப் பையன்கள் தான் என பொன்னம்மான் கூறியபோது அவர் எம்மைச் சோதிக்கத்தான் கூறுகிறார் என்று தெரிந்து இதை ஒரு சவாவாகவே ஏற்று நாங்கள் அதை வெளியே கட்டி இழுத்தெடுத்தோம். அப்போது எமக்கு ஏற்பட்ட பூரிப்பு! -ஒரு குழந்தையைப் போல் பொன்னம்மானின் முன்னால் "எப்படியம்மான் எங்கட வேலை?" என்று குதூகலித்து ஆர்ப்பரித்தாயே அது இன்றும் என் நினைவில் உள்ளது.

முகாமில் ஒரு கடினமான உழைப் கலகலப்பான பாளியாய், ஒரு போராளியாய், ஒரு சிறந்த நடிகையாய், அருமையான சமையல்காரியாய். குறிதவறாது துப்பாக்கி சுடுவதில் தேர்ச்சி பெற்றவளாய் இப்படிப் பல்வேறு வகையிலும் நீ முதன்மையானவளாகத் திகழ்ந்தாய். R.P.G (ராக்கட் லோஞ்சர்) பிரயோகிப்பதற்கு நீயும் நானுமே தெரிவு செய்யப்பட்டோம். இப்படியாக எமது பயிற்சிக்காலம் கழிந் தது. எமது நட்பும் உறுதியாக வளர்ந்தது. உனக்கு முன்னரே பயிற்சியை முடித்துக்கொண்டு களத்தில் நின்ற நான் மகிழ்ச்சியுடன் உன்னை வர வேற்றேன். ஆம்! இமல்டா வந்து விட்டாள். எமது முகாம் இனிக் கலகலப்பாகி விடும் என்ற மகிழ்ச்சியே எல்லோருக்கும்.

ஆனால் நீயும் நானும் பிரிய வேண்டிய கட்டம் வந்தது. ஏனெனில் துரதிருஸ்டவசமாக நாள் ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஆனாலும் மன்னாரிலே படையெடுத்து வந்த சிறீலங்கா இராணுவத்தினர் பலரை பலியெடுத்த மாபெரும் தாக்குதலில் உனது திறமையைக் கேள்வியுற்று மகிழ்ச்சியுற்றேன்.

நான் செய்ய வேண்டிய வேலையையும் சேர்த்து இரட்டிப்புத்திறமையைக் காட்டி எதிரிகளைக் கலங்கவைத்தாய். உனது குழுவினரின் தாக்குலிற்கு ஈடுசெய்ய முடியாத சிங்கள இராணுவம் குண்டு வீச்சு விமானங்கள் மூலம் பாரிய குண்டுகளை வீசிப் பலத்த அழிவை உண்டாக்கி தனது கையாலாகாத் தனத்தைப் புலப்படுத்தியது.

அதன் பின் யாழ்ப்பாண ஆஸ் பத்திரியில் இருந்த என்னை நீ வந்து சந்தித்தாய். "வசந்தி! நீ விரைவில் குணமடைந்து விடுவாய். ராக்கட் லோஞ்சருடன் என் வசந்தியைக் காணும் நாள் கிட்டடியில தான் உள்ளது. அப்போது தான் எனக்கும் உனக்கும் முறையான போட்டியுள்ளது." என்றெல்லாம் எனக்கு நம் பிக்கையூட்டுவாய். எங்கோ பிறந்தோம். எங்கோ வளர்ந்தோம். தமிழீழப் போராட்டத்தின் பெயரால் இணைந்தோம். ஆனால் இன்று ஒரே குடும்பம் போன்று அனைவரும் என் மீது பாசமழை பொழிகிறீர்களே என்று திக்குமுக்காடினேன்.

வடமராட்சியில் சிறீலங்கா இராணுவத்துடன் நிகழ்ந்த தாக்குதலி லும் உனது திறமையைப் பற்றி அனைவரும் என்னிடம் வந்து கூறுவார்கள். புதிதாகப் பயிற்சியாளர்களில் ஒருவராக நீயும் திகழ்கிறாய் என்றும் செய்திகிட்டியது.

வந்தது ஒப்பந்தம், யாருக்காக இந்த ஒப்பந்தம்? இது எமது நலனிற்காகச் செய்யப்பட்டதல்ல என்பது தெளிவாகவே புரிந்தது எமக்கு ஆயினும் இந்திய மக்கள் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையையும், அன்பையும் வெளிப்படுத்தும் முகமாக எமது போராளிகளின் மகத்தான தியாகங்களினாலும், இரத்தத்தாலும் பெறப்பட்ட ஆயுதங்களை இந்தியப் படையிடம் ஒப்படைக்க வேண்டியேற்பட்டது.

சிங்கள இனவாதப் பூதம் இவ் வொப்பந்தத்தை விழுங்கும் காலம் வெகுதூரத்திலில்லை என்று தலைவர் தீர்க்க தரிசனத்துடன் கூறினார். காலமும் இதை நிதர்சனமாக்கியது. இந்தியப் படையின் துரோகத்தனமும் அம்பலப்படுத்தப்பட்டது. நாம் மீண்டும் ஆயுதங்களை ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

ஒரு தேசியக் கொடியைப் பறக்க விடுவதற்காக ஆயிரக்கணக்கான கறுப்புக் கொடிகளைப் பறக்க விடத் யாரானோம்.



இந்தியப் படையின் துரோகத்தனத்திற்கு எதிராக நீ ஒவ்வொரு தாக்குதலிலும் முன்னணியில் நின்று போராடினாய் எனக் கேள்விப்பட்டேன். நாம் பலவீனப்பட்டு விட்டோம் என்று இந்திய அரசு தப்புக்கணக்குப் போடுகிறது. எமது பலமே மக்கள் சக்தி தான். தமிழீழத்தை மீட்டெடுக்கும் வரை சந்ததி சந்ததியாக நாம் போராடியே தீருவோம் என்பதைக் காலம் உணர்த்தும் என்றே எண்ணுகிறேன்.

ஆனாலும் என்னுயிர்த் தோழி! வன்னியில் நடந்த முற்றுகை ஒன்றில் உன்னை நாம் பறிகொடுத்து விட்டோம் என்ற வரக் கூடாத அந்தச் செய்தி வந்தே விட்டது. நான் அதிர்ந்து விட்டேன். இனி அந்த "ஜெனரேற்றர்" சிரிப்பைக் கேட்கவே முடியாது. உனது குறும்புகளைக் காண முடியாது. ஆனால் உனது துப்பாக்கியின் ஓசை மட்டும் திரத்தரமாக நின்று விடவில்லை. அது வேறொருவர் மூலம் முழங்கிக் கொண்டே உள்ளது. அதிலிருந்து முழங்கும் ஒவ்வொரு வேட்டும் மலரும் தமிழீழம்! மலரும் தமிழீழம்!" என்றே ஒலிக்கிறது.

உனது ஆத்மா எனக்குள் ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுக்கிறது. நான் விரைவாகக் குணமாகி வருவதை என்னால் உணர முடிகிறது. இமல்டா! நீ விதைக்கப்பட்டு விட்டாய். இதோ! களத்தை நோக்கி ஆயிரமாயிரம் இமல்டாக்கள்! ஆம் விரைவில் அவர்களில் ஒருத்தியாய் நானும். அதுவரை காத்திருப்பாய் என் தோழி!

-வசந்தி



# தமிழீழச் செய்திகள்



## சாந்தன் அவர்களின் இரண்டம் ஆண்டு நினைவேந்தல்

02.03.2026

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி முப்பது வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு சாவடைந்த சாந்தன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவெந்தால் அவரது சமாதி அமைந்துள்ள வடமராட்சி எல்லங்குளம் சமாதியில் இடம் பெற்றது.



இதில் சாந்தன் அவர்களது உறவினர், நண்பர்கள், முன்னாள் போராளிகள் என பலரும் காணித்துகொண்டு சாந்தன் அவர்களது சமாதிக்கு ஈகை சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தினர்.



## மன்னாரில் சிறு சேமிப்பு, கடன் சேவை வழங்கும் பெண்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்பு குறித்து கவனயீர்ப்பு போராட்டம்

03.03.2026

நிதி அமைச்சினால் முன்மொழியப்பட்ட நுண் நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்திற்கு அமைவாக உள்ளூரில் சுய தொழிலில் ஈடுபடும் குறிப்பாக சமூக மட்டத்தில் சிறு சேமிப்பு மற்றும் கடன் சேவை வழங்கும் பெண்களை குறித்த சட்டத்துக்குள் கொண்டு வருவதால் தமக்கு ஏற்படவுள்ள பாதிப்பு களை கருத்தில் கொண்டு அதற்கு எதிராக மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் செவ் வாய்க்கிழமை (03) மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மற்றும் சுய தொழில் முயற் சியாளர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பதாதைகளில் 'கிராமிய சேமிப்பு திட்டங்களை அளித்து நிதி நிறுவனங்களுக்கும் வட்டிக்காரர்களுக்கும் வாய்ப் பளிக் காதே , 'இச்சட்டம் பெண்களை அடிமையாக்க நுண் நிதி நிறு வனங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறது.

இச்சட்டம் சுய உதவி குழுக்களின் சேமிப்புகளை ஆபத்திற்குள் தள்ளுகிறது, அவசர தேவைக்கு பணம் கிடைக்கும் ஒரே வழியான சமூக சேமிப்பு திட்டங்களை தடை செய்யாதே, 'நாங்கள் இச்சட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல.

ஆனால் ஏழைகள் சமூக மட்ட சேமிப்பு இல்லாமல் எதிர் கொள்ளப் போகும் அவல நிலையை மீள் பரிசீலனை செய் யுங்கள்' போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்திய வர்களாக பெண்கள் காணப்பட்டனர்.





தொடர்ந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் ஊர்வலமாக மன்னார் மாவட்டச் செயலகத்தின் நுழைவாயிலில் வைத்து ஜனாதிபதிக்கான மகஜரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அவர்களிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் குறித்த மகஜரை உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# மட்டு. கொண்டையங்கேணி தமிழர்களுடைய பூர்வீக கிராமத்தை முஸ்லீம் கிராமம் என பெயர்சூட்டி அபகரிக்க முயற்சியா?

02.03.2026

தனித் தமிழ் மக்கள் வாழும் வாழைச்சேனை கொண்டையங்கேணி கிராமம் இன்று கொண்டயன்கேணி முஸ்லிம் கிராமம் என்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர்களுடைய பூர்வீக கிராமங்களின் பெயர்களை தங்களுடைய கிராமங்கள் என தெரிவித்து எதிர்காலத்தில் இந்த கிராமத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள் என அபகரிப்பதற்காக செயற்படுகின்றனர். இதனை வன்மையாக கண்டிப்பதாக கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தன பாலசிங்கம் நிர்மலன் தெரிவித்தார்.



வாழைச்சேனை கிண்ணியடியில் உள்ள அவரது காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (1) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வாழைச்சேனை பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்காக வட்டார எல்லைகளின் எல்லை நிர்ணயத்தை அடையாளப்படுத்தும் பிரேரணை ஒன்றை கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் தவிசாளர் கொண்டுவரப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த பிரதேசம் கடந்த காலத்தில் எல்லை நிர்ணய பிரச்சனை ஒரு தீர்க்கப்படாத இந்த பிரச்சனைக்கு ஒரு முழுமையான தீர்வு காணப்படாமல் இந்த எல்லை நிர்ணயங்களை தங்களுக்கு தாங்களே தீர்க்கமாக தீர்மானித்து ஒரு வருமானத்தை நோக்கமாக கொண்டு எமது சமூகத்தின் எல்லையை பின்னுக்கு தள்ளுகின்ற செயற்பாடை செய்யக் கூடாது என வலியுறுத்தினேன் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

கோறளைப்பற்று பிரதேசத்தில் 14 வட்டாரங்கள் இதில் 4 முஸ்லீம் வட்டாரங்கள் 10 வட்டாரம் தமிழர்கள் வாழுகின்றனர் இருந்தபோதும் 8 வட்டாரங்கள் முழுக்க முழுக்க தமிழர்கள் வாழுகின்ற சூழல் இருக்கின்ற நிலையில் 2 வட்டாரம் தமிழர்கள் முஸ்லீம்கள் எதேச்சையாக குடியேற்றப்பட்டு வாழ்ந்து வருகின்ற வட்டாரம்.

இதில் எங்களுக்கான ஒரு எல்லை நிர்ணயம் வகுக்கப்படாமல் பிரதேச சபையால் அவர்களாகவே எல்லை நிர்ணயங்களை தயாரித்து அதில் வருமானங்களை அதிகரிக்க வேண்டும் என்பது. எதிர்காலத்திலே தமிழ் கிராமங்கள் சுருங்கி போகக் கூடிய அளவிற்கு ஆதாரங்களாக அமைந்து விடும்.

எனவே வாழைச்சேனை வட்டாரம், கறுவாக்கேணி வட்டாரம் என்பது இரண்டு தமிழ் கிராமங்கள் இந்த கிராமங்களிலே தான் இந்த பிரச்சனைகள் இருக்கின்றது. கறுவாக்கேணி வட்டாரம் என்பது வாழைச்சேனை இலங்கை மின்சார சபையின் வீதியை ஒட்டியதாக அமைந்திருக்கின்றது.

ஆனால் அதனை அடையாளப்படுத்தப்பட்டபோது அதற்கு எதிராக குழப்பங்கள் எழுப்பப்பட்ட போது அவை அனைத்தும் இடை நடுவில் விடப்பட்டது. இந்த நிலையில் பிரதேச சபையின் நிர்வாகம் எதனூடாக கறுவாக்கேணி 10ஆம் வட்டாரத்தை பிரித்து இது தான் கறுவாக்கேணி 10ஆம் வட்டாரம் என அறிவிக்க போகின்றது என்பது சந்தேகத்துக்கு இடமாக உள்ளது

கோறளைப்பற்று பிரதேச சபை என்பது தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேச சபையாக இருந்தாலும் மக்களுக்கான ஒரு சரியான தீர்வுகளையும் முடிவுகளையும் எடுக்க முடியாமல் இருக்குமம் ஒரு பிரதேச சபையாக இருக்ன்றது.

இந்த கறுவாக்கேணி 10 ஆம் வட்டாரத்தில் கிராம சேவகர் பிரிவு தனி தமிழ் மக்களின் சோந்த பிரிவு ஆனால் இதே கறுவாக்கேணி கிராம சேவகர் பிரிவுடன் உள்ள கொண்டையன்கேணி என்கின்ற கிராமம் இன்று கொண்டயன்கேணி முஸ்லீம் கிராமம் என உருவாக்கப்பட்டு கொண்டயன்கேணி கிராம அபிவிருத்தி சங்கம், மற்றும் பள்ளிவால், சனசமூக நிலையம், என அரச சார்ந்த சங்கங்கள் அனைத்தும் கொண்டயங்கேணி முஸ்லீம் கிராமம் என உருவாக்கப்பட்டுள்ளது.

பல தசப்தங்களாக கொண்டையன்கேணி கறுவாக்கேணி இணைந்து கறுவாக்கேணி கிராம சேவகர் பிரிவில் இயங்குகின்ற ஒரு கிராமம் இந்த கொண்டையங்கேணி என்று உருவாக்கப்பட்டுள்ள பெயர் மட்டும் தான் கொண்டையங்கேணி முஸ்லீம் என்று இருக்கின்றதே தவிர அவர்களுடைய அனைத்து நிர்வாக செயற்பாடுகள் ஓட்டுமாவடி பிரதேச செயலகத்திற்கு உள்ள செம்மண்ஓடை கிராம சேவகர் பிரிவுக்குள் நடை பெறுகின்றது.

ஓட்டுமாவடி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள செம்மண்ஓடை கிராம சேவகர் பிரிவில் நிர்வாக நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமாக இருந்தால் ஏன் கொண்டையங்கேணி முஸ்லீம் கிராமம் என இந்த கிராமத்துக்கு பெயர் சூட்டவேண்டும். இது மிகவும் ஆபத்தான விடையம்.

தமிழர்கள் வாழ்ந்துவரும் பூர்வீக கிராமங்களின் பெயர்களை தங்களுடைய கிராமங்கள் இன்றி தெரிவித்து எதிர்காலத்தில் இந்த கிராமத்தில் முஸ்லீம்கள் வாழ்ந்தார்கள் என்ற ஆதாரத்தை காட்டுவதற்காக செயற்படுகின்றனர் இதனை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கல்குடா தேர்தல் தொகுதி என்பது முஸ்லீம்களுடனும் தமிழ்களுடனும் ஒரு தேர்தல் நோக்கத்துக்கான தொகுதி ஆனால் ஓட்டுமாவடியில் இருந்து உருவாக்கப்படுகின்ற இந்த சங்கங்கள், அமைப்புக்கள், விளையாட்டுகழகங்கள், வெளிநாடுகளில் இருந்து உருவாக்கப்படுகின்ற சங்கங்கள் எல்லேமே தங்களுடைய விலாசத்தை, அடையாளத்தை கல்குடா என்று பதிவு செய்து வருகின்றனர். இது ஏன் தேவை?

இது இன்னொரு 20 வருடத்திற்கு பின்னர் முஸ்லீம் சமூகத்தின் பிள்ளைகள் சொல்லும் இது முஸ்லீம்களின் பூர்வீக நிலம் என்பர். எனவே கோறளைப்பற்று பிரதேசத்தில் எங்கள் சமூகம், மக்கள் சார்ந்து யாரும் பேசுவதில்லை அரசியல் ரீதியாக பிரதேச சபைகளில் இருக்கின்ற அவர்கள் அனைவரும் வாய்மூடிகளாக தங்களுடைய அற்ப சொற்ப பிரதேச சபை ஆசனத்தை பாதுகாப்பதற்காக பேசாமல் இருக்கின்றனர் அல்லது பேச தெரியாமல் மடந்தையாக இருக்கின்றனர்.

நாங்கள் அப்படி இருக்க முடியாது எனவே கல்குடா தொகுதிக்குள் இருக்கும் மக்களே உன்னிப்பாக சிந்திக்க வேண்டும். அதேவேளை பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பது வாழைச்சேனை வட்டாரம், கறுவாக்கேணி வட்டாரம் ஆகிய இரண்டு வட்டாரம் என்பது பரிசீலனை செய்யப்பட்டு எல்லை நிர்ணயம் ஒழுங்காக செய்யப்பட்டதன் பின்னர் தான் பிரதேச சபைக்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளை கல்குடா என்று அழைப்பது தொடர்பாக பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கவனதிற்கு கொண்டுவந்து இவ்வாறு இயங்குகின்ற அமைப்புக்களை தடைசெய்து அவர்கள் அவர்களுடைய பிரதேசத்தில் அவர்களுடைய அமைப்புக்களை நடாத்துவதில் எந்தவித பிரச்சனையும். இதற்கு இல்லை தீர்வுகளை பெற்றுதருமாறு கோரியுள்ளேன்.

அதேவேளை கல்குடா என இன்னொரு கிராம சேவகர் பிரிவை அடையாளப்படுத்தி அவர்களுடைய அடையாளம் என இனி வரும் காலங்களில் காட்டக்கூடாது. ஒரு இனத்தின் உடைய மொழியும் அடையாளமும் முகவரியும் எங்கு களவாடப்படுகின்றதே அங்கே இந்த இனத்திக்கு எதிரா வன்முறையும் பயங்கரவாதமும் தோற்று விக்கப்படுகின்றது என்றார்.

# யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராகப் போராடியவர்கள் மீதான சித்திரவதை: விசாரணைகளை ஆரம்பித்துள்ள மனிதவுரிமை ஆணைக்குழு

04.03.2026

யாழ். தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டவர்கள் மீது தாம் குறைந்தளவு பல பிரயோகத்தையே மேற்கொண்டதாக மனிதவுரிமை ஆணைக் குழுவின் விசாரணைகளில் பொலிசார் தெரிவித்துள்ளனர்

தையிட்டி விகாரைக்கு எதிராக கடந்த டிசம்பர் மாதம் 21ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் வேலன் சுவாமி, வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி. நிரோஷ் , வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட ஐவர் மீது தாக்குதலை மேற்கொண்டு பொலிசார் அவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் ஐவரும் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

அந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கான வேலன் சுவாமி மற்றும் வலி. கிழக்கு தவிசாளர் ஆகியோர் மறுநாள் யாழ் . போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றனர்.

பொலிசாரின் தாக்குதல் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிராக வலி. கிழக்கு தவிசாளர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ், இன்றைய தினம் புதன்கிழமை முறைப்பாட்டாளரையும், எதிராளியான பொலிசாரையும் தமது அலுவலகத்திற்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டார்.

குறித்த விசாரணைகள் தொடர்பில் வலி. கிழக்கு தவிசாளர் தெரிவிக்கையில்.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக போராடிய எம் மீது பொலிசார் சித்திரவதைகளை புரிந்து உடல்உள ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தி எம்மை கைது செய்தனர்.

அரசாங்கத்தின் திட்டமிட்ட அறிவுறுத்தலின் பிரகாரமே பொலிசார் எம்முடன் அவ்வாறு நடந்து கொண்டனர் என வலுவான சந்தேகம் எமக்கு உண்டு.

இன்றைய விசாரணைகளின் போது, விகாரைக்கு சிங்கள மக்களும் வருகை தந்தமையால் , போராட்ட காரர்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படாது தடுக்கவே போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தோம்.

அவர்களை கைது செய்யும் போது குறைந்தளவு பல பிரயோகத்தையே மேற்கொண்டோம் என பொலிஸார் தெரிவித்தனர்.



பொலிசார் எம்மை தேடி தேடி கைது செய்ததுடன் , பொலிசாரின் தடைக்கு அப்பால் எம்மை இழுத்து சென்று எம் மீது தாக்குதல் மேற்கொண்டே வாகனத்தில் ஏற்றினார்கள் என விடயத்தினையும் விசாரணைகளில் நான் தெரிய படுத்தினேன் .

எம் மீதான தாக்குதல்கள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பிலான ஆதாரங்கள், சாட்சியங்கள், அறிக்கைகள் என்பவற்றை எதிர்வரும் 14 நாட்களுக்குள் தமக்கு சமர்ப்பிக்குமாறும், அதன் பின்னர் கொழும்பு அலுவலகத்திற்கு மேலதிக நடவடிக் கைக்காக தாம் அனுப்பி வைப்போம் என மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார் என தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

**மனித வரலாற்றுச் சக்கரம்; காலங்களைக் கடந்து, யுகங்களை விழுங்கி, முடிவில்லாமற் சுழல்கிறது. இந்த முடிவில்லாத இயக்கத்தில், உலகத்து மனிதன் நிறையவே மாறிவிட்டான்**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் தொடர் போராட்டம்

04.03.2026




யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பாதிக்கப்பட்ட பொது மக்களுடன் இணைந்து மாதாமாதம் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம் பௌர்ணமி தினமான திங்கட்கிழமை (02.03.2026) காலை-07 மணி முதல் மாலை-06 மணி வரை தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை (01.03.2026) மாலை-04.30 மணிக்கு ஆரம்பமான போராட்டம் மாலை-06 மணி வரை முன்னெடுக்கப்பட்டது. இந் நிலையில் இரண்டாவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது. தொடர் போராட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், தமிழ்த்தேசிய மக்கள் முன்னனணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்ரர், கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இந்தியாவில் கைதாகியுள்ள இரு கடற்தொழிலாளர்களையும் நாட்டிற்கு அழைத்து வாருங்கள்

## உறவினர் கண்ணீர்மல்க கோரிக்கை

06.03.2026

யாழில் இருந்து கடற்தொழிலுக்கு சென்ற நிலையில் இந்தியாவில் கைதாகியுள்ள இரு கடற்தொழிலாளர்களையும் இலங்கை அழைத்து வர உரிய தரப்பினர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி.வடக்கு ஊரணி பகுதியில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை படகொன்றில் கடற்தொழிலுக்கு சென்ற இரு கடற்தொழிலாளர்களும் காணாமல் போன நிலையில் 6 நாட்களின் பின்னர் இந்தியாவில் கரையொதுங்கிய நிலையில் இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு கடற்தொழிலாளர்களையும் , அவர்களின் படகு மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் மீள இலங்கைக்கு கொண்டு வருவதற்கு உரிய தரப்பினர்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# யுத்தத்தில் கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்துவது சர்வதேச ரீதியாக பேசுபொருளாகியது

08.03.2026

2008/ 2009 ஆம் ஆண்டு வன்னி யுத்த களத்தில் கொத்தணி குண்டுகள் (Cluster Bombs) மட்டுமின்றி இரசாயனக் குண்டுகளையும் (Phosphorus Bombs) இலங்கை இராணுவத்தினர் பயன்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக யுத்த சூனிய வளையங்களாக (No Fire Zone) அறிவிக்கப்பட்ட இடங்களை இலக்கு வைத்து இந்த குண்டுகள் வீசப்பட்டிருந்தன.

ஆனால் ராஜபக்சே ஆட்சியாளர்கள் கொத்தணி குண்டுகள் (Cluster Bombs) பயன்பாடு தொடர்பான குற்றசாட்டை மறுத்த போதும் சர்வதேச பத்திரிகையான The Gurdian இலங்கை கொத்தணி குண்டுகளை பயன்படுத்தியது தொடர்பான புகைப்பட ஆதாரங்களை வெளியிட்டிருந்தது.

கண்ணி வெடியகற்றல் பணியில் ஈடுபட்ட Halo Trust நிறுவன ஊழியர்கள் ஊடக மேற்படி ஆதாரங்களை (Bomblets) பெற்று கொண்டதாக The Gurdian தெரிவித்திருந்தது.

Human Rights Watch அமைப்பின் சுயாதீன ஆய்வாளர் ஒருவர் குறித்த புகைப்படங்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தியதோடு அவை ரஷ்ய தயாரிப்பு கொத்தணி குண்டுகளின் எச்சங்கள் எனவும் அடையாளம் கண்டிருந்தார்.

விசேடமாக பச்சிலைப்பள்ளி பிரதேசத்தை அண்டிய பகுதியில் மட்டும் Halo Trust நிறுவனம் பயன்படுத்தப்பட்ட 42 கொத்தணி குண்டுகளின் எச்சங்களை கண்டறிந்திருந்தாக The Gurdian யிடம் உறுதிப்படுத்தியிருந்தது.

அதே போல சர்வதேச மன்னிப்பு சபை புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தொடர்ச்சியாக கொத்தணி குண்டுகள் வீசப்பட்ட கொடூரத்தை அருவருப்பானது என வர்ணித்திருந்தது.





ஆனாலும் இன்று வரை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக குற்றசாட்டுகளை மறுத்து வருகின்றார்கள்.

நல்லாட்சி(?) அரசாங்கம் அதிகாரத்திலிருந்து போது கூட கொத்தணி குண்டு பயன்பாடு சர்ச்சையான போதும் அவர்களும் இலங்கை ஒருபோதும் கொத்தணி குண்டுகளை பயன்படுத்தவில்லை என அறிவிருத்திருந்தார்கள்.

ஆனாலும் மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் காலம் சென்ற இராயப்பு ஜோசப், உட்பட சிவில் சமூக அமைப்புகளும் முல்லைத்தீவு புதுமாத்தளன் பிரதேசங்களில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினர் கொத்தணி குண்டுகள் மட்டுமின்றி இரசாயனக் குண்டுகளையும் பயன்படுத்தி இனப்படுகொலைகளில் ஈடுபட்டனர் என உறுதிப்படுத்தியிருந்தனர்.

அந்தவகையில் பல்வேறு தளங்களில் ஊடக யுத்த நெறிமுறைகளுக்கு மாறாக 100,000 இற்கு அதிமான பொதுமக்கள் கொன்று வீழ்த்தப்படட்டமை உறுதிப்படுத்த பட்ட போதும் 16 ஆண்டுகள் கடந்தும் பாதிக்கப்பட்டோருக்கு நீதி என்பது கானல் நீராகவே இருக்கின்றது - இனமொன்றின் குரல்

**காலங்காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள், சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள், சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக்கண்ணீர், இவை பௌத்த தேசத்தின் காருண்யத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# அவசரகால நிலை தமிழர் குரல்வளையை நெரிக்கும் கருவியாக அமையக்கூடாது!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

07.03.2026

உரிமைகளை நசுக்கும் மற்றொரு வல்லாதிக்க கருவியாக தமிழ் மக்கள் அவசரகால நிலையை நோக்குவதால் இந்த அவசரகாலநிலை தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்கியுள்ளது. கடந்தகாலங்களைப் போன்று தமிழர் குரல் வளையை நெரித்து, கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடைமுறைகளைத் வடகிழக்கில் தொடர்வதற்கான கருவியாக அவசரகால நிலை அமைதல் கூடாது. இதனை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.



பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (06) நடைபெற்ற அவசர கால சட்டம் அமுலாக்கம் நீட்டிப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

நாட்டின் மீதான இறைமை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு மத்திய கிழக்கில் பரவும் போர்ச்சூழல் இலங்கைத் தீவையும் பாதிப்பதை நாம் எல்லோரும் உணர்கின்றோம். பொருளாதார நெருக்கடியையும் எரிபொருளுக்கான தட்டுப்பாட்டையும் தெற்கை விட நாங்கள் நன்கறிந்தவர்கள். சொந்தத் தீவுக்குளாகவே அரசின் பொருளாதார தடைக்குள்ளும் தற்சார்போடு வாழ்ந்தவர்கள்.

எவ்வாறு பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும் எங்களுக்கு புதிதானவை அல்லவோ அதுபோலவே தான் இந்த அவசர கால நடைமுறையும். தற்போது நீட்டிக்கப்பட்டுள்ள அவசர கால நிலை, தற்போதைய உலகளாவிய சூழ்நிலையில் அத்தியாவசிய சேவைகள், பொருளாதார உறுதி, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல் போன்ற கூறப்பட்ட நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படுவதை இந்த அரசாங்கமும் இந்த சபையும் உறுதிப்படுத்த வேண்டும்.

அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மீயுயர் அதிகாரம் தேசிய நெருக்கடி காலங்களில் மக்களின் இயல்பு வாழ்வை இயலுமான வரையில் உறுதிப்படுத்த மட்டும் பயன்படுத்தப்படுவதாக இருக்க வேண்டும். மாறாக அவை,கடந்தகாலங்களைப்போன்று தமிழர் குரல் வளையை நெரித்து கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடைமுறைகளைத் வடகிழக்கில் தொடர்வதற்கான கருவியாக அமைதல் கூடாது.

விடுதலைப்போராட்ட வரலாற்றில் பல ஆண்டுகாலம் நாங்கள் அவசர கால விதிமுறைக்குள்ளாகவே வாழ்ந்தவர்கள். எனவே இத்தகைய சட்டங்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும் போதெல்லாம் அது தேசிய அளவில் இடர்நிலையை ஒழுங்கமைக்கும் செயற்பாடாக அல்லாது தமிழர் உரிமைகளை நசுக்கும் மற்றொரு வல்லாதிக்க கருவியாகவே எமது மக்களால் பார்க்கப்படுகிறது. இது எமது மக்கள் மத்தியில் இயல்பாகவே அச்சத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்குகிறது.

சட்ட ஏற்பாட்டுடனான மக்கள்மயப்பட்ட நடவடிக்கைகள், அமைதியான போராட்டங்கள், வடக்கு கிழக்கில் உள்ள மக்களின் அன்றாட இயல்பு வாழ்வைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த ஒழுங்குவிதிகள் பயன்படுத்தாதிருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

போருக்கு முன்னும் போரின் போதும் போருக்குப் பின்னருமாக எங்கள் இறைமைக்காக - தேசிய இருப்புக்காக - நிலத்துக்காக வாழ்வாதார மூலங்களுக்காக போராட்டமே வாழ்வாக தமிழர்கள் நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம். போரின் போது இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி வேண்டி போராடிக்கொண்டிருக்கின்றோம்.

உங்களிடம் நம்பி ஒப்படைத்து தொலைந்துபோன எங்கள் உறவு களுக்கான நீதி வேண்டி போராடிக்கொண்டிருக்கின்றோம் போரிலே அரசியல் கைதிகளாகி சிறையில் வாடும் எங்கள் உறவுகளின் விடுதலை வேண்டி போராடிக்கொண்டு இருக்கின்றோம்.

வெள்ளம் வந்தாலும் மண்சரிந்தாலும் தீப்பிடித்தாலும் ஏன், உலக ஒழுங்கில் எந்தக்குழப்பம் நேர்ந்தாலும் ஓயாது தமிழர் நிலங்களை அபகரித்துக் கொண்டிருக்கும் இந்த மகாவலி அதிகார சபை, வனவளத்திணைக்களம் வன சீவராசிகள் திணைக்களம், படையினர் என அரசின் குடியேற்றக் கட்டமைப்புகளிடம் இருந்து எங்கள் சொந்த நிலத்தை காப்பாற்றவும் எங்கள் உரிமைகளை தக்கவைக்கவும் தான் நாளும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

தீவுக்குள்ளாக உங்களுடனும் தீவுக்கு வெளியே இந்திய இழுவைப்படகுகளோடும் போராடுதலே வாழ்வாகிப்போகும் எங்களின் போராட்டங்களை மட்டுப்படுத்தும் வல்லாதிக்க கருவியாக இந்த அவசரகாலச்சட்டம் பயன்படுத்தப்படாதிருப்பதை நீங்கள் உறுதி செய்யுங்கள்.

தற்போதைய உலகளாவிய நெருக்கடியின் பொருளாதார மற்றும் சமூகப் பாதிப்புகளில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அவசரகால சட்ட முறைகளுக்கு அப்பால் நாம் ஆதரவளிக்கும் அதேவேளை அவசரகால விதிமுறைகளுக்கு உள்ளும் புறமுமாக எங்களுக்கான கடந்த கால நீதியே இன்னும் தேக்க நிலையில் உள்ள போது அவற்றுக்கான போராட்டமே எங்களின் வாழ்வாகும் போது மற்றொரு அவசர கால நீட்டிப்பையும் மறுப்பதே எம் கடன். தேசிய பாதுகாப்பென்பது மக்களின் உரிமைகளோடு ஒத்திசைவதே என்பதை உங்கள் அரசாங்கத்தின் அவசரகால நிலையேனும் மெய்ப்பிக்கட்டும் என்றார்.




**மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக – எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக – எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டன.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.ca**

# கொக்குத்தொடுவாயில் தமிழர் காணிகளில் சிங்கள வர்த்தகரின் அத்துமீறிய உப்பளம் அமைக்கும் முயற்சி சட்டவிரோதமான அத்துமீறல்களை உடனடியாக தடுக்குமாறு மகாவலிப் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

08.03.2026

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் குஞ்சுக்கால்வெளி பகுதியிலுள்ள தமிழ்மக்களின் பூர்வீக தனியார்காணிகளை, மகாவலி அதிகார சபை தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள வர்த்தகருக்கு சட்டவிரோதமாக குத்தகைக்கு வழங்கியுள்ளது.



இந்நிலையில் மகாவலி அதிகாரசபையிடமிருந்து சட்டவிரோத குத்தகை அனுமதியைப் பெற்றுக்கொண்ட குறித்த பெரும் பான்மையின வர்த்தகர் தமிழ்மக்களின் தனியார்காணிகளில் அத்துமீறி நுழைந்து உப்பளம் அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதால் இனமுறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த சட்டவிரோதமான அத்துமீறிய செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மாகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு 07.03.2026 இன்று கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தனியார் காணிகளில் அத்துமீறி உப்பளம் அமைத்தல் தொடர் பானது எனத் தலைப்பிடப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

மேற்படி விடயம் தொடர்பாக, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவு பகுதியில் அமைந்துள்ளதும் நில அளவை யாளர் நாயகம் அவர்களால் பேணப்பட்டுவரும் TOPO PP70 இலக்க நில அளவை வரைபடத்தின் Inset 17, 18, 19 ஆகிய பகுதிகளுக்குரிய தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளும் அதற்கு இடைப்பட்ட மேய்ச்சல் தரை நிலங்களும் மகாவலி அதிகார சபையால் தென்பகுதியைச் சேர்ந்த ஒரு சிங்கள வர்த்தகருக்கு உப்பளம் அமைப்பதற்காக தற்பொழுது நாட்டில் நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்கு முரணான வகையில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந் துள்ளது.

மேற்படி நடவடிக்கை அப்பகுதிக்குரிய மக்களிடையே அதிருப் தியையும் இரண்டு இனங்களுக்க இடையேயும் முறுகல் நிலையை தோற்றுவித்தது. மக்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து கடந்த 2026.02.27 அன்று குறித்த பகுதிக்கு நேரில் சென்று மேற்படி அத்துமீறிய செயற்பாட்டை என்னால் உறுதிப் படுத்த முடிந்தது.

இதன் தொடர்ச்சியாக, அதே நாள் (2026.02.27 மாலை 03.00 மணி) முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தனியார் காணிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேற்படி உப்பளச் செய்கையை அடுத்துவரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெறும் வரையிலும் நிறுத்திவைக்குமாறு மகாவலி அதிகார சபைக்கு கடிதம் அனுப்பப்படும் என மாவட்டச் செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

எனினும், 2026.03.06 ஆம் நாளாகிய நேற்று தொடக்கம், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி குறித்த பகுதியில் மீண்டும் உப்பளம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன. என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை இவ் வாறு பறித்தெடுக்க முயலும் நடவடிக்கைகள், அப்பகுதி மக்க ளிடையே மனவேதனையையும் அரசின் மீதும் அரச நிர் வாகத்தின் மீதும் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத் துகின்றன.

எனவே சட்டத்துக்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் இவ் அத்து மீறிய செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். எனக் குறித்த கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் குறித்த கடிதம் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் விசாயம், கால்நடை, காணிமற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த, முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் உபாலி சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர், முல் லைத்தீவு மாவட்டசெயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது.



துரைராசா ரவிகரன்
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி தேர்தல் மாவட்டம்

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

மின்னஞ்சல் / E-mail: ravikaranmpoffice@gmail.com
கைபேசி / Mobile: +94770657751
எனது இல. / My No.: Mul/Agri/2026/007
உமது இல. / Your No.:

2026.03.07

பணிப்பாளர் நாயகம்,
மகாவலி அதிகார சபை
இலங்கை

Director General,
Mahaweli Authority of Sri Lanka

**தனியார் காணிகளில் அத்துமீறி உப்பளம் அமைத்தல் தொடர்பானது**
**Unauthorized Establishment of a Salt Farm on Private Lands**

மேற்படி விடயம் தொடர்பாக, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட **கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவு** பகுதியில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகம் அவர்களால் பேணப்பட்டுவரும் TOPO PP70 இலக்க நில அளவை வரைபடத்தின் Inset 17,18,19 ஆகிய பகுதிகளுக்குரிய **தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளும் அதற்கு இடைப்பட்ட மேய்ச்சல் தரை நிலங்களும்** மகாவலி அதிகார சபையால் தென்பகுதியைச் சேர்ந்த ஒரு சிங்கள வர்த்தகருக்கு உப்பளம் அமைப்பதற்காக தற்பொழுது நாட்டில் நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்கு முரணான வகையில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

With reference to the above matter, it has been brought to my attention that **private lands belonging to the Tamil Community, along with the grazing lands** located between them, falling under Inset numbers 17,18 and 19 of the TOPO PP70 survey map maintained by the Surveyor General's Department, situated in the **Kokkuthoduval Central Grama Niladhari Division of the Maritimepattu** Divisional Secretariat, have been leased by the Mahaweli Authority to a Sinhala businessman from the Southern Part for the establishment of a salt farm, allegedly in a manner contrary to the laws currently in force in the country.

[1/3]

மக்கள் தொடர்பகம் - மன்னார் / Public Relations Office - Mannar / Cilawaththurai, Mannar
தலைமை அலுவலகம் / Head Office / Kallappadu North, Mullaitivu / TP No : 076 8450 411
மக்கள் தொடர்பகம் - புதுக்குடியிருப்பு / Public Relations Office - Puthukkudiyiruppu / Iranappalai Road, Puthukkudiyiruppu



துரைராசா ரவிகரன்
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி தேர்தல் மாவட்டம்

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

மின்னஞ்சல் / E-mail: ravikaranmpoffice@gmail.com
கைபேசி / Mobile: +94770657751
எனது இல. / My No.: Mul/Agri/2026/007
உமது இல. / Your No.:

மேற்படி நடவடிக்கை அப்பகுதிக்குரிய மக்களிடையே அதிருப்தியையும் இரண்டு இனங்களுக்கு இடையேயும் முறுகல் நிலையை தோற்றுவித்தது. மக்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து கடந்த 2026.02.27 அன்று குறித்த பகுதிக்கு நேரில் சென்று மேற்படி அத்துமீறிய செயற்பாட்டை என்னால் உறுதிப்படுத்த முடிந்தது.

This action has caused serious concerns among the people of the area and created tension between two communities. Following complaints from the public, I visited the site on 27.02.2026, where I was able to confirm that such unauthorized activities were indeed taking place.

இதன் தொடர்ச்சியாக, அதே நாள் (2026.02.27 மாலை 3.00 மணி) முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தனியார் காணிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேற்படி உப்பளச் செய்கையை **அடுத்துவரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெறும் வரையிலும் நிறுத்திவைக்குமாறு** மகாவலி அதிகார சபைக்கு கடிதம் அனுப்பப்படும் என மாவட்டச் செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

Subsequently, at a meeting held on the same day (27.02.2026 at 3.00 p.m.) at the Mullaitivu District Secretariat, under the chairmanship of the District Secretary, it was informed that a letter would be sent to the Mahaweli Authority requesting that the **ongoing salt farm activities on private lands be suspended until the next District Coordinating Committee meeting.**

எனினும், **2026.03.06 ஆம் நாளாகிய நேற்று தொடக்கம்,** எந்தவித முன்னறிவிப்பும் இன்றி குறித்த பகுதியில் மீண்டும் உப்பளம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

However, it is a matter of grave concern that from **yesterday:2026.03.06 onwards**, the construction activities related to the establishment of the salt farm have resumed in the said area without any prior notice.

[2/3]

மக்கள் தொடர்பகம் - மன்னார் / Public Relations Office - Mannar / Cilawaththurai, Mannar
தலைமை அலுவலகம் / Head Office / Kallappadu North, Mullaitivu / TP No : 076 8450 411
மக்கள் தொடர்பகம் - புதுக்குடியிருப்பு / Public Relations Office - Puthukkudiyiruppu / Iranappalai Road, Puthukkudiyiruppu



துரைராசா ரவிகரன்
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி தேர்தல் மாவட்டம்

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

மின்னஞ்சல் / E-mail: ravikaranmpoffice@gmail.com
கைபேசி / Mobile: +94770657751
எனது இல. / My No.: Mul/Agri/2026/007
உமது இல. / Your No.:

தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை இவ்வாறு பறித்தெடுக்க முயலும் நடவடிக்கைகள், அப்பகுதி மக்களிடையே மனவேதனையையும் அரசின் மீதும் அரச நிர்வாகத்தின் மீதும் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்துகின்றன.

Such attempts to encroach upon private lands belonging to the Tamil community have caused distress among the people and undermine their confidence in the Government and the public administration.

எனவே **சட்டத்துக்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் இவ் அத்துமீறிய செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு** தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

Therefore, I kindly request you to **take immediate steps to halt these unlawful encroachments and activities** being carried out in the said area.

நன்றி | Thank you

மக்கள் சேவையில் | In the service of people

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

CC :

1. His Excellency the President of Sri Lanka
2. Hon. Prime Minister, Sri Lanka.
3. Hon. Minister, Ministry of Agriculture, Livestock, Land and Irrigation.
4. Hon. Deputy Minister for Co-operative Development and Chairman of DCC-Mullaitivu
5. Hon. Governor, Northern Province
6. District Secretary, District Secretariat, Mullaitivu
7. Divisional Secretary, Divisional Secretariat, Maritimepattu, Mullaitivu

[3/3]

மக்கள் தொடர்பகம் - மன்னார் / Public Relations Office - Mannar / Cilawaththurai, Mannar
தலைமை அலுவலகம் / Head Office / Kallappadu North, Mullaitivu / TP No : 076 8450 411
மக்கள் தொடர்பகம் - புதுக்குடியிருப்பு / Public Relations Office - Puthukkudiyiruppu / Iranappalai Road, Puthukkudiyiruppu


# முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# சர்வதேச நீதி கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் உறவுகளை சிறீலங்கா இராணுவத்திடம் கையளித்த இடத்தில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு

08.03.2026

சிறீலங்கா இராணுவத்திடம் கையளித்த தமது உறவுகள் எங்கே? இவர்களுக்கு என்ன நடந்தது இந்த விவகாரத்துக்கு சர்வதேச நீதி விசாரணையே வேண்டும் என கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் இறுதி யுத்தத்தின் சாட்சியாக காணப்படும் வட்டுவாகல் பாலத்தில் ஞாயிற்றுக்கிழமை (8) மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.






முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 08.03.2026 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பித்த தொடர் கவணயீர்ப்பு போராட்டமானது இன்று ஒன்பது ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் சர்வதேச மகளிர் தினமான இன்று மகளிர் தினம் எமக்கு துக்க தினம் என தெரிவித்து தமக்கு சர்வதேச விசாரணையே தீர்வு என குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது உறவுகளை இராணுவத்திடம் ஒப்படைத்ததுடன், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என இதுவரை இலங்கை அரசாங்கத்தால் எந்த தகவலும் வெளியிடவில்லை எனவும் இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து, இராணுவத்தினரிடம் ஒப்படைத்த எமது பிள்ளைகள் எங்கே, வட்டுக்கோட்டை தீர்மானம் வழிகாட்டி சுய நிர்ணயம் எங்கள் உரிமை, சர்வதேசமே பதில்சொல் என பல்வேறு கோசங்களை தாங்கிய பதாதைகளுடன் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எங்கே எங்கே உறவுகள் எங்கே, பழைய சட்டமும் வேண்டாம் புதியசட்டமும் வேண்டாம், அழிக்காதே அழிக்காதே தமிழரின் இன அழிப்பின் அடையாளமான வட்டுவாகல் பாலத்தை அழிக்காதே, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோசங்களுடன் வட்டுவாகல் பாலத்தடியில் ஆரம்பித்த கவனயீர்ப்பு போராட்டம் செல்வபுரத்தில் இராணுவத்திடம் உறவுகளை கையளித்த இடம் வரை சென்று நிறைவடைந்தது.

குறித்த போராட்டத்தில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், முன்னாள் யாழ் மாநகர மேஜர் மணிவண்ணன் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டதுடனர்.

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜர் வாசிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.














**விடுதலைப் போராட்டத்தில் மக்கள் வெறும் பார்வையாளர்களாக இராது, நேரடிப் பங்காளிகளாக மாற வேண்டும்**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# தமிழினப் படுகொலையைச் செய்த ராஜபக்சர்கள் தற்போது மனிதாபிமானிவேடம் தரித்து நடிக்கின்றனர்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

08.03.2026

கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையைச்செய்த கொடூரர்களான ராஜபக்ச தரப்பினர் தற்போது மனிதாபிமானிகளாகமாறி மத்தியகிழக்கின் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலுக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பது வேடிக்கையாக இருப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழினப்படுகொலையாளர்கள் தற்போது மனிதாபிமானி வேடந்தரித்து தமது உலகமகா நடிப்புத்திறன்களை வெளிப்படுத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவில் ஞாயிற்றுக்கிழமை (08) வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.






இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது வருடங்களைக் கடந்துள்ளது. பத்தாவது வருடம் ஆரம்பிக்கின்றது.

தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைக்கேட்டு அவர்களின் போராட்டம் தொடர்கின்றது. அவ்வாறு தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த பலநூற்றுக்கணக்கான பெற்றோர்கள் நோய்வாய்ப்பட்டும், வயது முதிர்வினாலும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைத்தேடிவரும் எஞ்சியுள்ளபெற்றோரும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஏனைய உறவினர்களும் தமது தொடர் பேராட்டத்தின் பத்தாவது வருடத்தின் தொடக்க நாளில் பாரிய ஒரு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

அந்தவகையில் இறுதிக்கட்ட வட்டுவாகல் பாலத்தின் தொடக்கப்புள்ளியிலிருந்து ஆரம்பித்து வட்டுவாகல் பாலத்தின் ஊடாக இறுதிக்கட்ட போரின்போது வட்டுவாகல் பகுதியில் தமது உறவுகளை இராணுவத்திடம் கையளித்ததாகக்கூறப்படும் இடம்வரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இவ்வார்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்துள்ளனர்.

வட்டுவாகல் பாலம் என்பது தமிழ் இனப்படுகொலையின் நினைவுச்சின்னமாகும். எனவேதான் அந்தப்பாலத்தின் தொடக்கப்புள்ளியிலிருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இவ்வார்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்ததுடன், தமது உறவுகளை இராணுவத்திடம் கையளித்த இடம்வரையில் மேற்கொண்டனர்.

குறிப்பாக கொளுத்தும் வெய்யிலிலும் வயது முதிர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் பெருமளவானவர்கள் இவ்வார்ப்பாட்டத்தில் பங்கேற்றதுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பில் பெண்கள், சிறார்களும் இவ்வார்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்றனர்.

இத்தகைய அவலநிலைகளை தாங்கி கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்த உறவுகள் தொடர்ந்தும் போராடிவருகின்றனர்.

எனினும் கடந்த கால ஆட்சியாளர்கள் இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான தீர்வை வழங்கும் விவகாரத்தில் பாராமுகத்துடனேயே செயற்பட்டவந்தனர்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கத்திடம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான உரிய நீதியை வழங்குமாறு எம்மால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுவருகின்றது.

குறிப்பாக இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புக்களின்போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு, சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழர் தாயகப்பரப்புக்களில் இடம்பெறும் நில அபகரிப்புக்களை நிறுத்துதல் உள்ளிட்ட விடயங்களுடன், இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உரிய நீதியை வழங்குதல் விடயத்திலும் மிகப்பிரதானமாக எம்மால் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இருப்பினும் இதுவரை இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை வழங்குவதற்கு இந்த ஆட்சியாளர்களும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

மேலும் தற்போது உலகநாடுகளிடையே போர்மேகம் சூழ்ந்துள்ளது. மத்தியகிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலால் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. 2009இல் எம்மை அழிப்பதற்குத் துணைநின்றவர்கள் தங்களுக்கிடையில் யுத்தத்தை தொடங்கியுள்ளனர். எனினும் யுத்தத்தால் சிறார்கள், பெண்கள், அப்பாவி பொதுமக்கள் என பலரும் கொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதே தமிழர்களின் நிலைப்பாடு. ஏன் எனில் தமிழர்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள்.





ஆனால் 2009இல் திட்டமிட்டவகையில் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்டபகுதிக்குள்ளும் குண்டுபோட்டும், தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளைப்போட்டும் தமிழ் இனவழிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்ட ராஜபக்சக்களின் கூடாரத்தைச் சேரந்தவர்கள் தற்போது மத்திய கிழக்கில் இடம்பெறும் போர்ச்சூழலுக்கு அனுதாபதந் தெரிவிக்கின்றனர். தற்போது மனிதாபிமானத்தைப்பற்றி பேசுகின்றனர்.



இந்தநாடு முழுவதுமே தமிழர்களுடையது என, வரலாறுகள் கூறுகின்றன. இந்நிலையில் வடக்கும், கீழக்கும் பூர்வீக தமிழர் தாயகமென கோரிப் போராடியதும், தற்போதும் வடகிழக்குத்தான் தமிழர் தாயகம் எனக்கோருவதும் தமிழர்களின் பெருந்தன்மையாகும்.

இவ்வாறாக வடக்கு கிழக்குத் தமிழர்தாயகமென தமது உரித்துக்களைக் கோரியதற்காக தமிழர்கள் மீது திட்டமிட்ட இனவழிப்பை மேற்கொண்டவர்கள், உறவினர்களால் கையளிக்கப்பட்டஉறவினர்களை காணமலாக்கிய கொடூரங்களைச்செய்த கொடூரர்கள் தற்போது உலகமகா நடிகர்களாக மாறி மனிதாபிமானிகளைப்போல நடிப்புத்திறன்களை வெளிப்படுத்துகின்றனர்.

தற்போதைய அரசு இந்த வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை வழங்கமுன்வரவேண்டும் எனவலியுறுத்திக் கேட்டுக்தொள்கின்றேன் என்றார்.

www.sangathamil.ca

# யாழில் புத்துயிர் பெறவுள்ள தளபதியான கேணல் கிட்டு பூங்கா!

10.03.2026

யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவை புனரமைப்பு செய்யும் முகமாக , பூங்காவை துப்புரவு செய்யும் பணிகள் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.







விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதியான கேணல் கிட்டு என அழைக்கப்படும் சதாசிவம் பிள்ளை கிருஷ்ணகுமார் உள்ளிட்ட புலிகளின் 10 போராளிகள் பயணித்த கப்பலை சர்வதேச கடற்பரப்பினுள் இந்திய கடற்படையினர் வழிமறித்து சரணடைய கோரிய நிலையில் 16.01.1993 அன்று கப்பலுடன் வெடித்து சிதறி வீரகாவியமானார்கள்.

வீரகாவியமான கேணல் கிட்டுவின் நினைவாக யாழ்பாணத்தில் முத்திரை சந்தி பகுதியில் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் “கிட்டு பூங்கா” திறந்து வைக்கப்பட்டது.

யுத்தம் தீவிரமடைந்து 1995 ஒக்டோபர் 30ஆம் திகதி மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய பின்னர், கிட்டு பூங்கா முற்றாக அழிக்கப்பட்டது.

அதனை அடுத்து “கிட்டு பூங்கா” புனரமைக்கப்பட்ட வேண்டும் என பல்வேறு தரப்பினராலும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு வந்த போதிலும் 2010ஆம் ஆண்டு கால பகுதியில் கிட்டு பூங்காவை, சங்கிலியன் பூங்கா என பெயர் மாற்றம் செய்து புனரமைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் பின்னர் அவை முழுமை பெறாது கைவிடப்பட்டது.

பின்னர் பூங்கா புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படாத போதிலும், பூங்கா அமைந்திருந்த பகுதியில் அரசியல் பிரச்சார கூட்டங்கள், கண்காட்சிகள், கூட்டங்கள் என்பன நடைபெற்று வந்தன.

இந்நிலையில் தற்போது கிட்டு பூங்காவை புனரமைக்கும் பணிகளை மாநகர சபை முன்னெடுக்கவுள்ள நிலையில், முதல் கட்டமாக பூங்காவை சுற்றி சுற்று மதில் கட்டி, அதனை பாதுகாப்பும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனை முன்னிட்டே நேற்றைய தினம் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், ஆணையாளர், உள்ளிட்ட மாநகர சபை அதி - காரிகள் கலந்து கொண்டு துப்பரவு பணிகளை முன்னெடுத்தனர்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்பு கொடியேற்றிய சம்பவம் தொடர்பில் துணைவேந்தர் மற்றும் பதிவாளரிடம் மூன்று மணிநேர விசாரணை!

10.03.2026

இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தேசிய கொடியை இறக்கி, அதற்கு பதிலாக கறுப்பு கொடியேற்றிய சம்பவம் தொடர்பில் துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோரிடம் குற்ற புலனாய்வு பிரிவினர் வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளனர்.

சுதந்திர தினத்தன்று தேசிய கொடியை இறக்கி கறுப்பு கொடி யேற்றியமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கடந்த பெப்ரவரி மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு பணித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தின் இன நல்லிணக்கப் பிரிவுக்குப் பொறுப்பான பேராசிரியர், மாணவர் ஒழுக்காற்று அதிகாரி மற்றும் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழுவொன்று விசாரணைகளை முன்னெடுத்தது.

குறித்த விசாரணை அறிக்கையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

விசாரணைகளின் அடிப்படையில் கறுப்பு கொடியேற்றிய சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடையதாக 2 மாணவிகள் உள்ளிட்ட 30 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாணவர்களிடம் பல்கலைக்கழக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது, சிறுபான்மைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு உரிய மதிப்பு வழங்கப்படாத வரை இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களுக்கு உகந்த நாளல்ல என்பதை வெளிப்படுத்தவே இந்தச்செயலில் ஈடுபட்டதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது கொடியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், நேற்றைய தினம் செவ்வாய்க் கிழமை பல்கலைக்கழகத்தினுள் தமது வாகனத்தில் சென்று துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோரிடம் சுமார் 3 மணி நேரம் விசாரணைகளை முன்னெடுத்து வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளனர்.

பொலிசார் வாகனத்துடன் பல்கலைக்கழக வளாகத்தினுள் சென்று, பல்கலைக்கழகத்தினுள் வைத்து துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோரிடம் சுமார் 3 மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்டமை தொடர்பில் மாணவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.



அதேவேளை சுதந்திர தினத்தன்று தேசிய கொடியை இறக்கி, கறுப்பு கொடியேற்றும் போது எடுக்கப்பட்ட காணொளிகளின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், அந்நேரம் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்டவர்களிடமும், அடையாளம் காணப்பட்ட சில மாணவர்களிடமும் விசாரணைகளை முன்னெடுத்து, வாக்கு மூலங்களை பதிவு செய்ய குற்றத்தடுப்பு பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். அல்லைப்பிட்டி படுகொலைக்கு நீதிகோரி நீதிமன்றின் முன் போராட்டம்!

10.03.2026

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் சிறீலங்கா காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சிறுவனின் மரணத்திற்கு நீதி கோரி, இன்று செவ்வாய்க்கிழமை(10) ஊர்காவற்றுறை நீதிமன்று மற்றும் சிறீலங்கா காவல் நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த 17 வயதுடைய அருள்பாயஸ் என்ற சிறுவனுக்கு நீதி கோரியே மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிறுவனின் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றத்திற்கு முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டத்தில் காவல்துறையினருக்கு எதிரான கோசங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்பு போராட்டத்தில் குதித்திருந்தனர்.

தனது மகனை சிறீலங்கா காவல்துறையின் ஊர்காவற்துறை நிலையப் பொறுப்பதிகாரியே சுட்டதாக உயிரிழந்த சிறுவனின் தந்தை பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுக்களை




முன்வைத்திருந்தார்.

இத்தகைய மிலேச்சத்தனமான கொலைகள் இனியொரு போதும் இடம்பெறக் கூடாது என வலியுறுத்திய ஆர்ப்பாட்டக் காரர்கள், கொலைக்குக் காரணமான சிறீலங்கா காவல் துறைக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என நீதி கோரியிருந்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அதிகாலை வேலணை - அல்லைப்பிட்டி பகுதியில் வாகனத்தின் மீது தாம் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக காவல்துறையினர் தெரிவித்திருந்தனர். காவல் துறையினர் மீது வாகனத்தை மோதிவிட்டு தப்பிச் செல்ல முயன்றபோதே துப்பாக்கி சூடு சம்பவம் இடம்பெற்றதாக தெரிவித்திருந்த நிலையில், அதில் பயணித்த 17 வயதுடைய மாணவன் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். அல்லைப்பிட்டி படுகொலைக்கு நீதிகோரி நீதிமன்றின் முன் போராட்டம்!

10.03.2026

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் சிறீலங்கா காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சிறுவனின் மரணத்திற்கு நீதி கோரி, இன்று செவ்வாய்க்கிழமை(10) ஊர்காவற்றுறை நீதிமன்று மற்றும் சிறீலங்கா காவல் நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.






கடந்த மாதம் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த 17 வயதுடைய அருள்பாயஸ் என்ற சிறுவனுக்கு நீதி கோரியே மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிறுவனின் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றத்திற்கு முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டத்தில் காவல்துறையினருக்கு எதிரான கோசங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்பு போராட்டத்தில் குதித்திருந்தனர்.

தனது மகனை சிறீலங்கா காவல்துறையின் ஊர்காவற்துறை நிலையப் பொறுப்பதிகாரியே சுட்டதாக உயிரிழந்த சிறுவனின் தந்தை பகிரங்கமாகக் குற்றஞ்சாடடுக்களை முன்வைத்திருந்தார்.

இத்தகைய மிலேச்சத்தனமான கொலைகள் இனியொரு போதும் இடம்பெறக் கூடாது என வலியுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், கொலைக்குக் காரணமான சிறீலங்கா காவல்துறைக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என நீதி கோரியிருந்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அதிகாலை வேலணை - அல்லைப்பிட்டி பகுதியில் வாகனத்தின் மீது தாம் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக காவல்துறையினர் தெரிவித்திருந்தனர். காவல்துறையினர் மீது வாகனத்தை மோதிவிட்டு தப்பிச் செல்ல முயன்றபோதே துப்பாக்கி சூடு சம்பவம் இடம்பெற்றதாக தெரிவித்திருந்த நிலையில், அதில் பயணித்த 17 வயதுடைய மாணவன் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.









# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணி ஏப்ரல் 20ஆம் திகதி ஆரம்பம்

22.02.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை யாழ் . நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அதன் போது, புதைகுழியை சூழவுள்ள பகுதிகளை வாரத்தில் இரண்டு தினங்கள் சட்ட வைத்திய அதிகாரியின் நேரடி கண்காணிப்பில் துப்பரவு பணிகளை முன்னெடுக்க வேண்டும் என நல்லூர் பிரதேச சபைக்கு மன்று கட்டளையிட்டுள்ளது.

அத்துடன் புதைகுழி பகுதியில் அகழ்வு பணிகளில் ஈடுபடுவர்களுக்காக மற்றும் பொருட்களை வைப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டகைகள் டித்வா புயல், அதனை தொடர்ந்து யாழில் பெய்த பருவ மழை காரணமாக சேதமடைந்துள்ளன. அவற்றினை அங்கிருந்து அகற்றி, புதிய கொட்டகைகளை அமைக்கவும், அகழ்வு பணிகளுக்கான தளபாடங்களை கடந்த அகழ்வு பணிகளுக்கு ஏற்பாடு செய்தது போன்று நல்லூர் பிரதேச சபை இம்முறையும் தளபாட வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய மன்று கட்டளையிட்டது.

மனிதப் புதைக்குழி பகுதிக்கு நேரில் சென்று கள தரிசிப்பை மேற்கொள்வது என்றும் மன்றில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய நீதவான் எஸ்.லெனின்குமார், சட்ட வைத்திய அதிகாரி எஸ்.பிரணவன், சட்டத்தரணிகளான நிரஞ்சன், ரணித்தா, நல்லூர் பிரதே சபை செயலாளர் உள்ளிட்டோர் நேரில் சென்று புதைகுழியை பார்வையிட்டனர்.




அதன் போது புதைகுழிக்குள் தற்போதும் நீர் தேங்கி நிற்பதனால் எதிர்வரும் 28ஆம் திகதி சட்ட வைத்திய அதிகாரியின் நேரடி கண்காணிப்பில் நீரினை வெளியேற்றும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும், ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி குறித்த வழக்கு நீதிமன்றில் எடுக்கப்படும் எனவும், ஏப்ரல் 20ஆம் திகதி மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை முன்னெடுப்பது எனவும் திகதிகள் இடப்பட்டன.

**ஒரு பிரச்சினையை ஆராய்வதற்கும் தீர்ப்பு வழங்குவதற்கும் பிரத்தியேகமான மனப்பக்குவம் அவசியம். சுயநலமற்ற, சொந்த விருப்பு – வெறுப்புக்களற்ற, உணர்வுகளுக்கும் பந்த பாசங்களுக்கும் இடமளிக்காத, ஒரு நேர்மையான பார்வை அவசியம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# தம்பியின் விடுதலைக்காக 31 ஆண்டுகளாக போராடிய சகோதரி புற்றுநோயினால் சாவு

12.03.2026

கடந்த 31 ஆண்டுகள் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் தமிழ் அரசியல் கைதியாக சிறை வைக்கப்பட்டிருக்கும் தோப்பூர்- மூதுரைச் சேர்ந்த, கதிர்காமத்தம்பி சிவகுமார் என்பவரின் சகோதரி சுப்பிரமணியம் கமலாதேவி புற்றுநோயினால் உயிரிழந்துள்ளார்.

தாய் - தந்தை, குடும்பம் - உறவு என எவருமற்ற தனது தம்பியை தான் வாழும் காலத்திலேயே சிறை மீட்டுவிட வேண்டும் என்று அயராது பாடுபட்டு வந்த அந்த சகோதரி,நேற்றைய தினம் தனது 79வது வயதில், நிறைவேறாக் கனவோடு மரணித்துள்ளார்.

சகோதரனின் விடுதலைக்காக அரசிடம் மன்றாடி மனமுடைந்து,  புற்றுநோயின் பாதிப்பிற்கு ஆளாகி நீண்ட நாட்களாக படுக்கை நோயாளியாக இருந்து அவர் சாவடைந்துள்ளார்.





உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியின் சகோதரியின் பூதவுடல் அவரது சொந்த ஊரான திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் - நாராயணபுரம், பாலத்தடிச்சேனை இந்து மயானத்தில் இன்று வியாழக்கிழமை தகனக்கிரியை செய்யப்பட்டது.

இறுதிக் கிரியையில் குரலற்றோர் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் உள்ளிட்டவர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். அல்லைப்பிட்டியில் சிறீலங்காப் பொலிசாரின் துப்பாக்கி சூட்டில் சிறுவன் உயிரிழந்த சம்பவம்: கொழும்பு சி.ஐ.டி க்கு மாற்றப்பட்ட வழக்கு

12.03.2026

யாழ். அல்லைப்பிட்டியில் சிறீலங்காப் பொலிசரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கொழும்பில் உள்ள குற்ற புலனாய்வு பிரிவினருக்கு மாற்றுமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

அல்லைப்பிட்டி பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி அதிகாலை வேளை பயணித்த ஹயஸ் ரக வாகனத்தை பொலிசார் வழிமறித்த போது பொலிசாரின் கட்டளையை மீறி சென்ற (?) வாகனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் வாகன சாரதியான 17 வயது சிறுவன் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளான் என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் இன்றைய தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அதன் போது, உயிரிழந்த சிறுவனின் குடும்பத்தினர் சார்பாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் 06க்கும் மேற்பட்டோர் மன்றில் முன்னியாகி, சிறுவனின் கொலை தொடர்பில் யாழ் . மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் திருப்தி இல்லை என மன்றில் சுட்டிக்காட்டி, வழக்கு விசாரணைகளை கொழும்பில் உள்ள குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரிடம் கையளிக்க வேண்டும் என மன்றில் சமர்ப்பணங்களை முன் வைத்தனர்.

அதற்கு பொலிஸ் தரப்பில் கடுமையான ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டன. அதனால் கடுமையான வாத பிரதிவாதங்களை அடுத்து விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு மாற்றுமாறு மன்று உத்தரவிட்டது.

அதேவேளை இன்றைய வழக்கு விசாரணைகளின் போது, பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள சட்டத்தரணிகள், என 20க்கும் மேற்பட்டோர் நீதிமன்றுக்கு சமூகமளித்திருந்தனர்.

அத்துடன் இன்றைய வழக்கு விசாரணையின் போது, சம்பவத்துடன் தொடர்புடைய வாகனத்தினுள் இருந்து துப்பாக்கி ரவையின் வெற்றுக்கோது ஒன்றினை மீட்டதாக பொலிசார் மன்றில் தெரிவித்தனர்.




சம்பவ தினத்தன்று தடயவியல் பொலிசாரினால் மீட்கப்படாத துப்பாக்கி ரவையின் வெற்றுக்கோது தற்போது மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவது சந்தேகத்திற்கு உரியது என பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து மன்றில் முன்னியான சட்டத்தரணிகள் கடும் ஆட்சேபனையை மன்றில் தெரிவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




www.sangathamil.ca

# முல்லை. கொக்குத்தொடுவாயில் தமிழர் காணிகளில் அத்துமீறி உப்பளம் அமைப்பதற்கு கடுமையாக எதிர்ப்பு வெளியிட்ட ரவிகரன் துரைராசா, எம்.பி

28.02.2026

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால்வெளி பகுதியில் தமிழர்களின் தனியார் காணிகளில் மகாவலி அதிகாரசபை மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய தரப்பினரின் சட்ட விரோத அனுமதியுடன் பெரும்பான்மை இனத்தவர் அத்துமீறி உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை மேற்கொண்டுவருவதாகச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை நிறுத்தி குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, சட்டவிரோத அனுமதி வழங்கியோருக்கும், அத்துமீறிய செயற்பாடுகளில் ஈடுபட்டோருக்கும் எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை நிறுத்துவதுடன், குறித்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு விவசாயம், கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால் காந்த அறிவுறுத்தியுள்ளார்.

வவுனியா மாவட்டசெயலகத்தில் 12.03 2026இன்று இடம் பெற்ற விவசாயம், கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் தலைமையிலான விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால் வெளி என்னுமிடத்தில் அப்பாத்துரை துரைசாமி, கதிரேசு நாகரட்ணம், குமாரசாமி கணபதிப்பிள்ளை, கதிரேசு கந்தசாமி என்பவர்களுக்குரிய தனியார் காணிகளில் உப்பளம் அமைப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகாரசபை என்பன சட்ட விரோதமாக அனுமதிகளை வழங்கியுள்ளன.

இந்நிலையில் அங்கு தமிழ் மக்களுக்குரிய அந்த காணிகளில் உப்பளம் அமைக்க மேற்கொள்ளப்பட்ட அந்த முயற்சியால் காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கும், சட்டவிரோத அனுமதியுடன் அங்கு உப்பளம் அமைக்க முயற்சித்தவர்களுக்குமிடையில் கடந்த 27.02.2026அன்று முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து இவ்வாறு தமது தனியார் காணிகளுக்குள் இவ்வாறு அத்துமீறி நுளைந்து உப்பளம் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலரிடமும் அப்பகுதி மக்களால் நேரடியாகச் சென்று முறைமயீடும் செய்யப்பட்டது.

அந்தக்காணிகள் தனியார் காணிகள் என்பதற்கான ஆவணங்களும் என்னிடமுள்ளன. இவ்வாறு தனியார் காணிகளாக இருக்கும்போது அந்தக் காணிகளில் உப்பளம் அமைப்பதற்கு அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு அங்கு சட்ட விரோதமாக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களும் என்னிடமுள்ளன.

இந்த ஆதாரங்களை அமைச்சரிடம் கையளிப்பதற்கு தயாராக இருக்கின்றேன்.

தமிழ் மக்களின் தனியார்காணிகளில் உப்பளம் அமைப்பதற்கு மகாவலி அதிகார சபையாலும், வனஜீவராசிகள் திணைக்களத்தாலும் எவ்வாறு அனுமதி வழங்க முடிந்தது.

இவ்வாறாக மகாவலி அதிகாரசபையும், வனஜீவராசிதள் திணைக்களமும் மிகமோசமான அத்துமீறல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் கொக்கிளாய் களப்பில் நீர் வரத்து அதிகமாக இருக்கும்போது பாதிப்பு ஏற்படுமா என கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்திடமும் ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களமும் இதுதொடர்பில் எம்மிடம் கலந்துரையாடவில்லை. முல்லைத்தீவு மாவட்ட ஒரங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உப்பளம் அமைப்பதற்கான அனுமதி கோரப்பட்டபோதும் அதற்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை.

இந்த அரசின் ஆட்சியில் கூட இவ்வாறான அத்துமீறல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்டசெயலாளர், கரைதுறைப்பற்று பிரசேசசெயலாளர் ஆகியோரிடமிருந்தும் கூடுதல் தகவல்களைப்பெறமுடியுமென நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்நிலையில் அமைச்சர் கே.டி.லால்காந்த இதன்போது மகாவலி அதிகாரசபையிடம் இவ்விடயம் தொடர்பில் விக்கங் கோரினார்.

அதற்கமைய மகாவலி அதிகாரசபையின் அதிகாரி இதன்போது பதிலளிக்கையில்,

குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாட்டிற்கு உரியவாறு அனுமதிகள் பெறப்பட்டதாகவும், வெலிஓயா பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் உப்பளம் அமைப்பதற்கு அனுமதி பெறப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு அந்தக்காணிகள் தனியார் காணிகள் என்பது தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவித்த குறித்த அதிகாரி, அக்காணிகள் காணிகள் தனியார் காணிகள் எனில், அதுதொடர்பில் மகாவலி அதிகாரசபை அலுவலகத்திற்கு வந்து முறைப்பாடளிக்கமுடியும் எனவுந் தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இடையிட்டுக் கருத்துத் தெரிவிக்கையில்,

மகாவலி அதிகாரசபையிடம் நாமும், எமது தமிழ் மக்களும் வருகைதரவேண்டிய அவசியமில்லை.

எமது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கும், முறைப்பாடுகளைப் பதிவுசெய்யவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்குத்திற்குத்தான் செல்வார்கள். எமது மக்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகமே பொறுப்பாகும்.

அவ்வாறிருக்கையில் நீங்கள் எமது தமிழ் மக்களின் காணிகளை அத்துமீறி அபகரித்துள்ளீர்கள். ஒருபோதும் மகாவலி அதிகாரசபைக்கு எமது தமிழ் மக்கள் வருகைதர மாட்டார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ஆகியோரே எமது மக்களுக்குப் பொறுப்பானவர்கள்.

அங்கு வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை என்பன தமக்கு அனுமதிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவித்து மரங்களை வெட்டி குடில்கள் அமைக்கும் சட்டவிரோத செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறெனில் இங்கு என்ன நடக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உமாமகேஸ்வரன் இதன்போது கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த உப்பளம் அமைப்பதற்கு கடந்த 2023ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கூறியதைப் போல, அந்த உப்பளம் அமைக்கப்படுகின்ற பகுதியில் ஒரு தனியார் காணி இருப்பதாக உரிய ஆவணங்களுடன் வருகைதந்து அந்த ஊர்மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

அந்த காணி அமைந்திருக்கின்ற இடமும், உப்பளம் அமைக்கப்படுகின்ற இடமும் ஒரே பிரதேசமாக இருந்தாலும் அந்த இடத்தை எம்மால் சரியாக இனங்காணவேண்டிய தேவையுள்ளது.



அதில் இரண்டு முக்கிய விடயங்கள் இருக்கின்றன. குறிப்பாக மக்களால் தனியார்காணி என முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. அந்த தனியார் காணிகளுக்குள்ளேதான் அந்த உப்பளம் அமைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராயவேண்டும்.

அத்தோடு அங்கு உப்பளம் அமைக்கப்படுவதால் தமக்குப் பாதிப்பு இருப்பதாக அருகே உள்ள களப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்களாலும் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இதற்குரிய அனுமதியை சுற்றாடல் அமைச்சு வழங்கியுள்ளது.

எனவே முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் இதுதொடர்பில் மகாவலி அதிகாரசபைக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்படும்.

காணியை உறுதிப்படுத்திய பிற்பாடு இந்த உப்பளம் அமைகும் திட்டத்தை மேற்கொள்வதே பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன். எனவே உப்பளம் அமைக்கும் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்தி காணி உரிமையை உறுதிப்படுத்திய பின்னர் அந்த திட்டத்தை மேற்கொள்வதுகுறித்துத் தீர்மானிக்கலாம்.

ஏன் எனில் தமிழ் மக்களால் தமது உறுதிக்காணிகள் எனக் கோருகின்ற காணியும், உப்பளம் அமைக்கப்படுகின்ற காணியும் ஒரே காணியா வெவ்வேறு காணியா என்பதை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தாலும், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தாலும் மிகச் சரியாக உறுதிப்படுத்த முடியாத நிலையிருப்பதாகத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

நிலம் என்பது எமது இறைமை. எமது தமிழ் மக்களின் நிலங்கள் அனைத்தையும் பறித்தெடுத்தால் எமது மக்கள் எங்கு செல்வது.

எனவே இந்த விடயத்தில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, தனியார் காணிகளை அத்துமீறி ஆக்கிரமித்தவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், இந்த விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு பொறுப்பளிக்கப்படவேண்டும் எனவும் அமைச்சர் லால் காந்தவிடம் வலியுறுத்தினார்.

இந்நிலையில் இந்தவிடயத்தை ஆராய்வதற்கு முல்லைத்தீவு மாவட்டசெயலாளரிடம் பாரப்படுத்துவதாக விவசாயம், கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே.டி லால் காந்த இதன்போது பதிலளித்தார்.என்றார்.




இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்கு முறையாலும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca



# கனடியச் செய்திகள்

# கனடாவின் கடவுச்சீட்டு கட்டண உயர்வு; மார்ச் 31 முதல் அமுலுக்கு வருகிறது

05.03.2026

கனடாவில் புதிய கடவுச்சீட்டுக்கான கட்டணங்கள் இந்த வசந்த காலம் முதல் உயர்த்தப்படுகின்றன.

2026 மார்ச் 31 திகதி முதல் பெரும்பாலான கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணக் கட்டணங்கள் அதிகரிக்கும் என கனடிய அரசு அறிவித்துள்ளது.

கனடிய குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“பணவீக்கம் மற்றும் பாதுகாப்பான பயண ஆவணங்களை தயாரிக்கும் செலவு அதிகரித்துள்ளதால், மேலும் விண்ணப்ப செயல்முறையில் கனடியர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை நிலைத்தன்மையுடன் பராமரிக்க வேண்டிய அவசியம் காரணமாக இம்மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டு செல்லுபடியாகும் சாதாரண வயது வந்தோருக்கான கடவுச்சீட்டு: 120 டொலரிலிருந்து 122.50 டொலராக (2.50 டொலர் உயர்வு) 10 ஆண்டு கடவுச்சீட்டு: 160 டொலரிலிருந்து 163.50 டொலராக (3.50 டொலர் உயர்வு) 5 ஆண்டு குழந்தைகள் கடவுச்சீட்டு: 57 டொலரிலிருந்து 58.50 டொலராக (1.50 டொலர் உயர்வு) 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இது முதல் முறையாக கட்டண உயர்வு மேற்கொள்ளப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது.

இனிமேல், “சேவை கட்டண சட்டம்” (Service Fees Act) அடிப்படையில் ஆண்டுதோறும் பணவீக்கத்துடன் இணங்க கட்டணங்கள் திருத்தப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் கனடியர்கள் 10 ஆண்டு வயது வந்தோருக்கான கடவுச்சீட்டு: 260 டொலரிலிருந்து 266.25 டொலராக (6.25 டொலர் உயர்வு) • 5 ஆண்டு வயது வந்தோருக்கான கடவுச்சீட்டு: 190 டொலரிலிருந்து 194.25 டொலராக (4.25 டொலர் உயர்வு) அவசர சேவை, வார இறுதி




அல்லது அரச விடுமுறை நாள்களில் சேவை, தற்காலிக அல்லது இடைக்கால கடவுச்சீட்டு போன்ற சேவைகளுக்கும் கட்டண உயர்வு அமல்படுத்தப்படுகின்றது.

# ‘ஒன்ராரியோப் பிளேஸ்’ இல் புதிய உலகத்தரத்திலான அறிவியல் மைய வடிவமைப்பை வெளியிட்டது ஒன்ராரியோ அரசு

05.03.2026

400,000 சதுர அடி பரப்பளவில், அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய ஒன்ராரியோ அறிவியல் மையக் கட்டுமானத்திற்கான ஒப்பந்தத்தை ஒன்ராரியோ அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதனை 2029ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புது மெருகூட்டப்பட்ட “ஒன்ராரியோ பிளேஸ்” இன் முக்கிய அங்கமாக, ஊடாடும் (Interactive) கண்காட்சிகள், இணைக்கப்பட்ட வளாகங்கள் மற்றும் மறுவடிவமைக்கப்பட்ட திரைக் கூரை ஆகியவற்றைக் கொண்டு, முன்னரை விடவும் அதிகமான நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இது அமையவுள்ளது. மிகப்பெரும் அளவிலான இம்மறுசீரமைப்புத் திட்டம் 5,700 வேலைகளை உருவாக்குவதுடன், கட்டுமானக் கட்டத்தில் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 420 மில்லியன் டொலர் வரையிலான பங்களிப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்கார்பரோ மற்றும் ரொரான்ரோ வாசிகளுக்கு, ஏரிக்கரையை அண்டிய இவ்விடமாற்றம், புதிய “ஒன்ராரியோ வழித்தடம்” (Ontario Line) மற்றும் கண்காட்சி நிலையத்தில் மேம்படுத்தப்பட்ட “கோ” (GO) போக்குவரத்து இணைப்புகள் மூலம் அணுகலை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்புதிய வளாகத்தின் நீண்டகால தொலைநோக்குப் பார்வை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள், “ஒன்ராரியோ மக்கள் நீண்டகால நினைவுகளையும் வாழ்நாள் முழுமைக்கும் நீடிக்கும் அனுபவங்களையும் பெறக்கூடிய ஒரு இடத்தை நாம் உருவாக்கி வருகிறோம்” என்றார். ஏரிக்கரைப் பகுதியை குடும்பங்கள் பொழுதுபோக்க ஏற்ற முதன்மையான இடமாக மாற்றுவதன் மூலம், மாநிலம் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதுடன், சுற்றுலாவை ஊக்குவித்து ஆண்டுதோறும் ஆறு மில்லியன் பார்வையாளர்களை ஈர்க்கும் எனவும் எதிர்



பார்க்கப்படுகிறது.

# ரொரான்ரோவில் அமெரிக்கத் தூதரகத்தின் மீது துப்பாக்கிச் சூடு!

10.03.2026

ஒன்ராரியோவின் ரொரான்ரோ நகரில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தைக் இலக்கு வைத்து நேற்று (10) அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.



உள்ளூர் நேரப்படி அதிகாலை 5:30 அளவில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகக் கிடைத்த தகவலையடுத்து விரைந்த காவல்துறையினர், தூதரக வளாகத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளனர்.

சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படாத நிலையில், இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தை அடுத்து விசாரணைகளுக்காகத் தூதரகத்தைச் சுற்றியுள்ள வீதிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன் ரொரான்ரோ தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஈரான் மீதான அமெரிக்க - இசுரவேலிய தாக்குதல்கள் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி ஆரம்பமானதிலிருந்து, ரொரான்ரோவில் உள்ள யூத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் ஈரான் அரசுக்கு




எதிரான கருத்துக்களைக் கொண்டவர்களின் இடங்கள் மீது தொடர்ச்சியாக இவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# மத்திய கிழக்கிலிருந்து 7,000க்கும் அதிகமான கனடியர்கள் வெளியேற்றம்!

## கனேடிய வெளியுறவுத்துறை அமைச்சர் அனிதா ஆனந்த்

11.03.2026

மத்திய கிழக்கில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், அங்கிருந்து இதுவரை 7,000-க்கும் அதிகமான கனடியர்கள் வெளியேறியுள்ளதாக கனடிய வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

மார்ச் 4 முதல் மார்ச் 8 வரையிலான காலப்பகுதியில் மட்டும் 4,300க்கும் மேற்பட்ட கனடியர்கள், நிரந்தர வதிவிட உரிமையாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தாயகம் திரும்பியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இவர்கள் நேரடி மற்றும் மாற்று விமானப் பாதைகள் ஊடாக கனடாவை வந்தடைந்துள்ளனர்.

வர்த்தக ரீதியிலான விமானங்களைப் பயன்படுத்தி வெளியேறுமாறு ஊக்குவிக்கும் அதேவேளை, தேவைப்பட்டால் விசேட விமானங்கள் (Charter flights) மற்றும் பேருந்து வசதிகளையும் வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது.

சுமார் 871 பேர் துருக்கி போன்ற பாதுகாப்பான மூன்றாம் நாடுகளுக்குச் சென்றுள்ளதாக கனடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், உதவி கோரி வரும் அழைப்புகளின் எண்ணிக்கை தற்போது பாதியாகக் குறைந்துள்ளதாக அமைச்சர் ஆனந்த் சுட்டிக்காட்டினார்.

மத்திய கிழக்கில் சுமார் 110,000 கனடியர்கள் வசித்து வரும் நிலையில், அவர்களில் 5 சதவீதத்திற்கும் குறைவானவர்களே வெளியேறுவதற்கு உதவி கோரியுள்ளனர்.

பிப்ரவரி 28 அன்று ஈரான் மீதான அமெரிக்க வான்வழித் தாக்குதலுடன் தொடங்கிய இந்த வன்முறைச் சம்பவங்களில், இதுவரை கனடியர்கள் எவரும் கொல்லப்படவோ அல்லது



காயமடையவோ இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# கனடாவில் உணவுப் பொருள் விலைகளில் ஏற்படவுள்ள மாற்றம்!

13.03.2026

உலக சந்தையில் மசகு எண்ணெய் (Crude Oil) விலை அதிகரித்து வருவதால், அதன் தாக்கம் கனடிய விவசாயத் துறையிலும், அதனைத் தொடர்ந்து மளிகைப் பொருட்களின் விலையிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளதாக உணவுப் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



குயெல்ஃப் பல்கலைக்கழகத்தின் (University of Guelph) பேராசிரியர் மைக் வான் மாசோ (Mike von Massow) இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது விவசாயிகள் விதைப்புப் பணிகளில் ஈடுபடும் காலம் என்பதால், நிலங்களை உழுவதற்கும் விதைகளை இடுவதற்கும் அதிகப்படியான எரிபொருள் தேவைப்படுகிறது.

உலகளவில் எண்ணெய் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகளுக்கான எரிபொருள் செலவு கணிசமாக உயரும். இது அறுவடை வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் காரணமாக, உலகிலேயே மிக முக்கியமான எண்ணெய் போக்குவரத்துப் பாதையான ஹார்முஸ் நீரிணை (Strait of Hormuz) வழியாக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறிப்பாக மத்திய கிழக்கில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நைட்ரஜன் உரங்களின் விலை அதிகரித்துள்ளது. மேற்கு கனடாவை விட, இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் கிழக்கு கனடா (Eastern Canada) இந்த உர விலை உயர்வால் பெரும் பாதிப்பைச் சந்திக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களின் விலையில் போக்குவரத்துச் செலவு சராசரியாக 3.5% பங்கைக் கொண்டுள்ளது.

ஆனால், இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் இது 10% வரை இருக்கும். தெற்கு அமெரிக்கா மற்றும் மத்திய அமெரிக்காவி



லிருந்து லாரிகள் மூலம் கொண்டு வரப்படும் புதிய காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை 10% வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

காய்கறிகள் போன்ற அழுகும் பொருட்கள் (Perishable Products) வாரந்தோறும் இறக்குமதி செய்யப்படுவதால், அடுத்த 1 முதல் 2 வாரங்களுக்குள் இந்த விலை உயர்வு நுகர்வோரை வந்தடையும் என பேராசிரியர் மாசோ தெரிவித்துள்ளார்.

# ரொரான்ரோவில் வீட்டு வாடகை தொகையில் சரிவு!

13.03.2026

கனடாவின் முக்கிய நகரங்களில் ஒன்றான ரொரான்ரோவில் வீடுகளுக்கான வாடகை விலை தொடர்ந்து சரிவைச் சந்தித்து வருவதாக புதிய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

Rentals.ca மற்றும் Urbanation அமைப்பு வெளியிட்டுள்ள அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பெப்ரவரி மாதத்தில் ரொரான்ரோவின் சராசரி மாதாந்திர வாடகை 2,482 டொலராகக் குறைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வாடகை விலை 5.3% குறைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 11.7% குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு படுக்கையறை வீடுகளின் வாடகை 7.1% என அனைத்து பிரிவுகளிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

சந்தையில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் பிரத்யேகமாக வாடகைக்கு விடப்படும் வீடுகளின் எண்ணிக்கை (Supply) அதிகரித்துள்ளதே இந்த விலை வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

"கோடை காலத்தில் பொதுவாக வாடகை உயரும் என்று எதிர்பார்ப்போம், ஆனால் கடந்த கோடையில் கூட ரொரான்ரோவில் விலை அதிகரிக்கவில்லை.

தற்போது சந்தையில் அதிகப்படியான வீடுகள் இருப்பதால், 2026 ஆம் ஆண்டு முழுவதும் விலை உயருவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு," என்று Rentals.ca இன் ஜியாகோமோ லாடாஸ் தெரிவித்துள்ளார்.

வீடுகள் காலியாக இருப்பதைத் தவிர்க்க, உரிமையாளர்கள் தற்போது பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றனர்:

ஒரு சில மாதங்களுக்கு இலவச வாடகை அல்லது இலவச வாகன நிறுத்துமிடம் (Parking), ஏரோபிளான் (Aeroplan) போன்ற வெகுமதி புள்ளிகள், வாடகைதாரர்களின் வசதிக்கேற்ப குறைந்த பரப்பளவு கொண்ட (சராசரியாக 826 சதுர அடி) ஆனால் நவீன வசதிகள் கொண்ட வீடுகள் அதிகளவில் சந்தைக்கு வருகின்றன.




ரொரான்ரோ மட்டுமல்லாது அதன் அண்டை நகரங்களிலும் வாடகை குறைந்துள்ளது. ஒக்வில்லில் (Oakville) 4.1 சதவீதமும், பர்லிங்டனில் (Burlington) 4.5 சதவீதமும் வாடகை சரிந்துள்ளது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# தமிழ் நாட்டு செய்திகள்



## நில ஆவணம் பட்டா மாறுதல் அறிக்கை இணையவழிச்சேவை தொடக்கம்

05.03.2026

வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் இயங்கி வரும் நில அளவை, மற்றும் நிலவரித் திட்டத் துறையால் இணையவழி ஆவணங்களான 'அ' - பதிவேடு, சிட்டா மற்றும் புலப்படம் ஆகியவை இணையவழி பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்களின் விவரங்களை ஒருங்கிணைத்து, நில உரிமைதாரர்களுக்கு 'ஒருங்கிணைந்த நில ஆவணம்' (Integrated Land Record) என்ற சேவையையும், இணையவழியில் ஒரு புல எண்ணில் நடைபெறும் பட்டா மாறுதல் விவரங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் 'பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை' (History of Patta Transfer) என்ற சேவையையும் வருவாய்த் துறை அமைச்சர் சாத்தூர் இராமச்சந்திரன் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், துறை செயலர் பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் கஜலட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த புதிய சேவை மூலம், நில உரிமைதாரர்கள் தங்களது நிலம் சார்ந்த விவரங்களை உள்ளீடு செய்து https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளத்தில் 'ஒருங்கிணைந்த நில ஆவணத்தை பார்வையிட்டு பதிவிறக்கம் செய்யலாம்.

பட்டா மாறுதல் விவர அறிக்கையை பொருத்தவரை, நில உரிமையாளர்கள் https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளத்தில் https://tamilnilam.tn.gov.in/citizen என்ற தலைப்பை தேர்வு செய்து, தங்கள் நிலம் சார்ந்த விவரங்கள் மற்றும் விவரம் தேவைப்படும் தேதியினை தேர்வு செய்ய வேண்டும்.

பின்னர், பட்டா மாற்ற விவரக்கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 வீதம் மற்றும் செயலாக்க கட்டணமாக ரூ.60 ஆகிய வற்றை இணையம் வாயிலாக செலுத்தி விண்ணப்பித்து,



'முந்தைய பட்டா மாறுதல் விவர அறிக்கை' யை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## நடப்பது அநுர ஆட்சியா அல்லது ராஜபக்ச ஆட்சியா?

### தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனர் , தென்னிந்திய பிரபல இயக்குனருமானவ. கௌதமன்

05.03.2026

இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி விட்டு அதற்கு பதிலீடாக அரசாங்கம் புதிய சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கிறது. இதனை பார்க்கும் பொழுது அநுர ஆட்சியா அல்லது ராஜபக்ச ஆட்சியா என சந்தேகம் எழுகிறது என தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனரும், தென்னிந்திய பிரபல இயக்குனருமான வ.கௌதமன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் இலங்கையின் அதிபர் அநுரகுமார திசநாயக்க யாழ்ப்பாணத்தில் ஆயுதங்கள் எவையும் இன்றி நடை பயிற்சியில் ஈடுபடுகின்றார்.

ஒரு ஜனாதிபதி அச்சமின்றி, நிம்மதியாக தமிழர் தாயகத்தில் நடை பயிற்சியில் ஈடுபடும்போது அங்கு பயங்கரவாதம் இல்லை என்ற கருத்து மிகச் சாதாரணமாகவே வலுப்பெறுகிறது. சம காலத்தில் நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தினால் பெரும்பாலும் தமிழர்களே பாதிக்கப்பட்டிருந் தாலும் அந்தச் சட்டத்தினால் ஜே.வி.பியை சேர்ந்த இளைஞர் களும் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

மேலும், அநுரகுமார எதிர்க்கட்சியில் இருந்தபோது பயங்கர வாத தடைச் சட்டத்திற்கு எதிராக குரல் கொடுத்தார். அவரது தேர்தல் பிரகடனத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டமானது நீக்கப்படும் என்ற விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

அவர் பதவியேற்று கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் கடக்கின் றன. ஆனால் அந்தப் பயங்கரவாத தடைச் சட்டமானது இது வரை நீக்கப்படவில்லை.

அதற்குப் பதிலீடாக அரசாங்கத்தை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டம் என்ற ஒன்றை கொண்டு வருவதற்கு அநுர அரசு முயற்சிக்கிற செய்தியறிந்து நான் மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் பேரதிர்ச்சிக்குள்ளாகியிருக் கிறார்கள்.

புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள சட்டமானது ஏற்கனவே உள்ள சட்டத்தை விட மிக மோசமான ஒரு குரூர சட்டமாக காணப்படுகின்றது. ஒரு வேளை ஏற்கனவே உள்ள சட்டத்தை நடைமுறையில் வைத்திருப்பதற்காக அநுர அரசு போடும் நாடகமா இது என எமக்கு சந்தேகம் ஏற்படுகிறது.

ஏனெனில் ஏற்கனவே உள்ள சட்டத்தை விட மோசமான ஒரு சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கும்போது, புதிய சட்டத்தை விட ஏற்கனவே உள்ள சட்டமே பரவாயில்லை என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்படுவார்கள். அதனைத்தான் அரசு விரும்புகின் றதா என்கிற பெருத்த சந்தேகத்தை உண்டுபண்ணுகிறது.

வரலாற்றில் முதல் தடவையாக தமிழர் தாயகத்தில் தேசிய கட்சி ஒன்றில் இருந்து அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மக்கள் தெரிவு செய்துள்ளனர். அந்த விடயத்தையாவது ஜனாதி பதி அநுரகுமார திசநாயக்க ஏன் புரிந்து கொள்ளவில்லை. உங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு நீங்கள் செய்கின்ற நன்றி கடன் இதுதானா?

அநுரவும் ராஜபக்சகளின் கொடுங்கோல் வழியிலேயே என்றால் ஜனாதிபதியாக அநுர எதற்கு? ராஜபக்சகளே நாட்டினை தொடர்ந்து ஆண்டு இருக்கலாமே. நல்லிணக்கம், சமாதானம், சமத்துவம் என்று வாயால் மட்டும் கூறினால் சரியாகாது.

அதனை ஆட்சியில், நடைமுறையில் அரசியல் அறத்தோடு செய்து காட்ட வேண்டும். புத்தபெருமான் அருளிய போத னைகள் அத்தனையும் நடைமுறை வாழ்க்கைக்கு உகந்ததாக காணப்படுகின்றன.

ஆனால் அந்த புத்தபெருமானை வைத்து தமிழர் தாயகங்களில் காணிகளை ஆக்கிரமித்தல், தமிழ் மக்களுக்கு தீங்கு விளை வித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் அன்றாடம் அரங்கேற்றப் படுகின்றன.



அறத்தை போதித்த புத்தரின் பற்களில் இரத்தக்கறை படிந் துள்ளது. இது சிங்கள பேரினவாதிகளுக்கு மாத்திரமன்றி புத் தருக்கும் ஏற்பட்ட ஒரு இழுக்கு. புத்தருக்கு இழுக்கு ஏற்படுத்தி யவர்களின் வரிசையின் இறுதியில் ராஜபக்சகளே இருப்பார்கள் என நாங்கள் நம்பினோம். ஆனால் அந்த வரிசை அநுரவின் ஆட்சியிலும் நீள்கிறது என்பது மனவருத்தமளிக்கிறது.

அநுர அவர்களே! புத்தரின் பற்களில் உள்ள கறையை போக் குவதற்கு உடனடியாக அதற்கு வெள்ளை அடியுங்கள். புத்தரின் புனிதத்திற்கு ஏற்பட்ட களங்கத்தை போக்குங்கள். அனைவரும் சமம் என்ற விடயத்தை ஆட்சியினூடாக நிரூபியுங்கள். இன வாதத்தை தூண்டும் காவியுடை தரித்தோரை எந்தவிதமான பாகுபாடும் இன்றி கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துங்கள்.

மக்களை ஒடுக்குகின்ற தேவையற்ற சட்டங்களை நீக்குங்கள். அதற்கு பதிலீடாக எந்தவொரு புதிய சட்டத்தையும் கொண்டுவர முயற்சிக்காதீர்கள். இவை எல்லாம் நடந்தால் நீங்கள் உண் மையான, மக்கள் நலன் மிக்க ஒரு ஜனாதிபதி என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். இல்லையாயின் நீங்களும் பத்தோடு ஒன்று பதினொன்று தான் என்றார்.

## தமிழகத்தில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமின் தலைவர் படுகொலை

08.03.2026

தமிழ் நாட்டின் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமின் தலைவர் சிவக்குமார் என்ற இலங்கைத் தமிழர் மர்ம நபர்களால் கொலை செய்யப் பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முகாமிற்குள் புகுந்த குழுவொன்று, சிவக்குமாரை ஆயுதத்தால் தாக்கியதாகவும் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக வும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் தப்பிச் சென்ற நிலையில், ஆத்திரமடைந்த சிவக்குமாரின் உற வினர்கள் மற்றும் முகாம்வாசிகள் சந்தேகநபர்களின் வீடுக ளுக்குத் தீ வைத்ததால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்த மோதல் காரணமாக முகாம் பகுதியில் வன்முறை ஏற் படாமல் இருக்கவும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவும் கும்மிடிப் பூண்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து







ஏராளமான காவல்துறையினர் முகாமில் குவிக்கப்பட்டுள்ளனர். முன்விரோதம் காரணமாக இந்தக் கொலை நடந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், தப்பியோடியவர்களை கைது செய்வதற்கு விசாரணை இடம்பெற்று வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




# ஈரான் உச்சத்தலைவர் அயத்தொல்லா அலி கொமேனி மற்றும் இராணுத் தலைவர்கள் படுகொலை : ஈரான் அரசு உறுதிப்படுத்தியது!

01.03.2026

அமெரிக்கா மற்றும் இசுரவேலின் தொடர்ச்சியான தாக்குதல் களில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கொமேனி மற்றும் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.



ஈரானின் உச்ச தலைவரான ஆயத்துல்லா அலி கொமேனி , சனிக்கிழமை காலை தனது அலுவலகத்தில் கொல்லப்பட்டார்.

ஈரானிய தொலைக்காட்சி நாட்டின் ஆயுதப்படைகளின் தலைமைத் தளபதி அப்துல்ரஹிம் மௌசவி வான்வழித் தாக் குதல்களில் கொல்லப்பட்டதாக செய்தி வெளியிட்டுள்ளது.

புரட்சிகர காவல்படையின் தளபதி ஜெனரல் முகமது பாக்பூரின் மரணத்தையும் தெஹ்ரான் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் கொமேனியின் மகள், மருமகன் மற்றும் பேரக்குழந்தை ஆகியோர் கொல்லப்பட்டதாக மாநில ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 40 ஈரானிய அதிகாரிகள் கொல்லப்பட்டதாக ஒரு உளவுத்துறை வட்டாரமும் இராணுவ வட்டாரமும் சிபிஎஸ் செய்திக்குத் தெரிவித்துள்ளன.




ஈரானிய புரட்சிகர காவல்படை பழிவாங்குவதாக உறுதியளித் துள்ளது. மேலும் மத்திய கிழக்கில் அமெரிக்க துருப்புக்களை வைத்திருக்கும் 27 தளங்கள் மற்றும் டெல் அவிவில் உள்ள இசுரவேலிய இராணுவ வசதிகள் மீது தாக்குதல்களை நடத்தியதாகக் கூறுகிறது.

# ஈரானின் உயர் தலைவர் உயிரிழப்புக்கு 40 நாட்கள் துக்க நாளாக நினைவுகூரப்படும்

## ஈரான் அரசு

01.03.2026

ஈரானின் உயர் தலைவர் அயத்துல்லா அலி கொமெனி கொல் லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, ஈரானில் 40 நாட்கள் துயரம் நினைவுகூரப்படும் என ஈரான் அரசு அறிவித் துள்ளது.

அத்துடன் ஈரானின் உயர் தலைவரின் மறைவை முன்னிட்டு அந்நாட்டில் ஒரு வாரத்துக்கு பொது விடுமுறையும் அறிவிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க - இசுரவேல் இணைந்து ஈரான் மீது நடத்திய பாரிய தாக்குதலில் ஈரானின் உயர் தலைவர் அயத்துல்லா அலி கொமெனி கொல்லப்பட்டதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து, அவரது மகள், மருமகன், பேத்தி ஆகியோரும் உயிரிழந்துவிட்டதாக ஈரானின் ஃபோர்ஸ் நியூஸ் செய்தி வெளியிட்டது.

மேலும், ஈரானின் உயர் தலைவர் உயிரிழந்த தகவலை அந்நாட்டு அரசு ஊடக நிறுவனமான ஐஆர்என்ஏ உறுதிப்படுத் தியதையடுத்து, பல்வேறு நாடுகளில் உள்ள ஈரான் தூதரகங் களில் அந்நாட்டு கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப் பட்டுள்ளது.



# ஈரான் மீதான தாக்குதலைக் கண்டித்த ஸ்பெயினின் பிரதமர் பெட்ரோ சான்செஸ்

04.03.2026

கடந்த வார இறுதியில் ஈரான் மீதான அமெரிக்க-இசுரவேலிய கூட்டுத் தாக்குதலால் தூண்டப்பட்ட மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் மோதலுக்கு ஸ்பெயினின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் புதன்கிழமை தனது உறுதியான எதிர்ப்பை மீண்டும் தெரி வித்தார்.

ஈரான் மீதான அமெரிக்க-இசுரவேலிய தாக்குதல்களைக் கண்டித்த ஒரே பெரிய ஐரோப்பியத் தலைவர் சான்செஸ் மட்டுமே.

பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கைக்கு அவர் அளித்த எதிர்ப்பு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் கோபத்தை ஈர்த்துள்ளது, செவ்வாயன்று ஸ்பெயின் அரசாங்கத்தின் நிலைப்பாட்டால் ஸ்பெயினுடனான வர்த்தகத்தை குறைப் பதாகக் கூறினார்.

புதன்கிழமை தொலைக்காட்சியில் உரையாற்றிய சோசலிச பிரதமர், மனிதகுலத்தின் பெரும் பேரழிவுகள் இப்படித்தான் தொடங்குகின்றன. மில்லியன் கணக்கானவர்களின் விதியை வைத்து நீங்கள் ரஷ்ய சில்லி விளையாட முடியாது என்று கூறினார்.

உலகிற்கு தீங்கு விளைவிக்கும் அல்லது நமது மதிப்புகள் மற்றும் நலன்களுக்கு முரணான எதற்கும் நாங்கள் உடந்தை யாக இருக்கப் போவதில்லை, வெறுமனே யாரோ ஒருவரிட மிருந்து பழிவாங்கலைத் தவிர்ப்பதற்காக, என்று பிரதமர் டிரம்பின் வர்த்தக அச்சுறுத்தல்களைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுகையில் கூறினார்.

2003 ஆம் ஆண்டு ஈராக் மீதான அமெரிக்க படையெடுப்பின் படிப்பினைகளை சான்செஸ் சுட்டிக்காட்டினார். இது பிராந் தியத்தை ஸ்திரமின்மைக்கு உள்ளாக்கியது. இஸ்லாமிய பயங் கரவாதத்தின் எழுச்சியைத் தூண்டியது மற்றும் எரிசக்தி விலைகள் உயரக் காரணமாக அமைந்தது.

ஈரான் மீதான அமெரிக்க-இசுரவேலிய குண்டுவீச்சுகளை சான்செஸ் ஏற்கனவே கண்டித்திருந்தார். அவை சட்டவிரோத மானவை மற்றும் பொறுப்பற்றவை என்று அழைத்தார். ஈரா னுக்கு எதிரான பிரச்சாரத்திற்காக தெற்கு ஸ்பெயினில் உள்ள வான் மற்றும் கடற்படை தளங்களை அமெரிக்கா பயன்படுத்த அனுமதிக்கவும் அவர் மறுத்துவிட்டார்.



காசாவில் இசுரவேல் நடத்திய போரைத் தொடர்ந்து கண்டித்த சில ஐரோப்பிய நாடுகளில் ஸ்பெயினும் ஒன்றாகும்.



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# 165 பள்ளிக் குழந்தைகளை புதைக்க தோண்டிய குழிகளின் படத்தை வெளியிட்ட ஈரான்

20.02.2026

கடந்த சனிக்கிழமை ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும், இசுரவேலும் தாக்குதலை தொடங்கியதில் இருந்து நடைபெற்ற ஒரு கொடூரச் சம்பவம் மினாப் பள்ளியின் மீதான தாக்குதல். தெற்கு ஈரானின் மினாப் நகரில் செயல்பட்டு வந்த ஷஜரே தையேபா (Shajareh Tayyebeh) என்ற பெண்கள் ஆரம்பப் பாடசாலை மீது சனிக்கிழமை காலை தாக்குதல் நடத்தியது அமெரிக்கா மற்றும் ஈரான். இந்தத் தாக்குதலில் பாடசாலை மாணவிகள் மற்றும் ஊழியர்கள் உட்பட சுமார் 165 முதல் 180 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 90-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஈரான் மீது கடந்த நான்கு நாட்களாக அமெரிக்கா, இசுரவேல் என இரண்டு நாடுகளும் தாக்குதலை தொடர்ந்தாலும், இந்தத் தாக்குதல் உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே பெரும் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

சம்ப இடத்தில் இருந்து சிலர் பேசிய வீடியோக்களும், ரத்தக் கறைகளுடன் உள்ள பள்ளிப்பை புகைப்படங்களும் இணையத்தில் வைரலாகின. இறந்த குழந்தைகளின் சடலங்கள் இசுரவேலிய இராணுவம் இந்தத் தாக்குதல் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளது. அமெரிக்கத் தரப்பில்



அமெரிக்கா பள்ளிகளை குறிவைக்காது, இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த தாக்குதலில் இறந்த நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளை புதைப்பதற்காக தோண்டப்பட்டுள்ள குழிகளின் புகைப்படங்களை ஈரான் பகிர்ந்துள்ளது. இது இன்னும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புகைப்படங்களை எக்ஸ்



தளத்தில் பகிர்ந்த ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர், “அமெரிக்க-இசுரவேலிய குண்டுவீச்சில் ஒரு தொடக்கப்பள்ளியில் கொல்லப்பட்ட 160-க்கும் மேற்பட்ட அப்பாவி சிறுமிகளுக்காக தோண்டப்பட்ட கல்லறைகள். அவர்களின் உடல்கள் சிதைக்கப்பட்டு உருக்குலைந்து போயுள்ளனமிஸ்டர் ட்ரம்ப் வாக்களித்த ‘மீட்பு’ (Rescue) என்பது நிஜத்தில் இப்படித்தான் இருக்கிறது. காசா முதல் மீனாப் (Minab) வரை, அப்பாவி மக்கள் கொடூரமாகக் கொல்லப்படுகிறார்கள். ” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஹோமுஸ் நீரிணை மூடல்: சர்வதேச ரீதியில் உணவு நெருக்கடி மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஏற்படும்

## ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி சபை

11.03.2026

மத்திய கிழக்கு போரினால் ஹோமுஸ் நீரிணை மூடப்பட்டுள்ளமை, சர்வதேச ரீதியில் உணவுப் பொருட்களின் விலைகளை உயர்த்தி, மக்களின் வாழ்க்கைச் செலவை பாரியளவில் அதிகரிக்கும் என ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி சபை (UNCTAD) எச்சரிக்கை விடுத்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (10) வெளியிடப்பட்ட புதிய ஆய்வறிக்கையில், இந்தப் பாதிப்பு குறிப்பாக ஆசிய நாடுகளையும் வறிய மக்களையும் மிகக் கடுமையாகத் தாக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி போர் ஆரம்பித்தது முதல், ஹோமுஸ் நீரிணை ஊடாகப் பயணிக்கும் கப்பல்களின் எண்ணிக்கை 97 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

சர்வதேச ரீதியில் மசகு எண்ணெயில் 38 சதவீதமும், எரிவாயுவில் 29 சதவீதமும், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவில் 19 சதவீதமும் இந்த நீரிணை ஊடாகவே கொண்டு செல்லப்படுகின்றன. தற்போது இது தடைப்பட்டுள்ளதால் எரிசக்தி விலைகள் (பெற்றோல், டீசல், எரிவாயு) அதிரடியாக அதிகரித்துள்ளன.

சர்வதேச ரீதியில் கப்பல் மூலம் கொண்டு செல்லப்படும் உரங்களில் மூன்றில் ஒரு பங்கு (33%) இந்த நீரிணை ஊடாகவே விநியோகிக்கப்படுகிறது. இது முடங்கியுள்ளதால் உலகளாவிய உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு, உணவுப் பொருட்களின் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஹோமுஸ் நீரிணை ஊடாக அனுப்பப்படும் மொத்தப் பொருட்களில் 84 சதவீதம் ஆசிய நாடுகளையே சென்றடைகின்றன. இதனால் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட ஆசிய




நாடுகள் எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களுக்காகப் பாரிய விலை உயர்வைச் சந்திக்க நேரிடும் என ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி குறிப்பிட்டுள்ளது.

# ஈரானின் உச்ச தலைவராக மொஸ்தபா கொமேனி நியமனம்!

09.03.2026

அமெரிக்கா- இசுரவேலிய கூட்டுத் தாக்குதல்களில் அயதுல்லா அலி கொமேனி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த இடத்திற்கு அயதுல்லா அலி கொமேனியின் மகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருவாரத்தின் பின்னர் ஈரான் தனது புதிய உச்ச தலைவராக மொஜ்தபா கொமேனியை நியமித்துள்ளது.

இஸ்லாமிய குடியரசின் 47 ஆண்டுகால வரலாற்றில் மிகப் பெரிய நெருக்கடியின் மூலம் அதை வழிநடத்தும் பொறுப்பு இப்போது 56 வயதுடைய மொஜ்தபா கொமேனி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதகுருமார்களால் அவரது தந்தையின் வாரிசாக நியமிக்கப்பட்டார்.

ஈரானின் முக்கியத் தலைவர்களும், ஈரானின் சக்திவாய்ந்த இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (IRGC) மற்றும் ஆயுதப் படைகளும் புதிய தலைவருக்கு தங்கள் ஆதரவை விரைவாக வழங்குவதாக உறுதியளித்தன.

அமெரிக்காவும் இசுரவேலும் தங்கள் முழு வீச்சில் தாக்குதலைத் தொடங்கியதிலிருந்து ஈரானின் பாதுகாப்பு மூலோபாயத்தை வழிநடத்தும் பணியில் ஈடுபட்டுள்ள உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர் அலி லாரிஜானி , புதிய உச்ச தலைவரைருக்கு ஆதரவை வழங்க ஈரான் மக்களிடம் ஒற்றுமைக்கு அழைப்பு விடுத்தார்.

ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் கலிபாஃப் இந்த தேர்வை வரவேற்று, புதிய உச்ச தலைவரைப் பின்பற்றுவது மத மற்றும் தேசிய கடமை என்று கூறினார்.

மொஜ்தபா கொமேனி ஒருபோதும் பதவிக்கு போட்டியிடவில்லை அல்லது பொது வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படவில்லை, ஆனால் பல தசாப்தங்களாக உச்ச தலைவரின் உள் வட்டத்தில் மிகவும் செல்வாக்கு மிக்க நபராக இருந்து வருகிறார். IRGC உடன் ஆழமான உறவுகளை வளர்த்துக் கொள்கிறார்.

இசுரவேலின் இராணுவம் முன்னர் எந்தவொரு வாரிசையும் குறிவைக்க நாங்கள் தயங்க மாட்டோம் என்று எச்சரித்திருந்தது.

வாஷிங்டனின் ஒப்புதல் இல்லாமல், அந்தப் பதவிக்கு யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் நீண்ட காலம் அந்தப் பதவியில் நீடிக்கப் போவதில்லை என்று டிரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

### மொஜ்தபா கொமேனி யார்?

வடகிழக்கு நகரமான மஷாத்தில் 1969 செப்டம்பர் 8 ஆம் தேதி பிறந்த மொஜ்தபா, அலி கொமேனியின் ஆறு குழந்தைகளில் இரண்டாவது குழந்தையாவார்.

அவர் தனது இடைநிலைக் கல்வியை தெஹ்ரானில் உள்ள மத அலவி பள்ளியில் பெற்றார்.

ஈரானிய ஊடகங்களின்படி, 17 வயதில், மொஜ்தபா ஈரான்-ஈராக் போரின் போது பல குறுகிய காலத்திற்கு இராணுவத்தில் பணியாற்றினார்.



1999 ஆம் ஆண்டில், மோஜ்தபா தனது மதப் படிப்பைத் தொடர ஷியா இறையியலின் முக்கிய மையமாகக் கருதப்படும் புனித நகரமான கோமுக்குச் சென்றார். ஆனால் அவர் இது வரை மத குருமார்களின் உடைகளை அணியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் எந்த அரசாங்கப் பதவியையும் வகித்ததில்லை, பொது உரைகள் அல்லது நேர்காணல்களை வழங்கியதில்லை. அவரது புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன.

2000 களின் பிற்பகுதியில் விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்க இராஜதந்திர கேபிள்கள் அவரை அங்கிகளுக்குப் பின்னால் உள்ள சக்தி என்று வர்ணித்தன. அவர் ஆட்சிக்குள் திறமையான மற்றும் வலிமையான தலைவராக பரவலாகக் கருதப்பட்டதாக அசோசியேட்டட் பிரஸ் தெரிவித்துள்ளது.

**மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்ளவார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



நாம் ஒன்றை மட்டும் தெட்டத் தெளிவாகக் கூற விரும்புகிறோம். எந்தச் சூழ் நிலையிலும் நாம் போராட்டத்தை ஒத்திப்போட முடியாது. போராட்டத்திலிருந்து ஒதுங்கி காலம் கனியும் என்று காத்திருக்கவும் முடியாது. நாம் தொடர்ந்து போராடியே தீருவோம். போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரமாக்குவோம். எதிரி இராணுவத்திற்குத் தகுந்த பதிலடி கொடுத்து அதன் முதுகெலும்பை முறித்துவிடுவதைத் தவிர இந்தச் சூழ்நிலையில் எமக்கு வேறெந்த வழியுமில்லை.

எதிரியை எமது மண்ணிலிருந்து விரட்டியடித்து எமது மக்களின் சுதந்திரத்தை வென்றெடுப் பதாயின் நாம் போராடியே தீர வேண்டும்.

போர்க்களத்தில் குதியுங்கள், எமது பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைந்து போராடு வோம். உண்மையான ஒருமைப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளையும் மேற் கொள்வோம். நாம் தோளொடு தோள் நின்று போராடும்போது எமது மக்களும் எம்மோடு அணிதிரள்வார்கள். முழுத்தேசமுமே எமக்குப் பக்கபலமாக நிற்கும். எமது ஒன்றுதிரண்ட பலத்தைக் கண்டு எதிரி நடுக்கம் கொள்வான். நாம் களத்தில் ஒன்றிணைந்து போராடினால் எதிரியை எமது தாய்நாட்டிலிருந்து விரட்டியடித்து சுதந்திர தமிழீழம் காண்பது வெகு தூரத்தில் இராது.

எமது அன்பான தமிழ் மக்களே!

விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும், முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சித்தி தாங்கொணாத துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை. நாகரிகம் தோன்றிய காலம்தொட்டு இன்றுவரை சுதந்திரம் என்ற உன்னத் இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட் டங்களை நடாத்தி வருகின்றன. யுத்தங்கள் புரிந்து இருக்கின்றன. புரட்சிகள் செய்து இருக்கின்றன. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்தச் சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப்படியாக அழிந்து போகவேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

*(1984 ஆம் ஆண்டு மே மாதம் தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தியிலிருந்து)*


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


Shiyara
Financial Services
(An Agency for the Real Estate, Mortgages & Finance)
BUSINESS LOANS - LINE OF CREDITS
MORTGAGES
SECOND MORTGAGES
REFINANCING
CALL:
KRISHNA
647 308 6069
Shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT


★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet ★
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# ஒளி நிழல் தேடும் என் நம்பிக்கைக் காத்திருப்பு

முட்கம்பிச் சுருள்களால் தளைப்பட்டு
உயிர் கொல்லும் – உறுப்புகளைத் தின்னும்
நச்சு வெடிகளால் பண்பட்டு
பசுமை வனங் கொழிக்கும்
சோலைகள் பாழ்படுத்தப்பட்டு
வெட்ட வெளியாய்
மொட்டை முகமாய்
எறிகணைப் புகைகவிந்த
கோலத்தினனாய்ச் சிறுத்தபோதும்
நான் வருந்தவில்லை.

உன்னதங்கள் புதைந்து
நீரூற்றுகளைச் சுமந்து
கனி வளத்தின் மூலமாய்
காட்சியுற வேண்டிய வயிற்றுள்
யாரென்று இனங்காணமுடியாத
என் புதல்வர்களின்
உக்கிய உடல்களையும்
அவர் உறவுகள்
அழுது வடித்த துயரக் கண்ணீரையும்
சுமந்து
சாக்கிடங்காய்
நான் மாறியபோது
ஆற்றமுடியாது வலித்தேன்.

என் மொழிப் பண்பறியா
வேற்று மாந்தர் ஏறி மிதித்து
அவர் படைக் கலங்களாற் புண்பட்டு
எனது காலம் கட்டுண்டு
கிடந்த போதெல்லாம்
என் புதல்வர்களின் வருகைக்காய்
காவலிருந்தேன்.

அவர்கள் வந்தார்கள்
போர்க்களத்தின் கொடிய வடிவாய்
என் மேனி சிதையச் சிதைய
முன்வந்து முன்வந்து
அங்குலமங்குலமாய் என்னை
அவர்கள் மீட்கத் தொடங்கிய போது
மகிழ்வுற்றேன்.
சாவை வாழ்வாக்கி
பசியையே உணவாக்கி
என் பாலைகளே தம் சோலைகளாய்ப்
பற்றைகளிற் கரந்துறைந்து
பயணம் தொடர்கையில்
ஓராயிரம் சுனைகள்
எனக்குள் பாய்ந்தன.

என் ஆன்மா மகிழ்ந்து
சிலிர்க்கையில்தான்
அந்த அவலம் நடந்தது.
என் மாந்தர்க்கிரங்காத
'மானுடத்தார்'
என்மேனி கிழித்தோர்க்கு
கரம் கொடுத்தார்
என் வாழ்வு எரிந்த வல்லூறுகட்கு
வாழ்வளித்தார்.
அவர்கள் 'புண்ணியத்தால்'
நான் மீண்டும் அவலமுற்றேன்.
கண்டவர்களின் காற்தடங்கள் சுமந்து
மீண்டும் கீழ்மையுற்றுக் கிடக்கின்றேன்
நான்.

ஆயினும்
எனது காத்திருப்புப் பொய்க்காது
என் மடி பிறந்த
சூரியப் புதல்வனின்
ஒளி நிழலில்
நான் இளைப்பாறுங்காலம்
உள்ளத்தே தெரிகின்றது.
அந்தக் காலத்துக்காய்
சிதைவிலிருந்து மீண்டெழுந்து
புன்னகைப்பேன்
ஆகாயத்துளிகளில் சிலிர்த்துப்
பூத்துக் குலுங்குவேன்.
பாலையெனக் கிடந்த
வாழ்வின் தடங்களாறிச்
சோலை வனமாவேன்
காத்திருப்பே என் வாழ்வாயிற்று
கால் நூற்றாண்டுகள் தாண்டி
இன்னும் காத்திருப்பே
என் மீதமாயிற்று
மூச்சாயிற்று
நம்பிக்கையாயிற்று.

– அம்புலி – தமிழீழம்

நன்றி: எரிமலை மார்ச் 2001




# வரலாறு சொல்லும் பாடம்

## தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு

– தமிழீழக் கல்விக் கழகம் –




### இனவாதத்துக்கு சிங்கள இனம் வழங்கிய பெரும்பான்மை வலு

தமிழர்களுக்கெதிரான இனவாதத்தைப் பெருமளவிற் கக்கி, 1970 ஆம் ஆண்டிலே மீண்டும் ஆட்சிக்கு வந்த சிறீமாவோ பண்டாரநாயக்கா, ஒரு காலத்தில் சிறுபான்மையோருக்காக உதட்டளவிலேனும் குரல் கொடுத்த இடதுசாரிச் சிங்களத் தலைவர்களான கொல்வின் ஆர்.டீ.சில்வா, டாக்டர் என்.எம்.பெரேரா, பீற்றர் கெனமன் போன்றோர் ஓரணியில் கைகோத்துக்கொண்டனர். லங்கா சமசமாசக்கட்சியினர் 1964இலேயே சிறீமாவோ அரசுடன் இணைந்தனர். சுதந்திரத்துக்குப் பின்னரான தேர்தலில் முதன் முதலாக சிறீமாவோவின் பொதுசன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற மொத்த உறுப்பினர் தொகையான 151இல் 116ஐ வெற்றிகொண்டு 2/3 பெரும்பான்மைக்குரியதாயிற்று. இதில் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் சிறீலங்கா சுதந்திரக்கட்சி மட்டும் 91 இடங்களை வென்றது.65 உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஐ.தே.க 17 ஆகத் தேய்ந்தது. இரண்டு முக்கிய கட்சிகளுமே இனவாத அரசியலை மேற்கொண்டிருந்தாலும் எந்தக்கட்சி ஆகக்கூடிய அளவு தமிழர்களின் இருப்பை அழிப்பதாக வாக்குறுதி அளிக்கின்றதோ அந்தக் கட்சியே தேர்தலில் வெற்றி பெறுவதென்பது இலங்கைத் தேர்தல்களின் தலையெழுத்தாக அன்றிலிருந்து இன்று வரை இருந்து வருகின்றது. அதனாற்றான் இந்த இரண்டு கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வரக்கூடியநிலை இருந்தது. பிரித்தானிய முடியின் கீழான சுதந்திரத்தையே இலங்கை அதுவரை அனுபவித்து வந்தது. சோல்பரியாப்பின் 29 ஆவது பிரிவு சிங்களவரின் இனமத ஆதிக்கத்தை ஏற்படுத்து வதற்கு இடைஞ்சலாக இருப்பத னால், அதனை 2/3 பெரும்பான் மையைக்கொண்டு மாற்றியமைத்து இலங்கையைச் சிங்களப் பௌத்த குடியரசாக்கும் சிங்கள இன வெறியர்களின் நீண்டகாலக் கனவை நிறைவேற்றும் வகையிலே சிறீமாவோ பண்டாரநாயக்கா செல்லையா குமாரசூரியர். சி.அருளம்பலம், ஆ.தியாகராசா. எம்.சி சுப்பிரமணியம், இராசன் செல்வநாயகம், சி.எக்ஸ் மார்டின். ஆகிய “ஆறு” தமிழ்ப்பாராளுமன்ற தமிழ்ஒழிப்பு முயற்சிக்குத் துணையாகப் போயினர்.

இடதுசாரித் தலைவராக இருந்து ஒரு காலத்தில் “ஒரு மொழியென்றால் இரண்டு நாடுகள் இரண்டு மொழியென்றால் ஒருநாடு” என்று பேசி சிங்களச்சட்டத்தை எதிர்த்த கொல்வின் ஆர்.டி.சில்வா குடியரசு யாப்பின் சிற்பியாகினார். சிங்கள இனத்திற்குள்ளே மெலிதாக முளைவிடத் தொடங்கிய இன, மத சகிப்புத் தன்மையைக்கூடச் சிங்கள இனவாதம் ஏற்றுக்கொள்வதாக இல்லை. நிலமின்மை, போன்றவற்றால் விரக்தியுற்ற சிங்கள இளைஞர்கள் மார்க்சிய சிந்தனையால் கவரப்பட்டு, 1971இல் ஜே.வி.பி என்ற அமைப்புக் கூடாக வெளிவந்து றோகனவிஜயவீர தலைமையில்




கிளர்ச்சிசெய்தபோது, அவர்களின் புரட்சி இராணுவ வன்கரத்தாற் கொடூரமாக நசுக்கி அழிக்கப்பட்டது.

10,000இற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 15,000இற்கும் மேற்பட்டோர் சிறைப்பிடிக்கப்பட்டனர். அல்லது சரண் அடைந்தனர். சொந்த இனத்தவரேயாயினும் சிங்கள பௌத்த மேல்மட்ட நலன்களுக்கு மாறாகக் கிளர்ந்தெழுந்த போது இரும்புக் கரங்கொண்டு நசுக்கிய சிறீமாவின் அரசு தமிழர்களைப் பற்றிச் சிந்தித்து அவர்களுக்கு நீதி வழங்குமென எதிர்பார்ப்பதில் எவ்வித பொருளுமில்லை.




### தமிழினத்தை அடிமைகளாக்கிய முதலாவது குடியரசு யாப்பு

புதிய குடியரசு பற்றிய வரைவுக்காக ஒரு அரசியல் நிர்ணைய சபையை 1970 யூலையில் சிறீமாவோ கூட்ட, அது 1972 மேயில் புதிய சட்ட வரைவினை முடித்தது. தொடக்கத்தில் தமிழ்த் தலைவர்கள் இந்தச் சட்டவரைவுச் சபையிற் பங்குபற்றியபோதும் அவர்களால் முன்வைக்கப்பட்ட தமிழர் நலன் பற்றிய எந்தவொரு முன்மொழிவும் அங்கு ஏற்கப்படவில்லை.

இணைப்பாட்சி அமைப்போடு கூடிய தன்னாட்சி உரிமையுள்ள 5 பிராந்தியங்களும் தமிழுக்குத் தேசிய மொழித்தகுதியும் இந்தியத்தமிழர் பற்றிய முன்னேற்றகரமான விகிதமும் சட்டவரைவிற் சேர்க்கப்பட வேண்டுமென முன்மொழிந்து அவை கேட்கப்படாது புறந்தள்ளப்பட்ட நிலையில், தமிழ் உறுப்பினர்கள் 19பேரில் 15பேர் சபையைவிட்டு வெளியேறினர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாள் புதிய குடியரசு யாப்பு தமிழர் விருப்புக்கு மாறாக அரங்கேறியது. ஏற்கெனவே தமது உரிமைகள் பலவற்றை இழந்துவிட்டிருந்த தமிழ் இனம் முற்றாகப் புறந்தள்ளப்பட்டு, இரண்டாம் நிலையானதுதான் என அரசியற் சட்டத்தின் மூலம் உறுதியாக்கப்பட்டது.

குடியரசு யாப்பின் நடைமுறைநாள் அறிவிக்கப்படும் பொழுதே பௌத்தத்தின் முதன்மை “Tenth day of the waxing moon of vesak in the year 2515” எனவே சொல்லப்பட்டது. 2515 என்பது புத்த ஆண்டையும் மாதம் சிங்களப் பௌத்த மக்களின் வெசாக் கொண்டாட்டத்தையும் குறித்து நிற்பதொன்றே ஆட்சியாளரின் குறுகிய நோக்கைக் குறித்து நிற்கின்றது. இந்த யாப்பின் மூலம் இலங்கைக்கு மிகப் பிற்பட்ட காலத்திலேயே வந்தடைந்த பௌத்தம் முதன்மை இடத்தைப் பிடித்துக்கொண்டது. நீண்ட காலமாகப் பௌத்தமடங்கள் கண்டகனவு. யாப்பின் இரண்டாவது இயல் 6 ஆம் பிரிவினால் நனவாகியது. சிறீலங்கா குடியரசின் முதன்மைக்கும் சீராட்டுதலுக்கும் உரியதாகப் பௌத்த மதம் யாப்பிலே தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. பிரிவு 7 இன்படி சிறீலங்காவின் ஆளுகை மொழியாகச் சிங்களம் யாப்பிலே உறுதியுரைக்கப்பட்டது. எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவினாற் கொண்டு வரப்பட்டு எவ்வகையிலும் நடைமுறைக்கு வராத தமிழ் மொழி (விசேடவிதிகள்) சட்டத்தின்படியே, தமிழ் மொழியின் பயன்பாடு இருக்கும் எனக்கூறியது யாப்பு. சிங்களவெறி அத்துடன் அமைதி கொள்ளவில்லை. **தமிழ் மொழி [விசேடவிதிகள்] சட்டத்திற் கூறப்பட்ட எந்த வொரு விதியும் குடியரசு யாப்பின் விதியெனக் கொள்ளப்படத்தகாதது என்றும், குடியரசு யாப்பு விதியிலும் குறைந்த தகுதி உடையதாகவே இருக்கும் என்றும் புதிய யாப்பு தமிழ் மொழியின் மீது இனவாத ஆப்பினை இறுக்கியது.** தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களது கரிநாளாக, குடியரசுச்சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் (22.05.1972) அமைந்தது. தமிழர் சிங்களவர் ஆகிய இரண்டு இனத்தவர்களும் ஒன்றிணைந்து இலங்கைக்குள் இனிமேல் தத்தமது இன, மொழி நலன்களைப் பேணியவாறு இருக்க முடியாதென்ற எண்ணத்தைத் தமிழர்களிடையே ஆணி அறைந்ததுபோல அறிவித்தது இந்த முதலாவது குடியரசு யாப்புத்தான்.

தமிழீழம் பெறுவது காலத்தின் தேவை என்பதைத் தமிழ்த் தலைவர்கள் உணரத் தொடங்கினர். வரலாற்றுப் பெருமையும், தன்னாட்சி உரிமையும் இருந்தபோதும், சிங்களவரோடு ஒன்று சேர்ந்து வாழலாம் என்ற எண்ணத்தில் பல்வேறு ஏமாற்றங்களையும் இழிவுகளையும் எதிர்கொண்ட தமிழ்த் தலைவர்களுக்கு, சிங்களம் கொடுத்த மரண அடியாக இந்தக் குடியரசுயாப்பு அமைந்தது.




தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்கள் 1958 கலவரங்களின் போதே, “தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்குத்தள்ளப் படுகின்றார்கள்” என்று கூறினார். தமிழ் மக்கள் இந்தக் குடியரசு அரசியல் யாப்பை ஏற்கவில்லை என்பதை அவர் இடைத் தேர்தலின் ஊடாகநிறுவமுனைந்து, நாடாளுமன்றத்தில் தனது உறுப்புரிமையைத் துறந்தார். இடைத் தேர்தலை நடாத்தத் துணிவற்று நீண்டகாலம் தள்ளிவைத்த சிங்கள அரசு, தனது

ஆட்சிப்பொறியை முழுமையாக முடுக்கிவிட்டு, தனக்கு வாய்ப்பான சூழலை ஏற்படுத்தி, அதன் பின் தேர்தலை நடாத்தியது.

தமிழர்களுக்கு ஒரு தனியரசு என்ற கோரிக்கையின் பேரில் 1975 பெப்ரவரி இடைத்தேர்தலில் திரு.சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் பெரு வெற்றியைக் கண்டார். முன்னைய தேர்தலில் பெற்ற வாக்கிலும் 12,000 கூடுதலான வாக்கோடு அவர் வெற்றியடைந்ததானது. சிறீலங்காக் குடியரசு அரசியல் அமைப்பை முற்றாகப் புறந்தள்ளி, தனித்தமிழீழம் என்ற கோரிக்கைக்குத் தமிழ்மக்கள் கொடுத்த ஒப்புதலாகவும் அமைந்தது. இலங்கை அரசின் சார்பில் அந்த இடைத்தேர்தலில் நின்று தோல்வியுற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர் திரு.வ.பொன்னம்பலம் பிற்காலத்தில், மனச்சாட்சியின் உந்துதலால் தனது வாக்கினை "சா.ஜே.வே செல்வநாயகத்துக்கே அளித்தேன்" என்று மனந்திறந்து ஒப்புக்கொண்டார். தமிழினத்துக்கு ஏற்பட்ட மிக நெருக்கடியான காலகட்டத்தில் தமிழர் தலைவர்கள் ஒருமைப்பாடு காணவேண்டிய நெருக்கடியில் தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழர் கூட்டணி என்ற பெயரில் ஈழத்தமிழர் ஐக்கிய முன்னணியை அமைத்தனர்.


காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவுபற்றிய பத்திரிகைச் செய்தி.

இதுவே பிறகு 1976 மே மாதம் 14 ஆம் நாள் வட்டுக்கோட்டை மாநாட்டின் போது "தமிழர் விடுதலைக் கூட்டணி என்று பெயர் மாற்றிக் கொண்டதுடன் தமிழீழம் அமைப்பதே தமது இலக்கு எனவும் அறிவித்தது. தமிழ் மக்கள் ஒரேமுகமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் பின்னே திரண்டனர். கடந்த காலங்களில் சிங்களத் தலைவர்களினால் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழர்கள் அனைவரையும் ஒன்றுபட வைத்தது. குறிப்பாக 1970 இற்குப்பின், சிறிமாவோ தலைமையிலான அரசு தமிழர் கல்வி மீதும், கலைபண்பாட்டின் மீதும் நிகழ்த்திய குறிவைத்த தாக்குதல் அதற்குப் பெருங்காரணமாய் அமைந்தது.

## தமிழிளைஞர்களைக் கிளர்ந்தெழவைத்த தரப்படுத்தல்



| 1970 தரப்படுத்தலின் விளைவு | | | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| பொறியியல் — | பேராதனை — | சிங்களவர் | 86 | 227 |
| | | தமிழர் | 60 | 250 |
| | கட்டுபெத்தை — | சிங்களவர் | 60 | 212 |
| | | தமிழர் | 53 | 232 |
| மருத்துவம் | பேராதனையும் கொழும்பும் | சிங்களவர் | 137 | 229 |
| | | தமிழர் | 103 | 250 |
| பல் மருத்துவம் | ,, ,, | சிங்களவர் | 17 | |
| | | தமிழர் | 24 | |
| வேளாண்மை | பேராதனை | சிங்களவர் | 25 | |
| | | தமிழர் | 17 | |
| கால்நடை மருத்துவம் | ,, ,, | சிங்களவர் | 15 | |
| | | தமிழர் | 5 | |
| உயிரியல் விஞ்ஞானம் | எல்லா நான்கு இடங்களிலும் | சிங்களவர் | 111 | 174 |
| | | தமிழர் | 41 | 181 |
| பௌதிகவியல் விஞ்ஞானம் | | சிங்களவர் | 175 | 183 |
| | | தமிழர் | 92 | 204 |
| கட்டிடக்கலை | | சிங்களவர் | 16 | 180 |
| | | தமிழர் | 26 | 194 |

பல்கலைக்கழக அனுமதி பெற்ற தமிழ் மாணவர்கள் 1969- 1975

| | 1969-70- | 1970/71- | 1971/72- | 1973- | 1974- | 1975 |
|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞான அடிப்படை விகித எண்ணிக்கை | 27.6- | 28.6- | 31.2- | 25.9- | 20.9- | 19.5 |
| தெரிவின் பொறியியல் | 48.3- | 40.8- | 34.7- | 24.4- | 16.3- | 14.2 |
| மருத்துவம் | 48.9- | [illegible] | 39.2 | 26.0- | 25.9- | 17.4 |
| கலை (சட்டம் உட்பட) | 7.5- | 7.6- | 4.8- | 6.1- | 10.0- | 10.0 |

[illegible]

கல்வி அமைச்சர் பதியுதீன் மொகமட்

தமிழ் மாணவர்கள் சிறுபான்மையினராக இருந்த போதும் வளக்குறைவான நிலையிலும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் கல்வி பயின்று வந்ததால் பல்கலைக்கழக அனுமதியில், குறிப்பாக பொறியியற்றுறை அனுமதியில், இனவிகிதாசாரத்துக்கு மேற்பட்ட இடங்களைப் பெற்று வந்தனர். திறமை அடிப்படையில் தமிழ் மாணவர்களின் நுண்ணறிவுடன் போட்டியிட முடியாத சிங்கள மேன்மட்டத்திலிருந்தும் பௌத்தமட்டங்களிலிருந்தும் சிங்கள மாணவர்களை மேலே தூக்கிவிட வேண்டும் என்ற அழுத்தம் சிங்கள அரசுக்கு ஏற்படுத்தப்பட்டது. ஏதாவது ஒரு முறையில் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி அனுமதியைக் குறைத்தால் அடுத்த தேர்தலிலும் தனது வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தி கொள்ளலாமென்ற வஞ்சக எண்ணம் சிறீமாவோவுக்கு இருந்தது. இதைத் தொடந்து அரசாங்கம் தீட்டிய திட்டத்தின் வெளிப்பாடுதான் தமிழ் மாணவர்களின் சீற்றத்தைக் கிளறி அவர்களை மேலும் அரசியல் அரங்கத்தில் நுழையவைத்த "தரப்படுத்தல்" என்ற கொடிய திட்டமாகும். 1970 இல் கொண்டுவரப்பட்ட இத்திட்டம் பல்கலைக்கழக அனுமதியில் ஒரே காலத்தில் படித்து. ஒரே தேர்வை ஒரு நாளில் எழுதினாலும் தமிழ் மாணவர்கள் சிங்கள வரை விடக் கூடுதல் மதிப்பெண் களைப் பெறவேண்டிய ஒரு கட்டாயத்தை ஏற்படுத்தியது.




இதனால், தமிழ் மாணவரின் பல்கலைக்கழக அனுமதி திடீரென வெகுவாகக் குறைந்தது. இந்தத்திட்டத்திற்கு, பல்கலைக்கழக கல்வியாளர்களிடம் இருந்து கூட எதிர்ப்புக் கிளம்பியதால் 1973 இல், இன்னும் மெருகுபடுத்தப்பட்ட தரப்படுத்தற்றிட்டத்தை. சிறீமாவோ அறிமுகப்படுத்தினார். மாணவர் தோற்றும் மொழியினைக் கொண்டு பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல் செய்யப்பட்டது. 1974இல், தரப்படுத்தல் புள்ளிகளிலான தேர்வு முறைக்குப் பதிலாக மாவட்ட மட்டத்தில் அனுமதிப் பங்கு என்ற மாற்றம் கொண்டு வரப்பட்டது. இதைத் தொடர்ந்து 1974.1975களில் விஞ்ஞானத்துறையிலான பல்கலைக்கழக அனுமதிகளில் தமிழ் மாணவர்களின் தொகை, அவர் தம் இன விகிதாசாரத்தைவிட மிகவும் கீழே விழ, சிங்கள மாணவர் தொகை பெரும் எழுச்சி கண்டது. இருந்தும் இந்த முறைக்கு, கொழும்புப் பள்ளிகளிலிருந்தே எதிர்ப்புக் கிளம்பியது. தமிழர்களின் எதிர்ப்புக்குக் காது கொடாத சிங்கள அரசு, கொழும்பு சினந்தவுடன் வேறொரு மாற்றத்தைக் கொண்டுவந்தது.70% அனுமதி திறமை அடிப்படையிலும் 30மூ மாவட்டப் பங்கு ரீதியிலும் அமையும் என்ற திருத்தம் வந்தது. இந்த 30%இலும் அரைப்பங்கு பின் தங்கிய மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது. திட்டமிட்ட இக்கல்வி ஒதுக்கல் திட்டத்தில் தமிழ் மாணவர்களின் எதிர்காலம் இருளத் தொடங்கியதால் ஒன்று சேர்ந்த அவர்கள் 1970 இல், மாணவர் பேரவை என்ற தமது அமைப்பின் மூலம் எதிர்ப்பை வெளிப்படுத்தத் தொடங்கினர். இதுதான் பிற்காலத்தில் சிங்கள அரசுகளின் கொடிய அழுத்தங்களினால் ஆயுதம்தாங்கிய இளைஞர்கள் தமிழர் இனத்திற்குள் இருந்து வெளிவருவதற்கு முதன்மைக் காரணிகளில் ஒன்றாகியது.

## பேரினவாதத்துக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த தமிழ் மாணவர் பேரவை

சத்தியசீலன், சபாலிங்கம், முத்துக்குமாரசாமி, பெரியசோதி, சிவகுமார், பிரபாகரன், தங்கத்துரை, நடேசதாசன், அமரசிங்கம், திசைவீரசிங்கம் போன்றோர் மிகவும் ஆர்வத்தோடு இம்மாணவர் பேரவையில் உறுப்பினராய் செயற்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் சத்தியசீலன் 1973பெப்ரவரி 23 இல், சிறீலங்கா காவற்றுறையிடம் பிடிபட்டார். சிவகுமாரன் 1974 யூன்05இல், கோப்பாயில் இலங்கை அரச படையால் சுற்றிவளைக்கப்பட்டபோது நஞ்சுண்டு தற்கொலைச் சாவடைந்தார். தங்கத்துரை, நடேசதாசன் வெலிக்கடையில் கொல்லப்பட்டனர். **மாணவர் பேரவையென இயங்கியவர்களில் முதன்மையானவர்களிற் பலர் பின்னர் ஒதுங்கிவிட, பிரபாகரன் மட்டுமே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவராக தமிழீழ மீட்புப் போரில் தொடர்ந்தும் ஈடுபட்டு, இன்றும் அதை முன்னெடுத்து வருகின்றார்.** தமிழ் மக்களின் மொழி, மத, கல்வி உரிமைகளிற் கைவைத்த அன்றைய சிறீமாவோ அரசு தமிழ் மக்களின் பண்பாட்டுச் சுதந்திரத்தைக் கூட அனுமதிக்கவில்லை.

## சிங்களப்படை தமிழாராய்ச்சி மாநாட்டில் நடத்திய படுகொலை

1974ஆம் ஆண்டு சனவரியில், இனஇரண்டகர்களினதும் அரசினதும் பல்வேறு முட்டுக் கட்டைகளுக்கு இடையேயும் பேரெழுச்சியோடு யாழ்ப்பாணத்தில் 4 ஆவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு எட்டுநாட்கள் நடைபெற்றது. (3-10 சனவரி 1974) இறுதி நாளான 10.01.1974 அன்று, யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் திருச்சி யமால் முகமது கல்லூரியின் பேராசிரியர் நைனா முகமது



யாழ் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை




அவர்களின் இலக்கியப் பேச்சை திரண்டிருந்த மக்கள் செவிமடுத்துக் கொண்டிருந்தபோது, திடீரென ட்ரக் வாகனங்களில் வந்த சிங்களக் காவற்றுறையினர் மக்களைக் காரணமின்றித் தாக்கத் தொடங்கினர் கண்ணீர்ப்புகைக்

குண்டுகளை ஏவினர் மின்சாரக்கம்பிகளை அறுத்து வீழ்த்தினர். மின்னொழுக்கினால் ஏழு தமிழ் மக்கள் கருகிமடிந்தனர். மேலும் இருவர் கூட்டத்தில் நசுங்கிச் செத்தனர். தொடர்ந்து நான்கு நாட்களாக யாழ்ப்பாணத் தெருக்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுத் திரிந்த சிங்களக் காவற்றுறையினர் தமிழ்மக்களைக் காரணமின்றித்தாக்கி, தமிழர்களின் தாயகத் தலைநகரிலேயே தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலையைத் தோற்றுவித்தனர்.

சிங்கள பௌத்த இனவெறியின் இந்த வீச்செல்லை யாழ்ப்பாணம் வரை நீண்டு வருவதற்கு சிறீமாவோ அரசின் அரசியல் அதி காரிகளாக எல்லாவகையான சலுகைகளையும் அனுபவித்து வந்த யாழ்மேயர் அல்பிரட் துரையப்பா போன்ற சில தமிழர்களும் காரணமாக இருந்தனர் என்பது வேதனைக்குரியது தான்.

இறந்து போன ஐவர் 14தொடக்கம் 26 அகவைக் குள்ளானவர்கள். இத்துயர நிகழ்விற்கு வித்திட்ட உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் சந்திர சேகராவின் இனவெறிச் செயலைப் பாராட்டி மதிப்பளிக்கும் வகையில், அவருக்குப் பதவி உயர்வும் பாதுகாப்பான இடத்துக்கு இடமாற்றமும் வழங்கியது அன்றைய சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசு. இந்த நிகழ்ச்சி தமிழ் இளைஞர்களின் உள்ளத்திலே தமக்கான உறுதியான தன்னாட்சித் தமிழ் ஈழத்தின் தேவையை ஆழமாக விதைத்ததில் வியப்புற ஒன்றுமில்லை.[08]

## சிவகுமாரனின் வீரச்சாவு ஏற்படுத்திய பேரெழுச்சி



யாழ் தமிழாராய்ச்சி மாநாட்டை குழப்பியவர்களைத் தண்டிக்க முனைந்த பொன் சிவகுமாரன்

தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திய நிலையில் சிறீலங்கா அரசை எதிர்கொள்ள முடிவெடுத்ததற்கு, தமிழ் மக்கள் சுதந்திரத்தின் பின் பட்டறிந்த கசப்பான தோல்விகள், துயரங்கள், இழப்புக்களின் பட்டறிவுகள், மொழி இன. பண்பாட்டு வெளிப்பாடுகளுக்கு எல்லா வகைகளிலும் தடையாகவிருந்த சிங்களப் பௌத்த இனவெறி.விலங்குகள் காரணமாகின. தமிழர்களின் மென்முறை எதிர்ப்புக்கள் இராணுவ வல்லமையினாலே தகர்த்தெறியப்பட்டபோது அமைதியாகக் கேட்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் அசட்டை செய்யப்பட்டுச் சாக்கடைக்குள் வீசப்பட்டபோது, காலத்திற்குக்காலம் சிங்களவர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரங்களின் புண்கள் மேலும் மேலும் ஆறாத எரிச்சலைத் தந்தபோது; நாடாளுமன்ற அரசியலினால் சிங்கள பௌத்த இனவாத நோயைத் தீர்க்க முடியாது என்ற நிலையில், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தொன்மைக்குரிய தமிழ் இருப்பை உறுதி செய்யும் வகையிலே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உரும்பிராய் சிவகுமாரன் தொடர்ச்சியான முயற்சியின் இறுதியில், சுற்றிவளைத்த சிங்களக் காவற்றுறையினரிடம் அகப்படாது தன்னைத் தானே அழித்துக் கொண்டு வீரச்சாவை அணைத்துக் கொண்டதானது, தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் இளைஞர்களுக்கிடையே பேரெழுச்சியையும், இனவுணர்வையும் கிளர்ந் தெழவைத்தது. ஈழத் தமிழரின் இழந்த உரிமையை மீட்கும் முயற்சியின் இலக்குத் தவறாத முதற்குண்டு, தமிழராய் இருந்தும் தமிழினத்துக்குத் தீமையே செய்துவந்த அல்பிரட் துரையப்பாவின் தலையில். பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவிலில் 27.07.1975 அன்று இறங்கியது.

தமிழர்களின் விடுதலை வேட்கையும் தமிழீழச் சிந்தனை விரிவும் அதைநோக்கிய செயற்பாடுகளும் மெல்ல மெல்ல வளரத்தொடங்கின. அதேநேரம், சிறீமாவோ அரசின் இனவெறிச் செயல்களும் தொடரவே செய்தன. புத்தளம் பெரிய பள்ளிவாசலில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த 7 இஸ்லாமியத் தமிழர்கள் சிங்களப் பொலிசாரின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் பள்ளிவாசலின் உள்ளே இரத்தம் சிந்தி உயிர் துறந்தனர்.

## தமிழினத்தை மேலும் நசுக்கிய ஜே.ஆரின் அரசியல் யாப்பு



1978 அரசியலமைய்பு நடைமுறைக்கு வந்த அன்று புலிகளால் தகர்க்கப்பட்ட அரசின் விமானம்

1977இல் நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஜே.ஆர் ஜெயவர்த்தனா தலைமையில் மிகப் பாரிய வெற்றியோடு ஆட்சிக்கு வந்தது. அதுவரை எந்தவொரு தேர்தலிலும் நேராத மாபெரும் வெற்றியது. அப்போது இருந்த தேசியப் பேரவையின் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றிகொள்ள, சிறீலங்கா சுதந்திரக்கட்சி



அல்பிரட்துரையப்பா

உ.பொ.அதியட்சகர் சந்திரசேகர

யாழ் தமிழாராய்ச்சி மாநாட்டினை குழப்பியவர்கள்

8 தொகுதிகளை மட்டுமே மிகக்குறைந்த வாக்குகளினால் வெல்லமுடிந்தது. சிறீலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஏற்கமறுத்து, தமிழர்களின் தாயக மீட்புக் கோரிக்கையோடு தேர்தலில் நின்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தான் போட்டியிட்ட 22 தொகுதிகளில் 17ஐக் கைப்பற்றியது. தமிழ்ஈழம் என்ற தனியரசிற்கான அசைக்கமுடியாத



புத்தளம் படுகொலையில் உயிரிழந்த இஸ்லாமிய சகோதரர்கள் இவர்கள் தாம்!

சுதந்திரன்

புத்தளம் பள்ளிவாசல் படுகொலை பற்றி சுதந்திரன் செய்தி 1976

ஆணையை தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு வழங்கினர். பிரதமராக வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிறீலங்காவின் 2ஆவது குடியரசு யாப்பை உருவாக்கி, தன்னை சர்வவல்லமையும் நிறைவேற்றதிகாரமும் கொண்ட அதிஉத்தம செய்துகொண்டார். இந்தக் குடியரசுயாப்பும் பௌத்த நெட்டாண்டுக் கணக்கையே அலகாகக் கொண்டு 07.09.1978இல் நடை முறைக்கு வந்தது.

## புத்தளம் பள்ளிவாசல் படுகொலை பற்றி சுதந்திரன் செய்தி 1976

தமிழர்களின் நிலைமையோ சற்றும் திருந்தவில்லை. முதலாவது குடியரசு போலவே இலங்கை ஒரு பௌத்த சிங்களக் குடியரசு என்பதை, புதிய அரசியல் யாப்பும் உறுதி செய்தது. புத்தசாசனத்துக்கு முதன்மையுடன் சீராட்டலும் சிங்களமொழிக்கு ஆளுகை மொழி அந்தஸ்தும் வழங்க இரண்டாவது யாப்புந் தவறவில்லை. 1980 வரையில் தமிழர்களின் உரிமைக் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது. இராணுவ வல்லமை கொண்ட சிறீலங்கா அரசுக்கு வெறுங்கையரான தமிழர்களின் ஈனக்குரல் கேட்காமல் இருந்ததில் வியப்பேதுமில்லை 1977 இன் பின், மெல்ல மெல்ல வளர்ச்சியடையத் தொடங்கிய ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்கள் அவ்வப்போது சிங்களப்படையினரைத் தாக்கியபோதும், சிங்கள அரசு அக்கறை கொள்ளவில்லை. 1961 இல் கச்சேரிமுன் நடந்த பெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நசுக்க ஏவிவிடப்பட்ட இராணுவம் தமிழர் நிலங்களிலே தங்கி விட்டமையாலும் தமிழ் நிலங்களில் அமைந்த காவல் நிலையங்கள் கூட பெரும்பாலாகச் சிங்களவரையே கொண்டிருந்தமையாலும் எப்போதாவது எழக்கூடிய தமிழர் ஆயுதக்கிளர்ச்சியை முளையோடு கிள்ளிவிடலாம் என்ற நினைப்பே அரசுக்கு இருந்தது. மேலும் முப்படைக்கும் ஆட்சேர்க்கப்பட்டபோது ஓரிரண்டு தமிழர்களைத் தவிர எல்லோருமே சிங்கள இனத்தவர்களாகவே சேர்க்கப்பட்டனர். எனவே “தேசியப்படை” என்ற பெயர் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு எவ்வகையிலும் பொருத்தமானதல்ல. தனிச்சிங்களப் படையாக வடிவமைக்கப்பட்டு சிங்கள மாமன்னர்களினதும் தளபதிகளினதும் பெயர்களிலே அணிகள் பிரிக்கப்பட்டு தமிழர்களின் உரிமைக் குரல்வளையைத் தேவைப்படும் போதெல்லாம் நெரிப்பதற்கு வசதியாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்புப் படைச்சேர்ப்பில் மட்டும் இது நிகழ்ந்ததென்பதல்ல. தொழில்வாய்ப்பின் எல்லாத் துறைகளிலும் 90இற்கு மேற்பட்ட விழுக்காட்டினைச் சிங்களவர்களே பெற்றுக் கொண்டனர். இது காலப்போக்கில் இன்னும் அதிகரித்துக் கொண்டே போயிற்று. திட்டமிட்டு குடியேற்றத் திட்டங்களால் சிங்களத் தாயக எல்லை, கிழக்கில் மட்டுமன்றி வடக்கு நோக்கியும் மெல்லமெல்ல நகரத் தொடங்கியது.

இந்தத் திட்டங்களை அரசே செயற் படுத்தியது. அல்லது இனவாதிகளான சிங்களவர் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த, பொருண்மியப் பாதுகாப்புக் கவசங்களை அரசு அளித்தது. சிங்கள வருக்கு மீள்வாழ்வு, விவசாய விரிவாக் கங்கள் என்றபெயரில் நடத்தப்பட்ட குடியேற்றங்கள் இலங்கை, இந்தியத் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கத் தொடங்கியபோது, தமது தாயக நில இழப்பினால் வெகுண்ட தமிழர்கள் தமது எதிர்ப்புக்களைப் பல்வேறு வழிகளில் காட்டத் தொடங்கினர்.

## அடிக்குறிப்புக்களின் விளக்கம்

08. 1956 ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் முடிவுகள் எக்கட்சிக்கும் தனித்து ஆட்சியமைக்கக் கூடிய பெரும்பான்மை வலுவை வழங்கவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி - 66

தமிழரசுக்கட்சி – 14

தமிழ்க்காங்கிரஸ் கட்சி - 03

சி.பி.டி. சில்வாவின், சிறீலங்கா சுதந்திர சோசலிசக் கட்சி – 05

சிறீலங்கா சுத்நதிரக் கட்சி – 41

லங்கா சமசமாசக் கட்சி – 09

சிறீலங்கா கம்யூனிஸ்ட்கட்சி – 04

மக்கள் ஐக்கிய முன்னணி – 01

சுயேச்சைகள் - 06

ஜாதிக விமுக்கி பெரமுன - 01

- தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு தொடரும்....

www.sangathamil.ca




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# கிளாலிப் படுகொலைகள் 02 ஜனவரி 1993 தொடக்கம் 29 யூலை 1993 வரை

யாழ் குடாநாட்டினையும் அதன் வெளி நிலப் பரப்பையும் ஊடறுத்துச் செல்லும் பிரதான தரைவழி மார்க்கம் ஆனையிறவு ஆகும். 1990 ஆம் ஆண்டு ஏப்பிரலுக்கு முன்னர் யாழ் குடாநாட்டிலிலுள்ள எட்டு இலட்சத்திற்கும் மேற் பட்ட மக்களின் போக்குவரத்து, விநியோகப் பாதையாக ஆனையிறவு ஊடான தரை வழிப் பாதையே அருந்தது. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பமான போரின் விளைவால் தரைவழிப் பாதை மூடப்பட்டது.

இதன் பின்னர் யாழ் மக்களின் போக்குவரத்து நகர்வுகள், உணவு விநியோக மார்க்கங்கள் என்பன ஆனையிறவுக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள பூநகரி-கேரதீவு சங்குப்பிட் டியினூடாக அமைந்தது. இப்போக்குவரத்து மார்க்கம் கடல் நீரேரியூடாக இருந்தது. மக்கள் பெருஞ்சிரமங்களிற்கு மத்தியில் கேரதீவு சங்குப்பிட்டியினூடான கடல்நீரேரியைக் கடப்பதற்கு பயணப் படகு (Ferry) ஒன்றைப் பயன்படுத்தினார்கள். இதன்மூலம் விநி யோகப் பொருட்களைக் கொண்ட பாரவூர் திகள் பலமான வாகனங்கள் என்பன நகர்த் தப்பட்டன.




மக்கள் பயணஞ்செய்த இப்பாதையும் 1991 ஆம் ஆண்டில் பூநகரியை இராணுவத்தினர் கைப்பற்றியதனால் தடைப்பட்டது. பின்னர் யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பாதையாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப்பாதை இருந்தது. இதுவும் 1991 ஆம் ஆண்டு “ஒப்பறேசன் பலவேகயா-01” இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவதத்தினரால் கைப்பற்றப்பட மக்களின் போக்குவரத்தும் தடைப்பட்டது.




குடாநாட்டு மக்கள் வெற்றிலைக்கேணி, கட் டைக்காடு ஊடான கடற்கரையோரப் பாதைக் கும் ஆனையிறவுக்குமிடையில் அமைந்த கொம்படிப் பாதையினைப் பயன்படுத்தினர். இப்பாதை பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதை யாகக் காணப்பட்டது. அப்படியிருந்தும் இதனூ டாக மக்கள் பயணித்தார்கள். இயற்கையால் பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாக விளங் கிய கொம்படிப் பாதையினூடு கடுந்துன்பங் களுக்கு மத்தியில் மக்கள் பயணித்தார்கள்.

“பலவேகய 02” இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் ஆனையிறவு, வெற் றிலைக்கேணி, கட்டைக்காடு போன்றவற்றில் இராணுவத் தளங்களை தொடர் இராணுவ வேலிகளாக அமைத்ததனால் மக்கள் பயணஞ்செய்த இக் கொம்படிப் பாதையும் தடைப்பட்டது. இதன் பின்னர் யாழ் குடாநாட் டிற்கும் ஏனைய இடங்களுக்குமான வெளித் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலை யில் எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற் கான உணவு, மருந்து உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கான பாதை இல்லாது தவித்த ஆயிரக்கணக்கான மக்கள், 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிளாலிக்கடல் நீரேரியி னூடான கடற் போக்குவரத்தினை மேற் கொண்டார்கள்.

யாழ் குடாநாட்டையும், அதன் வெளி நிலப்பரப் பையும் ஊடறுத்து ஏறத்தாழ முப்பது மைல் உள்நுழைந்து, பொன்னாலைதொட்டு தலை மன்னார் வரை நீண்டு, பரந்த கடலால் நீரூட்டப்பட்டு இருந்தது யாழ்ப்பாணக் கடல் நீரேரி. கிளாலிக்கரையிலிருந்து மறுகரையில் ஆலங்கேணிவரை ஏறக்குறைய இருபது கடல்மைல் தூரங்கொண்ட இக்கடற்பிரதேசம் பயணங்களிற்கு, விநியோக மார்க்கங்களிற்கு ஒவ்வாததாக, அமைந்தாலும் பெருஞ்சிரமங் களின் மத்தியில் ஏறக்குறைய நான்கு மணித் தியாலம் பயணித்தே மறுகரையை அடைய முடியும். பகல் நேரங்களிற் பயணிக்க முடியாத நிலையிருந்து. இரவு நேரங்களிலேயே பயணிக்கக்கூடியதாக எட்டு குதிரை வலு கொண்ட இயந்திரப் படகுகள் மூலம் தமது பிரயாணங்களை மக்கள் மேற்கொண்டனர்.

1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போக் குவரத்து மார்க்கத்தை தடைசெய்யும் நோக் கில் தாக்குதல்கள் கடல் நீரேரியின் இருபக் கமும் அமைத்திருந்த ஆனையிறவு இராணு வத்தளம் மற்றும் பூநகரி இராணுவத்தளம் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மேலும் வான்படையும் இத் தடைநோக்கிற்கு



உதவியது.

1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி கிளாலியிலிருந்து ஆலங்கேணிக்குச் சென்று கொண்டிருந்த இயந்திரப் படகுகளில் இயந் திரப் பழுது காரணமாக நடுக்கடலில் நின்ற நான்கு படகுகளிலிருந்த பயணிகள் மீது மிக அண்மித்து வந்த கடற்படையினர் கூரிய ஆயுதங்களாலும், துப்பாகிகளாலும் தாக் கியதால் படகிற் பயணித்த அரச உத்தியோகத்




தர்கள், மாணவர்கள் உட்பட முப்பத்தைந்து பேர் வெட்டப்பட்டும், சுடப்பட்டும் உயிரிழந் தாாடகள். ஐம்பது பேர்வரையானவர்கள் காயங்களுடன் மறுநாள் காலை கரையினை அடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களில் ஒரு வரான கந்தையா செல்லத்துரை (வயது 68) என்பவர் கிளாலிக்கடலில் ஏற்பட்ட சம்பவங் கள் பற்றி ஊடகங்களுக்கு மறுநாள் அளித்த பேட்டியில் விரிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டு, யூலை இருபத்தொண்பது எனப் பல்வேறுபட்ட காலப் பகுதியிலுமாக 1993ஆம் ஆண்டு டிசம்பர் வரைக்கும் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிளாலிக் கடற்பரப்பில் பயணித்த போது, கடற்படையினரின் தாக்குதல்களினால் உயிரிழந்துள்ளதுடன், நூறிற்கும் மேற்பட் டவர்கள் அங்கவீனமானார்கள். மேலும் நூற் றிஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந் தார்கள். இச்சம்பவங்களில் கிளிநொச்சி மாவட் டக் கல்வி அதிகாரி உட்பட யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள், ஆசி ரியர்கள், வெளிநாட்டிலிருந்து தமது உறவு- களைப் பார்வையிட வந்தவர்கள் எனப் பல தரப்பட்ட பொதுமக்களும் பாதிக்கப்பட்டார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
02. இ.ஜெராட் கடற்தொழில் 26
03. இளையதம்பி மகேஸ்வரி வீட்டுப்பணி 51
04. இளையதம்பி சிவசீலன் பல்.கலை மாணவன் 25
05. இரத்தினம் சிறீறஞ்சன் - 29
06. இரத்தினசிங்கம் எருமின் ஜசேக் இன் பராசா இ.மி.ச.ஊழியர் 47
07. ந.இராசன் கமம் 28
08. ந.கிளி கமம் 26
09. ந.இராசலிங்கம் வியாபாரம் 32
10. ந.நாகம்மா - 60
11. ந.துரை கமம் 36
12. நா.பரிமளம் - 37
13. க.கமலதாசன் கடற்தொழில் 17
14. க.செல்லத்துரை - 46
15. க.சிவானந்தன் வியாபாரம் 35
16. க.ஏகாம்பரம் கமம் 45
17. குப்புசாமி செல்லமுத்து - 45
18. கா.சின்னத்தம்பி கமம் 60
19. கதிரமலை ஜெயந்தி மாணவி 25
20. த.கமலராசன் மாணவன் 10
21. த.பூபதி வீ.பணி 28
22. த.றாகினி மாணவி 17
23. தர்மராஜா பகீரதன் - -
24. தம்பிஜயா ராகினி இல்லை 18
25. தற்பரநாதன் முகுந்தன் மாணவன் 20
26. ம.இராசையா கடற்தொழில் 23
27. ம.யோசப்யூட் கடற்தொழில் 18
28. முத்தையா சந்திரலீலா - 35
29. மதுரநாயகம் அமிர்தநாயகி - 39
30. மி.ஜேசுதாசன் மாணவன் 19
31. மிக்கேல் ஜேசுதாசன் மாணவன் 19
32. முருகேசு சடராசா கடற்தொழில் 40
33. அ.அடைக்கலம் சாரதி 63
34. அப்புக்குட்டி பரமசிங்கம் சாரதி 38
35. யோசெப்யேசுராஜா யேசுநாயகம் தனிதாஸ் கடற்தொழில் 18
36. தெ.கனகாம்பாள் வீட்டுப்பணி 42
37. செ.ரூபன் ஞானசீலன் கடற்தொழில் 19
38. செ.பாக்கியராசா கடற்தொழில் 30
39. செ.அருள்தாஸ் கடற்தொழில் 21
40. செல்வராசா பாக்கியராசா - 27
41. செல்லத்துரை சாந்தலிங்கம் கடற்தொழில் 50
42. ஞானசூதியத் வின்சன்நிக்கிளஸ் - 22
43. ஞானப்பிரகாசம் ஞானபாலன் படகோட்டி 32
44. ஞானபாலன் படகோட்டி 33
45. ச.பாலசுப்பிரமணியம் சுயதொழில் 54
46. சந்திரன் அருணானந்தி கூலி 29
47. சி.கனகலிங்கம் கடற்தொழில் 45
48. சின்னவன் கதிரவேலு - 44
49. சிவலிங்கம் அன்னபூரணம் - 40
50. சிவலிங்கம் செல்லத்துரை நீதிமன்ற ஊழியத் 45
51. சண்முகம் சபாநாதன் - 65
52. ரவீந்திரன் இந்திரவதனா - 41
53. ஏரம்பமூத்த்தி அசோகன் - 36

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. க.கணேந்திரநாதன் முகாமையாளர் 63
02. கந்தையா செல்லத்துரை - 68
03. கநத்சாமி மதியரசன் வியாபாரம் 20
04. தவராசா தயாளினி மாணவி 05
05. செல்வராசா குணசிங்கம் - 40
06. செல்வரத்தினம் ஜங்கரன் - 27
07. சின்னையா சந்திரகுமார் - 20
08. வி.இன்பநாதன் கடற் தொழில் 37
09. விநாயகமூர்த்தி இன்பநாதன் - 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



30-07-1993

கிளாலிக் கடலில் நேற்றுக்காலை சிறிலங்கா கடற்படையினரால் கோரமாகக் கொல்லப்பட்ட பொதுமக்களில் பெண்மணி ஒருவரின் சடலத்தை முதலாவது படத்திலும், வயோதிபரின் சடலத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நால்வரின் சடலங்கள் கரையில் வைக்கப்பட்டுள்ளதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சுன்னாகச் சந்தைப் படுகொலை – 28 மார்ச் 1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்குப் பகுதியில் யாழ் நகரிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் கே.கே.எஸ். வீதியில் சுன்னாகச் சந்திக்கு அருகில் சுன்னாகச் சந்தை அமைந்துள்ளது. யாழ் குடாநாட்டின் மிகப் பெருமளவான விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் இடமாக இச்சந்தை அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட பல மாவட்டங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள் இச்சந்தையில் விற்கப்பட்டன.

28.03.1984 அன் று மதியம் சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியிலும், சந்தைப் பகுதிகளிலும் தமது அன்றாட வேலைகளில் பெருமளவான மக்கள் கூடியிருந்தனர். திடீரென பஸ்நிலையப் பகுதிக்கு ட்ரக் வண்டியிலும், ஜீப்பிலும் வந்திறங்கிய விமானப் படையினர் பெரும் பரபரப்புடன் காணப்பட்டதுடன், யாரும் எதிர்பாராத வகையில் திடீரெனச் சுன்னாகப் பஸ் நிலையப் பகுதிகளிலும், சந்தையிலும் குழுமியிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

விமானப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அன்றைய தினம் தமது நாளாந்த அலுவல்களில் ஈடுபட்ட எட்டுப் பொதுமக்கள் உயிரிழந்ததுடன், ஐம்பது பொதுமக்கள் வரை படுகாயமடைந்தனர். சந்தை தீயூட்டப்பட்டதில் பல கடைகள் எரிந்து அழிந்தன. இதன் பின்னர் அவ்விடத்தை விட்டு விலகி மல்லாகப் பகுதி யூடாக கே.கே.எஸ் வீதி வழியாக காங்கேசன்துறை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மல்லாகம் பகுதியில் தங்களது கண்களுக்குத் தென்பட்ட எல்லாப் பொது மக்களையும் தாக்கினார்கள். இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளைப் பகுதிக்குச் சென்ற விமானப் படையினர் யூனியன் கல்லூரியில் பரீட்சை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள், மற்றும் அங்கு நடமாடிய பொதுமக்கள் மீதும் தாக்குதலை நடத்தினார்கள், இதில் இருபத்தாறு மாணவர்கள் காயமடைந்ததுடன், அவ்வீதி வழியாகப் பயணம் செய்த இருபது பொதுமக்களும் காயமடைந்தார்கள். பின்னர் விமானப் படையினர் பலாலி முகாமிற்கு திரும்பிச் சென்றார்கள்.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. கந்தையா பாலசுப்பிரமணியம், 52, பாதுகாவலர்
02. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம், 54, சந்தை மேற்பார்வையாளர்
03. தம்பிமுத்து சுந்தரலிங்கம், 38, தொழிலாளி
04. வல்லிபுரம் சின்னத்துரை, 68 வியாபாரம்
05. வைரவி தியாகராசா, 42. நெசவு
06. பசுபதி தவமணி, 43, வீட்டுப்பணி
07. நடராசா யோகராசா, 27, வியாபாரம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# நாச்சிக்குடா படுகொலை – 16 மார்ச் 1996

வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தொன்மையான பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரரிப் பிரதேசம் விளங்குகின்றது. பண்டைய தமிழ் மன்னர்களின் தொன்மையான ஆட்சி மையமாகவும், வர்த்தக மையமாகவும் இது இருந்து வந்துள்ளது. அத்தோடு ஆரம்பகாலத்தில் கிளிநொசச்சி மாவட்டத்தில் அதிகூடிய மக்கள் தொகையினைக் கொண்ட பிரதேசசெயலர் பிரிவாகவும் பூநகரி இருந்தது. பூநகரிப் பிரதேசத்தில் பல மீனவர் குடியிருப்புக்களை உள்ளடக்கிய கிராமம் நாச்சிக்குடாக் கிராமம் ஆகும்.

16.03.1996 அன்று அதிகாலை 5:20 மணியளவில் வான்படையின் பைற்றரென அழைக்கப்படும் எம்.ஐ. இருபத்துநான்கு ரக உலங்கு வானூர்தி நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னிப் பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்தியது. அவ்வேளை வீடுகளில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பெண்கள், குழந்தைகள் மற்றும் கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களென மொத்தமாக இருபது பேர் இத்தாக்குதலில் உயிரிழந்ததுடன், அறுபத்திரண்டு பேர் பலத்த காயங்களுக்கும் உள்ளானார்கள்.

நூற்றுக்கணக்கான மீனவக் குடிசைகள் எரிந்து சாம்பலாகின. சம்பவத்திற் காயப்பட்ட அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர், இறந்தவர்களை அவர்களது உறவினர்கள் அடக்கம் செய்தனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்கின்றனர். இச்சம்பவம் தொடர்ப்பாக நாச்சிக்குடாவைச் சேர்ந்ந்த்த ஜேசுதாசன் ஆன்மேரி தெரிவிக்கையில்,

“என்னுடைய சொந்த இடம் நவாந்துறை யாழ்ப்பாணம். தற்போது கடற்கரை வீதி நாச்சிக்குடாவில் வசித்து வருகின்றேன். 1996ஆம் ஆண்டு மூன்றாம் மாதம் பதினாறாம் திகதி விடியற்காலை நாங்கள் நித்திரையாக இருக்கும் போது திடீரெனக் கடற்கரையோரமாக வந்த எம்.ஐ-இருபத்துநான்கு ரக உலங்கு வானூர்தி ஒன்று தாக்குதல் நடத்தியது. இதன்போது என்னசெய்வதென்று தெரியாத நிலையில் நாங்களனைவரும் சிதறி ஓடினோம். அதன்போது எங்களுடைய அண்ணையின் மகனுக்கும் மைத்துனரின் மகனுக்கும் காயம் பட்டது. எங்களுடைய உறவினர்கள் கை, காலை இழந்தனர். இச் சம்பவத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இருபது பேர் சம்பவ இடத்திலும் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடல்வழியாக யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். விமானம் திரும்பவும் வருமோ என்ற பதற்றத்தின் மத்தியில் இறந்தவர்களை உறவினர்கள் அடக்கம் செய்தார்கள். அதன் பின்னர் நாங்கள் இடம்பெயர்ந்து போய் காடுகளில் வாழ்ந்தோம். கிட்டத்தட்ட ஒரு கிழமைக்கு மேல் தொழிலுக்கு கடலுக்குப் போகமுடியவில்லை. காட்டுக்குள் இருந்த நாங்கள் பின்னர் படிப்படியாக கடற்கரையில் குடியேறத் தொடங்கினோம்.

திடீரென ஒரு நாள் மாலை 5மணியளவில் இரணைமாதா நகர்ப் பக்கமாக இருந்து வந்த வானூர்தி எங்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் செய்வதறியாத நாங்கள் திரும்ப காடுகளுக்குள் ஓடினோம். நாம் தற்போதும் பயந்த நிலையிற் தான் கரையோரத்தில் இருக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை அல்பேட் கடற்தொழில் 50
02. யூலியஸ் டெவின் குழந்தை 1
03. கனகசிங்கம் தர்சினி மாணவி 10
04. கந்தையா இரமேஸ்வரன் மாணவன் 18
05. கந்தசாமி செந்தில்குமார் மாணவன் 16
06. குவாட்டஸ்கேஸ் சின்ராசன் - -
07. தவரி வேலாஜி - 68
08. மரியநாயகம் திரேசம்மா - -
09. மரியதாஸ் எட்வின் கடற்தொழில் 30
10. மகேந்திரன் யாழினி மாணவி 18
11. அன்ரன் டயஸ்கா - -
12. அன்ரன் ஜெகதீபா மாணவி 12
13. ஆசைப்பிள்ளை அல்போன்ஸ் கடற்தொழில் 50
14. அருளானந்தம் சேவியர் விசிற்றம்மா வீட்டுப்பணி 55
15. அலபோன்ஸ் அமலோறப் வராணி வீட்டுப்பணி 22
16. பொன்னம்பலம் செல்வராசா கடற்தொழில் 68
17. மேரி அமலினி மாணவி 18
18. சேவியர் கொன்சலா மாணவி 14
19. விக்ரர் லூசியா - 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூசைப்பிரபா குழந்தை 02
02. இமிறோன் - -
03. இராசம்மா - 30
04. இருதயசீலன் - 34
05. யூனிற்று மாணவன் 16
06. யூத் - 90
07. நாகராணி - 62
08. நாச்சியம்மா - 40
09. கனகம்மா - 65
10. கந்தசாமி - 52
11. புஸ்பாயினி மாணவி 08
12. பரிமளம் - 44
13. பத்மசிறி - 25
14. பிரியா குழந்தை 04
15. பவானி - 20
16. பற்றிக் - 62
17. தர்மராசா - 22
18. திரேசம்மா - 65
19. மகிந்தன் மாணவன் 07
20. மாசில்தா - 24
21. மதிஜெனி - 20
22. மதியோகராசா - 25
23. மனோகரன் மாணவன் 15
24. மனோதா - 16
25. டன் - 23
26. அன்னைமேரி - 37
27. அன்ரன் - 34
28. அன்ரனிக்குயின்ரஸ் யூனிதா மாணவி 16
29. ஆனந்தி - 23
30. அனிஸ்ரா மாணவி 06
31. அனுசியா மரியனிட்டா - 20
32. அமுதராசு மாணவன் 10
33. அருள்சீலன் தர்மஜோதி - 22
34. அருள்சீலன் அருள்மேரி குழந்தை 04
35. அருளம் மேரி - -
36. அரவிந்தன் மாணவன் 07
37. கொன்ஸ்பேனல் - 32
38. கொன்சியா குழந்தை 4
39. பொன்னம்பலம் - 43
40. தேவராசா - 45
41. மேரி சிங்கராசா - 30
42. மேரிகொன்சலா - 18
43. மேரிறீட் மரியா - 28
44. செபமாலை - 65
45. சேவியர் - 30
46. செல்வநாயகி - 31
47. செல்வநிதி - -
48. செல்வராணி - 25
49. சுப்பையா - 76
50. சுதர்சன் - 21
51. சித்திரா - 34
52. சசிரேகா - -
53. சரண்யா - -
54. விமலதாஸ் - 26
55. வளர்மதி - 30
56. இராஜ்குமார் மாணவன் 14
57. ரசுபாலன் - 18
58. எமில்டா குழந்தை 04
59. எல்டா மாணவன் 14

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# பழைய வட்டக்கச்சி குண்டுவீச்சு – 26 மார்ச் 1998

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள பழைய வட்டக்கச்சி என்னும் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் புராதன காலக் குடியேற்றக் கிராமங்களில் முதன்மையான ஒரு கிராமமாகக் காணப்படுகிறது. இக்கிராமம் இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் பெற்றுக் கொள்ளும் நெற்செய்கைப் பிரதேசமாகும். இதனால் இங்கு சிறுபோக நெற்செய்கையும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பழைய வட்டக்கச்சிக் கிராமம் தற்போது பெரியகுளமென அழைக்கப்படுகிறது. இக்கிராமம் தனக்கென சில சிறப்பான இயல்புகளைக் கொண்டுள்ளது. வளமான மண்ணும் சிறந்த நீர் வளமும் இப்பிரதேசத்தில் இருப்பதனால் இப்பிரதேச மக்கள் செல்வச் செழிப்புடனும் கல்வி வளத்துடனும் வாழ்கின்றார்கள்.

இராணுவதத்தினர் 1996ஆம் ஆண்டு காலப்குதியில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்கில் “சத்ஜெய” இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். விமானத் தாக்குதல் எறிகணைத் தாக்குதல் என்பவற்றை நடத்தியபடி முன்னேறி, மக்களின் வாழ்விடங்களையும், சொத்துக்களையும் அழித்தனர். இதன்போது பல பொதுமக்களும் உயிரிழந்தார்கள்.

1998.03.26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு கிளிநொச்சி வான் பரப்பினுள் பெரும் இரைச்சலுடன் நுழைந்த விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றி வட்டமிட்டன. முதலில் கண்டாவளை - வெளிக்கண்டற் பகுதியில் ஒரு குண்டினையும் அதனைத் தொடர்ந்து பழைய வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள உடையார் என்றழைக்கப்படும் அருணாசலம் வேலாயுதம் என்பவரது வீட்டிலும், வீட்டிற்கு அண்மித்த பிரதேசத்திலும் ஐந்து குண்டுகளையும் வீசியது. இதன்போது வீட்டு முற்றத்தில் பனங்கிழங்கைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த இருவரும் வீட்டினுள்ளிருந்தடையாரின் மகளும் மற்றும் காணியில் வேலை செய்துகொண்டிருந்த இருவரும் முன் வீட்டில் ஒருவருமாக மொத்தம் ஆறு பேர் உயிரிழந்தார்கள். ஐந்து பேர் காயங்களுக்குள்ளானார்கள். காயமடைந்தவஉகள் தருமபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இச்சம்பவத்தின் போது அருணாசலம் வேலாயுதத்தின் வீடு முற்றாக அழிந்ததுடன், அவருடைய இரண்டு உழவு இயந்திரங்கள், களஞ்சிய அறைகள் உட்பட அனைத்து உடமைகளும் அழிந்தன. அருணாசலம் வேலாயுதம் தெரிவிக்கையில், “எமது பகுதியில் நடந்த வான் தாக்குதலால் எனது மகளான மங்கயற்கரசி படுகொலை செய்யப்பட்டதுடன், எனது வீடு முற்றாக சேதமடைந்தது. இதில் ஐந்து பேர் உடல்சிதறிப் பலியானார்கள். எனது நெல்லு மூட்டைகள் யாவும் எரிந்துவிட்டன.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சண்முகம் தனபாலு தொழிலாளி 55
02. தியாகராசா பாலு தொழிலாளி 50
03. இராமநாதன் செல்லம்மா வீட்டுப்பணி 56
04. வேலாயுதம் மங்கயற்கரசி மாணவி 20
05. முத்தையா வசந்தகுமாரி வீட்டுப்பணி 26
06. கிஸ்ணசாமி வள்ளியம்மை வீட்டுப்பணி 65

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. வீரய்யா செல்வராசா - 40
02. கதிர்காமு பேபி - -
03. இராமநாதன் தேவகி - 23
04. பஞ்சலிங்கம் பாமினி அரசஊழியர் 32
05. வேலாயுதம் சிவகுமார் அரசஊழியர் 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# உயர் பாதுகாப்பு வலயத்தில் 137 பேர் படுகொலை - 15.16. 17.03.2009

வன்னியின் “பாதுகாப்பான வலயத்திற்குள்” சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் சனிக்கிழமை இரவு முதல் 137 பேர் இறந்துள்ளனர் மற்றும் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்களில் குறைந்தது 18 பேர் மக்கள் வலையத்திற்குல் சிறீலங்கா இராணுவத்தின் நீண்ட தூர துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கிடையில், செவ்வாய்க்கிழமை “பாதுகாப்பான வலயத்தின்” விளிம்புகளில் இலங்கை விமானப்படை வீசிய சுமார் 50 எண்ணிக்கையிலான பாரிய பதுங்கு குழி குண்டுகள் பொதுமக்கள் மத்தியில் அழிவை ஏற்படுத்தியது.



சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 58 பொதுமக்கள் ஞாயிற்றுக்கிழமை கொல்லப்பட்டனர். நீண்ட தூரம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 12 பொதுமக்கள் பலியாகினர். திங்கட்கிழமை, 29 பேர் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டனர் மற்றும் 6 பேர் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். திங்கள்கிழமை 73 பொதுமக்கள் காயமடைந்தனர். செவ்வாய்க்கிழமை காலை ஷெல் தாக்குதலில் 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மாத்தளன் மருத்துவமனைக்கு அருகில் திங்கட்கிழமை சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் ICRC ஊழியர் கே. புலேந்திரராசா காயமடைந்தார் மற்றும் காயமடைந்தவர்களை மாற்றிய ICRC கப்பலில் ஏற்றப்பட்டார்.

இதேவேளை, 15 வயதுக்குட்பட்ட 12 சிறுவர்கள் உட்பட 52 பொதுமக்கள் திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாத்தலான் வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஐந்து பேர் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.









**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# பச்சைப்புல்மோட்டை, வலைஞர்மடப் பகுதிப் படுகொலை 17.03.2009

17.03.2009 அன்று, சிறீலங்கா விமானப்படை தாக்குதல்கள் மற்றும் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களில் 84 பேர் கொல்லப்பட்டனர், 182 பேர் காயமடைந்தனர்.

செவ்வாய்க்கிழமை சிறீலங்கா அரசால் அறிவிக்கப்பட்ட பாது காப்பு வலயம் என்று அழைக்கப்படும் பச்சைப்புல்மோட்டை, வலைஞர்டம் பகுதிகளை குறிவைத்து சிறீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு மற்றும் சிறீலங்கா சிங்கள இரா ணுவத்தின் ஷெல் தாக்குதலில் 52 பேர் கொல்லப்பட்டனர், 182 பேர் காயம் அடைந்தனர் என்று புலிகளின் குரலில் ஆரம்ப அறிக்கைகள் தெரிவிக்கின்றன. புலிகள் (VoT) மாலை ஒளிபரப்பு. முன்னதாக, காலையில், "பாதுகாப்பான வலயத்தின்" பிற பகுதிகளில் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 32 பொதுமக்கள் கொல்லப் பட்டதாக சுயாதீன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படையால் 12 முறைக்கு மேல் குண்டுகள் வீசப்பட்டன. 1,000 கிலோ எடை கொண்ட கனரக வெடிகுண்டுகள் "பாது காப்பு மண்டலம்" பகுதிகளிலும் அதன் எல்லைப் பகுதிகளிலும் வீசப்பட்டன.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 19.20.21. – 03.2009

19. 20. 21.03.2009, மூன்று நாளில் முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திற்குள் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் 102 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவில் முற்றுகையிடப்பட்ட பாதுகாப்பு வலயத்திற்குள் சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல்களில் 46 பொது மக்கள் வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டனர். வெள்ளியன்று மாத்தளனில் இடம்பெயர்ந்தவர்களின் 6 தார்பாலின் தங்கு மிடங்கள் மீது சிறீலங்கா இராணுவத்தின் எறிகணைகள் தாக்கியதில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில், ICRC காயமடைந்த பொதுமக்களை ஏற்றிச் சென்ற கடலோர இடத்திற்கு 300 மீட்டர் தொலைவில் காலை 11:00 மணியளவில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வியாழ கிழமை அன்று, 11 குழந்தைகள் உட்பட 39 பொது மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் புதன்கிழமை பாதுகாப்பு வலயத்திற் குள் குறைந்தது 17 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

வெள்ளிக்கிழமை அன்று, பொக்கானையில் மதியம் 1.00 மணி யளவில் இடம்பெயர்ந்தோர் குடிசை மீது ஒரே ஷெல் தாக்கியதில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



எஞ்சிய உயிரிழப்புகள் முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், வலைஞர்மடம் ஆகிய இடங்களில் பதிவாகியுள்ளன. பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பொக்கனை மற்றும் மாத்தளன் பகுதிகளில் வியாழன் இரவு 11.00 மணிமுதல் கடும் எறிகணை வீச்சுக்கள் பதிவாகியுள்ளன.





# சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி தாக்குதல்களில் வன்னி 'பாதுகாப்பு வலயத்திற்குள்' 42 பொதுமக்கள் படுகொலை 22.03.2009

சிறீலங்கா சிங்கள இராணுவம் சனிக்கிழமையன்று "பாதுகாப்பு வலயத்திற்குள்" பீரங்கி குண்டுத்தாக்குதலில், 42 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் GS (கிராம அதிகாரி ஒருவர் உட்பட சுமார் 80 பொதுமக்கள் காயமடைந்தனர்). இரணைப்பாலை யில் தேங்காய் சேகரிக்கச் சென்ற குறைந்தது 7 பொதுமக்கள் விமானப்படையின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 128 பொதுமக்கள் படுகொலை – 23.24.2009

இலங்கை இராணுவத்தின் குறுகிய தூர மோட்டார் எறி கணைத் தாக்குதல்கள், ராக்கெட் உந்து குண்டுகள் (ஆர்பிஜி) தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 19 குழந்தைகள் உட்பட 96 பொதுமக்கள் திங்கட்கிழமை "பாதுகாப்பு வலயத் திற்குள்" கொல்லப்பட்டனர். உள்ளூர் உதவி ஊழியர்கள் மற் றும் மருத்துவ அதிகாரிகள் படி, ஞாயிற்றுக்கிழமை 7 குழந் தைகள் உட்பட 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். திங்கட் கிழமை சிறீலங்கா இராணுவம் மோட்டார் துப்பாக்கிச் சூடு, ஆர்பிஜி தாக்குதல்களை முடுக்கிவிட்டு, "பாதுகாப்பு வலயத் திற்குள்" உள்ள புதுமாத்தளன் பகுதிக்குள் குளத்தின் மறுபுறத் தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சுமார் 160 பொது மக்கள் காயமடைந்தனர். பாதுகாப்பு வலயம் என்று அழைக் கப்படும் பகுதியிலிருந்து பொதுமக்களை வெளியேற்றுவதை இலக்காகக் கொண்டு பகல் நேரத்தில் பொதுமக்கள் மீதான அதிகரித்த மற்றும் திட்டமிட்ட தாக்குதல்கள், படுகொலை இடம்பெற்றது. புதுமாத்தளனில் உள்ள தற்காலிக வைத்தியசாலைக்கு அருகில் மாலை 4 மணியளவில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். திங்கட்கிழமை. மருத்துவமனையின் பின்புறம் 400 மீட்டர் தொலைவில் குண்டுகள் விழுந்து வெடித்தது.

பொக்கனைய் பகுதியில் வீசிய 3 எறிகணைகள் 16 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மாத்தளன் பகுதியில் அதி உயர் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

# சிறீலங்கா இராணுவம் மற்றும் விமானப் படையினரின் தாக்குதல்களில் ‘பாதுகாப்பு வலயத்திற்குள்’ 62 பொதுமக்கள் படுகொலை 24.03.2009

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12:30 மணி முதல் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதிகளுக்குள் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்களை சிறீலங்கா இராணுவம் முடுக்கிவிட்டுள்ளது, 62 பொதுமக்கள் கொல்லப்பட்டது மற்றும் பலருக்கு காயங்களை ஏற்படுத்தியது. பாதுகாப்பு வலயத்தின் மீது பீரங்கி மற்றும் மோட்டார் குண்டுகள் இரவில் தாக்கியதில் 27 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வலைஞர்மடத்திற்கும் அம்பலவன்பொக்கனைக்கும் இடையில் பீரங்கி பொருத்தப்பட்ட கொத்துக் குண்டுகள் வெடித்ததில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. பாதுகாப்பு வலயத்திற்குள்ளான பச்சைப் - புல்மோட்டைச் சந்தியைச் சுற்றியுள்ள குடியிருப்புகளில் 12 வான்வழித் தாக்குதல்களுக்கு மேலதிகமாக செவ்வாய்க் கிழமை பகல் நேரத்தில் பாதுகாப்பு வலயத்தின் மீது RPG குண்டுகள், குறுகிய தூர மோட்டார்கள் மற்றும் நீண்ட தூர துப்பாக்கிச் சூடுகளை சிறீலங்கா இராணுவத்தினர் நிலை நிறுத்தியது. குறைந்த உயரத்தில் பறந்த சிறீலங்கா விமானப் படை குண்டுவீச்சாளர்களால் 70 க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன, குறைந்தது 17 பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

பொக்கனை, அம்பலவன்பொக்கனை, முள்ளிவாய்க்கால், மாத்தளன் மற்றும் வலைஞர்மடம் ஆகியவற்றை இலக்கு வைத்து எறிகணைத் தாக்குதல் சிறீலங்கா இராணுவத்தினரால் நடத்தப்பட்டது.

கடந்த 3 நாட்களுக்குள் 250க்கும் மேற்பட்ட காயமடைந்த பொது மக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில் 21 பேர் மருத்துவமனையில் உயிரிழந்தனர்.



# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 131 பொதுமக்கள் படுகொலை – 26.03.2009

பல்வேறு உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி, வியாழக்கிழமை முழுவதும் பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கை இராணுவம் மற்றும் சிறீலங்கா விமானப்படை நடாத்திய பல்வேறு வகையான தாக்குதல்களில் 32 குழந்தைகள் உட்பட 131 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



காயமடைந்த 252 பேரில் 49 பேர் குழந் தைகள். புதமாத்தலனிலிருந்து வலைஞர்மடம் வரையிலான 4 கி.மீ தூரத்தை இலக்காகக் கொண்டு சிறீலங்கா சிங்கள இராணுவம் ஆர்.பி.ஜி எறிகணைகளை, நீண்ட தூர துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் ஷெல்களை வீசியது.

மாத்தளனில் இராணுவத்தினரின் ஆர்பிஜி தாக்குதலில் 10 வயதுக்குட்பட்ட 4 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டனர். புதன்கிழமை துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் தாக்குதல்களில் 31 பயணிகள் கொல்லப்பட்டனர். இதற்கிடையில், விமானப்படையின் குண்டுவெடிப்பில் 27 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

25 மார்ச் 2009 அன்று வன்னியில் 185 பொதுமக்கள காயமடைந்தவர்கள் மாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிற்பகல் 3:00 மணியளவில் பொக்கனைக் பாதுகாப்பு வலயத்திற்குள் பல்குழல் ராக்கெட் தாக்குதல்கள் பதிவாகியுள்ளது. புதன். பொக்கனைக் கரையோரப் பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த மக்களின் குடிசை ஒன்றின் மீது MBRL ரொக்கட் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். காயமடைந்த 27 பேரில் 9 பேர் குழந்தைகள். இறந்தவர்களில் பலர் MBRL தாக்குதலின் ஏற்பட்ட தீக்காயங்களால் இறந்தனர். MBRL மற்றும் பீரங்கித் தாக்குதலில் பொக்கனைப் பகுதியில் 27 சிறுவர்கள் உட்பட 11 குழந்தைகள் உட்பட 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 72 பேர் காய மடைந்தனர். MBRL தாக்குதல்களில் பல தார்பாலின் தங்கு மிடங்கள் மற்றும் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பொக்கனையில் 3 கடைகள் நாசமாக்கப்பட்டன.

மாத்தளனில் இருந்து வலைஞர்மடம் வரையிலான 4 கிலோ மீற்றர் நீளமான பாதையை நோக்கி சிறீலங்கா இராணுவம் தடாகத்தின் மறுபுறத்தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 9 பயணிகள் உட்பட 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அதிகாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை அதே பகுதியில் மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒவ்வொரு 5 முதல் 10 நிமிடங்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு மோட்டார் ஷெல் அப்பகுதியைத் தாக்குகிறது, இதனால் 23 பேர் இறந்தனர். RPG ராக்கெட்டுகள், துப்பாக்கி மற்றும் மோட்டார் குண்டுகளை பயன்படுத்தி சாலை மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் சுற்றுப்புற தார்பாலின் குடிசைகள் மீது தாக்குதல் நடத்த சிறீலங்கா இராணுவத்தினர் சாலை தொடர்ந்து குறிவைக்கப்பட்டதால் காயமடைந்தவர்களில் பலர் மருத்துவ போக்குவரத்து இல்லாததால் காயங்களுக்கு ஆளானார்கள்.

TRO மற்றும் தமிழீழ காவல்துறை அதிகாரிகள் காயமடைந்தவர்களின் உயிரைக் காப்பாற்ற போராடினர்.

இதற்கிடையில், சிறீலங்கா விமானப்படைகளின் குண்டு வீச்சுகள் “பாதுகாப்பு மண்டலத்திற்குள்“ குறைந்தது 6 முறை நடாத்தினர். இரண்டு விமானப்படை குண்டுவீச்சாளர்கள் பச்சைப்-புல்மோடை மற்றும் முள்ளிவாய்க்கால் மீது தாக்குதல் நடத்தி, சுமார் 29 குண்டுகளை வீசினர், 6 குழந்தைகள், 12 பெண்கள் மற்றும் 3 முதியவர்கள் உட்பட 27 பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் 37 தார்பாய் தங்குமிடங்கள் அழிக்கப்பட்டன.

பாதுகாப்பு வலயத்திற்குள் புதனன்று சிறீலங்கா இராணுவம் மற்றும் சிறீலங்கா விமானப்படையினர் நடத்திய தாக்குதல்களில் சொத்துக்களுடன் கூடிய 85 தார்பாய் குடிசைகள் அழிக்கப்பட்டன.





# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 26.03.2009


















# புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனை மீதான தாக்குதல்களில் ஐந்து பொதுமக்கள் படுகொலை – 26.03.2009

வியாழன் அதிகாலை 4:00 மணி முதல் 4:30 மணி வரை சிறீலங்கா இராணுவம் புதுமத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனை மீது ராக்கெட் உந்து குண்டுகளால் (RPG) தாக்குதல் நடத்தியது, தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து நோயாளிகள் கொல்லப்பட்டனர். இரண்டு மருத்துவ ஊழியர்கள் உட்பட 11 பேர் காயமடைந்தனர். ஏற்கனவே ஷெல் தாக்குதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஆறு நோயாளிகளும், நோயாளிகளின் உறவினர்கள் 3 பேரும் ஆர்பிஜி தாக்குதலில் காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதலில் சமீபத்தில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட மருந்துகளின் ஒரு பகுதியும் அழிக்கப்பட்டது.





# பாதுகாப்பு வலயத்திற்குள் 26.27.28.03.2009 அன்று 179 பொதுமக்கள் படுகொலை

26.27.28.03.2009, வியாழன், வெள்ளி மற்றும் சனி ஆகிய மூன்று நாட்களுக்குள் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 179 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் குறைந்தது 76 பேர் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள். கொல்லப்பட்டவர்களில் குறைந்தது 16 கர்ப்பிணித் தாய்மார்களும் அடங்குவர். 15 வயதுக்குட்பட்ட 109க்கும் மேற்பட்ட குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். சிறீலங்கா இராணுவத்தினால் வீசப்பட்ட ஆயிரக்கணக்கான குண்டுகளில் சுமார் 45% பாதுகாப்பு வலயத்தைத் தாக்கியுள்ளன. இதற்கிடையில், காயமடைந்த சிவிலியனை ஏற்றிச் செல்வதற்காக சனிக்கிழமையன்று கப்பலில் வந்த ICRC இன் வெளிநாட்டு ஊழியர் ஒருவர், கப்பலின் ஜன்னலை சேதப்படுத்தியதால், நீண்ட தூர துப்பாக்கிச் சூட்டில் கப்பல் மோதியதில், சிறிது நேரம் தப்பினார். வெள்ளிக்கிழமை, உள்ளூர் ICRC ஊழியர் பி. சதீஸ்குமார், சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

மற்றொரு செஞ்சிலுவை சங்க (ICRC அல்லது SLRC) ஊழியரின் மனைவி வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் காயமடைந்த நோயாளிகளை மாத்தளன் மருத்துவமனையில் இருந்து மாற்றுவதற்காக வந்த ICRC கப்பல் சுமார் 950 பேரை ஏற்றிச் செல்ல முடிந்தது.

தற்காலிக மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து காயமடைந்த நோயாளிகள் வியாழன் காலை சிறீலங்கா இராணுவத்தினரினால் ஏவப்பட்ட ராக்கெட் உந்து குண்டுகள் மருத்துவமனையைத் தாக்கியதில் கொல்லப்பட்டனர்.

பாசமலர் என்ற 25 வயது கர்ப்பிணித் தாயின் அடிவயிற்றில் காயம் ஏற்பட்டதில் 7 மாதக் கரு வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டது.

வியாழன் அன்று 59 பொதுமக்களும், வெள்ளிக்கிழமை 21 குழந்தைகள் உட்பட 63 பேரும், சனிக்கிழமை 57 பேரும் கொல்லப்பட்டனர். குறைந்தது 15 வயதுக்குட்பட்ட 109 குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். அவர்களில் 31 பேர் 10 வயதுக்குட் பட்டவர்கள்.

மருத்துவ ஆதாரங்களின்படி, கொல்லப்பட்ட 16 கர்ப்பிணித் தாய்மார்களில் 9 பேர் கர்ப்பத்தின் இறுதிக் கட்டத்தில் இருந்தனர். பொக்கனை மற்றும் மாத்தளன் பிரதேசங்களிலேயே அதிகளவான கர்ப்பிணித் தாய்மார்களின் மரணங்கள் பதிவாகியுள்ளன.

வியாழன் இரவு வலைஞர்மடம் மற்றும் பொக்கனைக்கு இடையில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் தங்குமிடங்களை குறிவைத்து, வெள்ளிக்கிழமை பகல் நேரத்தில் மாத்தளன் மற்றும் பொக்கனைக்கு இடையில், சிறீலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டனர்.

ஐசிஆர்சி கப்பல் மூலம் சனிக்கிழமை 498 பேரும், வியாழன் அன்று 443 பேரும் மருத்துவமனையில் இருந்து மாற்றப்பட்டனர்.

பொக்கனைக்கும் மாத்தளனுக்கும் இடையில் உள்ள கிணற்றில் இரண்டு எறிகணைகள் தாக்கியதில் உடல்களை கழுவிக்



கொண்டிருந்த 10 இடம்பெயர்ந்த மக்கள் உயிரிழந்துள்ளனர்.

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு முழு குடும்பமும் வியாழன் அன்று ஏரிக்கரை முழுவதும் சிறீலங்கா இராணுவ நிலைகளில் இருந்து வந்த ராக்கெட் தாக்குதலில் அழிக்கப்பட்டது.

பொக்கனை - மாத்தளன் எல்லையை குறிவைத்து நடாத்திய தாக்குதலில் வலைஞர்மடத்தில் அஜந்தா அபராஜிதன் என்ற பெண் கிராம (ஜிஎஸ்) அதிகாரி வியாழக்கிழமை கொல்லப்பட்டார்.

பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கை விமானப்படையினரால் வான் தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன.







# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 88 பொதுமக்கள் படுகொலை – 31.03.2009

திங்களன்று இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களில் 70 பொதுமக்கள் உயிர்கள் பலியாகியுள்ளன, மேலும் IDP குடியிருப்புகளுடன் தற்காலிக மருத்துவமனையை இணைக்கும் சாலையில் 18 பொதுமக்களைக் பலி. கொல்லப்பட்டவர்களில் 21 பேர் மற்றும் காயமடைந்த 156 பொதுமக்களில் 31 பேர் குழந்தைகள். சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் 63 தார்பாய் குடிசைகள் அழிக்கப்பட்டன. சாலை முழுவதும் 50 கலிபர் இயந்திர துப்பாக்கியால் சுடப்பட்டதால், காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பொதுமக்கள் சிரமப்பட்டனர். கரையோரப் புள்ளியான திடலில் இருந்து ICRC கப்பலுக்கு நோயாளிகளை ஏற்றிச் செல்ல படகுகளை ஏற்பாடு செய்யும் மீன்பிடி சங்கத்தின் தொழிலாளி உட்பட நான்கு பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர்.

நோயாளிகளை ஏற்றிச் செல்வதற்கான ICRC கப்பல் கடந்த முறை துப்பாக்கிச் சூட்டில் சிக்கியதால் கரையை நெருங்கவில்லை. நோயாளிகள் மிகவும் கடினமான சூழ்நிலையில் படகுகள் மூலம் கப்பலுக்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. கப்பலில் வந்த ஐ.சி.ஆர்.சி அதிகாரிகள் தாக்குதல்கள் காரணமாக கரையை அடைய முடியவில்லை.

உயிரிழந்தவர்களில் 59 பேர் இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால், வலியஞர்மடம் ஆகிய மூன்று பிரதேசங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

வாழைஞர்மடம் - இரட்டைவாய்க்கால் இடையே எறிகணை ஒன்று சாலையில் மோதியதில் 9 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஷெல் தாக்குதல் நாள் முழுவதும் தொடர்ந்தது. சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் சாலையில் இருந்த பல குடிசைகள் அழிக்கப்பட்டன.

சாலையோரம் இருந்த 6 சிறு கடைகள் சேதமடைந்தன. கொல்லப்பட்டவர்களில் 3 பேர் இந்தக் கடைகளின் உரிமையாளர்கள். சாலையில் கொல்லப்பட்ட 18 பொதுமக்களில் ஏழு பேர் அடை யாளம் காணப்படவில்லை. அடையாளம் தெரியாத சடலங்கள் தமிழர் புனர்வாழ்வு அமைப்பின் (டிஆர்ஓ) தொண்டர்களால் அடையாளம் காண இடமாற்றம் செய்யப்பட்டன.



வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதியில் கொல்லப்பட்ட 17 பெண்கள், 9 குழந்தைகள், 1 குழந்தை மற்றும் 8 முதியவர்கள் உட்பட 39 பேர் உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டனர்.

# சிறீலங்கா இராணுவத்தின் கொத்துக் குண்டுத் தாக்குதல்களில் 45 பொதுமக்கள் படுகொலை – 31.03.2009

இலங்கை இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில் 43 பொது மக்கள் செவ்வாய்க்கிழமை பகல் முழுவதும் கொல்லப்பட்டனர். அம்பலவன்பொக்கனை மற்றும் வலைஞர்மடம் பிரதேசத்தில் இன்று காலை 2 குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் உட்பட 13 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 3 பேர் குழந்தைகள். துப்பாக்கிச் சூட்டில் 4 பொதுமக்கள் கொல்லப் பட்டனர். பாதுகாப்பு வலயத்தில் உள்ள மருத்துவ மற்றும் உதவி பணியாளர்களின் கூற்றுப்படி, நாள் முழுவதும் 120 பொதுமக்கள் காயமடைந்தனர்.

செவ்வாய்கிழமை முழுவதும் பாதுகாப்பு வலயத்திற்குள் வேறு இடங்களில் நடந்த தாக்குதல்களில் மேலும் 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

98 பொதுமக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையில் இருந்து மதியம் 12.30 மணியளவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோயாளிகளில் குறைந்தது 63 பேர் வலைஞர்மடத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் 22 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.























# ‘பாதுகாப்பு வலயத்திற்குள்’ 53 பொதுமக்கள் படுகொலை 30.03.2009

சிறீலங்கா இராணுவம் ஞாயிறு முழுவதும் தொடர்ந்து பீரங்கி, மோட்டார் மற்றும் நீண்ட தூர துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறைந்தது 53 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் சுமார் 119 பேர் காயமடைந்தனர். மாத்தளனில் குறைந்தது 17 பொது மக்களும், பொக்கனையில் 18 பேரும், வலைஞர்மடத்தில் 15 பேரும் மற்றும் வலைஞர்மடத்தில் 15 பேரும் கொல்லப்பட்டனர். பச்சைப் புல்மோட்டையில் 3பேரும். இதற்கிடையில், 298 குடம் பங்களைச் சேர்ந்த 275 குழந்தைகள் உட்பட சுமார் 1,192 பொதுமக்கள் கடந்த 5 நாட்களுக்குள் தங்கள் தங்குமிடங்களை இழந்துள்ளனர், ஏனெனில் அவர்களின் தார்பாய் குடிசைகள் சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் முற்றாக அழிக் கப்பட்டன.




# பண்டைய யாழ்ப்பாணத்தில் புராதன சமய நடைமுறைகள் –பகுதி 2

## பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

### புராதன வழிபாட்டுச் சின்னங்களும் சில பண்டைய கோயில்களும்

### வேல் வழிபாடு

யாழ்ப்பாணத்தில் கந்தரோடை அகழ்வுகளில், பெருங்கற்காலக் கலைப் பொருட்களுடன் வெண்கலத்தினாலான வேல் ஒன்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. வேல் வழிபாடு முருகக் கடவுளுடன், அவரது முக்கிய ஆயுதமாகக் கருதப்பட்ட போதிலும் பெருங்கற் பண்பாட்டுக் காலத்தில் முருக வழிபாடு யாழ்ப்பாணத்



கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுத்த வெண்கல வேல்

Image Source - ப. புஷ்பரட்ணம்

தில் இருந்ததா? என்பதை நிச்சயமாகக்கூற முடியவில்லை.

சந்திரகுப்த விக்கிரமாதித்ய மன்னனின் (கி.பி. 375-413) அவைப் புலவனான மகாகவி காளிதாசனின் குமாரசம்பவத்தில் ஸ்கந்தன் கரத்தில் வேலுடன் வர்ணிக்கப்படுகிறார். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஸ்கந்தபுராணத்தில் கையில் வேலுடன் ஸ்கந்தன் காட்சி தருகிறார். அப்புராணத்தைத் தழுவி காஞ்சிபுரத்து குமரக்கோட்டத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதிய கந்தபுராணத்தில் கையில் வேலுடன் வள்ளி - தேவயானி சமேதராய் மயிலின் மேல் அமர்ந்த கந்தன் காட்சி தருகிறார்.

ஆனாலும், கந்தனை வேலோடு இணைத்த பெருமைக்குரியவர்கள் இவர்கள் அல்ல. தமிழகத்தில் வாழ்ந்த ஆதிக் குடிமக்கள் பேணி வணங்கிய கந்தசாமி ('கந்த' என்றால் ஒஸ்ரிக் மற்றும் முண்டா மொழிகளில் 'மலை' என்று அர்த்தம். கந்தசாமி என்றால் மலைச்சாமி) கையில் வேலுடன் காட்சிப்படுத்தப்படுகிறார். தமிழகத்தின் ஆதிக் குடிமக்கள் வணங்கிய தெய்வங்களுள் கந்தசாமி எனப்படும் கந்தனும் ஒருவர்.

தமிழில் சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படை பண்டைக் காலத் தமிழரின் தனிப்பெரும் தெய்வமான முருக வழிபாட்டைப் பற்றிக் கூறும் முதல் நூல். அந்த முருகன் கையிலிருந்த ஆயுதம் வேல்தான். பின்னால் வந்த கச்சியப்பர் செய்ததெல்லாம் வட இந்திய ஸ்கந்தனையும் தமிழரின் தெய்வமான முருகனையும் ஒன்றாக இணைத்து நமக்கு 'கந்தன்' ஆக்கித் தந்ததுதான். ஆனாலும், கந்தபுராணம் சிறப்பான ஒரு சமய இலக்கியம் என்பதனை மறுக்க முடியாது.

### திரிசூல வழிபாடு

இந்துமதம் என்றொரு சமயம் ஆரம்பிப்பதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே உலகின் பல பகுதிகளில் திரிசூலத்தை ஒரு வழிபாட்டுப் பொருளாக பல சமூகங்கள் ஏற்றுக்கொண்டிருந்தன. கி.மு. 1200 ஆம் ஆண்டுகளுக்குரிய தென்னிந்திய, இலங்கையின் பெருங்கற் பண்பாட்டுப் புதைகுழிகளில் இரும்பு, செம்பு ஆகிய உலோகங்களாலான திரிசூலம், வேல் ஆகிய வழிபாட்டுப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்து மதத்தில் சிவனின் ஆயுதமான திரிசூலம் ஓர் ஆற்றல் மிக்க, பெருஞ் செல்வாக்குடைய சமயச் சின்னமாக விளங்குகிறது. அவரது முத்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றை கையில் பிடித்த திரிசூலத்தின் மும்முனைகளும்



பெருங்கற் புதையல்களில் கண்ட திரிசூலம், வேல்



திரிசூலம் பிடித்த கிரேக்கத் தெய்வம் பொஸிடொன்

பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது.

கிரேக்க இலக்கியங்களில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கையில் திரிசூலம் பிடித்த ஒலிம்பியக் கடவுளான பொஸிடொன் குறிப்பிடப்படுகிறார். கையில் திரிசூலம் பிடித்தவண்ணம் எருது வாகனத்தில் எழுந்தருளி வரும் பொஸிடொன் கடவுளுக்கும் சிவனுக்குமிடையிலுள்ள ஒற்றுமை நம்மை வியப்படைய வைக்கிறது. கிரேக்கரின் ஸீயுஸ் கடவுளும் திரிசூலம் பிடித்திருக்கிறார். ஸீயுஸ், யூரோப்பா என்ற பீனீசிய இளவரசியைக் கடத்துவதற்காக எருது உருவம் எடுத்த ஐதீகக் கதை கிரேக்க இலக்கியங்களில் இடம்பெறுகிறது.

பண்டைய அரேபியாவில் ஓமான் நாட்டில் காணப்படும் குகை ஓவியங்களில் பாறையில் பொறிக்கப்பட்ட திரிசூலங்கள் வணக்கத்திற்குரிய சின்னங்களாகக் கருதப்படுகின்றன (Overlaet, B. et



திரிசூலம் பிடித்த சிவன்

al., 2024: 126−135).

இந்து மதத்தில் பெண் தெய்வங்களான துர்க்கை, காளி இருவரும் கைகளில் திரிசூலம் ஏந்தி வருகிறார்கள். துர்க்காதேவி திரிசூலம் ஏந்தி சிங்க வாகனத்தில் வருகிறார். இதுபோலவே பண்டைய சுமேரியப் பெண் தெய்வமான இஷ்தார் கையில் வேலுடன் சிங்க வாகனத்தில் ஏறி வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திலுள்ள பல சிறிய கிராமியக் கோயில்களில் இரும்பினால் செய்யப்பட்ட திரிசூலம் ஒன்றுதான் தெய்வமாக வணங்கப்படுகிறது. சில ஊர்களில் திரிசூலம் ஆலமரத்தின் கீழ் வைத்து வணங்கப்படுகிறது. குளிக்கும் கேணிகளுக்கு அருகாமையில் காவல் தெய்வச் சின்னமாகவும் இவை நடப்பட்டிருக்கும். பண்டைய சமுதாயங்களில் சிவலிங்க வழிபாடு போன்று திரிசூல வழிபாடும் சிவ வழிபாட்டிற்கான சின்னமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதியில் ஒரு கிராமியச் சின்னமாக வழிபட்டு வந்த திரிசூலமே பின்னர் பெருங்கற் பண்பாட்டு நிவேதனப் பொருளாக வைக்கப்பட்டது என்பது சில தொல்லியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

### நந்தி – எருது வழிபாடு

உலகில் மத்திய தரைக்கடல், ஐரோப்பிய, மேற்காசிய, தெற்காசிய நாடுகளில் பல சமூகங்களில் காளை ஒரு வழிபாட்டுப் பிராணியாகக் கருதப்பட்டு வந்துள்ளது. துருக்கியில் பண்டைய அனடோலியாவில் 'கேட்டல்ஹோயக்' (Çatalhöyük) என்ற இடத்தில் கி.மு. 7000 ஆண்டுகளுக்குரிய காளைகளின் வண்ண ஓவியங்கள் அன்றைய கோயில் சுவர்களில் வரையப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களைத் தவிர காளைகளின் கபால எலும்புகளும் காளைகளின் தலைச் சிலைகளும் சுவர்களில் மாட்டி வைக்கப்பட்டுள்ளன. சில ஓவியங்களில் தாய்க் கடவுளிலிருந்து காளை மாடு பிறந்ததாகக் காட்டப்படுவது தாய்க் கடவுள் வழிபாட்டிற்கும் காளைக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

மேற்காசியாவில் சுமேரிய, இலமைற் நாகரிகங்களில் எருது கடவுளின் ஓர் அவதாரமாகக் கருதப்பட்டுள்ளது. சுமேரியத் தெய்வங்களான என்லில், என்கி என்போர் கவிதைகளில் 'புனித எருதுகளாக' வருணிக்கப்படுகிறார்கள். அவர்களின் அரச முத்திரைகளில் தெய்வங்களோடு காளைகளும்



யாழ்ப்பாணத்தில் உடுத்துறை என்ற கிராமத்தில் கிணறு தோண்டிய போது நிலத்திலிருந்து நான்கு அடி ஆழத்தில் கண்டெடுத்த நந்தியின் பளிங்குக் கற்சிலை

Image Source - ப. புஷ்பரட்ணம்

காணப்படுகின்றன.

சிந்துவெளி அகழ்வுகளில் கி.மு. 3000 ஆண்டுகளுக்குரிய ஏரி கொண்ட எருதுகளின் முத்திரைகளும் சுடுமண் உருவங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்துமதப் புராணங்களில் சிவனின் வாகனமாக எருதைக் குறிப்பிடுவது இப்பண்பு சிந்துவெளிப் பண்பாட்டிலிருந்து உதயமானதாகக் கருத இடமுள்ளது. பின்னர் வந்த இந்தோ - ஆரியர்கள் பசுவைத் தெய்வ அம்சமாகக் கருதினார்களே ஒழிய எருதை அல்ல.

தமிழகத்தில் உழவர் திருநாளாகிய தைப்பொங்கலைக் கொண்டாடிய மக்கள் ஆண்டு முழுவதும் வயலிலும் வீட்டிலும் உழைத்த எருதுகளுக்கு 'மாட்டுப் பொங்கல்' வைத்துக் கொண்டாடினார்கள்.



யாழ்ப்பாண அரசின் அதிகாரபூர்வச் சின்னமான நந்திக் கொடி

நீண்டகாலமாக யாழ்ப்பாண நகரங்களில் இருந்து ஆட்சி புரிந்த அரசர்கள் தாங்கள் வெளியிட்ட நாணயங்களில் தங்களது அரசின் சின்னமாக எருதின் உருவங்களை வெளியிட்டார்கள். ஆரம்பகால சதுர வடிவ நாணயங்களில் எழுந்து நிற்கும் எருதையும், கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் வெளிவந்த வட்ட வடிவ நாணயங்களில் படுத்திருக்கும் காளையையும் காணலாம். யாழ்ப்பாண இராச்சியத்தின் அதிகாரபூர்வமான நந்திக் கொடியில் படுத்திருக்கும் காளையின் உருவம் பதியப்பட்டுள்ளது.

### கந்தரோடை வெண்கலத் தெய்வ உருவங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வுகளில் மூன்று முற்கால வெண்கலத் தெய்வ உருவங்களையும், ஒரு பித்தளை உருவத்தையும் கண்டெடுத்தார். அவை: விநாயகரின் இரு வெண்கல உருவங்கள், ஹனுமானின் ஒரு வெண்கல உருவம், பாலகிருஷ்ணனின் ஒரு பித்தளை உருவம். இவற்றைப் பற்றி விவரமாக அவரது 'இலங்கையில் இந்து வெண்கலப் படிமக்கலை மரபுகள்' என்ற நூலில் கூறியிருக்கிறார் (கிருஷ்ணராசா, செ. 2008: 55-67).

பெருங்கற்கால சின்னங்களினிடையே கண்டெடுத்த விநாயகரின் உருவம் முற்கால வெண்கலத்தினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த உருவத்தில் விநாயகரின் முகம், இரு காதுகள் நீண்ட துதிக்கை ஆகிய உறுப்புகள் மட்டுமே கிடைத்திருக்கின்றன. உடலின் மிகுதிப்பகுதி கிடைக்கவில்லை. இது விநாயகக் கடவுளின் ஆரம்பகாலச் சிலையாகக் கருதப்படுகிறது.

இரண்டாவது விநாயகர் உருவம் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்த கற்பொக்கணை என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டது. வழுக்கை ஆறு ஆதியில் கந்தரோடையிலிருந்து மேற்குக் கடலுக்குச் சிறு படகுகள் சென்றுவந்த நீர்வழியாகக் கருதப்படுகிறது. 9 செ.மீ. உயரமும் 5 செ.மீ. அகலமும் கொண்ட இவ்விநாயகரின் வெண்கல உருவம் ஒரு சதுரமான பீடத்தின் மேலுள்ள தாமரைப் பீடத்தின் மேல் நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உருவ அமைப்பு, அணிகலன்கள், இரட்டைப் பீடம் என்பன இவற்றை இந்தியச் சிற்பங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. இது யாழ்ப்பாண வெண்கலக் கொல்லர்களின் தனித்துவமான கைவினைத் திறனைக் காட்டி நிற்கிறது (கிருஷ்ணராசா, 2008: 59).



ஹநுமானின் வெண்கல உருவம்



விநாயகரின் ஆரம்பகால உருவம்

இராமரின் தூதுவனான ஹனுமான் பறப்பது போன்ற நிலையிலுள்ள வெண்கலச் சிற்பம் 6 செ.மீ. விட்டம் கொண்ட வட்ட வடிவான ஒரு சட்டகத்தினுள் காணப்படுகிறது. கைகளை விரித்த வண்ணம் தனது இடப்பக்கத்தை நோக்கிப் பறப்பது போல சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் அணிந்திருக்கும் உடை, அணிகலன்கள், சிற்பத்தின் தோற்றம் என்பன கி.பி. மூன்றாம் - ஐந்தாம் நூற்றாண்டுகளின் ஆந்திரக் கலை மரபை நினைவுபடுத்துகின்றன (கிருஷ்ணராசா, 2008: 62).

கற்பொக்கணை என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட மற்றொரு செப்பு உருவம் கிருஷ்ண பகவானின் இளவயதுத் தோற்றமான பாலகிருஷ்ணனின் உருவமாகும். தவழும் குழந்தையான கிருஷ்ணர் இடது கரத்தை நிலத்தில் ஊன்றி எழுந்து நிற்க முயற்சிப்பது போல உருவம் அமைக்கப்பட்டுள்ளது. அவரது



பாலகிருஷ்ணனின் செப்பு உருவம்



பாலகிருஷ்ணனின் பின்புறத் தோற்றம்

தலையில் கரண்ட வளையங்களைக் கொண்ட உயரமான தலைமுடி காணப்படுகிறது. காதுகளில் காதணிகளும், கழுத்தில் மூன்று சங்கிலிகளும் அணிந்துள்ளார். இடுப்பில் அரைஞாணும், கரங்களில் காப்புகளும், கால்களில் கால் சிலம்புகளும் காணப்படுகின்றன. இந்த உருவச் சிலை கி.பி. 10 - 11 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியதாகக் கணிக்கப்படுகிறது (கிருஷ்ணராசா, 2008: 63-64).

இச்சிலைகள் யாவும் இன்று யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் வடகரையில் காங்கேசன்துறைக்கு அடுத்து மேற்குப் பக்கமாகக் காணப்படும் கிராமம் கீரிமலை. கீரிமலை

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203



கடலுக்குள் துருத்திக் கொண்டிருக்கும் கீரிமலைப் பாறையின் உடைந்த பகுதி



கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் கோயிலின் இன்றைய தோற்றம்

என்ற பெயர் அந்தக் கிராமத்திற்கும் அங்கே கடற்கரையோரமாகக் காணப்படும் புனித நீரூற்றுக்கும் வழங்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் 'கீரிமலை' என்ற பெயர் இந்த நீரூற்று இருக்கும் இடத்திற்கு அரை மைல் கிழக்கே கடலுக்குள் துருத்திக்கொண்டிருக்கும் சுண்ணாம்புக் கற்பாறைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. சமஸ்கிருதத்தில் இது நகுலகிரி என அழைக்கப்பட்டது. இந்தப் பாறையின் 'கீரிமலை' என்ற பெயரே பின்னாளில் இக்கிராமத்தின் பெயராகவும் ஆனது.

கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப்பாறை கடலுக்குள் நீண்ட தூரம் வரை துருத்திக்கொண்டிருந்ததாகவும், இப்பாறையின் உச்சியில் வட்ட வடிவக் கோபுரத்துடன் திருத்தாம்பலேஸ்வரர் சிவன் கோயில் இருந்ததாகவும், காலப்போக்கில் கடல் அரிப்பினால் இந்தப் பாறையும் அதன் மேலிருந்த கோயிலும் கடலில் மூழ்கிவிட்டதாகவும் மரபுவழிக் கதைகள் உள்ளன. இப்பாறைக்கு எதிரே கடலின் அடியில் வெகுதூரம் பரவிக் கிடக்கும் பாறைக்கற்கள் இந்த ஐதீகத்திற்கு வலுச்சேர்க்கின்
றன (Thiagarajah, S., 2012: 12).



கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மாவிட்டபுரம் கந்தன் ஆலயக் கோபுரத்தின் இன்றைய தோற்றம்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பாசுபத சைவத்தை ஆரம்பித்து வைத்தவர் புனித லிகுலீசர். லிங்க புராணத்தில் (அத்தியாயம் 23) சிவன் தனது 28 ஆவது பிறப்பில் 'நகுலீசர்' என்ற பெயர் கொண்ட ஒரு துறவியாகப் பிறந்தார் எனக் கூறப்படுகிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் லிகுலீசரின் பாசுபத சைவ ஆதரவாளர்கள் அழிந்துபோன திருத்தாம்பலேஸ்வரம் கோயிலைத் திரும்பவும் கட்டியெழுப்பியபோது, சிவனின் மாற்றுப் பெயரான நகுலீசரை நினைவுபடுத்தி இந்த ஆலயத்திற்கு நகுலேஸ்வரம் எனப் பெயரிட்டதாக ஐதீகக் கதை உள்ளது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கதிரமலையிலிருந்து (கந்தரோடை) ஆட்சி புரிந்த உக்கிரசிங்கன் என்ற அரசன் இக்கோயிலைத் திருப்பிக் கட்டியதாக யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாண வைபவமாலை, தக்ஷிண கைலாசபுராணம் ஆகிய நூல்களில் இக்கோயில் பற்றிய தகவல்கள் காணக்கிடக்கின்றன. இக்காலத்தில் இக்கோயில் கீரிமலைச் சிவன் கோயில் என அழைக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலுமிருந்தும் பக்தர்களும், யாத்திரிகர்களும், பார்வையாளர்களும் திருவிழாக் காலங்களிலும், முக்கியமான மத சம்பந்தமான சமயங்களிலும், சாதாரண நாட்களிலும் இந்த ஆலயத்திற்கு வருகை தந்த வண்ணமே இருக்கிறார்கள். இறந்தவர்களுக்கான சபிண்டீகரண கிரியைகள் செய்வதற்கு உகந்த இடமாக கீரிமலை விளங்குகிறது. இங்கு புனிதத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும் அஸ்திசஞ்சாயனம் கதிர்காமம், கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்களில் மேற்கொள்ளப்படும் பூசைகளுக்கு இணையானதாகக் கருதப்படுகிறது (Celliah, Y., 2006). ஆடி அமாவாசை தினங்களில் யாழ்ப்பாண நாட்டின் ஆண்களில் பெரும்பாலானோர் தங்களின் முன்னோர்களுக்கான சடங்குகளை மேற்கொண்டு புனித நீராடுவதற்காக இந்தத் தலத்திற்கு வருவார்கள்.

கி.பி. 1621 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் இந்த மண்ணின் இந்து ஆலயங்களின் அரும்பொருள் செல்வங்களை அபகரித்துக்கொண்டு அவற்றை முறையாக இடித்துத் தள்ளினர். நகுலேஸ்வரம் ஆலயத்தை நோக்கி போர்த்துக்கேய இராணுவத்தினர் வருகிறார்கள் என்பதை அறிந்த கோயில் தலைமைப் பூசகரான பரசுபாணி ஐயர், கோயிலின் ஆதிமூலத்தில் இருந்த தங்கத்தினாலான சிவ, பார்வதி விக்கிரகங்களையும் கோயில் ஆபரணங்களையும் ஒரு வேட்டியினுள் சுற்றி மடித்து, அதைக் கோயில் கிணற்றினுள் போட்டுவிட்டு, அதற்கும் மேலே பல அடுக்குகள் கடற்கரை மணலைப் போட்டுவிட்டு, தலைமறைவாக மறைந்துவிட்டார். போர்த்துக்கேய அதிகாரிகள் பல ஆண்டுகளாகத் தேடியும் ஆலயத்தின் ஆபரணங்களையோ பரசுபாணி ஐயரையோ கண்டுபிடிக்க முடியவில்லை (Muthuthambipillai, A., 1915: p. 76).

இலங்கையில் டச்சுக்காரரின் (ஒல்லாந்தரின்) ஆட்சியைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பிரித்தானியர், போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இந்துக் கோயில்களைத் திரும்பவும் கட்டி, மக்களின் கிராமியக் கோயில் வழிபாடுகளைத் தொடர்வதற்கு அனுமதி அளித்தார்கள். இலங்கையில் இந்துமதம் மற்றும் தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்கு இயக்குநராக இருந்த ஆறுமுக நாவலரும் அவரது சகாக்களும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால், பல பயனாளிகளினதும் கொடையாளர்களினதும் பண உதவியோடு இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆனி மாதம் கும்பாபிஷேக விழாவுடன் ஆரம்பிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி மாலை நான்கு மணியளவில் பல நூறு பக்தர்கள் கூடியிருந்து அங்கே திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், இந்த ஆலயம் இலங்கை விமானப் படையின் கொடுமையான வான் தாக்குதலுக்கு உள்ளானது. வானத்திலிருந்து அடுக்கடுக்காகப் போடப்பட்ட மூன்று பெரிய குண்டுகள் கோயிலின் கோபுரம், விமானம், பிரகாரம் ஆகியவற்றை வெடித்துச் சிதறச் செய்தன. நூற்றுக்கணக்கான பக்தர்கள் தலத்திலேயே உயிரிழந்தார்கள்



மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தின் வெளி மண்டபம்



கோயிலின் உள்மண்டபத்தின் இன்றைய தோற்றம்

Image Source - Menaka Aravinda & Danith Wickramasinghe (Serendib 2012)

www.sangathamil.ca

மேலும் பலர் அங்கவீனர்களாக ஆனார்கள் (Neminathan, M., 2004).

கடந்த பல ஆண்டுகளாக இக்கோயிலின் பெருமை பாடும் தலபுராணங்களும் வரலாற்று நூல்களும் வெளிவந்துள்ளன. அவற்றுள் முக்கியமானவை: மாதகல் ஏரம்ப ஐயர் (1847 -1914) எழுதிய நகுலேசர் புராணம், நீர்வேலி எஸ். சிவப்பிரகாசம் எழுதிய நகுலேஸ்வர மான்மியம், சுன்னாகம் குமாரசாமிப் புலவர் எழுதிய நகுலேசர் ஊஞ்சல், கட்டுவனூர் மயில்வாகனப் புலவர் (1875-1919) எழுதிய நகுலேசுவரர் வினோத விசித்திர கவிப்பூங்கொத்து, கட்டுவனூர் பண்டிதர் நமசிவாய தேசிகர் எழுதிய நகுலேசர் திருவந்தாதி என்பனவாகும்.

சமீபகாலங்களில் வெளிநாடுகளில் வாழும் பல நல்லுள்ளங்களின் உதவியோடு வரலாற்றுப் பெருமை வாய்ந்த இக்கோயில் மீண்டும் புனருத்தாரணம் பெற்றுள்ளது.



நல்லூர்க் கந்தசாமி கோயிலின் இன்றைய தோற்றம்

## முருக வழிபாடு



நல்லூர்க் கந்தசாமி கோயிலின் உள்மண்டபத்தில் முருகக் கடவுள் தனது சகோதரனான விநாயகர், மற்றும் வள்ளி-தேவயானி சமேதராய் எழுந்தருளி வரும் காட்சி

வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலிருந்தே தமிழ் மக்களுக்கு மிகப் பிடித்தமான, பிரபலமான தெய்வமாக விளங்கியவர் முருகக் கடவுள். இன்றுவரை தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வாழும் பெரும்பாலான தமிழர்களின் சமயக் கோட்பாடுகளிலும் பாரம்பரியச் சிந்தனைகளிலும் நடைமுறையிலும் முருக வழிபாடு ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இத்தெய்வத்திற்கு கந்தசுவாமி, சுப்பிரமணியர், கார்த்திகேயர், குமாரசுவாமி, ஆறுமுக சுவாமி, சண்முகன், வேலாயுதன் ஆகிய மாற்றுப்பெயர்கள் உள்ளன. இந்தப் பெயர்களில் 'கந்த' என்றால் புராதன ஒஸ்திரலோயிட் மக்கள் பேசிய ஒஸ்ரிக் மற்றும் முண்டா மொழிகளில் 'மலை' என்று அர்த்தம். அந்த மொழிகளில் 'கந்தசுவாமி' என்றால் மலைத் தெய்வம் என்று பொருள்படும்.

புராணங்களிலும் உருவச் சிலைகளிலும் சித்திரங்களிலும் இளமையான, வனப்புமிக்க, அழகான, ஞானம் மிகுந்த தெய்வமாக இவர் சித்தரிக்கப்படுகிறார். தமிழ் மொழியில் 'முருகு' என்றால் எல்லையற்ற அழகு என அர்த்தம். கலை வடிவங்களிலும் இலக்கியங்களிலும் முருகன் அதீத அழகனாகவே வர்ணிக்கப்படுகிறார்.

வடமொழிப் புராணங்களிலும் காளிதாசனின் குமாரசம்பவம் காவியத்திலும் 'ஸ்கந்தன்' சிவன்-உமா தம்பதிகளின் மகனாகக் கூறப்படுகிறார். இந்திரனின் மகளான தேவசேனையும் குறவர்களின் மகளான வள்ளியும் அவரது மனைவியர்கள். மயிலும் யானையும் அவரது வாகனங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.



நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா காணவந்த – அலை அலையாகத் திரளும் பக்தர் கூட்டம்

Image Source - Hindu Pad

தமிழ் மக்களின் பாரம்பரியத்தில் தமிழகத்தின் பாதுகாவல் தெய்வம் முருகன் தமிழ் மொழியினதும் தமிழர் பண்பாட்டினதும் புரவலர் முருகன். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பல கோயில்களில் பல வழிகளில் பல வகைகளில் முருக வழிபாடு அன்புடனும் பக்தியுடனும் பரவசத்துடனும் நடைபெற்று வருகிறது (Pathmanathan, S., 2006: 338).

முருக வழிபாடு பல வகையான பாரம்பரியங்களை உள்ளடக்கியுள்ளது. சேர் பொன்னம்பலம் அருணாசலம் அப்பாரம்பரியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்:

'அவ்வழிபாட்டு முறைகளில் பூர்வீக நிலையிலிருந்து முன்னேற்றமடைந்த உயர்தர நிலைகள்வரை காண முடிகிறது. அர்ச்சகர்கள் விரிவான சடங்குகளுடனும் பூசைகளுடனும் வழிபடுவார்கள் பக்தர்கள் பக்திப் பாடல்களுடனும் திருப்புகழ் பாடியும் தொழுவார்கள் வேடர்கள் பழங்குடி நடனமாடி அவரை வரவழைப்பார்கள் புலையர்கள் ஊனும் இரத்தமும் நிவேதனமாக அளிப்பார்கள் ஞானிகள் அமைதியான தவத்தில் உயர்வான பரம்பொருள் சுப்பிரமண்யராக அவரை வணங்குவார்கள். மனிதர்களிடத்தில் கொண்ட அன்பினால் இளமையும் ஞானமும் கொண்ட கடவுளாகக் காட்சி தருவார் கொடுமையான அசுரரை அழிக்க போர்க்கோலம் கொண்ட வீரனாகப் புறப்படுவார் அவரது பக்தர்களுக்காக என்றும் எப்போதும் வற்றாத மென்மையான அழகனாகச் சேவை புரிவார்' (Arunachalam, P., 1937: 110, 132).

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்

**எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# மொசாட்டின் துல்லியமான உளவு தாக்குதல்: இஸ்ரேலின் அதிரடியால் வீழ்ந்த ஈரான் தலைமை!

ஜங்கரன் விக்கினேஸ்வரா-

02.03.2026

கொமேனியின் மறைவை ஈரான் அரசு தொடக்கத்தில் மறைக்க முயன்றாலும், மொசாட் வெளியிட்ட செய்மதி (Compound Satellite) படங்கள் கள உண்மையை அப்படியே வெளிப்படுத்தின. இதை தொடர்ந்தே ஈரான் அரசு கொமேனி மறைவை உறுதி செய்தது.

மொசாட் உளவு அமைப்பின் நுண்ணிய துல்லியமான தாக்குதலால் கொமேனியின் பாதுகாப்பு வளையத்துக்குள் உள்வேலை மூலமே குண்டு வீசி அவரை குடும்பத்துடன் அழித்துள்ளது. உலக வரைபடத்தில் ஒரு சிறிய புள்ளி போன்ற நாடு தான் இஸ்ரேல். ஆனால், அதன் உளவு அமைப்பான மொசாட் (Mossad) நினைத்தால், உலகின் எந்த மூலையிலும் இருக்கும் எதிரியை அழிக்க முடியும் என்பதற்கு இது மற்றுமொரு சாட்சியாக ஈரானின் உச்ச தலைவர் கொமேனி மீதான தாக்குதல் அமைந்துள்ளது.







**இன்றைய பேசுபொருளாக உலகளவில் இருப்பது, கொமேனியின் கோட்டைக்குள் புகுந்து மொசாட் போட்ட திட்டம் எப்படி வெற்றி பெற்றது என்பதே. ஈரானின் இராணுவ வளாகங்கள் மற்றும் அணுசக்தி மையங்களுக்குள் அமைதியாக நுழைந்து தகவல்களை மொசாட் சேகரித்து வந்தது. இந்த நடவடிக்கைக்கு இஸ்ரேல் வைத்த பெயர் 'உறுமும் சிங்கம்' என்பதாகும். இந்த நுண்ணிய நடவடிக்கைக்கு மொசாட் உளவு அமைப்பு கையாண்ட வழிமுறைகள் குறித்து விரிவான தகவல்கள் இதுவரை வெளிவரவில்லை**

கொமேனி தங்கியிருந்த பாதுகாப்பு பிரதேசம் என்பது சாதாரண இடமல்ல. அது ஒரு இரும்புக்கோட்டை. அந்தப் பாதுகாப்பு வளையத்தை மொசாட் எப்படி உடைத்தது என்பது பற்றி இப்போது பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சில மாதங்களாகவே, ஈரானின் இராணுவ வளாகங்கள் மற்றும் அணுசக்தி மையங்களுக்குள் அமைதியாக நுழைந்து தகவல்களை மொசாட் சேகரித்து வந்தது. இந்த நடவடிக்கைக்கு இஸ்ரேல் வைத்த பெயர் உறுமும் சிங்கம் (ரோரிங் லயன் Roaring Lion) என்பதாகும். இந்த நுண்ணிய நடவடிக்கைக்கு (Micro Achievement) மொசாட் உளவு அமைப்பு கையாண்ட வழிமுறைகள் குறித்து விரிவான தகவல்கள் இதுவரை வெளிவரவில்லை.

ஆயினும் உள்ளிருந்து வேலை செய்த உளவாளிகள் ஈரான் இராணுவத்தின் (IRGC) மிக உயர்மட்டத்திலிருந்தே சிலரைத் தனது பக்கம் மொசாட் கைவசப்படுத்தியது. கொமேனி எப்போது பாதுகாப்பு சுரங்கப் பாதைக்குச் செல்வார், அவரது குடும்பத்தினர் எப்போது அங்கு வருவார்கள் என்ற துல்லியமான நேரத்தைக் கொடுத்ததே இந்த உள்ளூர் உளவாளிகள் தான் என்கிறார்கள்.

அத்துடன் ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகளை (Air Defense Systems) ஒரே நேரத்தில் செயலிழக்கச் செய்தது மொசாட்டின் "சைபர்" பிரிவு. இதனால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் போர் விமானங்கள் உள்ளே நுழைந்தது கூடத் தெரியாமல் ஈரான் இராணுவம் எதிர் தாக்குதலை செய்ய முடியாமல்



போயுள்ளது என்று கூறப்படுகிறது.

இதேவேளை டெஹ்ரானில் தாக்குதல் நடந்த சில நிமிடங்களிலேயே, மொசாட் தனது அதிகாரப்பூர்வ டெலிகிராம் சேனலில் ஈரானிய மக்களுக்கு ஒரு செய்தி அனுப்பியது. நாங்கள் உங்கள் பக்கம் இருக்கிறோம், அரசுக்கு எதிராகப் புரட்சி செய்யுங்கள் என்று அறிவுறுத்தியது. உடனடியாக இது ஈரானிய உளவுத் துறையைக் குழப்பத்தில் ஆழ்த்தியது என்பதும் உண்மையே.

## துல்லியமான ஏவுகணை தாக்குதல்:

சில உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் படி கொமேனியின் இல்லத்தின் ஜன்னல் வழியாகப் பாய்ந்து செல்லும் அளவுக்குத் துல்லியமான ஏவுகணைகளை மொசாட் வழிகாட்டுதலின்படி இஸ்ரேல் ஏவியது. குறிப்பாக, கதிரியக்கக் கழிவுகளை அழிக்கும் திறன்கொண்ட மேக்னடிக் குண்டு இரகசியங்களையும் மொசாட் ஏற்கனவே சோதித்திருந்தது.

இஸ்ரேலிய இராணுவத்தின் முக்கிய உளவுப் பிரிவான மொசாட்டில் "கிடோன்" (Kidon) என்றொரு தனிப் பிரிவு உண்டு. இதன் பொருள் "ஈட்டி" (Bayonet) எனப்படும். இந்தப் பிரிவைச் சேர்ந்த உளவாளிகள் தான் கொமேனியின் நடமாட்டத்தைக் கண்காணிக்கத் தெஹ்ரான் நகர வீதிகளில் மாறுவேடத்தில் சுற்றியிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஈரான் அணு விஞ்ஞானி ஃபக்ரிசாதேவை, செயற்கைக்கோள் மூலம் இயக்கப்பட்ட இயந்திரத் துப்பாக்கியால் மொசாட் 2020ஆம் ஆண்டில் தீர்த்துக்கட்டியது நினைவிருக்கலாம். அதே போன்ற ஒரு அதிநவீனத் தொழில் நுட்பத்தைத்தான் இப்போதும் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

## ஈரான் ஆட்சி கட்டமைப்பை சிதைத்தல்:

தெஹ்ரானில் நடந்த தாக்குதல் ஈரான் நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பை சிதைக்கும் முயற்சி என்றும் கூறப்படுகிறது. அமெரிக்கா இஸ்ரேல் இணைந்து தெஹ்ரான் மற்றும் பிற முக்கிய நகரங்களில் உள்ள இராணுவ மற்றும் அணுசக்தி கட்டமைப்புகளை குறிவைத்து முன்கூட்டியே தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் ஈரானின் ஏவுகணை சேமிப்புக் கிடங்குகள், கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள், பாதுகாப்பு அமைச்சக வளாகங்கள், அணுசக்தி ஆராய்ச்சி மற்றும் செறிவூட்டல் நிலையங்கள் ஆகியவை அழிக்கப்பட்டுள்ளன என்று மேற்குலக வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முக்கியப் போர் நடவடிக்கைகள் தொடங்கியிருப்பதை உறுதிப்படுத்தி, அமெரிக்காவின் வெளிப்படையான இலக்குகளாக ஈரானின் ஏவுகணை உற்பத்தித் திறனைச் சிதைத்தல், கடற்படை இயக்கங்களை முடக்குதல், புரட்சிகர காவல் படையின் வலையமைப்பைத் தகர்த்தல், அணு ஆயுத மேம்பாட்டைத் தடுத்தல் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால் மறைமுக இலக்குகள் வேறாக இருக்கலாம். ஈரான் அரச அதிகார மையத்தின் கட்டளைத் தொடரைத் துண்டித்து ஆட்சிக் கட்டமைப்பை அழுத்தத்தில் தள்ளுவது என முடிவு செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## ஈரானின் உளவு பலவீனம்:

மொசாட் உளவுத்துறையின் மிகவும் நவீனமான கண்காணிப்பு அமைப்பை ஈரான் அரசால் தடுக்க இயலவில்லை. நேரடியாக உளவாளிகள் அளித்த தகவலாக இருக்கலாம். ஈரானிய தனி நபர்கள் குறித்து தொழில்நுட்ப முறையில் கண்காணித்ததன் மூலம் கிடைத்திருக்கவே அதிக வாய்ப்புள்ளது.

கடந்தாண்டு ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரில் ஈரானின் அணுசக்தி திட்டத்துடன் தொடர்புடைய விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகளை இஸ்ரேல் குறிவைத்தது. அப்போது, தனிநபர்களின் நகர்வுகளை அறிய அவர்களின் தொலைத்தொடர்பு மற்றும் மொபைல்போன் சாதனங்களை ஊடுருவியதாக கூறப்

படுகிறது.

சில சமயங்களில் முக்கிய அதிகாரிகளுடைய மெய்க்காப்பாளர்களின் நகர்வுகளை கண்காணிப்பதும் அடங்கும். நீண்ட காலமாக இவ்வாறு தகவல்களைச் சேகரிக்கும் போது, வழக்கமான நடத்தை மற்றும் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியும். இதன்மூலம், அவர்களின் நடவடிக்கைகளை முன்கூட்டியே கணிக்கவும், பலவீனமான தருணங்களை கண்டறியவும் முடியும்.

ஈரான் தனது எதிரிகள் அதிஉயர் தலைவரைப் பின்தொடர்வதை அறிந்திருந்தது. அடுத்தடுத்த மாதங்களில் இந்த பலவீனங்களை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்ய ஈரான் தவறியது பாதுகாப்பு மற்றும் உளவுத் தகவலை தடுப்பதில் ஈரானின் தோல்வியையோ அல்லது புதிய கண்காணிப்பு வழிகளைக் கண்டறிய அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தொடர்ந்து தங்கள் உத்திகளை மாற்றிக் கொள்ளும் திறனையோ குறிக்கிறது.

## மொசாட்டும் சிஐஏயும் :

அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்த மொசாட் நுண்ணிய தகவல்கள் மூலமாக இந்த காரியங்களை சாதித்துள்ளது. அமெரிக்காவின் CIA மற்றும் பென்டகனுடன் இணைந்து ஆபரேஷன் எபிக் ஃபியூரியின் ஒரு பகுதியாகச் செயல்பட்டது. அதாவது இராஜதந்திரம் தோல்வியுற்ற இடத்தில், இரகசியத் தாக்குதல் தொடங்குகிறது என்பதே இஸ்ரேலின் திட்டம் ஆகும்.



சனிக்கிழமை பெப்ரவரி 28, 2026 அன்று ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில், ஈரானிய இராணுவத்தின் உயர்மட்டத் தலைவர்கள் கொல்லப்பட்டதை ஈரானிய அரசு ஊடகங்கள் மற்றும் சர்வதேச ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்தத் தாக்குதல், ஈரானிய அதியுயர் தலைவர் அயத்துல்லா அலி கொமேனி அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட பாதுகாப்புக் குழுக் கூட்டத்தை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் அயத்துல்லா அலி கொமேனியும் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




ஈரானின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான (Islamic Republic News Agency (IRNA) மற்றும் Tasnim News Agency இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் பல தளபதிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், அவர்களின் விவரங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை.

இஸ்ரேலின் உறுமும் சிங்கம் நடவடிக்கையில் ஈரானின் உயர்மட்டத் தளபதிகள் பலர் கொல்லப்பட்டதை ஈரானிய அரச ஊடகமான IRNA உறுதி செய்துள்ளது. கொல்லப்பட்ட முக்கிய தலைவர்களில் ஈரானிய ஆயுதப்படைகளின் தலைமைத் தளபதி அப்துல் ரஹீம் மௌசவி என்பவர் முக்கியமானவர்.

அத்துடன் ஈரானின் பாதுகாப்பு அமைச்சர் அஜீஸ் நசீர்சாதே, இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் தரைப்படைத் தளபதி முகமது பக்பூர் (Islamic Revolutionary Guard Corps IRGC) அதியுயர் தலைவரின் பாதுகாப்பு ஆலோசகரான அலி ஷாம்கானி ஆகியோர் கொல்லப்பட்டனர்.



இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக, ஈரான் தற்போது இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது.





# ஈரான் தரைவழித் தாக்குதலில் குர்திஸ் படை! அமெரிக்காவால் மீண்டும் குர்துக்கள் பலிக்கடா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

06.03.2026

ஈரானின் அணுசக்தி கனவை நசுக்கி, அமெரிக்காவிற்கு தரை வழியாக படை நகர்த்த குர்திஷ் வீரர்கள் முன்னேறி வருகிறார்கள் என அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் பலிக்கடாவாக குர்திஷ் :



ஈரானில் சுதந்திரம் வேண்டி, துணிச்சலாக தரை நடவடிக்கையில், ஆயிரக்கணக்கான குர்திஷ் (Kurdish) பெஷ்மெர்கா போராளிகள் ஈராக்கிலிருந்து வடமேற்கு ஈரானுக்கு எல்லையைத் தாண்டி நுழைந்துள்ளனர். ISIS இஸ்லாமிய அரசுடன் போராடி கலிபா கனவுகளை நொறுக்கி, உலகை திரும்பிப் பார்க்க வைத்த அச்சமற்ற குரதிஷ் வீரர்கள் இவர்கள்தான். இப்போது அவர்கள் ஈரானின் படை பிரிவுகளை முறியடித்து, மூலோபாய நிலத்தைக் கைப்பற்றி முன்னேறி இருக்கிறார்கள் என்று அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரானின் பாலிஸ்டிக் ஏவுகணை சாம்ராஜ்யம் மற்றும் அணுசக்தி திட்டத்திற்கு எதிராக ஒரு பெரிய போரை நடாத்தும் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் உண்மையான உதவியை குர்திஷ் படைகள் வழங்குவார்கள் என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். அமெரிக்க உளவுத்துறை மற்றும் இஸ்ரேலிய விமானங்கள் மூலம் பாதுகாப்பு வழியை தெளிவுபடுத்தியுள்ள நிலையில், குர்திஷ் படைகள் தரையில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈரானின் ஒடுக்கப்பட்ட மில்லியன் கணக்கான குர்திஷ் மக்கள் இறுதியாக தங்கள் சொந்த நாட்டின் தலைவிதியை மாற்ற முயற்சிக்கின்றனர் என்றும் டிரம்ப் கூறியுள்ளார். குர்திஷ்தானின் குர்திஷ் சிங்கங்களுக்கு நன்றி. நீங்கள் உங்கள் சொந்த மக்களை மட்டும் பாதுகாக்கவில்லை, ஒரு கொடூர ஆட்சியை, பேரழிவு அச்சுறுத்தல்களில் இருந்து காப்பாற்ற உதவுகிறார்கள் என்று அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

## தரை தாக்குதலில குர்திஷ் படை:

ஈரானில் அமெரிக்க படைகள் தரை தாக்குதலை உடனடியாக செய்ய தயாராக இல்லாத நிலையில், குர்திஷ் படையினர் தரை தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனர். இவ்வாறு குர்திஷ் படைகளை முன்னணியில் களமிறக்கி அமெரிக்காவுக்காக போர் செய்வது இரண்டாவது தடவையாகும்.

சிரியாவில் இஸ்லாமிய அரச பயங்கரவாதத்தை எதிர்த்து போரிட்ட குர்திஷ் படைகளை அமெரிக்க அண்மையில் கைவிட்டு சென்றது. தற்போது ஈரானில் தரை தாக்குதலுக்கு குர்திஷ் படையினரை பயன்படுத்தி, மீண்டும் பலிக்கடாவாக்க அமெரிக்க திட்டமிட்டுள்ளது.

## நாடற்ற குர்திஷ் மக்கள்:

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர். ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக்குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.









ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப்பட்டார்கள்.

ஈரானுக்கு எதிராக தரை நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கவால் பயன்படுத்தப்படும் குர்திஷ் இனத்தினரின் தனி நாட்டினை உருவாக்கும் முயற்சியை அமெரிக்கா தனது தேவைக்காக பயன்படுத்துவதுடன், குர்திஷ் இயக்கங்களுக்கு ஆயுத பயிற்சி, நிதி வழங்குதல் போன்றவற்றினை சிஐஏ மேற்கொண்டு வருவதனால் அமெரிக்காவின் கொத்தடிமைகளாக தொடர்ந்து உள்ளனர்.

2003 ஈராக்கில் சதாம் ஹுசைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொண்டபோது, குர்திஷ் போராளிகள்



அமெரிக்காவுக்கு வழங்கிய பங்களிப்பு பிரதானமானது.

அதுபோல் 2011 இருந்து சிரியாவில் பசர் அல்-அசாத்தின் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் குர்திஷ் போராளிகள் அமெரிக்காவினால் களம் இறக்கப்பட்டனர்.

அதன் பின்னர் 2014 க்கு பின்பு சிரியாவில் இஸ்லாமிய அரச இயக்கத்துக்கு எதிராக குர்திஷ் இயக்கத்தினர் அமெரிக்காவினால் பயன்படுத்தப்பட்டனர். ஆனாலும் இதுவரையில் அமெரிக்காவினால் குர்திஷ்களுக்கான தனி நாட்டினை அமைத்துக் கொடுக்க முடியவில்லை.
தற்போது ஈரானுக்கு எதிராக அமெரிக்கா - இஸ்ரேல் ஆரம்பித்துள்ள போரில் இவ்விரு நாடுகளும் எதிர்பார்த்த இலக்கினை இதுவரை அடைய முடியவில்லை. ஈரானிடமிருந்து அமெரிக்காவும், இஸ்ரேலும் எதிர்பாராத இழப்புக்களை எதிர்கொண்ட நிலையில், குர்திஷ் போராளிகள் மூலமாக ஈரானுக்குள் தரை வழித் தாக்குதலை ஆரம்பிக்கும் முயற்சியில் அமெரிக்காவும் இஸ்ரேலும் இறங்கியுள்ளது.

**ஈரானில் அமெரிக்க படைகள் தரை தாக்குதலை உடனடியாக செய்ய முடியாத நிலையில் , குர்திஷ் படையினர் தயாராகி வருகின்றனர். இவ்வாறு குர்திஷ் படைகளை முன்னணியில் களமிறக்கி அமெரிக்காவுக்காக போர் செய்வது இரண்டாவது தடவையாகும்.**

**சிரியாவில் இஸ்லாமிய அரச பயங்கரவாதத்தை எதிர்த்து போரிட்ட குர்திஷ் படைகளை அமெரிக்க அண்மையில் கைவிட்டு சென்றது. தற்போது ஈரானில் தரை தாக்குதலுக்கு குர்திஷ் படையினரை அமெரிக்க பயன்படுத்தி, மீண்டும் பலிக்கடாவாக்க உள்ளது**

இதற்காக ஈரானிய குர்திஷ்தான் ஜனநாயக கட்சி முஸ்தபா ஹிஜ்ரியுடனும் மற்றும் ஈராக்கில் உள்ள குர்திஷ் இயக்க தலைவர்களுடனும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பேச்சு நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குர்திஷ் இயக்கங்களுக்குள் இஸ்ரேலின் மொசாட்டும் ஆழ ஊடுருவியுள்ளதுடன், பெருமளவான ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த தரைவழி தாக்குதல் முயற்சியை முறியடிக்கும் பொருட்டு ஈரான் கடுமையான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக ஈரானின் ஏராளமான படைகளை ஈரானின் வட மேற்கு எல்லையில் குவித்துள்ளதுடன், ஈராக், துருக்கி ஆகிய நாடுகளில் உள்ள குர்திஷ் இயக்கங்களின் நிலைகள் மீது ஈரான், ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை நடாத்தி வருகின்றது.

## துருக்கியில் ஆயுத போராட்ட முடிவு:

நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் துருக்கியில், தங்களது ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒரு வரலாற்று முடிவை 2025இல் அறி

வித்தனர்.

நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி. தனிநாடு கோரி போராடும் குர்திஷ் போராளிகள் அமைப்பான பி.கே.கே-க்கும் துருக்கிக்கும் இடையிலான மோதல் 1984 இல் தொடங்கியது. இந்த மோதல் பல்லாயிரக்கணக்கான இறப்புகளுக்கு வழி வகுத்தது.

துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் தங்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தனர். நான்கு தசாப்த கால ஆயுத மோதலுக்குப் பிறகு, துருக்கியுடனான புதிய சமாதான முயற்சியின் ஒரு பகுதியாக, குர்திஷ் போராளிக் குழுவான 'குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி' ஆயுதப் போட்டத்தைக் கைவிட்டது.




## ஈரானுக்குள் உள்நாட்டுப் போர்?

தற்போது இந்த நாடற்ற குர்திஷ் மக்களை பயன்படுத்தி ஈரானுக்குள் உள்நாட்டுப் போர் வெடிக்கப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தெஹ்ரானுடன் உள்நாட்டுப் போருக்காக குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்க அமெரிக்க உளவுத் துறை இரகசியத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்கனவே போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஈரானிய அரசாங்கத்தை உள்ளிருந்தே பலவீனப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா உள்நாட்டுப் போரை அங்கு தூண்டத் திட்டமிட்டுள்ளது. அதிர்ச்சியூட்டும் வகையில் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ, ஈராக்கில் இயங்கும் குர்திஷ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி, ஈரானுக்குள் ஒரு பாரிய கிளர்ச்சியை உருவாக்க வியூகம் வகுத்துள்ளமை தற்போது அம்பலமாகியுள்ளது.

ஈரானிய எல்லையில் குவியும் குர்திஷ் படைகள், அமெரிக்காவின் இந்தத் திட்டத்திற்கு அமைவாக, குர்திஷ்தான் சுதந்திரக் கட்சியின் ஆயுததாரிகள் ஈரானின் எல்லைப் பகுதியான சுலைமானியா மாகாணத்தில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை உறுதிப்படுத்திய அந்த அமைப்பின் முக்கிய அதிகாரி கலீல் நாதிரி, தமது படைகள் ஈரானுக்குள் ஊடுருவத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஈரானிய-குர்திஷ் கிளர்ச்சிக் குழுவான "கோமலா" அமைப்பும், கள நிலைமைகள் சாதகமாக மாறும் பட்சத்தில் விழைவில் ஈரானிய எல்லையைக் கடந்து தாக்குதல்களை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாக எச்சரித்துள்ளது.

டிரம்ப் மற்றும் ஜலால் தலாபானி இடையிலான இரகசியப் பேச்சுவார்த்தையில், இந்தக் கிளர்ச்சிக்கான ஆயத்தங்கள், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் ஈராக்கின் குர்திஷ் அரசியல் கட்சியான தலைவர் பாஃபெல் தலாபானி ஆகியோருக்கிடையே பேச்சுவார்த்தை நடந்தது.

ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளில் குர்திஷ் குழுக்களை முழுமையாக அணிதிரட்டுவதே பிரதான நோக்கம் என்றும், அமெரிக்காவின் இலக்குகளைப் புரிந்துகொள்வதற்கும், வலுவான கூட்டணியை அமைப்பதற்கும் டிரம்ப் தயாராக இருப்பதாக கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

## தனித்து நிற்கும் ஈரான்:

ஈராக்கிய எல்லைகளில் குர்திஷ் போராளிகளின் நகர்வுகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து ஈரான் கடும் பதற்றமடைந்துள்ளது. ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்ச்சி குர்திஷ் தலைவர் தலாபானியைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, எல்லையில் இடம்பெறும் "பயங்கரவாத நகர்வுகள்" குறித்துக் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஆயினும், ஈரானின் செய்தி நிறுவனமான "தஸ்னிம்" , குர்திஷ் போராளிகள் ஈரானுக்குள் ஊடுருவியுள்ளதாக வெளியாகும் செய்திகளை முற்றாக மறுத்துள்ளது. ஈலாம், கெர்மன்ஷா மற்றும் மேற்கு அசர்பைஜான் ஆகிய எல்லைப் பகுதிகளில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை எனவும், இது அமெரிக்க ஊடகங்களின் உளவியல் ரீதியான பொய்ப்பிரச்சாரம் எனவும் ஈரான் தெரிவித்துள்ளது. ஈரானிய-குர்திஷ் கட்சிகளின் கூட்டணியும் தாம் தரைவழித் தாக்குதல்களை இன்னும் ஆரம்பிக்கவில்லை எனத் தந்திரோபாயமாகக் குறிப்பிட்டுள்ளது.

ஈரானில் வான்வெளித் தாக்குதல்களை விட, உள்நாட்டில் சிறுபான்மையினரான குர்திஷ் மக்களைப் பயன்படுத்தி அமெரிக்கா முன்னெடுக்கும் இந்த தரைவழி "உள்நாட்டுப் போர்" வியூகம், ஈரானிய அரசாங்கத்திற்கு ஒரு மாபெரும் சவாலாக உருவெடுத்துள்ளது என்பதே சர்வதேச அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com



# என்னை மறந்து விடுங்கள்



அரசண்ணா




இனிமேலும் பொறுப்பது சரிப்பட்டுவராது! ஆத்திரமும் அவமானமும் என்னைப் போட்டுச் சப்பினதை இனிமேல் என்ன செய்வது?

எனது எண்ணங்கள் நம்பிக்கைகள் எல்லாம் நாசமாகிப் போய்விட்டன. புரண்டு புரண்டு படுக்கிறேன்.... நேரமும் இரவு பன்னிரண்டு மணிக்கு மேலாகியும் நித்திரை வரேல்லை. எட்டி உள்ளே பாத்தேன். மனுசியும் பிள்ளைகளும் நல்ல நித்திரை...... எனக்குமட்டும் நித்திரை வரேல்லை.... வீட்டுக்கு முன்னாலுள்ள வாய்க்காலில் தண்ணி சலசல எனும் சத்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது.... போன விசயம் என்னப்பா? என்று கேட்ட, என்மனுசியிடம் எல்லாம் விடியச் சொல்கிறேன் எண்டு சொல்லிற்றன், அவள் சாப்பாடு தரவும் நான் வழியில் வரும்போது சாப்பிட்டிட்டன், என்று பொய்யும் சொல்லிப் போட்டன். சை! இந்தப் பொய்யினாலே யாருக்கும் நட்டமோ துன்பமோ இல்லைத்தானே! தண்ணி சலசல சத்தத்துடன் ஒடிக்கொண்டிருப்பது தொடர்ந்து.

கேட்டது. தண்ணிக்கும் நித்திரையில்லையோ? ஒடிக்கொண்டிருக்கும் போது எப்படி நித்திரை வரும்?

அது வாய்க்காலில் ஓடுது எனக்குள் எண்ணம் ஓடுது.... தண்ணி இருகரைக்கும் கட்டுப்பட்டு ஓடும். எனக்குள் எண்ணமோ கண்டபடி ஓடுது! எண்ண ஓட்டத்தை ஒழுங்குபடுத்தினால்தான் ஒரு முடிவைக்காணலாம்! இருந்த இடம் விட்டு இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்து ஏழுவருடம் தாண்டிவிட்டது.

வன்னியில் வாழ்க்கையோ தொடர்ந்த இடப் பெயர்வுகளாய் இருந்தது..... வருடத்துக்கு வருடம் ஏன், மாதத்துக்கு மாதம் என்றும் சொல்லலாம்.

ஆமி வந்திடுவானோ எண்ட அச்சத்தால் ஓடிய இடங்களே அதிகம்... அந்த அச்சம் ஒண்டும் பிழையானதல்ல.... இடம் பெயர்ந்து இடம் பெயர்ந்து.. தவித்த.... தவிப்புக்களும், துடித்த துடிப்புகளும்.

வாழப்பிறந்த மனித வாழ்வு நீரோட்டத்தில் இத்தனை சுழல்களா? நீந்தி நீந்தி உடலும் களைத்துவிட்டது. கைகாலுகளும் சோர்ந்து விட்டன. தடுமாறுகின்றன. மிதந்திருப்பது நீரில், கால்கள் அடிக்காமல் இருக்கமுடியுமா?

கைகால்களை அடித்து இதமாய் இயங்கினால் தானே மிதக்க முடியும். நீந்த முடியும்! அதுவும் சுழிகளுக்குள்ளும் அகப்படாமல் இருக்க வேண்டுமா!

ஏழு வருடங்கள் ஓயாத ஓட்டம்!

உண்ணல், உடுத்தல், உறங்கல், எதுவும் ஒழுங்கானபடி அமைக்க முடியாத நிலை. இந்த மூன்றிற்குமே முயன்று உழண்ட உழழ்வு....! சும்மாவிடு !

இதற்கு பேர் வாழ்க்கை...! வாழ்வதே வாழ்க்கையெண்டு உண்ணாணை வாய் விட்டுச் சொல்லாதையுங்கோ! உயிரோடு உழண்டிடும் இந்த சீவியத்திற்கு உழழ்வு என்று ஏன் பேர் வைக்கக் கூடாது? ம்....இப்ப ஓட்டை வாழ்வுக்கு ஒருமுடிவு வந்துதான்கிடக்கு! என்ரை ஓட்டை வாழ்வுக்கு ஒரு முடிவு வரேல்லையே! பல்லி ஒன்று சத்தம் போட்டது! மேலே பாத்தேன் ஒன்றும் தெரியேல்லை. என்ரை வீட்டுக் கூரைமுகட்டில் ஓட்டைதான் தெரிந்தது. "குடுக்கிற கடவுள் கூரையைப் பிய்ச்சுப் போட்டுக் குடுப்பார் எண்டு சொல்லுவார்கள்! ஒழுங்கான கூரை இருந்தால் தானே அவரும் பிச்சுப்போட்டுத் தர முடியும்!

மீண்டும் புரண்டு சரிந்து படுக்கிறன். நித்திரைவந்தாத்தானே... இனிமேலும் பொறுப்பது ஒத்து வராது எண்டுதானே யோசிக்க வெளிக்கிட்டனான். இப்ப என்னவெல்லலாமோ யோசிக்கிறன்.

தவளைகளோ வேறு எதுகளோ சத்தம் போட்டது!

அவையள் என்னைப்பார்த்துப் பழிக்குதுகளோ? எனக்குக் கிட்டடியாக அவற்றின் சத்தம் தொடர்ந்து கேட்டது. இனியும் பொறுக்கேலாது.

படுத்தபடியே கைகளை நீட்டித் தடவினேன். ஏதோ ஒரு பொருள் தட்டுப்பட்டது. வாசலுக்குள்ளால் சத்தம் வந்த இடத்திற்கு எறிந்தேன்... ஷடங்? கென்று எறிந்த பொருள் வீழ்ந்து உருண்டது.

ம்... இதற்கான திட்டும் பேச்சும் நாளைக்கு நடக்கும். உள்ள பார்த்தேன்.... அவள்பாவி நிம்மதியான நித்திரை...! தவளை சில்வண்டுகளின் சத்தமும் நிண்டு விட்டது. நிம்மதியாக மீண்டும் எண்ணத் தொடங்கினேன்.

இடம் பெயர்ந்து வந்திருந்த வன்னியில் ஒரு இருப்பிடம் நல்லதாய் சொந்தமாய் உருவாக்க முடியவில்லை. வசதியாய் இடமும் கிடைக்கவில்லைத்தான், எப்படிக் கிடைக்க முடியும்?

சண்டைக்காலத்தில் படையள் வந்ததாலையும் துரத்தினதாலையும் இடம்பெயர்ந்தம்.... இப்ப இருக்கிற காணியின் சொந்தக்காரர் வந்து.... ! இயக்கப்புள்ளையள், புள்ளையள் எண்டால் ஆம்பிளை பொம்புளைப் போராளிகளைச் சேர்த்துத்தான் சொல்லுறன். நான் எப்பவும் அப்படித்தான் சொல்லுறனான். அதுகள் தந்த காணிதான் இது! காணிச் சொந்தக்காரர் காணியைவிடச் சொல்கிறார் புள்ளைகளை கேட்டா வேற காணி எப்பயோதரக்கூடும், பிறகு, அந்தக் காணியின் சொந்தக்காரர் வரமாட்டாரே!

ம்...ஏன் தெல்லையே? சொந்த ஊருக்குப் போவம்! அங்கை கொஞ்சம் காணிகிடக்குத்தானே! தம்பியும் இருக்கிறான் மகனும் வெளியிலை ஏதாவது வீடு போடக்கீட உதவி செய்வான் தானே.

அமைதி வந்தும் ஒருவருடம் வன்னியை விட்டுப் போறேல்லை எண்ட முடிவோடு இவ்வளவு நாளும் போகாமல் இருந்திட்டன்.

சொந்த ஊர், நான் போன நேரம் தம்பி வெளியிலை, அட காணி எங்கயடா? வீடு எங்கயடா? யார் பதில் சொல்கிறது?... நான் தான் பதில் சொல்ல வேணும்!

வன்னியில் மரங்களின் காடு. நம்மூரில் இடிபட்டு வீழ்ந்த கற்குவியலின் காடு. அது முற்காலம் தந்த புண்ணியம். இது இக்கால புண்ணியம். வன்னியின் புழுதிகளை விட என்ர சொந்த இடத்தில் உள்ள கொம்மாண்ட முள்ளுக்கம்பியள் உறுத்துது கண்ணுக்கை. அந்த அடிபட்ட கற்குவியலுக்குள்ளாலையும் யாரோ ஒருவர் சுத்துமதில் கட்டிப் போட்டார். மதில் கட்டின காணிக்கை நிண்டது வேம்பு ஒன்று. அது மட்டும்தான் நிக்குது!....

காற்று அதனுடன் சம்பாசிக்குது... வேம்பும் ஏதேதோ தலைகாட்டி தலையாட்டிச் சொல்லுது. வேம்பு எனக்கும் ஏதோ சொல்லுது. அட என்ர காணிக்குள்ள நிண்ட வேம்பெல்லாம் இது. அதையும் சேர்த்து ஆரோ மதில் கட்டிப்போட்டான்.

நான் உள்ளே போட்டன். ஐயா வைச்சு வளத்த வேம்பு பாசத்தோடு அதைத் தொட்டன்.....

யாரது காணிக்குள்ளை? நிலக் கண்ணிவெடி வெடிச்சமாதிரி இருந்தது! உள்ளம் பதற வெடிச்சவனை பார்த்தேன். கண்ணிவெடி வெடிச்சா கால்லுடையும், இவன்ர வெடிப்பிலை என்ர மனம் உடைஞ்சு போச்சு, வெடிச்சவன் வேறுயாருமில்லை.

என்ரை தம்பிதான். வெடிச்சவன் வெடிச்சதோட நிண்டானா? என்னத்துக்குள்ள போறாய் எண்டும் கேட்டான். தம்பி இது என்ர வேம்படா, மதில அதையும் சேர்த்துக் கட்டிக்கிடக்கு யார் இது கட்டினது? நான் தான் கட்டினனான். ஐயா காணி முழுக்க எனக்கு எழுதிப்போட்டார். ஆயிரம் ஆட்டுலெறிக்குண்டுகள் ஒண்டாவந்து வீழ்ந்து வெடித்தன. அதிர்ந்து போனன்.... ஐயா அப்படிச் செய்திருக்கமாட்டார் இவன் பொய்சொல்கிறான். அவன் ஏதேதோ கதைச்சான். அபகரிக்க நினைக்கிறான் அதனாலை இவன் ஆயிரம்கதை கதைக்கிறான். சரி என்னை சொந்த தம்பி தானே.... கொஞ்சம் இரந்தும் உறவாடியும் கதைப்பம் இப்ப என்ன கெட்டது?....

அட தம்பி! ஐயா எனக்குத் தந்து நான் குடியிருந்த காணி இது தாண்டா தம்பி, நீ மதில்நேருக்காக இந்தக் காணியையும் அரை வாசியைச் சேர்த்து மதில் கட்டிப் போட்டாய், அட தம்பி நான் எங்கை வந்து வீடு போடுறது?

கொஞ்சம் கூடக்குறைய இரந்துதான் கேட்டனான்! காற்றின் உதைப்பிற்கும் இழப்பிற்கும் ஏற்றவாறு சோவென்று சத்தமிட்டவாறு ஆடி அசைந்து கொண்டிருந்த வேம்பு அப்படியே திடீரென்று அசையாமல் ஆடாமல் நிண்டது!

வேம்பு எனக்கு இரக்கம் தெரிவிக்குதோ? தம்பி கதைக்கிறான்! என்ரை மோன் வாற மாதம் காசு அனுப்புறான் நான் ஒரு கடையும் அரிசி குத்துற மில்லும் கட்டப் போறன்.

ம்.... அவன்ரை மகன் வெளிநாட்டிலை நிண்டு காசு அனுப்பப் போறான்... ஒருக்கா இரந்து போட்டன் இன்னுமொருக்கால் இரந்து பார்ப்பம். அட தம்பி ஐயாட்டை நான் காசு கொடுத்துக் கொள்முதல் செய்த இரண்டு பரப்புக் காணியும் இதுக்கை தாண்டா கிடக்கு. ஆடாமல் அசையாமல் நிண்ட வேம்பு மீண்டும் சோவென்று அசையத் தொடங்கியிட்டது. நான் மீண்டும் இரப்பது இதுக்குப்பிடிக்கேல்லையோ? எப்ப வேண்டினனி எங்களுக்குத் தெரியாமல்? தம்பியின் கேள்விக்கு நான் பதிலும் இரந்துதான் சொன்னன். அட தம்பி, மச்சாளின்ரை சீதணக் காசிலையெல்ல ஐயாவிட்ட இரண்டுபரப்பு வாங்கினனான்.

காற்றுக்கும் பொல்லாத சேட்டை, பொல பொலவென்று வேம்பின் சிறு கொம்பு ஒன்று ஒடிந்து வீழ்ந்தது.... ஒடிந்த கொப்புக்காகத்தான் வேம்பு கவலைப்பட்டதோ படேல்லையோ யாருக்குத்தெரியும். அது தொடர்ந்தும் காற்றுக்கு இயல்பாய் அசைந்து ஆடிக்கொண்டுதான் இருந்தது. காற்று இன்னும் எத்தனை கொப்பை ஒடிக்குமோ? இல்லை வேம்பைத்தான் முறிக்குமோ? எனக்காக இரக்கப்பட்ட வேம்புக்காக இப்ப நான் இரங்கினேன்....! அந்த வேம்பின் மீது நான் இரக்கம் காட்டத்தானே வேணும் அது ஒண்டுதானை என்ரை காணியைக் காட்டித் தரநிக்குது.....

வேகமாக அடிக்கும் காற்று என்ரை தடயத்தை முறித்துப் போடுமோ? அப்படியெண்டால் காற்றும் அநியாயத்தின் பக்கமோ?

உதிலை நிண்டு ஒண்டும் மசியவேண்டாம், காசு குடுத்துக் காணி வேண்டினால் உறுதியைக் கொண்டு வாவன் பாப்பம்! தம்பி எதுக்கும் தயாராய் நிண்டான்! ஏழு வருடமா எங்க போனனீங்கள்? ஐயா செத்ததுக்கும் வரேல்லை இப்ப வந்து நிக்கிறியள்!

அட என்ர தம்பிதான் பேசுகிறானா? ஏழெட்டு வருட வாழ்க்கை இவனை இப்படி ஆக்கிப் போட்டுதா?

ஆமியோடை இருந்த குணமா இல்லை வெளிநாட்டுக் காசு கொடுத்த வீம்பிலை அன்பு பாசம் கெட்டுப் போச்சோ? ஒண்டுமாத் தெரியேல்லை.... என்ரை ஐயா தந்த காணியையும் எடுத்துப் போட்டான். நான் காசு குடுத்து வாங்கின காணியையும் விடமாட்டன் என்கிறான். இது அநியாயமல்லோ....? அநியாயம் எண்டு கேட்டா அடிப்பான் போல கிடக்கு! வன்னியில் வாழ்ந்த உழல்வால் மெலிந்த உடம்புடன் நான், வெளிநாட்டுப்பணத்திலை திண்டு கொழுத்த தினவிலை என்ரை தம்பி ! சீ! இப்படி ஒரு நிலை என்ர எதிரிக்கும் வரக்கூடாது. கூடப்பிறந்த தம்பிக்காரனுடன் உண்மையைக் கூட பேசமுடியவில்லையே! நொந்து வந்த எனக்கு ஆறுதலாய் இருப்பான் எண்டு எண்ணினன்.... என்ரை காணியிலை ஒரு சிறிய வீட்டை கீட்டை நான் போட இவனும் உதவான் எண்டும் எண்ணினேன் படையெடுத்து வந்த அந்நியன் நான் வாழ்ந்த மனை வீட்டை உடைச்சான். என்ரை உடன் பிறப்பு நான் கட்டிவந்த மனக் கோட்டையை உடைச்சுப் போட்டான். மன உடைவின் கற்குவியல்கள் என்னுள் கனத்தது.

உறுதி கொண்டுவா என்கிறான்? இந்த ஏழு வருட அலைச்சலிலை அதைநான் கவனிக்கவே இல்லை அந்த ஒரு சூட்கேசின் உள்ளறையிலை அது எப்படியும் இருக்கும் ....!

சரியடா தம்பி நான் உறுதியோடை வாறன், நான் திரும்பி நடந்தேன் அவன் ம்...ம் எண்ட படி தன்னுடைய வீட்டுக்கு நடந்தான் என்னை வாவெண்டு கூடக் கேக்கலை.

நல்ல வேளை நான் முதலிலேயே அவன்ரை மனுசி பிள்ளைகளைப் போய் பார்த்திட்டன். எங்கையெங்கையோ யார் யாரட்டையோ போகவேணுமெண்டு நினைச்சனான். ஒருடமும் போகேல்லை... அந்த வீச்சிலை பஸ்சில் ஏறிட்டன். இப்ப போனால் தடையை தாண்டிடலாம்....

பல இடங்களில் பஸ் ஊர்ந்து ஊர்ந்து சென்றது. பஸ் சில இடங்களிலை போக முடியாமலும் நிண்டது... ஏன்? ஆமிக்காரங்கள் வெசாக் பண்டிகைகயை முன்னிட்டு ஏதோ அந்த வீதியாலை ஊர்வலம் போறாங்களாம்! ஓமோம் ஏதேதோ கோசங்களும் அவங்கட கடவுளை வேண்டிக் கொண்டு ஊர்வலம் போறாங்கள் போல கிடக்கு எனக்கென்ன அதிலை, என்ரை கவலை எனக்கு! இது எங்கடை வீதி! இது எங்கடை மண் ! இது





எங்கடை தேசம்! அதன் பேர் சிறீலங்கா.... எண்டு தான் ஆமிக்காரர் சொல்லிக்கொண்டு போறாங்களாம். எனக்கெண்டால் எரிச்சல் எரிச்சலாக வந்தது. அவரொருவருக்குச் சிங்களமும் தெரியும் எண்டு காட்டுறார். அந்தச் சினத்திலை வெளியிலை பார்த்துக் கொண்டிருக்கிறன். சிவன்கோவில், பிள்ளையார் கோயில், மாதாகோவில் எனப் பல கோவில்கள் என் கண்ணில் பட்டன. அவையொண்டும் என்ரை கவனத்திலை படேல்லை. எனக்கு என்ரை காணியும் என்ரை வேம்பும்தான் தொடர்ந்தும் தென்பட்டன.

வன்னியிலை என்ரை வீட்டுக்கை படுத்துக்கொண்டு நான் எங்கையெங்கையோ போட்டு வந்துட்டன், மனுசி ஆழ்ந்த நித்திரை எண்டால் அவள்பாவிக்கும் லேசாகக் குறட்டை வரும். பிள்ளைகளை பார்த்தால் அதுகளும் நல்ல நித்திரை..... ஒண்டு குமர். மற்றது குமராக இன்னும் இரண்டொரு வருசம் கிடக்கு.

நான் நடந்தது ஒண்டும் அதுகளுக்குச் சொல்லேல்லை. அதுகளின்ரை மனங்களையும் ஏன் குழப்ப வேணும்? வாய்க்காலில் தண்ணியின்ரை சத்தத்தோடை தொடர்ந்து ஓடுது படுத்திருந்தபடியே பார்வையை திருப்பிப் பார்த்தன்.

படத்துக்கு ஏத்திவைச்ச தேங்காயெண்ணை விளக்கு மங்கிக்கொண்டு எரிஞ்சுது. தேங்காய் எண்ணெய் விட வேணும்.... அவள் பாவி எழும்பினால் கொதித்துவிழுவாள் ! அவள் அதிகம் கொதிக்கிறது இதுக்குத்தான்....மெல்ல எழும்பிச் சென்று உரிய இடத்திலை தடவி தேங்காய் எண்ணெய்ப் போத்தலை எடுத்தன். போத்தல் கனத்தது. என்ன இல்லாட்டிலும் மனுசி இதை குறைய விடாது.... விளக்கில் அதை ஊத்தினேன்?.... சற்று நேரத்தில் வெளிச்சம் பரவியது. படத்தில் இருந்த எனது கப்டன் மகன் என்னப்பா நித்திரை வரேல்லையா? எண்டு கேட்பது போல இருந்தது நான் சொல்லிக் கொண்டு படுக்கைக்கு திரும்பினேன், நீ இருந்திருந்தா உன் சித்தப்பா எனக்கு அடிக்குமாப் போல் நிப்பானா?....

ம்..... படுக்கையில் வீழ்ந்தேன். எண்ணப்பறவை பறந்து பறந்து களைத்து விட்டது. ஏதாவது முடிவு எடுத்தாத்தான் நானும் நித்திரை கொள்ள முடியும். மெதுவாக எழுந்து வெளியில் சென்றேன். வானம் இன்னமும் இருண்டுதான் கிடந்தது.... நான் என் உடல் பலத்தையும் அதன் இயங்கு நிலையையும் அறியச் சிலதைச் செய்து பார்த்தன். உரலின் மேல் ஏறி நின்று உரலை கால்களால் உருட்டி பார்த்தன் முதலில் பிசகியது பிறகு சரியாய் வந்திட்டுது.... உலக்கையை எடுத்து விசிக்கிப் பார்த்தன்.... சில குறிப்பிட்ட பொருட்களை இலக்கு வைச்சு அடிச்சுப் பார்த்தன், இருட்டிலையும் குறி தவறவில்லை. களைப்பும் அவ்வளவு இல்லை..... எடுத்து எல்லைப்படை பயிற்சியை எண்ணிப் பார்த்தன். நல்லவேளை நான் முதலிலேயே அவன்ர மனுசி பிள்ளைகளைப் போய்ப்பாத்திட்டன்.

வெள்ளியொன்று எரிந்தபடி விழுந்தது. இனியும் பொறுப்பது ஒத்துவராது. சண்டித்தனத்துக்கு சண்டித்தனம் காட்டாவிட்டால் எதுவும் சரிவராது.... காணி உறுதியை எடுத்துக்கொண்டு போய் காட்டிறன். அதுக்கு அவன் சரிவரவில்லையெண்டால் என்ரை சாண்டோ விளையாட்டை காட்டுவன். முரண்பட்டு அவன் அடிபிடிக்கு வந்து தரமறுக்கட்டும் பாப்பம்?

என்கைகளை பாத்தன் மெலிஞ்சாலும் சாண்டோவின் கை சாண்டோவின் கைதான். அவற்றை ஆக்கள் வந்தால் காட்டுறன் என்ர கம்பு விளையாட்டை. நான் கம்பு விசிக்கினால் கல்லெறி கூட என்ரை மேலிலை படாது.... அப்பிடி ஒரு கம்பை அங்கை எடுக்கமாட்டானா என்ன?

முடிவு எடுத்த உடனை உறக்கம் நினைவுக்கு வந்தது. உள்ள சென்று படுக்கையில் சரிந்தன் நாளைக்கு உறுதியைத் தேடி எடுக்க வேணும்...

கண்விழித்த போது போனவிசயம் என்னப்பா விடியச் சொல்லுறன் எண்டியள், கேட்டபடி மனுசி அருகில் வந்தாள்.

எல்லாம் சொல்லுறன், உந்தச் சூட்கேசைத் தூக்கிக்கொண்டு வா! வாறன் வெளியிலை போட்டு, எழும்பி நடந்தன். எல்லாம் முடித்துக் கொண்டு உள்ளை வந்து மனுசி தந்த தேத்தண்ணியை குடிச்சன். பிள்ளைகள் அப்பதான் எழும்பி வெளியிலை போகுதுகள். அதுகளும் பள்ளிக்கு போக வேணும். தமக்கை தங்கையை அவசரப்படுத்தினாள்.

மனுசி எடுத்து வைச்ச சூட்கேசைத் திறந்து உறுதியைத் தேடினன்.... உறுதி...

நான் ஒன்றும் தேடிக்களைக்கவில்லை. முதல் சுத்து தேடலிலேயே அது கிடைச்சுப் போட்டுது. உறுதி கிடைச்ச சந்தோசத்திலை எங்கடை உறுதி கிடக்கப்பா! எண்டபடி எழும்பினன். உறுதியோடை சில காகிதங்களும் கவர்களும் கீழ விழுந்தன...நான் அவற்றை கவனிக்கவில்லை. உறுதியை மட்டும் எடுத்தபடி மனுசியைக் கூப்பிட்டன்! வந்த மனுசி! கீழை பார்த்துட்டு இஞ்செருங்கோ! என்ன வேலை பாக்கிறியள் உங்கடை உறுதி கிடைச்ச இதிலை நீங்கள் எதை நிலத்திலை கொட்டியிருக்கிறியள். அவள் கூறியபடி குனிஞ்சு எடுத்தாள்..... நான் அதை வாங்கிப் பாத்தன்! அட என்ர கடவுளே! நான் அந்த பிள்ளையின் படத்தையா நிலத்திலே சிந்தினேன்? அது இத்தனை இடப்பெயர்விலையும் தொலையாமல் இந்த உறுதியைப் போல கிடந்திட்டுதே. உதைப் பாருங்கப்பா வாறன் எண்டிட்டு மனுசி போட்டாள் அவளுக்குப் புள்ளையளைப் பள்ளிக்கு அனுப்புற அவசரம்.

என் நினைவுத் தேர் உருளத் தொடங்கிவிட்டது. அது அந்தப் புள்ளையைச் சுற்றி ஓடியது! இந்தியன் ஆமி இங்கை இருந்த காலத்தில கே. கே. எஸ்ஸில அமைதிப்படையின் மறு வாழ்வு முகாம் என்கிற மனித வதை முகாமிலை நான் சிறை இருந்த போது, கண்டனான். அந்த புள்ளையும் நான் இருந்த அறையில தான் இருந்தது. உண்மையை சொல்லடா சொல்லடா புலியள் பற்றி சொல்லடா எண்டு எனக்குச் செய்த சித்திரவதையிலை என்ரை உடம்பு முழுவதும் காயம். அப்பாவியான என்ர உடம்பிலை அந்த அறுவாங்கள் அந்த மாதிரி காயப்படுத்தியிருந்தாங்கள். அந்தப்பிள்ளை என்னை ஒரு தாய்போல் பராமரித்தது. மற்றவர்கள் எனது புண்களை பார்த்து அருவருக்க அந்தப் புள்ளை என்ரை மேலிலை அளைஞ்சு அளைஞ்சு புண்களை துடைத்து மருந்து போட்டது. நான் அழுத போதல்லாம் ஆறுதல் சொன்னது.

இந்தியன் ஆமி போகும் போதுதான் எங்களை விட்டான் எங்கள் சிநேகிதம் வெளியிலையும் தொடர்ந்தது. போராளியான அந்தப் பிள்ளை அந்த பிரதேசத்தின் அரசியல் பொறுப்பாளராக மக்களுக்கு சேவை செய்தது. அடிக்கடி என்ர வீட்டுக்கு வரும். அம்மா அம்மா எண்டு மனுசியோடு அன்பாய் பழகும். என்ரை பிள்ளைகள் இரண்டோடையும் அப்ப இழையவள் பிறக்கேல்லை. ஒரு அண்ணனைப் போல் அன்பு அக்கறையுடன் பழகும்...... அந்தப்பிள்ளைக்கு முன்னாலை நிப்பது எண்டால் எனக்கு வலுபுளுகம்.

நானும் அந்தப்பிள்ளையள் ஒபிசுக்கு அடிக்கடி போவேன்.... அது கடற்கரையிலை மெயின்றோட்டோடை இருந்தது. ஒரு முக்கியமான சந்தியும் கிட்டடியில இருந்தது.

கடலின் இரைச்சல் புள்ளையின்ரை ஒபிசிலை நிக்கேக்கை தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கும்.

அந்தப் பொங்கிடும் கடற்கரைக்கும் ஒரு பெருமை சரி அதை விடுவம். அந்தப் புள்ளை வேலை செய்கிறதையும் விசாரணை செய்கிறதையும் பார்க்க எனக்கு ஆசை ஆசையாய் வரும். அன்பெண்டா அன்பு! பண்பெண்டா பண்பு! கோபம் எண்டா கோபமில்லை, அங்கேயும் அன்புதான் அந்தப்புள்ளைக்கும் கோபம் வரும் எண்டதை ஒருநாள் நான் கண்டன். எனக்கெண்டால் அதிலை கோபம் தெரிஞ்சதைவிட அறிவுரைதான் தெரிஞ்சது.... உண்மையில புள்ளையின் கோபம் நியாயமானது! அது ஒரு சண்டைபட்டு மண்டைகள் உடைபட்டகேஸ். கொஞ்சப் பேர் வைத்தியசாலையிலே படுகாயங்களோடையும் சாதாரண காயங்களோடையும் கொஞ்சப்பேர் இங்கை

விசாரணையிலை..... அவர்களைப்பார்த்த உடனை பிள்ளைக் குக் கோபம் வந்திட்டுது. அந்தக் கோபத்திற்கு

காரணம் சரியாய் இருந்தது. இல்லாட்டி அந்தப் புள்ளை கோபிக்காது.

அப்ப அந்தக் கடலிலை ஒரு கட்டளைக் கப்பல் நிண்டது. கரையிலை நிண்டு எங்கடை புள்ளையள் தாக்கமுடியாத தூரத் திலை அது நிண்டுகொண்டு ஆட்லறிச் செல்கள் எல்லா இடங் களுக்கும் வீசி வெடிக்கச் செய்தது. சந்தைகள் கூட முடிய வில்லை, வீடுகளில் இருக்கமுடியவில்லை. கடை கண்ணிகள் திறக்க முடியவில்லை. எல்லா இடங்களிலும் செல்கள் வீழ்ந்து வெடித்தன... ஒருநாள் ஒரு திருமண வீட்டில் திருமணம் நடந்துகொண்டிருக்கும்போது செல்வீழ்ந்து வெடித்தது.... நல்ல வேளை மணமக்கள் படுகாயங்களுடன் பின்னர் தப்பி விட்டனர். தோழனுக்கு நிண்டபொடியன் அந்த இடத் திலேயே....

அப்படியான காலத்திலைதான் இந்த அறுவான்களும் கோஸ்டிச் சண்டைசெய்து மண்டைகளை நொறுக்கிப் போட்டு வந்து நிக்கிறாங்கள்.

பின்னை புள்ளைக்கு கோபம் வருந்தானே.... புள்ளை கேக்கி றதும் நியாயந்தானே....!

இஞ்சை பாருங்கோ ஒரு பொது எதிரி எங்கடை கடலிலை வந்து நிண்டு கொண்டு எங்கள் எல்லோருக்கும் அடித்துக் கொண்டு இருக்கிறான்... அவனுக்கு எங்களால ஒன்றுஞ் செய்யமுடிய வில்லை..... அவனுக்கு அடிக்கமுடியேலே. நாங்கள் எங்க ளுக்கை எப்படி அடிபடமுடியும்? பகைவனைப் பந்தாடமுடியாத நாங்கள், எங்களுக்கை நாங்கள் அடிபட என்ன அருகதை இருக்கு புள்ளையின்ரை கேள்விக்கு ஒருதராலையும் பதில் சொல்ல முடியவில்லை. எல்லோரும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நிண்டினம். எனக்கு அந்தப் புள்ளை இன்னுங்கதைக்காதோ எண்டிருந்தது...

அதுமுடிந்து சில நாட்கள் சென்றுவிட்டன... ஒருநாள் அந்தப் புள்ளை என்ரை வீட்டை வந்து எங்கள் எல்லோரோடையும் நல்லாச் சிரிச்சுக்கதைச்சது. நான் அண்டைக்கு அந்தக் கோபத் தோடை கண்ட பிறகு இண்டைக்குத்தான் காணுறன்.... அந்தப் புள்ளையா இந்தப்புள்ளை? கதைச்சுமுடிச்சுப்போகும்போது ஒரு கவரைத்தந்து நாளைக்கு நான்வரும் சத்தம் கேட்டபிறகுதான் இதை உடைக்கவேணும் என்ன? நான்வரக்குமுந்தி உடைக்க வேகூடாது. எண்டு சத்தியம் வாங்கிக்கொண்டு போனது...

அடுத்த நாள் அதிகாலைக்கு முன் டொம் டொம்.... என்ற பெரும் சத்தம் கேட்டது. அது கடல் பக்கமாகத்தான் கேட்டது. என்ன சத்தம்? ஏன்? ஒண்டுந் தெரியேல்லை!

எல்லோரும் எழும்பிவிட்டம்..... எல்லா வீடுகளிலும் மனிதக் குரல்கள்...

கரும்புலி மில்லர் வெடித்த போது எழும்பின சத்தம் போலல்லவா இந்தச்சத்தமும்....

என்ன நடந்தது.....?

கிழக்கில் சூரியன் மெல்ல எட்டிப்பார்த்துத் தனது சிவப்பு நிறக் கோலத்தை மேகத்தில் காட்டினான். செய்தியும் லேசாய் வந்தது....

கடலிலை நிண்டு ஊரெல்லாம் தாக்கிய அந்தக் கப்பலிலை கரும்புலி பாய்ஞ்சிட்டுதாம்...! அதுக்கு மேலை ஒண்டும் அறிய முடியேல்லை...ம், அந்தப்புள்ளை வரும்தானே...... அப்ப எல் லாம் வடிவாகக்கேட்பம்...., கவரையும் உடைப்பம். புள்ளை வராமல் உடைக்கக்கூடாது. ஊரெல்லாம் ஒரே குதூகலம்.

சனங்கள் எல்லாம் வெளியிலை நிண்டார்கள். பதுங்கு குழிக ளுக்குள்ள படுக்கை போட்டுக்கிடந்தவர்கள் கூட கனகாலத் திற்குப்பிறகு வெளிவெட்டையிலை நிண்டதைப்பாக்க மனதிற்கு சந்தோசமாக இருந்தது....

அந்தப்புள்ளை வரவில்லை, ஆனால் செய்தி வந்தது...! கப்பலிலை பாய்ஞ்ச மூண்டு கரும்புலிகளிலை அந்தப்புள் ளையும் ஒண்டாம்! செய்தி இடியாய் இறங்கியது....

நினைவு தெளிந்து மனதை ஒருநிலைப்படுத்திக்கொண்டு,



மாவீரர்களே!

நீங்கள் களத்தில் மடியும்
கடைசி நேரத்தில்
என்ன நினைத்தீர்?
அந்த நினைவைச்
சுமக்கின்றோம்.
அதனை நிச்சயம்
முடிக்கின்றோம்,
நீங்கள் புதைந்த இடத்தில்
புல்லா முளைக்கிறது?
இல்லையே!
போராடும் எங்களுக்குள்
புதுவீரமல்லவா பிறக்கிறது
நம்புங்கள் தமிழீழம்
நாளை பிறக்கும்.



அந்தப்புள்ளை விட்டுப்போன கவரை எடுத்து உடைச்சன்.....

கவருக்குள் அந்தப்புள்ளையின் போட்டோ.... புள்ளை சிரிச்சபடி இருந்தது. உற்று உற்றுப் பாத்தேன். மனுசியும் புள்ளையளும் படத்தைப் புடுங்கப்பார்த்தார்கள் நான் விடவேயில்லை. படத் தின் பின் புறத்தில் ஏதோ எழுதப்பட்டிருக்கவேண்டும் படத்தைத் திருப்பினேன்....

என்னை மறந்து விடுங்கள், என் இலட்சியத்தை மறந்து விடாதீர்கள்! இஞ்செருங்கோ ! உறுதி உறுதியெண்டு அவசர அவசரமாத்தேடினியள் இப்ப அந்தத் தம்பியின்ரை படத்தோட அப்பிடியே நிக்கிறியள். நினைவுத்தொடரறுந்தது.... என் கையில் இருந்த புள்ளையின் படத்தைத்திருப் பினேன்... சற்று மங்கினாலும் வாசிக்கக்கூடிய மாதிரி புள்ளை எழுதினது அப் பிடியே இருந்தது.

இருந்தது மட்டுமில்லை எனக்கும் ஒரு உண் மையை இடித்து உணர்த்தியது. அண்டைக்கு அந்த விசாரணையின்போது அந்தப் புள்ளை என்ன சொன்னது?

“எங்கடை எதிரி எங்கடை இடத்திலை வந்து நிண்டுகொண்டு எங்கள் எல்லோருக்கும் சண்டித் தனம் விடுறான். அவனுக்கு அடி போடாமல் எங்களுக்கை நாங்கள் அடிபடுறதுக்கு எங்க ளுக்கு என்ன அருகதை இருக்குது”

என் காதில் இப்போது ஆமிகள் போட்ட கோசங்க ளும் ஒலித்தன.... இது எங்கள் பூமி இது எங்கள் வீதி இது எங்கள் தேசம் இதன் பேர் சிறீலங்கா.... என்பிடரியில் யாரோ ஓங்கி அறைந் ததுபோல இருந்தது!

இரண்டு பரப்புக்காணிக்காக என் தம்பியோடை அடிபட இருந்தன்....!

எங்கள் வீதியை எங்கடை மண்ணை தங்கடை தங்கடை யெண்டு கோசம்போட்டு எங்கடை பகுதிகளில் நிற்பவர்களை வெளியேற்ற உழைக்காமல்.... இதென்ன உடன்பிறப்போடை வெக்கங்கெட்ட சண்டித்தனம்...?

மெல்ல நிமிர்ந்து சுவரில் மாட்டப்பட்டிருந்த எனது கப்டன் மகனின் படத்தைப் பார்த்தன். மீண்டும் அந்தப்புள்ளையின் படத்தைப்பார்த்தன்..... என்மகனின் படத்திற்கு அருகிலை வலதுபக்கமாக சற்று உயரமா இந்தப்புள்ளையின் படத்தையும் மாட்டினா என்ன?.... எப்படி என் எண்ணத்தை மனுசி அறிந்து கொண்டிருப்பாள்....?

ஓமப்பா உந்தத் தம்பியின்ரை படத்தையும் பெருப்பிச்சுப் பிறேம் போட்டு தம்பியின்ரை படத்திற்கு வலப்பக்கமா ஏத்திவைப்பம்.... ஓமப்பா..... எண்டபடி, புள்ளைகளும் பாடசாலைக்கு வெளிக் கிட்டு போகிறார்கள்.

சேட்டைப் போட்டேன் யாழ்ப்பாணம் போகவென்று மீதப்படுத் திவைத்திருந்த காசை எடுத்தேன். பலவீனமான எங்களின் பலம் வாய்ந்த ஆயுதங்களான கரும்புலிகளை எண்ணிக் கொண்டு அந்தப்புள்ளையின் போட்டோவுடன் கடைத் தெருவுக்கு நடந்தேன்.

கதிரவனும் தன் சம்மதத்தை ஒளி வெள்ளத்தால் தெரி வித்தான்...

சூரியப்புதல்வர்கள் 2003

# அமெரிக்காவிற்கு ஆயுத பற்றாக்குறை! ஈரானுக்கு எதிரான போர் எதுவரை?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



08.03.2026

ஈரானுக்கு எதிரான போரில் போதுமான ஆயுதங்களை விநியோகிக்க முடியாமல் பென்டகன் அதிகாரிகள் தடுமாறிவரும் நிலையில், அமெரிக்க ஆயுத உற்பத்தி நிறுவனங்களிடம் ஜனாதிபதி டிரம்ப் மேலதிக விநியோகத்திற்கு கோரிக்கை வைத்துள்ளார். 2026 மார்ச் தொடக்கத்தில் ஈரான் மீதான தாக்குதல்களை (Operation Epic Fury) அமெரிக்கா தொடங்கியுள்ள நிலையில், இந்த நீண்ட காலப் போரில் ஆயுதப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் இருப்பதாக அமெரிக்க ராணுவத்



தலைமையகம் (Pentagon) மற்றும் பாதுகாப்பு வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ஈரானில் ஒரு வாரத்திற்கு முன்பு போர் தொடங்கியதிலிருந்து, மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கப் படையினரின் தாக்குதல் மற்றும் தற்காப்புப் பணிகளில் ஆயிரக்கணக்கான ஏவகணைகளைப் பயன்படுத்தி, ஈரானில் 2,000 க்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கியுள்ளன. ஈரான் மீது டோமேஹொக் (Tomahawk) குரூஸ் ஏவுகணைகள் மழையாக பொழிந்து வருறது. இந்த நிலையில் பதிலடியாக ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் ஷாஹேத் ட்ரோன்களை வளைகுடா நாடுகள் மீது ஏவி பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது.

ஆனாலும் அமெரிக்காவிடம் மற்ற வகை ஆயுதங்கள் ஏராளமாக இருந்தாலும், ஈரானின் ஏவுகணை, ட்ரோன் தாக்குதல்களைத் தடுப்பதற்கான நவீன ஏவுகணைத் தடுப்பு அமைப்புகளில் (Interceptors) தற்காலிக பற்றாக்குறை ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. இந்த நிலை நீடித்தால், சவுதி, ஐக்கிய அரபு இராச்சியம், கத்தார், குவைத், பஹ்ரேன் போன்ற நாடுகள் மீதான பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

**ஈரானுக்கு எதிரான போர் எதுவரை தொடரும் என்பதை அமெரிக்க அதிபர் இதுவரை திட்டவட்டமாக தெரிவிக்கவில்லை. ஆரம்பத்தில் ஈரானில் ஆட்சி மாற்றம் வரும் வரை என்றும் தெரிவித்தார். பின்னர் ஈரானின் புதிய தலைவரை தானே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று டிரம்ப் வலியுறுத்தினார். இந்த நிலையில் அமெரிக்காவிற்கு ஆயுத பற்றாக்குறை இருப்பதாக டிரம்ப் அறிவித்துள்ளார்**

## அமெரிக்கவுக்கு ஆயுத பற்றாக்குறை?

போர் தற்போது இரண்டாவது வாரத்திற்குள் நுழையும் நிலையில், அமெரிக்காவால் இந்தப் பிராந்தியத்தில் தனது நட்பு நாடுகளுக்கு ஆயுதம் வழங்க முடியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. மேலும் ஈரானின் தொடர்ச்சியான தாக்குதலிலிருந்து பாதுகாப்பை வழங்க முடியுமா என்பது குறித்த கவலைகள் அதிகரித்து வருகின்றன.

மார்ச் 2026 கள நிலவரப்படி வான் பாதுகாப்பு ஏவுகணைகள் (Air Defense Interceptors - THAAD (Terminal High Altitude Area Defense) மற்றும் பட்ரியோட் (Patriot) ஏவுகணைகள் அடங்கிய முக்கிய ஆயுதப் பற்றாக்குறைகள் ஏற்படும் அபாயத்தில் உள்ளன. ஜூன் 2025இல் நடந்த 12 நாள் போரிலேயே அமெரிக்கா தனது தாட் தடுப்பு ஏவுகணை கையிருப்பில் 25% ஐப் பயன்படுத்தியது. இந்த ஏவுகணைகளைத் தயாரிக்க 2 ஆண்டுகளுக்கும் மேலாகும் என்பதால், புதிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் துல்லியமான வழிகாட்டுதல் குண்டுகள் (Precision-Guided Munitions - Joint Direct Attack Munitions (JDAMs) போன்ற நவீன ஆயுதங்கள் தொடர் பயன்பாட்டால் குறைய வாய்ப்புள்ளது. நீண்ட தூர ஏவுகணைகளுக்கும் (Long-Range Missiles) தேவையான அளவு இல்லை என்று கூறப்படுகிறது. டொனால்ட் டிரம்ப் இது பற்றி எச்சரிக்கை விடுத்துள்ளார். நடுத்தர மற்றும் மேல்-நடுத்தர ரக ஆயுதங்கள் போதுமானதாக இருந்தாலும், அதிநவீன ஆயுதங்கள் (Highest-end Weapons) தங்களுக்குத் தேவையான அளவுக்கு இல்லை என்று ஏமாற்றத்துடன் கூறியுள்ளார்.

வளைகுடாவில் போரின் தீவிரம் குறையாவிட்டால், அமெரிக்காவின் இராணுவத் தொழிற்துறை கையிருப்பை வேகமாக நிரப்ப முடியாமல் போகலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர். இதனால் பொருளாதார மற்றும் உற்பத்தித் திறன் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரானின் எதிர்பாராத பதிலடியால் அமெரிக்கா முன்னெடுத்துள்ள போருக்கு போதுமான ஆயுதங்களை வழங்க முடியாமல் பென்டகன் அதிகாரிகள் திணறுவதாக ஏற்கனவே தகவல் கசிந்துள்ளது. அமெரிக்கா ஈரான் முழுவதும் ஆயிரக்கணக்கான இலக்குகளைத் தாக்கியுள்ளது, மேலும் இஸ்ரேலுடன் இணைந்து, அயத்துல்லா அலி கொமேனி உட்பட நாட்டின் உயர்மட்டத் தலைவர்களில் பெரும்பாலோரைக் கொன்றுள்ளது. ஆனால் ஒப்ரேஷன் எபிக் ப்யூரி ஏற்கனவே அமெரிக்காவின் ஏவுகணை இருப்பை பாரியளவில் குறைத்து விட்டது என்றே தகவல் கசிந்துள்ளது.

## ஏவுகணை உற்பத்தி அதிகரிப்பு:

வளைகுடா நாடுகளுக்கும் உக்ரைனுக்கும் பல முனைகளில் தங்களைத் தற்காத்துக் கொள்ள போதுமான ஏவுகணைகள் அமெரிக்காவிடம் இல்லை என ஐரோப்பிய ஒன்றிய பாதுகாப்பு ஆணையாளர் எச்சரித்துள்ளார். இதனிடையே, அமெரிக்காவால் ஒரு போரை நீண்ட காலத்திற்கு நீட்டிக்க முடியும் என்ற உறுதிமொழிகளை டிரம்ப் அளித்த போதிலும், நிலைமையை அவர் நன்கு அறிந்திருப்பதாகத் தெரிகிறது.

கடந்த வார இறுதியில் Lockheed Martin, Northrop Grumman Corporation, RTX , Honeywell and L3Harris Technologies ஆகிய பெரும் ஆயுத உற்பத்தி நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகளை வெள்ளை மாளிகைக்கு அழைத்து இந்த விவகாரம் தொடர்பாக அதிபர் டிரம்ப் விவாதித்துள்ளார். அவர்கள் ஏவுகணை உற்பத்தியை அதிகரிப்பதாக உறுதியளித்துள்ளனர். இந்த நிறுவனங்கள் அனைத்தும் உற்பத்தியை நான்கு மடங்காக அதிகரிக்க ஒப்புக்கொண்டதாகவே டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஈரான் போருக்கான ஆயுதங்களை வாங்க காங்கிரஸில் கூடுதல் நிதியைக் கோருவதையும் டிரம்ப் பரிசீலிக்க இருக்கிறார். $50 பில்லியன் டொலர் நிதியதுக்கீடு கிடைத்தால்






உற்பத்தி உடனடியாகத் தொடங்கலாம் என்றும் அந்த நிறுவனங்கள் கோரிக்கை வைத்துள்ளது.

## அமெரிக்காவின் நிலைப்பாடு:

ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை அமெரிக்காவும் இஸ்ரேலும் தீவிரப்படுத்தியுள்ளதால் வெடிமருந்துகள் மற்றும் ட்ரோன்கள் விரைவாகக் குறைந்து வரும் நிலையில் இரு நாடுகளுக்கும் ஆயுத பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை ஒப்புக் கொண்டுள்ள.

அமெரிக்காவிடம் வரம்பற்ற ஆயுத இருப்பு உள்ளதாகவும், ஈரானை வீழ்த்த போதுமான ஆயுதங்கள் இருப்பதாகவும் முன்னர் டிரம்ப் கூறியிருந்தார். பாதுகாப்பு மந்திரி பீட் ஹெக்செத், எங்களிடம் ஆயுதப் பற்றாக்குறை இல்லை ஈரான் எங்களைவிட அதிக காலம் நீடிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 12 நாட்கள் நடந்த போரில் 500க்கும் உற்பட்ட

ஏவுகணைகள் மற்றும் ஏராளமான ட்ரோன்களை ஏவி தாக்குதல்களை நடத்தியது. ஆனால் ஈரான் இம்முறை பாரிய அளவுக்கு எதிர் தாக்குதல் நடத்துகிறது. நூற்றுக்கணக்கான ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களுக்கு எதிராக அமெரிக்க மற்றும் இஸ்ரேல் படைகள் பெரிய அளவிலான பாதுகாப்பை அமைத்துள்ளதாக அமெரிக்க மத்திய கட்டளை தெரிவித்துள்ளது.

ஈரானுக்கு அருகில் அமைந்துள்ள வளைகுடா நாடுகளில் மட்டுமே பல இலக்குகளை ஈரானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களால் தாக்க முடிந்ததாக கூறப்படுகிறது. ஈரானின் ஏவுகணை ஏவுதளங்கள், ட்ரோன் உள்கட்டமைப்புகள் விமானத் தளங்கள் உள்ளிட்ட முக்கிய இராணுவத் தலைமையகங்கள் மற்றும் இராணுவத் தளங்கள் குறிவைத்து தாக்கி அழிக்கப்பட்டன என அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஈரானின் பதிலடி திறன்:

இம்முறை போர் தொடங்கியதும் ஈரானின் பதிலடி கொடுக்கும் திறனைக் கட்டுப்படுத்துவதையே முதல் நோக்கமாக இஸ்ரேல் மற்றும் அமெரிக்கப் படைகள் வைத்திருந்தன.

இந்நிலையில், கடுமையான மற்றும் துல்லியமான தாக்குதல்கள் இன்னும் சில நாட்களுக்குத் தடையின்றி தொடரும் என்றும், மத்திய கிழக்கு முழுவதும், உலகம் முழுவதும் அமைதி என்ற இலக்கை அடையும் வரை ஈரான் மீதான போர் நடவடிக்கை தொடரும் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

குறைந்த அச்சுறுத்தல்களை இடைமறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள பேட்ரியாட் ஏவுகணைகளைப் பயன்படுத்தியே ஈரானின் தாக்குதல்களை நடுவானிலேயே இடைமறித்து அமெரிக்கா அழித்து வருகிறது.

அதே நேரத்தில் பூமியின் வளிமண்டலத்துக்கு வெளியே உள்ள பாலிஸ்டிக் ஏவுகணைகளையும் துல்லியமாக அழிக்கும் திறனுடைய ஸ்டாண்டர்ட் SM-3 ஏவுகணைகளையும் அமெரிக்கா பயன்படுத்தியுள்ளது. அத்துடன் டோமாஹாக் க்ரூஸ் ஏவுகணைகளையும் ஏவி ஈரானின் முக்கிய இலக்குகளை அமெரிக்கா அழித்துள்ளது. இந்தச் சூழலில் கூடுதல் ஏவுகணைகள் மற்றும் வான் பாதுகாப்பு இடைமறிப்பான்களை மத்திய கிழக்கு பகுதிக்கு தொடர்ந்து அனுப்ப அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ஏற்கெனவே ஆபரேஷன் ரஃப் ரைடர் என்ற பெயரில் ஏமனில் ஹவுதி தீவிரவாதிகளுக்கு எதிராகவும் நைஜீரியாவில் கிறிஸ்துவர்களை இனப் படுகொலை செய்யும் பயங்கரவாதிகளுக்கு எதிராகவும் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களைப் போலவே ஈரான் மீதான Operation Epic Fury என்ற போர் நடவடிக்கையிலும் புதிய இராணுவ யுக்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈரானின் துறைமுகங்கள் அழிக்கப்பட்ட நிலையில் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்த நிலையில் டிரம்ப் இன்னும் சில வாரங்களுக்குப் போர் நீடிக்கும் என்று அறிவித்துள்ளார். இந்த சூழலில் ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்படாமல் போர் நிறுத்தம் ஏற்பட்டால், இஸ்ரேலுக்கு ஒரு இக்கட்டான சூழல் ஏற்படும் என்று பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகிறார்கள்.




கடந்த மூன்று ஆண்டுகளாக, ஹமாஸ், ஈரான், ஹிஸ்புல்லா, ஹவுதி என தொடர்ந்து போர்க்களத்திலேயே இருக்கும் இஸ்ரேலுக்கு ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை இடைமறித்து அழிக்கும் ஆயுதங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

இந்த போர்களுக்கு எல்லாம் காரணம் ஈரான் என இஸ்ரேலிய அரசு கூறுகிறது. இதனாலேயே அங்கு ஆட்சியை மாற்றி, மேற்குலக - அமெரிக்க சார்பு அரசை கொண்டுவர டெல்அவிவ் முயற்சி செய்கிறது.




www.sangathamil.ca

# ஈழத்தமிழர் வரலாறும் வாழ்வியலும்
# (Eelam Tamils History and Life)

– சு.லோஜிதன்–

**முன்னுரை**

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைத் தங்களின் பூர்வீகத் தாயகமாகக் கொண்டு வாழும் தமிழ் பேசும் மக்கள் **"ஈழத்தமிழர்"** என அழைக்கப்படுகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொன்மையான வரலாற்றைக் கொண்ட ஈழத்தமிழர்கள், தமக்கெனத் தனித்துவமான கலை, கலாச்சாரம் மற்றும் அரசியல் அடையாளத்தைக் கொண்டுள்ளனர். இவர்களின் வரலாறு என்பது வீரமும், அறிவும், இடப்பெயர்வும், அசாத்தியமான மீண்டெழும் பண்பும் (Resilience) கலந்த ஒரு நீண்ட நெடும் பயணமாகும்.



ஈழத்தமிழர்களின் வரலாறு சங்க காலத்திலிருந்தே தொடங்குகிறது. இலங்கையின் ஆதிக்குடிகளில் ஒருவராகத் தமிழர்கள் திகழ்ந்தனர் என்பதற்குப் பல்வேறு தொல்பொருள் சான்றுகள் உள்ளன. கி.பி. 13ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை இலங்கையின் வடக்கே **யாழ்ப்பாண அரசு** (Jaffna Kingdom) ஒரு சுதந்திரமான இறையாண்மை கொண்ட அரசாகத் திகழ்ந்தது. நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆரியச்சக்கரவர்த்திகள் இதனை ஆண்டனர். இந்த அரசு தமக்கெனத் தனி நாணயம், கொடி மற்றும் நிர்வாக அமைப்பைக் கொண்டிருந்தது.

ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பிறகு, அதுவரை தனித்தனியாக இருந்த தமிழ் மற்றும் சிங்கள அரசுகள் நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கப்பட்டன. 1948இல் இலங்கை பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது, அதிகாரப் பகிர்வில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும், 'சிங்களம் மட்டும்' சட்டமும் பல தசாப்த கால ஆயுதப் போராட்டங்களுக்கு வித்திட்டன.

ஈழத்தமிழர்களின் வாழ்வியலில் **தமிழ் மொழி** என்பது வெறும் தொடர்பு சாதனமல்ல, அது அவர்களின் உயிர் மூச்சாகும். ஈழத்துத் தமிழ், தமிழ்நாட்டின் தமிழிலிருந்து உச்சரிப்பிலும் சொல்லாடலிலும் சற்று மாறுபட்டது. 'யாழ்ப்பாணத் தமிழ்' பழங்கால செந்தமிழ் சொற்களை இன்றும் புழக்கத்தில் வைத்திருக்கும் சிறப்பைக் கொண்டது.

**கல்வி** என்பது ஈழத்தமிழர்களின் சமூகக் கட்டமைப்பின் மிக முக்கியமான தூண். பிரித்தானியர் காலத்தில் இருந்தே கல்வியில் சிறந்து விளங்கிய இவர்கள், அறிவையே தங்களின் பெரும் சொத்தாகக் கருதினர். இதற்குச் சான்றாகத் திகழ்ந்தது யாழ்ப்பாணப் பொது நூலகம். இது ஒரு காலத்தில் ஆசியாவிலேயே மிகப்பெரிய மற்றும் மிகச்சிறந்த நூலகங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. 1981இல் இந்த நூலகம் எரிக்கப்பட்டது ஈழத்தமிழர்களின் அறிவுப் பாரம்பரியத்தின் மீது நடத்தப்பட்ட பெரும் தாக்குதலாக இன்றும் நினைவு கூரப்படுகிறது.

**ஈழத்தமிழர்களின் கலைகள் அவர்களின் மண்ணின் மணத்தைப் பிரதிபலிப்பவை**

- **நாட்டுக்கூத்து:** யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மட்டக்களப்பு மற்றும் மன்னார் பகுதிகளில் இன்றும் உயிர்ப்புடன் இருக்கும் கூத்துக்கலை, இவர்களின் வீரத்தையும் வரலாற்றையும் பறைசாற்றுகிறது.
- **சைவமும் தமிழும்:** ஈழத்தமிழர்களின் வாழ்வில் ஆன்மீகம் முக்கியப் பங்கு வகிக்கிறது. 'ஈழத்துச் சிவம்' என அழைக்கப்படும் நிலப்பரப்பில் அமைந்துள்ள திருக்கோணேசுவரம், திருக்கேதீசுவரம் போன்ற ஆலயங்கள் இவர்களின் தொன்மைக்குச் சான்றுகள்.
- **உணவு முறை:** ஒடியல் கூழ், யாழ்ப்பாணக் கறித்தூள் மணக்கும் குழம்புகள் மற்றும் பனம்பொருள் சார்ந்த உணவுகள் இவர்களின் தனித்துவமான அடையாளங்கள்.

1983ஆம் ஆண்டு நிகழ்ந்த 'கருப்பு ஜூலை' (Black July) வன்முறை ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை. போரின் காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் கனடா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவுக்கு அகதிகளாகப் புலம்பெயர்ந்தனர். இன்று உலகெங்கும் பரவி வாழும் ஈழத் தமிழர்கள் (Eelam Diaspora), தாங்கள் வாழும் நாடுகளில் அரசியல், அறிவியல், இலக்கியம் மற்றும் கலைத்துறைகளில் பெரும் சாதனையாளர்களாகத் திகழ்கின்றனர். சர்வதேச அரங்கில் தமிழ் மொழியின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதில் இவர்களின் பங்கு மகத்தானது.

2009இல் முடிவுக்கு வந்த நீண்டகாலப் போருக்குப் பிறகு, ஈழத்தமிழர்கள் தற்போது இக்கட்டான ஒரு காலகட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர். பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுதல், காணாமல் போனோர் விவகாரம், அரசியல் தீர்வு இன்மை மற்றும் பொருளாதாரச் சிக்கல்கள் எனப் பல சவால்கள் அவர்கள் முன் உள்ளன. இருப்பினும், சிதைந்த நகரங்களை மீண்டும் கட்டியெழுப்புவதிலும், கல்வியின் மூலம் அடுத்த தலைமுறையை நிலைநிறுத்துவதிலும் அவர்கள் காட்டும் ஆர்வம் வியக்கத்தக்கது.

**முடிவுரை**

ஈழத்தமிழர்களின் வரலாறு என்பது வெறும் துயரம் சார்ந்தது மட்டுமல்ல; அது அடக்க முடியாத ஆற்றல் மற்றும் மீண்டெழும் வலிமை (Resilience) சார்ந்தது. காலனியாதிக்கத்திற்கும், உள்நாட்டுப் போருக்கும், இடப்பெயர்வுக்கும் முகம் கொடுத்து, இன்றும் தங்களின் அடையாளத்தை இழக்காமல் வாழும் ஈழத்தமிழர்கள், உலகத் தமிழினத்தின் பெருமைமிக்க ஒரு அங்கமாவர். கடல்கடந்து சென்றாலும் தங்கள் மொழியையும், பண்பாட்டையும் பாதுகாப்பதில் அவர்கள் காட்டும் உறுதி, வரும் தலைமுறைக்கு ஒரு சிறந்த பாடமாகும்.

**நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# ஈரானின் தலைமைத்துவ வீழ்ச்சி: மத்திய கிழக்கு அதிகார சமநிலையில் மாற்றம்?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

04.02.2026



தொடர்ந்து விடாமல் தாக்கும் இஸ்ரேலின் அதிரடியால் ஈரானின் புதிய பாதுகாப்பு அமைச்சரும் கொல்லப்பட்டுள்ளார். அவர் பதவியேற்ற இரு நாட்களில் இந்த சம்பவம் நடந்துள்ளது. அமெரிக்கா-இஸ்ரேல் இணைந்த தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய கிழக்கு முழுவதும் போர் தீவிரமடைந் துள்ளது. வளைகுடாப் பகுதியில் சமீப ஆண்டுகளில் இதுவே மிகக் கடுமையான மோதலாக கருதப்படுகிறது.

## ஈரானின் உயர்மட்ட தலைவர்கள் கொலை:

அமெரிக்கா-இஸ்ரேல் படைகள் மற்றும் ஈரான் இடையே நேரடி மோதல் அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்கா ஈரானின் அரசாங்க மற்றும் இராணுவ இலக்குகளை தாக்கியுள்ளன. இதற்கு பதிலடியாக, ஈரான் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதால், இந்த மோதல் ஒரு பிராந்தியப் போராக மாறி உள்ளது.

கடந்த சனிக்கிழமை தொடங்கிய இந்தப் போரில் ஈரானில் இது வரை 1100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. இதுவரை 176 குழந்தைகள் உட்பட 1100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக கூறப் படுகிறது. மேலும் 900-க்கும் அதிகமான பொதுமக்கள் காய மடைந்துள்ளனர்.

இதனிடையே ஈரானின் பாதுகாப்பு அமைச்சர் அமீர் நசீர்சாதே கொல்லப்பட்டதாகக் கூறப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு, புதிய பாதுகாப்பு அமைச்சர் சையத் மஜித் எப் அல்-ரேசா நிய மிக்கப்பட்டார். இந்த நிலையில், புதிய அமைச்சரும் இஸ்ரேலிய தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

சனிக்கிழமை நடந்த தாக்குதல்களில் நசீர்சாதே மற்றும் புரட் சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் இருவரும் கொல்லப் பட்ட நிலையில் தற்போது ஈரானின் புதிய அமைச்சரும் கொல் லப்பட்ட சம்பவம் ஈரானில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

## அமெரிக்க தாக்குதல் ஏன்?

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், “ஒபரேஷன் எபிக் ஃப்யூரி” (Operation Epic Fury) என பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கை, ஈரானின் அணு மற்றும் ஏவுகணை திட்டங்களால் உருவாகும் உடனடி அச்சுறுத்தல்களை தடுக்கவே மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

ஈரானுடன் நடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததற்குக் காரணம், அணு எரிபொருள் செறிவூட்டுவது தங்களின் “மாற்ற முடியாத உரிமை” என்று ஈரான் வலியுறுத்தியதே என தெரி வித்தனர். ஈரான் சுமார் 60% செறிவூட்டப்பட்ட 460 கிலோ கிராம் யூரேனியத்தை வைத்திருப்பதாகவும், அதனை பயன் படுத்தி சுமார் 11 அணு குண்டுகள் உருவாக்க முடியும் என்றும் அமெரிக்காவின் சிறப்பு தூதர் ஸ்டிவ் விட்கோவ் (Steve Witkoff) தெரிவித்துள்ளார். இதற்கு பதிலாக, தங்களின் அணு நடவடிக் கைகள் முழுவதும் அமைதியானவை என ஈரான் மறுத்தது. மேலும் சர்வதேச நிலைப்பாட்டை ஈரான் ஏற்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை அமெரிக்கா-இஸ்ரேல் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஈரான் இஸ்ரேல் மீது, வளைகுடா பகுதி களில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மீது, ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதனால், முழு மத்திய கிழக்கு பகுதியில் பெரிய அளவிலான போர் அச்சம் எழுந்துள்ளது.

இந்த மோதல் உலகளாவிய எரிசக்தி விநியோகத்தையும் பாதித் துள்ளது. தினமும் சுமார் இரண்டு கோடி பீப்பாய் எண்ணெய் கடந்து செல்லும் முக்கிய வழியான ஹார்முஸ் நீரிணையில் ஈரான் எடுத்த நடவடிக்கைகள், உலகம் முழுவதும் எண்ணெய் விலை உயர்வு மற்றும் பொருளாதார அதிர்வுகளை ஏற்படுத்தும் என்ற கவலையை அதிகரித்துள்ளது.

## தொடரும் தொடர் தாக்குதல்கள்:

ஈரான் ஏவுகணை உற்பத்தி ஆலைகள் மீது அமெரிக்க போர் விமானங்கள் தொடராக தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரானில் பூமிக்கு அடியில் சுமார் 1,600 அடி ஆழத்தில் செயல் படும் ஏவுகணை உற்பத்தி ஆலைகளை குறி வைத்து அமெரிக்க விமானப் படையின் அதிநவீன பி-2 போர் விமா னங்கள் தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஈரானின் பல்வேறு பகுதிகளில் பூமிக்கு அடியில் சுமார் 1,600 அடி ஆழத்தில் ஏவுகணை உற்பத்தி ஆலைகள் செயல்படு கின்றன. இவை ஏவுகணை நகரங்கள் என்று அழைக்கப் படுகின்றன.

அமெரிக்கா, இஸ்ரேல் உளவுத் துறை தகவல்களின்படி ஈரான் தலைநகர் டெஹ்ரான், கெர்மன் ஷா, செம்னான் உள்ளிட்ட பகுதிகளில் பூமிக்கடியில் சுமார் ஐந்து ஏவுகணை ஆலைகள் செயல்பட்டு வருவதாக தெரிகிறது.

இந்த ஆலைகளை போர் விமானங்களில் இருந்து வீசப்படும் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளால் அழிக்க முடியாது. சில நூறு அடி ஆழத்துக்கு பூமியை துளைத்துச் சென்று, பின்னர் வெடித் துச் சிதறும் அதிநவீன வெடிகுண்டுகளால் மட்டுமே அழிக்க முடியும்.

அந்த வகையில் அமெரிக்காவிடம் ஜிபியு - 57 என்ற சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் உள்ளன. இந்த வெடிகுண்டுகள் பூமியை துளைத்துச் சென்று, வெடித்துச் சிதறும் தன்மை கொண்டவை. 20.5 அடி நீளம், 2.6 அடி விட்டம், 14,000 கிலோ எடை கொண்ட ஜிபியு - 57 வெடிகுண்டுகளை அமெரிக் காவின் எப் - 16, எப் - 22, எப் - 35 உள்ளிட்ட அதிநவீன போர் விமானங்களால் சுமந்து செல்ல முடியாது.

ஆதரால் அமெரிக்க விமானப் படையின் பி-2 ரக போர் விமானத்தால் மட்டுமே ஜிபியு -57 வெடிகுண்டுகளை சுமந்து செல்ல முடியும். ஒரு பி-2 போர் விமானத்தில் 2 ஜிபியு -57 வெடிகுண்டுகளை மட்டுமே பொருத்த முடியும்.

ஈரான் இராணுவத்தின் மிகப்பெரிய பலமாக ஏவுகணைகள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஈரான் நாட்டிடம் 300 கி.மீ. முதல் 3,000 கி.மீ. தொலைவு வரை பாயும் திறன் கொண்ட ஏவுகணைகள் உள்ளன. இந்த ஏவுகணைகள் மூலமாக இஸ் ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மீது ஈரான் இராணுவம் தொடர் தாக்கு தல்களை நடத்தி வருகிறது.

இதை முறியடிக்க ஈரானின் ஏவுகணை உற்பத்தி ஆலைகள் மற்றும் சேமிப்பு கிடங்குகளை முழுமையாக அழிக்க அமெரிக்க இராணுவம் திட்டமிட்டு உள்ளது. இதற்காக அமெரிக்காவில் இருந்து நான்கு பி-2 போர் விமானங்கள் வரவழைக்கப்பட்டு உள்ளன.

172 அடி அகலம், 69 அடி நீளம் கொண்ட பி-2 போர் விமானங்களை இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க விமானப் படைத் தளங்களில் தரையிறக்க முடியாது. அமெரிக்காவின் மிசோரியில் உள்ள வொயிட்மேன், குவாமில் உள்ள ஆண்டர்சன் விமானப் படைத் தளங்களில் மட்டுமே பி-2 போர் விமானங்களை கையாள முடியும்.

இவை தவிர இந்திய பெருங்கடலில் அமெரிக்கா, பிரிட்டன் இணைந்து நிர்வகிக்கும் டியாகோ கார்சியா தீவில் உள்ள விமானப் படைத் தளம், பிரிட்டனின் குளோஸ்டர்ஷையர் விமானப் படைத் தளத்தில் மட்டுமே பி-2 விமானத்தை தரை யிறக்க முடியும். ஆனால் இந்த விமானப் படைத் தளங்களை அமெரிக்கா பயன்படுத்த பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் முதலில் அனுமதி வழங்க மறுத்ததாகவும், 48 மணி நேர கால தாமதத்துக்குப் பிறகு அனுமதி வழங்கியதாகவும் கூறப் படுகிறது.

தற்போது குளோஸ்டர்ஷையர், டியாகோ கார்சியா தளங்களில் இருந்து பி-2 போர் விமானங்கள் புறப்பட்டு ஈரானின் ஏவு கணை ஆலைகள் மீது ஜிபியு - 57, ஜிபியு - 30, பிஎல்யு-109 ரக வெடிகுண்டுகளை வீசி வருகின்றன.

ஈரானின் ஏவுகணை ஆலைகள் எந்தெந்த இடங்களில் உள் ளன என்பது குறித்து இதுவரை உறுதியான தகவல்கள் கிடைக் கவில்லை. உளவுத் துறை அளித்துள்ள தகவல்களின் அடிப் படையில் டெஹ்ரான் உள்ளிட்ட சில பகுதிகளை குறிவைத்து பி-2 போர் விமானங்கள் குண்டுகளை வீசி வருகின்றன என அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

## ஈரான் அணு சக்தி நிலையங்கள் மீது தாக்குதல்:

இந்த சூழலில் ஈரானின் நடான்ஸ் அணு சக்தி தளம் மீது தாக் குதல் நடத்தப்பட்டிருப்பதை சர்வதேச அணு சக்தி அமைப்பு உறுதி செய்துள்ளது. இதுகுறித்து வெளியிட்ட பதிவில், “நடான்ஸ் அணு சக்தி தளம் தொடர்பான செயற்கைக்கோள் புகைப்படங்களை ஆய்வு செய்தோம். இதில் அணு சக்தி தளத் தின் நுழைவு வாயில் கட்டிடங்கள் சேதமடைந்திருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. எனினும், நடான்ஸ் தளத்தில் அணு கதிர்வீச்சு அபாயம் எழவில்லை. வேறு பாதிப்புகளும் கண்டறியப்படவில்லை” என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து சர்வதேச அணு சக்தி அமைப்புக்கான ஈரான் தூதர் ரெசா நஜாபி கூறும்போது, “அணு சக்தியை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி வருகிறோம். ஆனால், எங்களது நடான்ஸ் அணு சக்தி தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இதனால் அணு கதிர்வீச்சு அபாயம் எழுந்திருக்கிறது” என்று தெரி வித்தார்.

கடந்த ஆண்டு ஜூனில் ஈரானின் நடான்ஸ், போர்டோ அணு சக்தி தளங்கள், டெஹ்ரானில் உள்ள அணு சக்தி ஆராய்ச்சி மையம், இஸ்பகான் நகரில் உள்ள அணு சக்தி தொழில்நுட்ப மையம், அராக் நகரில் உள்ள கனநீர் அணு உலை மையம் ஆகியவை மீது அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இதில் ஈரானின் அணு சக்தி கட்டமைப்புகள் அழிக்கப்பட்டன. அவற்றை ஈரான் அரசு புனரமைத்து, அணு சக்தி திட்டங்களை முன்னெடுத்துச் சென்றது. இந்த சூழலில் நடான்ஸ் அணு சக்தி தளம் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது

மத்திய கிழக்கு முழுவதும் போர் தீவிரமடைந்துள்ள சூழலில், வளைகுடாப் பகுதியில் சமீப ஆண்டுகளில் இதுவே மிகக் கடுமையான மோதலாக கருதப்படுகிறது. இதேவேளை ஈரானின் தலைமைத்துவ வீழ்ச்சியால் மத்திய கிழக்கு அதிகார சமநிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.





# புறநானூற்றைப் புரட்டினால், அங்கே எங்கள் தளபதி பிரபாகரன்!

பல தமிழர்கள் மறந்துவிட்ட ஒருபுத்தகம் பழந்தமிழரின் வீரப் பெட்டகமாகிய புறநானூறு. தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்யம் இவையுண்டு. தான் உண்டு. என்ற சின்ன தொரு கடுகு போல் உள்ளம் கொண்ட சிறியவர்களாகிப் போன வர்களின் குருதி ஓட்டத்தில் வீர உணர்ச்சி முழுமையாக விடுபட்டுப் போய்விட்டது. போகவே, புற நானூறு போன்ற வீர எழுச்சிப் புத்தகங்கள் அவர்களுக்குத் தேவையில்லை. என் னைப் பொறுத்த வரை. “வீரமே தமிழினத்தின் உயிர்மூச்சு, அது இருக்கும் வரையில் தமிழன், தன் இனமானம் காக்கும் தமிழ் மனிதனாக வாழ்கிறான், அதைத் துறந்துவிட்ட உட னேயே. அவன் வெற்றுடம்பாக வீழ்ந்து போகிறான். எனவே தமிழ் இன வழித்தோன்றலாகிய எனக்கு, வீரக் கனல் ஏற்றும் புறநானூறு அடிப்படைத் தேவைகளையும் மிஞ்சிய ஓர் உயிர்த் தேவை. அதைப் படிக்கிறேன். அடிக்கடி படிக்கிறேன்.

## ஒளியுடைய ஒருவன்!

ஒருநாள் அந்த வீர ஏட்டின் இதழ்களைப் புரட்டிக் கொண்டு இருந்தபோது. தமிழ் ஈழ விடுதலை மறவன் வே. பிரபாகரனைப் பற்றிய ஒரு பாட்டு, அப்போதே, அந்தப் புத்தகத் தில் வைர வரிகளால் வரையப்பட்டிருப்பது கண்டு வியப் படைந்தேன்! வீரம் என்பது காலம் கடந்தது. அது எப்போதும் ஒரே விதமாகத்தான் இருக்கிறது. அதை வெளிப்படுத்தும் வீரனைப் பற்றிய நெருப்புவரிப் பாட்டும் அன்றும், இன்றும், என்றும் ஒரே விதமாகத்தான் இருக்கிறது!

3000 ஆண்டுகளுக்கு முன்பே. இந்தப் பிரபாகர மறவனை முன்னுணர்ந்து புறநானூற்றுப் புலவன் பாடிய (புறம் 309 ஆம்) பாடல் இது. ஒரு போர்வீரன் தன்னுடைய வீரத் தளபதித் தலைவனைப் பற்றிச் சொல்லும் பாடல்,

“இரும்பு முகம் சிதைய நூறி
ஒன்னார் இருஞ்சமம் கடத்தல்
ஏனோர்க்கு எளிதே
நல்லரா உறையும் புற்றம் போலவும்
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்
மாற்றருந் துப்பின் மாற்றோர்
“பாசறை உளன்” என
வெரூஉம் ஓர் ஒளி
வலன் உயர் நெடுவேல் என்னைக் கண்ணதுவே!”

மற்றுள்ள புகழ்வாய்ந்த வீரர்களோடு தன் தலைவனை ஒப் பிட்டு பார்க்கிறான் இந்தப் போர்வீரன். அந்த வீரர்களும் களம் பல கண்ட காளைகளே. பல போர்முனைகளில் மாற்றாரை வென்று ஆர்ப்பரித்த மறவர்களே. ஆனாலும், இவனுடைய தலைவனுக்கு இருக்கின்ற ஒரு புகழ் அவர்களில் யாருக்கும் கிடைத்ததில்லை. கிடைத்ததாக அவன் கேள்விப்பட்டதில்லை.



அது என்னவென்றால் அந்த மறவர்களை எதிர்த்து அவர்களின் பகைவர்கள் போர் புரிவார்கள், தோல்வியடைவார்கள். இவர்கள் வெற்றி பெற்றுக் களிப்படைவார்கள். எனினும் அவர் களில் எவர் ஒருவரைக் கண்டும் பகைவர்கள், முன்வந்து போரிடாமல் முதுகு திருப்பி ஓடியதில்லை.

இவனுடைய தலைவனின் நிலையோ முற்றிலும் வேறுபட்டது. முழுமையான உயர்வு பெற்றது! இவனுடைய எதிரிகள் இவ னிடம் போருக்கு வந்து தோல்வி அடையவில்லை. போருக்கு வராமலே அவர்கள் தோல்வி அடைந்து போகிறார்கள்.

காரணம் இவன் பாசறையில் இருக்கிறான் என்றாலே ஒரு விதமான நடுக்கம் அவர்களின் உள்ளத்தில் கொடுக்காகக் கொட்டத் தொடங்கி விடுகிறது. அவன் போருக்கு வந்திருக் கிறானா? பாசறையிலே இருக்கிறானா? அவன் வந்து இருக் கிறான் என்றால், நம் கதி அதோகதிதான்! என்று அவனை நேரில் பார்ப்பதற்கு முன்பே. அஞ்சி நடுங்கி அலமருகிறார்கள்.

இதுதான் பகைவரை வெல்லுகின்ற மற்ற வீரர்களுக்கும் இவ னுடைய தலைவனாகிய அந்த மாவீரனுக்கும் உள்ள வேறு பாடு. இவன் பாசறைக்கு வந்திருக்கிறான் என்றாலே. இந்தப் பாசறையை “நல்லரா உறையும் புற்றம் போலவும் கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்” கருதி அஞ்சிப் பதைபதைக் கிறார்கள். அந்த எதிரிகள். அதாவது அவன் இருக்கிற பாசறையை நினைத்தால், நல்ல பாம்பு வசிக்கிற பயங்கரமான புற்றும், யாரையும் குத்திக் கொல்லுகிற கூரிய கொம்புகளோடு முரட்டுக் காளை ஒன்று வலம் வருகிற ஊர்ப் பொது இடமும் தான்(ஏறுதழுவுதல் நடக்கும் திடல்) அவர்களுக்கு நினைவுக்கு வருகின்றன. அவன் இருக்கிற பக்கம் நெருங்கி நடக்கவே அவர்கள் அஞ்சுகிறார்கள்!

வள்ளுவத்தலைவன் ஒருவன். தன்னுடைய வீரத்தைக் குறித்து (குறள் 1088) “ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு” என்று சொல்லிப் பெருமிதமடைகிறான். இவனை நினைத் தால். இவனோடு மோத முடியாது என்பது மட்டுமல்ல, நினைத்த மாத்திரத்திலேயே ஓர் அச்ச நடுக்கமும் அவனுடைய எதிரிகளுக்கு உண்டாகிறது. சற்றேறக்குறைய இதே நிலையில் தான் புறநானூற்று வீரனையும் அவனுடைய படைமறவன் காண்கிறான்.

## புகழ் ஒளி புதுக்கிய பிரபாகரன்...

இந்த செய்திகளை நினைக்கும் போது தமிழ் ஈழத் தளபதி, தம்பி -பிரபாகரன் தான் நம்முடைய நினைவிலே எழுந்து நிற் கிறான்.”

தமிழ் வரலாறு பல்லாயிரம் போர் மறவர்களைச் சந்தித்திருக் கிறது. அவர்களில் சில நூறு பேர்களாவது தத்தம் அளவில் இணை சொல்ல முடியாத தறுதண்மையாளர்களாக விளங்கிய வர்களே. இவர்களைப் பாராட்டும் நடுகற்களும், கல்வெட்டுக ளும், புகழ்ச்சிப் பாட்டுகளும் வெகு தாராளமாகவே உள்ளன. இடைக்காலத்திலே கூட, கங்கை கொண்டவன் என்றும் கடாரம் வென்றவன் என்றும் களப்பிரர் இருட்டைக் களைந் தெறிந்தவன் என்றும் பலபேர் இருந்திருக்கிறார்கள். இத்தனை பேர் ஆட்சி செய்து மாட்சிகள் விளைவித்த பின்னும் தமிழ் இனத்தின் தனிப்பெரிய வீரப்புகழ் உலகின் மற்றப் பகுதிகளில் சென்று படர்ந்து நிலைக்கவில்லை .

வெகு தொலைவில் உள்ள நாடுகளிலே மட்டுமல்ல, இந்தியா வில் விந்தியமலைக்கு வடக்கே உள்ள நிலப்பரப்பிலே கூடத் தமிழர்கள் தமிழர்களாக அறியப்பட்டிருக்கவில்லை. (இன் றைக்கும் வட இந்தியாக்காரர்கள் தமிழகத்துத் தமிழர்களை மதராசிகள் என்ற பெயரிலேயே அழைக்கிறார்கள்) மாண்பு யர்ந்த தமிழ் மொழி ஒன்று உள்ளது என்பதையே, மேலை நாட்டுப் பாதிரிமார்கள்தான் கண்டெடுத்து உலகுக்குச் சொல்ல வேண்டியிருந்தது. அந்த அளவுக்கு, தமிழினத்தின் இறங்குமுக வரலாறு தாழ்ந்து தாழ்ந்து தரைதட்டிக் கிடந்தது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ் இனம் என்ற ஒரு மக்கட் கூட்டம் இருக்கிறது என்கிற செய்தி உலக மக்களில் 100க்கு 99



பேருக்குத் தெரியாமலே இருந்தது. அண்மைக் காலமாக இங்கே ஆட்சிக் கட்டிலுக்குப் போட்டி போட்ட கட்சிக்காரர்கள், படுகேவலமான இந்தப் பச்சை உண்மையை மறந்துவிட்டு. புரட்சிக்கவிஞர் சொன்னது போல, “தோளிலே மிடுக்காம்? அவர் தொழுவதோ வடக்காம்!” என்ற பாணியிலேயே செயல்பட்டுக் கொண்டு திரிந்தார்கள். திசைகெட்ட இந்தத் திரிவின் விளைவாக, பல்லாயிரம் ஆண்டுகளாக மங்கிக் கொண்டு வந்த தமிழரின் இனமானம் இருளடைந்தே போய்விட்டது.

அந்தப் பெரிய இருட்டைக் கிழித்துக் கொண்டு கிழக்கிலே எழுந்தான் ஒரு மாந்தமிழ் மறவன். அவன்தான் பிரபாகரன், ஈழத் தமிழரின் விடுதலைப் போர்முனையை வெற்றித் திசையில் நடத்திவரும் தமிழர் தளபதி பிரபாகரன்!

சற்றே எண்ணிப் பாருங்கள், தாய்த் தமிழகத்திலே விடுதலை உணர்வு அநேகமாகப் புதைக்கப்பட்டுப் போன நிலையில் ஈழத் தமிழகத்தில் அது பிடர் சிலிர்த்து எழுந்தது. அந்த எழுச்சி பல்வேறு வடிவங்களாக உருமாறி உருமாறி, பிரபாகர வீரனின் தலைமையில் புலிப்படையாக மீசை முறுக்கியது.

நான் வீரன், நீ வீரன் என்று நாத் துடிக்கப் பேசிக் கொண்டு, ஈழத்திலும் வேறு சிலர் கிளம்பினார்கள். அவர்களெல்லாம் அரை வழியில் நின்று அந்நியர்களின் பைக்குள் அடக்கமாகிப் போன பிறகும், புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்னும் முழக்கோடு புறப்பட்டது புலிப்படை. வீர வித்தகன், தளபதி வே. பிரபாகரனின் தலைமைத் தடத்தில் நடைகொண்டது அந்தப் படை.

புறநானூற்றுப் பாடலிலே ஒரு போர்வீரன் சொன்னது போல, “இரும்பு முகம் சிதைய நூறி, ஒன்னார் இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே” என்று சொன்னது போல ஈழத்திலும் பலபேர் தங்களுக்குத் தாங்களே! “போராளிகள்” என்று பெயர் வைத்துக் கொண்டார்கள், அவர்களுக்கு ஆயுதங்களும் பயிற்சிகளும் ஆடம்பரச் செலவுக்குப் பணமும் தந்திட அண்டை நாட்டு நயவஞ்சகர்கள் காத்திருந்தார்கள்.

ஆனாலும் பிரபாகரப் பெருவீரன் தலையெடுத்த பிறகு தான். “தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அதற்கொரு குணம் உண்டு!” என்னும் தமிழத் தனிச்செய்தி உலகெங்கும் ஒலிக்கத் தொடங்கியது. பிரபாகரனின் புலிப்படை போர் முனைக்கு வந்தபிறகே, விடுதலை புலிகளைச் சாதாரணமாக நினைக்கக் கூடாது என்கிற அச்சம் கலந்த உணர்வு தமிழின் எதிரிகளுக்கு ஏற்பட்டது.



குறிப்பாக, இந்தியாவும் சிறீஇலங்கையும் ஓர் உலக்கைக் கொழுந்து ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு, போராளிகள் என்று பேர் வைத்துக் கொண்டு திரிந்த புல் பூண்டுகளை எல்லாம் கிள்ளி எடுத்துத் தங்கள் பெட்டிக்குள் போட்டுக் கொண்ட போதுதான். “தமிழனுக்கும் வீரம் உண்டு, அது எவனுக்கும் தலைவணங்காது” என்கிற வரலாற்றுப் பேருண்மை. பிரபாகரத் தீரனின் வடிவிலே ஒரு பெரிய புதிய உதயம் செய்தது.

இந்தியக் கொலைப்படை மட்டும் என் உதவிக்கு வராதிருந்தால் நான் பிரபாகரனின் காலில் விழநேர்ந்திருக்கும்” என்று புலம்பினான் சிங்கள ஆட்சித் தலைவன், “பிரபாகரனையும் அவனுடைய புலிப்படையையும் மட்டும் பிடித்து அடைத்துவிட்டால் தமிழ் ஈழ விடுதலைப் போருக்கே முற்றுப்புள்ளி வைத்து விடலாம்” என்று இன்றைக்கும் மனத்துக்குள் கொறித்துக் கொண்டு இருக்கிறது அமைதிப்படை என்ற பெயரிலே ஒரு அமளிப்படையைப் பிரபாகர வீரன் மேல் ஏவிவிட்ட இந்திய அரசாங்கம்!



## இருவரின் ஒரு வடிவம்

இத்தகைய ஓர் அச்ச உணர்வையும் குழப்பக் குதுகு குப்பையும் மாற்றார்க்கு ஏற்படுத்தியவர்கள், மற்றவர்களிலே மட்டுமல்ல, வீரத் தமிழர்களிலே கூட மிகமிகச் சிலரே. அந்த வரலாறு கூட 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட புற நானூற்றுக் காலத்திலேயே வற்றி நின்று விட்டது. புறம் 309 இல், “பாசறை உளன் என வெருஉம் ஓர் ஒளி” உடைய ஒரு மாவீரனைச் சந்தித்தோம். அவனையே போன்ற மற்றொரு வீரனைப் புறம் 31 ஆம் பாடலில் சந்திக்கிறோம். அவன்தான் புலவர் பாடும் வீரப் புகழால் ஓங்கிய மாவீரன் சோழன் நலங்கிள்ளி.

நலங்கிள்ளியின் படை கிழக்குக் கடற்கரை வழியாக. வெற்றி முழக்கமிட்டுக் கொண்டு தெற்கே நகர்ந்தது. தெற்கை வென்று அடக்கிய வீறுடன், சேர நாட்டில் புகுந்து அதையும் கைப்பற்றியது. பிறகு, அப்படியே மேற்குக் கரை வழியாக வடக்கே திரும்பும் நினைவுடன் சற்றே இளைப்பாறியது. இதைக் கேள்விப்பட்ட வடபுலத்து அரசர்கள், வந்து விட்டதே தமிழ்ப்படை என்று பதறியவர்களாகக் கண்ணுறங்காமல் கிடக்கிறார்கள். கோவூர் கிழார் என்னும் மேதைக் கவிஞன், நலங்கிள்ளியின் நினைப்பிலே வடபுலத்து அரசர்கள் துயில் மறந்து துவண்டு கிடப்பதைப் பின்வருமாறு சொல்லிப் பெருமைப்படுகிறான்.

“குணகடல் பின்னதாக,
குடகடல் வெண்தலைப் புணரி நின் மான்குளம்பு அலைப்ப
வலமுறை வருதலும் உண்டு என்று அலமந்து
நெஞ்சு நடுங்கு அவலம் பாய
துஞ்சாய் கண்ண, வடபுலத்து அரசே! “

அங்கே அவன் போர்க்களத்துக்கு வந்து பாசறையில் இருக்கிறான். நாம் இனிப் பிழைப்பது அரிது என்று அவனுடைய பகைவர்கள் அஞ்சிப் பதைத்தார்கள். இங்கே சோழனின் படை வடதிசை நோக்கித் திரும்பும் முன்பே. நம்மீது படையெடுத்து வந்து விடுவானோ! என்று உறங்காமல் கிடக்கிறார்கள் வடநாட்டு மன்னர்கள்.

இந்த இரண்டு வீரச் சித்திரங்களையும் நினைக்கிறேன். பிரபாகர மாவீரனை நினைத்து நினைத்து நெஞ்சு பதறும் சிங்கள அரசை நினைக்கிறேன். அதற்கு அடுத்த நிலையில் தன் ஏலாமையால் கருவிக் கொண்டு இருக்கும் இந்தியாவை ஆளும் கும்பலை நினைக்கிறேன். இந்த இருவரின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு தமிழ் ஈழத்தில் பதவி நாற்காலியில் அமர்ந்த பெருமான்கள் இந்தியப் படை திரும்பிச் செல்லுகிறது என்று அறிந்தவுடன், நடுநடுங்கிப் பதைப்பதைத்து நாக்குளறி ஏதேதோ புலம்பி அரற்றுவதையும் நினைக்கிறேன்.

## மீட்க வந்த பெரு வீரன்!

“பிரபாகர மாவீரனே! பாசறையில் இருந்தபடியே பகைவர்களின் இதயத்தில் அச்ச நடுக்கத்தைப் பாய்ச்சிய எங்கள் முன்னோரின் வழி வந்த இளையவனே! உன்னை நினைத்துப்பதறுகிற புல்லர் கூட்டத்துக்காக மிக மிக இரக்கப் படுகிறேன். இவர்கள் படுகிற பாட்டைப் பார்க்கிற போதுதான் பாசறை உளன் என்று மாற்றார்கள் வெருவிய அந்தக் காட்சி எப்படி இருந்திருக்கும் என்று புரிகிறது. சோழன் படையை நினைத்துக் கண்ணுறங்காமல் இரவைக் கழித்த வடபுலத்து அரசுகளின் அவல நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதும் விளங்குகிறது!

வீரத் தமிழ்த் தளபதி பிரபாகரா என் நெஞ்சிலும், என் போல் தமிழ்மானம் உடையவர்களின் நெஞ்சிலும் எவ்வளவு பெரிய இன்பத்தை ஏற்றி விட்டாய். அப்பனே! 3000 ஆண்டுகளாக முனை மழுங்கிக் கிடந்த தமிழ் வீரத்தை நினைத்து நினைத்துப் புலம்பினேன், மேற்கண்ட புறநானூற்றுப் புகழ் மறவர்களின் நினைவு வரும்போதெல்லாம். தமிழ் வீரத்தின் மீது ஒரு புதிய நம்பிக்கை வரப்பெற்று, “புதையுண்ட பழமரமும் வயிரமாகும். பொழிந்து உதிர்ந்த கருமேகம் வெள்ளமாகும்!” என்று புத்துயிர்ப்புப் பாடல் பாடி, எனக்கு நானே நம்பிக்கை ஏற்றிக் கொண்டேன்.

அந்த நம்பிக்கையின் வடிவாக வீர உதயம் செய்த என் இளவலே, இற்றைத் தமிழர் இதயம் தோறும் வீற்றிருக்கும் எங்கள் இனத்தின் தளபதியே. தமிழ் வீரமரபை மீட்டுக் கொணர்ந்த நீ தமிழனின் அனைத்துப் பெருமைகளையும் மீட்டுக் கொண்டு வரப் போகிறாய். அதை வரலாறு காணப் போகிறது. விரைவிலேயே காணப் போகிறது!

-வீரவேங்கை இதழ் சனவரி 1990.

# அமெரிக்க வெளியுறவு கொள்கையை தீர்மானிக்கும் யூத அரசியல் அமைப்புக்கள்!

**-ஐங்கரன் விக்கினேஸ்வரா -**

04.02.2026

தற்போது ஈரானை தாக்க வேண்டும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் முனைப்பாக உள்ளது இஷ்ரேலிய அரசு. யூத அமைப்புகள் என்ன சொல்கின்றனவோ அதனையே வாசிங்டன் அரசு செய்கிறது.



அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை, குறிப்பாக மத்திய கிழக்கு விவகாரங்களில், தீர்மானிப்பதில் யூத லாபிக்கள் (Israel Lobby/Pro-Israel Lobby) மிக முக்கிய மற்றும் சக்திவாய்ந்த அமைப்பாக பங்காற்றுகிறார்கள். இந்த அமைப்புக்கள் (லாபிக்கள்) அமெரிக்கா - இஸ்ரேல் இடையேயான உறவை வலுப்படுத்துவதையும், இஸ்ரேலுக்கு நிபந்தனையற்ற ஆதரவை அமெரிக்கா வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றனர்.

முக்கிய யூத லாபிக்கள் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை பின்வரும் முக்கிய அமைப்புகள் ஆதரிக்கின்றன. AIPAC (American Israel Public Affairs Committee): இந்த அமைப்பு அமெரிக்காவின் மிகவும் செல்வாக்கு மிக்க லாபி குழுவாகும். இது இருகட்சி ஆதரவுடன் (Bipartisan) செயல்பட்டு, காங்கிரஸில் இஸ்ரேலுக்கு ஆதரவான சட்டங்களை நிறைவேற்ற அழுத்தம் கொடுக்கிறது.

அமெரிக்காவில் இஸ்ரேலுக்கு ஆதரவான லாபிகளில் முதன்மையானது AIPAC ஆகும். இவர்களது பலம் என்பது வெறும் பேச்சில் இல்லை, அது அவர்களது பணத்தில் தான் உள்ளது என்பதை காட்டுகிறது.

அமெரிக்கத் தேர்தல்களில் தங்களுக்கு ஆதரவான வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய AIPAC மற்றும் அதனுடன் தொடர்புடைய Super PACs கோடிக்கணக்கான டாலர்களைச் செலவிடுகின்றன. 1980களுக்கு முன்பிருந்தே, அமெரிக்காவின் நிதித் துறை, ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையான ஹாலிவுட் போன்றவற்றில் யூத வம்சாவளியினரின் பங்களிப்பும் ஆதிக்கமும் அதிகம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## அமெரிக்க கொள்கை வழிகாட்டுதல்:

அத்துடன் அமைப்பாக மற்றும் இதர சார்பு குழுக்கள், இஸ்ரேலை ஆதரிக்கும் அரசியல்வாதிகளுக்குத் தேர்தல் நிதி (Election Campaign Funds) வழங்குகின்றன. 2024 தேர்தலில், AIPAC மில்லியன் கணக்கான டாலர்களைப் பயன்படுத்தி இஸ்ரேலை எதிர்க்கும் வேட்பாளர்களைத் தோற்கடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிபர் நிர்வாகத்துடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, இஸ்ரேலின் பாதுகாப்பு நலன்களை அமெரிக்காவின் நலன்களாக இந்த அமைப்புகள் முன்னிறுத்துகின்றன.

## ஊடக கொள்கை கட்டுப்பாடு:

மேலும் இந்த அமைப்புகள் கல்வி நிறுவனங்கள் மற்றும் கொள்கை விளக்க குழுக்களில் (Think Tanks) செல்வாக்கு செலுத்தி, இஸ்ரேலுக்கு எதிரான விமர்சனங்களைத் தடுக்கின்றன. இவ்வாறு அமெரிக்க கொள்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

இஸ்ரேலுக்கு ஆண்டுதோறும் பில்லியன் கணக்கான டாலர்கள் இராணுவ மற்றும் பொருளாதார உதவி கிடைப்பதை இந்த லாபி உறுதி செய்வதுடன் நிபந்தனையற்ற ஆதரவை அளிக்கும் வகையில் இந்த அமைப்புகள் செயல்படுகின்றன.

இஸ்ரேலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை அமெரிக்கா வீட்டோ (Veto) மூலம் தடுத்து நிறுத்துவதற்கு இந்த லாபிக்கள் முக்கிய காரணமாக இருக்கின்றன. மத்திய கிழக்கு கொள்கை, ஈரான், பாலஸ்தீனம் தொடர்பான அமெரிக்க கொள்கைகள் இந்த லாபியின் செல்வாக்கின் கீழ் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜான் மியர்ஷைமர் (John Mearsheimer) மற்றும் ஸ்டீபன் வால்ட் (Stephen Walt) போன்ற அறிஞர்கள், இந்த லாபியின் செல்வாக்கு அமெரிக்காவின் சொந்த நலன்களுக்குப் பாதகமாக இருக்கலாம் என்று வாதிட்டாலும், அமெரிக்க அரசியலில் அவர்களின் பிடி இன்னும் வலுவாகவே உள்ளது.

## அமெரிக்க வெளியுறவு கொள்கை:

உலகப் பொருளாதாரத்தை இயக்கும் Wall Street முதல் முக்கிய செய்தி நிறுவனங்கள் வரை இஸ்ரேலியர்களின் செல்வாக்கு பரவியுள்ளதால், அமெரிக்கா என்பது இஸ்ரேலின் நலன்களைக்காக்கும் ஒரு கவசமாகவே செயல்படுகிறது என்பதல்ல எதுவித சந்தேகமும் இல்லை.

இஸ்ரேலுக்கு எதிராக அல்லது பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகப் பேசும் முற்போக்கு வேட்பாளர்களைக் குறிவைத்து, அவர்களுக்கு எதிரான வேட்பாளர்களுக்குப் பல மில்லியன் டாலர்-களை இந்த அமைப்புகள் வாரி வழங்குகிறார்கள். இதன் மூலம், இஸ்ரேலை விமர்சித்தால் அரசியல் எதிர்காலம் முடிந்து விடும் என்ற அச்சத்தை அமெரிக்க நாடாளுமன்றத்தில் (Congress) உருவாக்கியுள்ளனர்.

## அமெரிக்காவை எளிதாக கையாளும் இஸ்ரேல்:

1980களில் பெஞ்சமின் நெதன்யாகு ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் பங்கேற்ற போது அவர் இஸ்ரேலின் தூதராக அல்லது ஒரு இளம் அரசியல்வாதியாக அறியப்பட்டார்.

அந்த நேர்காணலில் அவர் அமெரிக்காவை நாம் எளிதாகக் கையாளலாம், நாம் சொல்வதைத்தான் அவர்கள் செய்வார்கள் என கூறினார்.

அத்துடன் அமெரிக்க செனட் சபை மற்றும் காங்கிரஸ் சபையில் இஸ்ரேலுக்கு ஆதரவான நிலைப்பாடு மிக வலுவாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். அமெரிக்காவில் உள்ள இஸ்ரேலிய ஆதரவு லாபிக்கள் (Jewish Lobby), அமெரிக்காவின் கொள்கை முடிவுகளில் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன என்று அவர் விவரித்தார்.



இந்த வலுவான செல்வாக்கின் காரணமாக, அமெரிக்காவால் இஸ்ரேலை எந்தவொரு விஷயத்திலும் வற்புறுத்தவோ அல்லது அவர்களுக்கு விருப்பமில்லாத முடிவுகளை எடுக்கத் தூண்டவோ முடியாது என்று அவர் தன்னம்பிக்கையுடன் கூறினார். இந்தக் கருத்துக்கள் இஸ்ரேலிய ஆதரவு அமைப்புகள் (AIPAC - போன்ற லாபிக்கள்) அமெரிக்க அரசியலில் எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளன என்பதை தெளிவாக விளக்குகின்றன.

அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் AIPAC போன்ற யூத லாபிக்கள் மிக முக்கியமான சக்தியாகக் கருதப்படுகின்றன.

## வாஷிங்டனில் AIPAC மாநாடு:

ஒவ்வொரு ஆண்டும் வாஷிங்டனில் நடைபெறும் AIPAC மாநாட்டில், அமெரிக்காவின் முக்கிய அரசியல் தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டு இஸ்ரேலுக்கான தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

இன்றுவரை அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆண்டுதோறும் வழங்கி வரும் $3.8 பில்லியன் இராணுவ உதவிக்கு இந்தப் பண பலமும், அரசியல் அழுத்தமுமே முக்கியக் காரணம்.




அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் முதல் பதவியில் இருப்பவர்கள் வரை, இஸ்ரேலுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவிப்பதைக் கடமையாகக் கொண்டுள்ளனர்.

ஜெருசலேமில் உள்ள "அழுகைச் சுவரில்" (Wailing Wall) தலையணி அணிந்து மரியாதை செலுத்துவது என்பது புதிதாக பதவியேற்ற ஒவ்வொரு அமெரிக்க தலைவருக்கும் கட்டாயமான ஒரு சம்பிரதாயமாகவே மாறிவிட்டது.

இது ஒரு மதச்சார்பற்ற நாட்டின் தலைவர்கள், மற்றொரு நாட்டுக்குச் செய்யும் அரசியல் விசுவாசம் என பலரால் பார்க்கப்படுகிறது. இந்த விதியை மீறுபவர்கள் அரசியல் ரீதியாகப் புறக்கணிக்கப்படுவதோ அல்லது கடுமையான எதிர்ப்பைச் சந்திப்பது வழக்கமாக உள்ளது.

இந்த அதிகாரப் படிநிலைக்கு சவால் விடுத்தவராக முன்னாள் அதிபர் ஜோன் கென்னடி (John F Kennedy) திகழ்ந்தார். 1960-களின் தொடக்கத்தில், இஸ்ரேல் தனது டிமோனா (Dimona) அணு உலையில் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான இரகசிய வேலைகளைத் தொடங்கியது.

அன்றைய அமெரிக்க அதிபர் கென்னடி மத்திய கிழக்கில் அணு ஆயுதப் போட்டி உருவாவதை முற்றிலும் எதிர்த்தார். இஸ்ரேல் அணு ஆயுதம் பெறுவது உலக அமைதிக்கு ஆபத்து என்று அவர் நம்பினார்.

கென்னடி அன்றைய இஸ்ரேலியப் பிரதமர் டேவிட் பென்-குரியனுக்கு எழுதிய கடிதங்களில், டிமோனா அணு உலையை சர்வதேச ஆய்வாளர்கள் (IAEA) சோதனையிட அனுமதிக்க வேண்டும் என்று மிகவும் கடுமையாக வலியுறுத்தினார்.

இஸ்ரேலின் அணுசக்தித் திட்டத்தை நிறுத்தத் தவறினால், அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்குமான உறவு பாதிக்கப்படும் என்று அவர் எச்சரித்தார். கென்னடி இந்த அழுத்தத்தைக் கொடுத்த சில மாதங்களிலேயேவ 1963 நவம்பரில் படுகொலை செய்யப்பட்டார்.

அவருக்குப் பின் வந்த லின்டன் பி. ஜான்சன், இஸ்ரேலின் அணுசக்தித் திட்டத்தின் மீதான பிடியைத் தளர்த்தினார். அதன் பின்னர் இஸ்ரேல் தாராளமாக தங்கு தடையின்றி 90 றகு மேற்பட்ட அணுகுண்டுகளை தயாரித்து வைத்துள்ளது. இதுவே கென்னடியின் மரணத்திற்கும் இஸ்ரேலிய உளவு அமைப்பான மொசாட்டிற்கும் தொடர்பு என்றும் சொல்லப்படுகிறது.

கென்னடி போன்ற தலைவர்கள் இஸ்ரேலின் அணுசக்தித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட முயன்ற போது அவருக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை நன்கு உணர்ந்த எதிர்கால அமெரிக்கத் தலைவர்கள் இஸ்ரேல் சொல்வதை செய்யும் பொம்மைகள் ஆக்கப்பட்டனர் என்பது வரலாறு. இதுவரைக்கும் எந்தவொரு அமெரிக்க தலைவர்களும் இஸ்ரேலின் உத்தரவை மீறியதாக வரலாறே இல்லை.



# சீதன விவாதம்:
# ஏன் இந்த மௌனம்?

-பிரம்மஞானி-

சீதனம் பற்றிய விவாதத்தை மிகவும் உன்னிப்பாகப் படித்து வரும் வாசகர் என்ற ரீதியில் இந்த விவாதம் பற்றி எனது தனிப்பட்ட மதிப்பாய்வை முன்வைக்க விரும்புகிறேன். சீதனம் பற்றிய பிரச்சினையைப் பல கோணங்களில் பார்த்திருக்கிறார்கள். ஆனால் எவருமே முழுமையாக இப்பிரச்சினையை அணுகியதாகத் தெரியவில்லை. சீதனப் பிரச்சினையால் பாதிக்கப்படுவது யார்? இது எங்கிருந்து, எப்படி, ஏன் தோற்றம் கொண்டது? இது ஒரு குடும்பப் பிரச்சினையா? வர்க்கப் பிரச்சினையா? சமூகப் பிரச்சினையா? இது போன்ற கேள்விகளை ஆராய்ந்து பார்ப்பதில்தான் விவாதத்தின் பெரும் பகுதி விரயமாகி இருக்கின்றது. வேறு சிலர் சீதனப் பிரச்சினையை ஒழிப்பதற்கு ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். காதலை ஊக்குவிக்க வேண்டும், சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டும், சட்டத்தைக் கொண்டுவர வேண்டும், கலாச்சாரப் புரட்சியை நடத்த வேண்டும் என்ற ரீதியில் பல்வேறு பரிந்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். ஒரு சிலர் சீதனத்தை ஆதரித்தும் எழுதியிருக்கிறார்கள். பெண்ணின் முதலீடு இருந்தால்தான் குடும்பம் நடத்த முடியும் என்று மிகவும் பிற்போக்கான கருத்துக்களையும் முன்வைத்திருக்கிறார்கள். இன்னொருவர் ‘தலைவிதியில்’ நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகப் புராண காலக் கதையைச் சொல்லியிருக்கிறார். இப்படியாக விவாத மேடை நகைச்சுவையாகவும், இடைக்கிடையே ‘சீரியஸ்’ ஆகவும், பரவலாக அபத்தமாகவும் அமைந்திருக்கிறது என்பதே எனது கருத்து.

இந்த விவாத அரங்கில் பெண்ணிலைவாதக் கருத்துக்கள் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லப்படவில்லை. சீதன முறைமை என்பது ஒரு பெண் ஒடுக்குடுறை வடிவம் என்பதைச் சமூகவியல் கண்ணோட்டத்துடன் இதுவரை எவராவது எடுத்து விளக்கவில்லை. ஒரு சில பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெளிவந்த போதும் அவற்றில் கருத்தாழத்தைக் காண முடியவில்லை. பிரச்சினையைப் பெண்ணிய நோக்கில் தெளிவாக, ஆழமாக விளக்காமல், சீதனத் தடைச்சட்டம் வேண்டுமென இவர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் நுனிப்புல் மேய்ச்சலான பார்வையாக அமைந்துள்ளன. சீதனம் வாங்குவது ஆண்மையின் ஆளுமைக்கு இழுக்குத்தேடும் செயல் என ஒரு பெண்மணி வாதிடுகிறார். இந்தப் பார்வையில் ஆண்நிலைவாதம்தான் மேலோங்கி நிற்கிறது என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை போலும். பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் ஒரு புரட்சிகரச் சூழலில், பெண்ணிலைவாதக் கருத்து நிலையில் ஏன் இந்த வறுமை ஏற்பட்டதோ தெரியவில்லை. அனேகமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரு சில அனாமதேய எழுத்தாளர்களும் இந்தப் பிரச்சினை பற்றி எழுதியிருக்கிறார்கள். சொந்த அனுபவம் என்றும், நட்பியல் எதார்த்தம் என்றும் இவர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் சனரசனையை ஏற்படுத்திய பொழுதும், பிரச்சினையைத் தீர்க்கமாக அணுகவில்லை. பாதிக்கப்படுபவர்கள் யார்? பயனடைபவர்கள் யார்? என்ற வகையில் ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கருத்துப் போர் நடைபெற்றுள்ளதே தவிர, பிரச்சினையை ஆழமாக அலசிப் பார்க்கும் புலமை இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. எந்த விதமான உருப்படியான தீர்வையும் இவர்கள் முன்வைக்கவில்லை. காதலுறவுக்கு சுதந்திரம் வழங்கிவிட்டால் சீதனத் திருமணங்கள் ஒழிந்துவிடும் என்பது சிலரது கருத்து. ஏதோ யாழ்ப்பாணத்தில் காதல் உணர்வு செத்துப் போய்விட்டது என இவர்கள் எண்ணுகிறார்கள் போலும். ஆனால் இங்கு காதல் மலிந்து போய்க் கிடக்கிறது. இந்தக் காதல் எல்லாம் திருமணத்தில் போய் முடிகிறதா? என்பதுதான் கேள்வி. திருமணத்தில் முடிந்த காதல் உறவுகளும் சீதனப் பிரச்சினையிலிருந்து விடுபட்டுள்ளனவா? என்பதும் கேள்விக் குறிதான். மேற்குலக சுதந்திரத்தை சிலர் உதாரணமாகக் கொள்கின்றனர். இந்தக் ‘காதல் சுதந்திரம்’ எந்த அளவிற்கு விபரீதக் கோலங்கள் கொண்டுள்ளன என்பதோ, அல்லது தாம்பத்திய உறவுகள் சிதைந்து திருமணங்கள் எந்த அளவுக்கு முறிந்து வருகின்றன என்பதோ இவர்களுக்குத் தெரியாது போலும். காதல் என்பது பாலெழுச்சியின் தோற்றப்பாடான ஓர் உணர்ச்சிநிலை என்பதால் அது எல்லா மனித சமூகங்களிலும், எல்லா மனிதர்களையும் ஆட்டிப் படைக்கிறது. ஆயினும் அது பண்பாட்டு உலகத்தால் பண்படுத்தப்பட்டு, தாம்பத்திய அன்புறவிற்கு அத்திவாரமாக அமையும் பொழுதுதான் அது மகத்துவம் பெறுகிறது. இனக்கவர்ச்சியின் அப்பட்டமான உணர்ச்சி வெளிப்பாடாகத் தோற்றம் கொள்ளும் காதலுக்கும், இல்லற வாழ்வின் இதயமாக அமைந்துவிடும் காதலுக்கும் வேறுபாடு உண்டு. திராவிடர் பண்பாடு இல்லற வாழ்வுக்கு நிறைவுதரும் அன்பு உறவாகவே காதலைக் கௌரவிக்கிறது.

காதலை ஊக்குவித்துச் சீதனத்தை விரட்டிவிடலாம் என எண்ணுவது தவறு. சீதனத்தை ஒழித்துவிட்டால்தான் உண்மையான காதல் உறவு, அதாவது தாம்பத்திய வாழ்வுக்கு ஆதாரமான காதல் உறவு, தோற்றம் கொள்ள வாய்ப்புண்டு.

சீதனம் ஒழிந்து போவதற்குச் சமுதாயம் மாற வேண்டும் எனச் சிலர் எழுதுகிறார்கள். ஆனால் சமுதாய மாற்றம் என்றால் என்ன என்ற தெளிந்த பார்வையுடன் இவர்கள் இந்தக் கருத்தைக் கூறுவதாகத் தெரியவில்லை. சமுதாய மாற்றம் என்றால் பழைய சமூக உறவுகள் ஒழிக்கப்பட்டுப் புதிய சமூக உறவுகள் கட்டி எழுப்பப்படுவதையே குறிக்கும். எமது சமூகத்தின் பொருளாதார உற்பத்தி வடிவம், பொருளுற்பத்தி உறவுகள், சாதியக் கட்டமைப்பு, அதன் உறவு முறை என்பன போன்ற எமது சமூக வாழ்வின் அடிப்படைகளை ஆழமாகப் பார்க்காமல், மேலெழுந்தவாரியாகச் சமூக மாற்றம் எனக் கோருவது சிறுபிள்ளைத்தனமானது. அத்துடன் நிலநிதர்சனத்தையும் நாம் பார்க்க வேண்டும். இங்கு ஒரு விடுதலைப் போர் நடந்து கொண்டிருக்கிறது. எமது தாயக பூமியை மீட்டெடுத்து, ஒரு தனி அரசை நிறுவ நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். எமது இலட்சியம் நிறைவேறி, ஆட்சி அதிகாரம் எமது கைக்கு வரும்போதுதான் அடிப்படையான சமூக மாற்றம் பற்றி நாம் சிந்திக்கலாம்.

அந்தக் காலம் வரை நாம் காத்திருக்கத் தேவையில்லை. இப்பொழுது உள்ள புரட்சிகரச் சூழ்நிலையில் எமது கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசத்தில் சமூக சீரமைப்பு வேலைகளை நாம் மேற்கொள்வது சாத்தியம். இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டம் மூலம் சீதனத்தை ஒழித்துக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென சிலர் யோசனைகள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டவாக்க நடவடிக்கை சம்பந்தமாக இதுவரை எவரும் ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிக்காதது விசனத்துக்குரியது.

தனியார் சொத்துடைமை, சாதியம், சீதனம், பெண்ணடிமைத்தனம் போன்றவற்றுக்குக் காப்பரணாக நின்று அநீதியில் அமைந்த யாழ்ப்பாண சமூக உறவுகளை நியாயப்படுத்தி வரும் தேச வழமைச் சட்டம் செயல்பட்டு வருகிறது. இந்தத் தேச வழமைச் சட்டத்தை மாற்றியமைப்பது எப்படி? இச்சட்டத் தொகுப்பில் உள்ள தேவையற்ற, நடைமுறைக்கு ஒவ்வாத, சமூக அநீதிக்கு மாறான அம்சங்கள் என்ன? இவற்றைக் களைந்து, எத்தகைய புதிய சட்ட விதிகளை ஆக்கம் செய்வது? சீதனத் தடைச் சட்டம் எப்படியாக அமைய வேண்டும்? அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமா? தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எத்தகைய சிக்கல்கள் ஏற்படும்? இந்தச் சட்டவாக்கப் பிரச்சினை பற்றி எவருமே விவரமாக, ஆழமாக எழுதவில்லை. தேச வழமைச் சட்டத்தில் புலமை பெற்றவர் எனக் கருதப்படும் சட்டத்தரணி ஒருவர் எழுதியிருக்கிறார்: ‘சொர்க்கத்தில் நீதி பரிபாலனம் நடக்கிறத் அங்குதான் தலையெழுத்தும் எழுதப்படுகிறத் திருமணங்களும் அங்குதான் நிச்சயிக்கப்படுகின்றன’ என்றவாறு இவர் எழுதுகிறார். சீதனத் தொகையும் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகிறது என இவர் எண்ணுகிறார் போலும். சட்டத்தரணிகளே இப்படி மூட நம்பிக்கைகளில் புதைந்துபோய் கிடந்தால், சாதாரண மக்கள் மத்தியில் மனப்புரட்சியை ஏற்படுத்துவது எப்படி? சீனப் பாணியில் தமிழீழத்திலும் ஒரு கலாச்சாரப் புரட்சி ஏற்பட வேண்டும் என ஒரு நண்பர் எழுதியிருக்கிறார். வரவேற்கப்பட வேண்டிய யோசனை. காலத்தின் தேவையும் அதுதான். ஆனால் இந்த இமாலயச் சாதனையை எப்படிச் சாதிப்பது? யாழ்ப்பாண இராச்சியம் இன்னும் புராண யுகத்தில் உறங்கிக் கிடக்கிறத் இருண்ட காலத்து இதிகாசங்களில், தாலாட்டுப் பாடல்களில் நிம்மதியாகத் தூங்குகிறது. யாழ்ப்பாணத்து மனிதனைத் தட்டியெழுப்புவது யார்? படித்தவர்களும், புத்திஜீவிகளும் கும்பகர்ணர்களாகத் தூங்கும் போது, யாழ்ப்பாண சமூகத்தின் விழிப்புணர்வை செயற்படுத்துவது எங்ஙனம்?

சீதனப் பிரச்சினை பற்றி அறிவுசார் உலகத்தில் இருந்து எவரும் எழுதியதாகத் தெரியவில்லை. ஒரு பிராரம்ப உசாவலாகத் தன்னும் இந்தப் பிரச்சினையைத் தொட்டுப் பார்க்க எவரும் துணியவில்லை. இது சாதாரண மனிதர்களின் சாதாரணப் பிரச்சினை எனக் கருதி உலகம் அக்கறை காட்டவில்லை போலும். சாதாரண மனிதனின் சமூகப் பிரச்சினைகளை, சாதாரண மனிதன் புரிந்து கொள்ளும் வகையில் சாதாரண மொழியில் எழுதி விளக்குவது, சமூக ஆய்வின் தரத்தைக் குறைத்துவிடும் என இவர்கள் சிந்திக்கிறார்களோ தெரியவில்லை.

இன்றைய சமூகவியல் இரண்டு திசைகளில் செல்கிறது. இதன் அடிப்படையில்தான் சமூக ஆய்வியல் முறைமையும் அமைகிறது. ஒன்று சமூக முரண்பாடுகளையும், அதன் காரணிகளையும் ஊடுருவிப் பார்க்கும் ஆய்வு முறைமை. இதனை Conflictual Model என்பார்கள். மற்றது சமூகத்தை ஒரு உடற்கூற்றுக் கட்டமைப்பாக, பல்வேறு உறுப்புக்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாக இயங்கும் கட்டமைப்பாகக் கொள்ளும் அணுகுமுறை. இதனை Consensus Model என்பார்கள். இந்த இரண்டாவது அணுகுமுறையில் சமூக நிறுவனங்களும், அவற்றின் ஒத்திசைவான செயற்பாடும் சமூக இயக்கத்திற்கு அவசியமானதாகக் கருதப்படுகிறது. அமெரிக்க சமூகவியல் துறை இந்தக் கோட்பாட்டிற்கு முதன்மை கொடுக்கிறது. இது சமூக முரண்பாட்டுத் தத்துவத்தை நிராகரித்துவிடுகிறது. புரட்சிகரமான சமூக மாற்றத்தை எதிர்த்து நிற்கிறது. எல்லா சமூக அலகுகளும் ஒத்திசைவான சமூக இயக்கத்திற்கு ஆதாரமானவை என்ற பார்வையில் சமூக நிறுவனங்களின் சீரமைப்பை மறுக்கிறது. சமூக மாற்றத்தை எதிர்க்கும் பழமைவாதிகள் இந்தச் சமூக தத்துவத்தைப் பற்றிக் கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. யாழ்ப்பாண சமூகச் சிந்தனைத்துறையிலும் இந்தத் தத்துவம் ஆழமாக வேரூன்றி நிற்கிறது. இந்தத் தத்துவார்த்தப் பார்வையும், அடிப்படையில் சமூக அநீதியின் வடிவங்களான சாதியம், சீதனம் போன்றனவும் சமூக வாழ்வியக்கத்திற்கும், அதன் ஸ்திரமான நிலையாக்கத்திற்கும் உறுதுணையானவை என நியாயப்படுத்தப்படுகின்றன. உதாரணமாகக் கலாநிதி சிற்றம்பலத்தின் ‘யாழ்ப்பாண இராச்சியம்’ என்ற நூலில் மிகவும் நுட்பமான முறையில் சாதியம் நியாயப்படுத்தப்படுவதைக் கீழ்க்கண்ட பந்தியில் காணலாம்.

“இத் தேச வழமைச் சட்டங்கள் வேளாண் சமூகத்தினரதும், அவர்களது அடிமைகள், குடிகள் ஆகியோரதும் வழக்கங்களை எடுத்துக் காட்டுவதால் சாதிய அமைப்பு என்ற வட்டத்துக்குள்ளேதான் இவை செயற்பட்டன எனலாம். இத்தகைய அமைப்பு அக்கால, மத்திய காலப் பொருளாதாரப் பின்னணியிற் சமூகத்தின் பல்வேறு பிரிவினர் பிணக்குகள் இன்றி இயங்குவதற்கும், சமூகத்தில் ஸ்திரமான நிலை காணப்படுவதற்கும் உறுதி செய்வதாக அமைந்திருந்தது (137ஆம் பக்கம்).”

இங்கு சமூக ஒத்திசைவுத் தத்துவம் சாதிய முரண்பாட்டை மூடி மறைத்து விடுவது மட்டுமல்லாது, நிலையான சமூக இயக்கத்திற்குச் சாதியம் ஆதாரமாக அமைவதாகவும் நியாயப்படுத்த முனைகிறது.

யாழ்ப்பாண அறிவுலகம் சீதனம் பற்றியோ, சாதியம் பற்றியோ உண்மையை எழுத ஏன் துணிவதில்லை என்பதைப் புத்தி கூர்மையுள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள்.

‘‘அறிவு புகட்டுபவர்களுக்கு முதலில் அறிவு புகட்டப்பட வேண்டும்” என்று ஒரு சமூக சிந்தனையாளன் கூறியது இங்கு நினைவிற்கு வருகிறது.

-ஈழநாதம், 18.06.1993

# ஈரானில் ஒரு சகாப்தம் முடிவு: எத்திசையில் கொமேனிக்கு பின்னரான புதிய தலைமை?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

01.03.2026



ஈரான் நாட்டின் மிக உயரிய அதிகாரமும், ஆன்மீகத் தலைமையும் கொண்ட அயதுல்லா அலி கொமேனி, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஈரான் அரசு ஊடகங்கள் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளன.

தெஹ்ரானில் உள்ள அவரது அலுவலகம் மற்றும் முக்கிய இராணுவ நிலைகளை இலக்கு வைத்து பெப்ரவரி 28, 2026 அன்று நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் உயிரிழந்ததாகத் தஸ்நிம் மற்றும் ஃபார்ஸ் ஆகிய ஈரான் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இந்தச் செய்தி உலக நாடுகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

## இஸ்ரேலிய உளவுத்துறையின் அதிரடி:

ஈரான் நாட்டின் மிக உயரிய பாதுகாப்பு வளையத்திற்குள், அதுவும் தலைநகருக்குள் இவ்வளவு துல்லியமாக ஒரு பெரிய தாக்குதலை நடத்தி முடிப்பதென்பது சாதாரண விஷயமல்ல. மொசாட் (Mossad) ஈரானின் பாதுகாப்பு கட்டமைப்பில் எவ்வளவு ஆழமாக ஊடுருவி இருக்கிறது என்பதற்கு இதுவே சாட்சி. வெறும் தொழில்நுட்பம் மட்டுமல்ல, மனித உளவு எந்தளவுக்கு வேரூன்றி உள்ளது என்பதை இந்த தாக்குதல் விளக்குகிறது.

ஈரானிய பாதுகாப்பு ஓட்டைகளை விட, நம்பிக்கைக்குரிய இடங்களிலேயே மொசாட் வைத்திருக்கும் உளவமைப்பு தான் வியக்க வைக்கிறது.

அயதுல்லா கொமெனியின் மறைவு, உளவுத்துறை ரீதியான இந்தத் தாக்குதல்கள் ஈரானின் அதிகார மையத்தையே உலுக்கியிருக்கிறது. மத்திய கிழக்கில் அடுத்தது என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

அதேவேளை ஈரானிய அதியுயர் தலைவர் அலி கொமேனியின் உடல் இடிபாடுகளுக்குள் மீட்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஈரானின் அதியுயர் தலைவர் அலி காமேனி இஸ்ரேல் நடத்திய மிகத்துல்லியமான வான் தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஈரான் அரசு உத்தியோகபூர்வமாக தற்போது அறிவித்துள்ளது.

இஸ்ரேலிய வான்படை டெஹ்ரானில் உள்ள ஈரானியத் தலைமையகத்தின் மீது “பங்கர் பஸ்டர்“ (Bunker Buster) குண்டுகளைப் பயன்படுத்தி பாரிய தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் காமேனி தங்கியிருந்த ரகசியக் கட்டடம் முற்றாகத் தரைமட்டமானது. சனிக்கிழமை இரவு தெஹ்ரானில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், இடிபாடுகளுக்குள் இருந்து அவரது உடல் மீட்கப்பட்டதாக ஈரான் அரசு உறுதிப்படுத்தியுள்ளது.



தாக்குதல் நடந்து சில மணித்தியாலங்களுக்குப் பிறகு, அந்த இடத்திலிருக்கும் இடிபாடுகளுக்குள் இருந்து 86 வயதான அலி கொமேனியின் உடல் கண்டெடுக்கப்பட்டதை இஸ்ரேலியப் புலனாய்வுத் துறையினரே முதலில் கண்டறிந்தனர். ஆனால் இந்த தகவல் வெளியானதை உடனடியாக ஈரான் அரசு மறுத்தது.

1989ஆம் ஆண்டு முதல் ஈரானின் அசைக்க முடியாத சக்தியாக இருந்த ஒருவரின் முடிவு, இப்போது உலகையே உலுக்கியிருக்கிறது. அவரது கொலையை நியாயப்படுத்தி இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆற்றிய உரையில், ‘இந்தச் சர்வாதிகாரி இப்போது இல்லாமல் போய்விட்டார்’ என காட்டமாக தெரிவித்துள்ளார். இதனை பிபிசி (BBC) மற்றும் ராய்ட்டர்ஸ் (Reuters) ஆகிய சர்வதேச ஊடகங்கள் உடனடியாக முக்கியச் செய்தியாகப் பதிவு செய்திருந்தன.

நெதன்யாகுவின் அந்த பேச்சின் பின்னணியில் இருக்கும் உண்மை, கொமேனியின் மரணம் முன்கூட்டியே கணித்த தாக்குதல் முயற்சி என்று உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

## யார் இந்த கொமேனி?

ஈரானில் 1979ம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்டது. அதற்கு முன் ஈரானில் ஆட்சி நடத்தியவர் மன்னர் ஷா எனப்படும் முகமது ரெஸா பஹலவி. அவரது ஆட்சிக்காலத்தில் ஈரான், மேற்கத்திய சார்பு நாடாக இருந்தது.

வெண்மைப் புரட்சி என்ற பெயரில் ஷா மன்னர் கொண்டு வந்த நில சீர்திருத்தமும், நவீன மயமாக்கமும், மத அடிப்படைவாதிகளுக்கு பிடிக்கவில்லை. அவருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினர். மக்கள் எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டனர். 1977 முதல் நடந்த போராட்டங்கள், 1979ம் ஆண்டு மன்னர் ஆட்சி வீழ்த்தப்பட்டதுடன் முடிவுக்கு வந்தன.

இஸ்லாமியப் புரட்சி என்ற பெயரில் நடந்த இந்த போராட்டம் முடிவில், ருடால்ப் கொமேனி தலைமையிலான மதகுருக்கள் ஆட்சியை கைப்பற்றினர். அப்போது முதல், பெண்களுக்கு ஆடை கட்டுப்பாடு போன்ற கடுமையான விதிமுறைகளுடன் கூடிய இஸ்லாமிய ஆட்சியை அமுல் செய்தனர். மதகுருக்கள் தான் ஆட்சியாளரை முடிவு செய்யும் முறை அமுலுக்கு வந்தது.

அப்படி 1979 முதல் ஆட்சி நடத்திய ருடால்ப் கொமேனி, 1989ஆம் ஆண்டு காலமானார். அவருக்கு பின், அவருக்கு உறுதுணையாக இருந்தவர்களில் முதன்மையானவரான அலி கொமேனி ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவர்கள் இருவரும் வேறு வேறு நபர்கள், உறவினர்கள் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

1939இல் பிறந்த இவர், 1979இல் நடந்த இஸ்லாமியப் புரட்சியில் முக்கியப் பங்கு வகித்தார். புரட்சிக்குப் பிறகு ஈரானின் அதிப ராகப் பதவி வகித்த இவர், 1989இல் முதல் உச்ச தலைவர் கொமேனியின் மறைவுக்குப் பிறகு அந்தப் பொறுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தற்போது இஸ்ரேல், அமெரிக்க படை தாக்குதலில் கொல்லப்பட்ட கொமேனி 1981 முதல் 1989ஆம் ஆண்டு ஈரான் அதிபராகவும் இருந்தவர்.

## ஷியா இஸ்லாமிய ஈரான் :

ஈரான், ஷியா பிரிவு இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக இருக்கும் நாடு. இதனால், அந்த பிரிவு இஸ்லாமியர்கள், ஈரான் மதகுருவையே தங்கள் வழிகாட்டியாக கருதுகின்றனர். அந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவராக கொமேனி இருந்தார். அவர் மதகுருவாக மட்டுமின்றி, நாட்டின் அரசியல் மற்றும் இராணுவ அதிகாரத்தின் முக்கிய புள்ளியாகவும் இருந்து வந்தார்.

உலகில் ஷியா பிரிவு மக்கள் வசிக்கும் நாடுகள் அனைத்துக்கும் ஈரான், நேரடியாகவும், மறைமுகமாகவும் பண உதவியும், இராணுவ உதவியும் செய்து வந்தது. இதன் பின்னணியில் இருந்தவர் கொமேனி தான். இதேவேளை சிரியா, லெபனான், ஏமன் மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் ஈரானின் ஆதரவு பெற்ற குழுக்களை இயக்கி வந்தார். இதன் மூலம் அந்நாடுகளின் அரசியலில் ஈரான் செல்வாக்கு பெற்றதாக இருந்து வருகிறது.

## 37 ஆண்டு ஆட்சி முடிவு

அலி கொமேனி 1981 முதல் 1989 வரை ஈரானின் அதிபராகப் பணியாற்றினார். அதன்பிறகு 1989-இல் ஈரானின் அதியுயர் தலைவராகப் பொறுப்பேற்ற அவர், கடந்த 37 ஆண்டுகளாக ஈரானை வழிநடத்தி வந்தார். மத்திய கிழக்கில் ஈரானின் ஆதிக்கத்தையும், இஸ்ரேலுக்கு எதிரான போராட்டங்களையும் முன்னெடுத்த மிக முக்கியமான நபராக அவர் பார்க்கப்பட்டார். அவரது மறைவு ஈரானியப் புரட்சிகரக் காவல்படைக்கும் (IRGC) அதன் நட்பு அமைப்புகளுக்கும் விழுந்த ஈடுசெய்ய முடியாத மரண அடியாகக் கருதப்படுகிறது.

கொமேனியின் கொலையைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் போர் ஒரு உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. ஈரான் வெறித்தனமான பதிலடியைத் தொடுக்கலாம் என்பதால், இஸ்ரேலிய மக்கள் அனைவரும் நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்புப் படையில் இணைந்து பணியாற்றும் ஆலோசனைகளைத் தீவிரமாகப் பின்பற்றுமாறு நெதன்யாகு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனாலும் ஈரான் இப்போது தனது அடுத்த தலைவரைத் தெரிவு செய்யுமா அல்லது இந்தப் போர் ஒரு மாபெரும் ஆயுதப் போராக மாறுமா என்ற அச்சம் உலக நாடுகள் மத்தியில் நிலவுகிறது. ஆனாலும் ஈரானின் அதியுயர் தலைவர் அலி காமேனியின்

இந்த முடிவு மத்திய கிழக்குப் போரை முடிவுக்குக் கொண்டு வருமா என்பது சந்தேகமே.

### டிரம்பின் வெற்றிப் பேச்சு:

கொமேனி மரணத்துக்கு பிறகு மார்ச் 1, 2026 அன்று நியூயார்க் டைம்ஸின் தேசிய பாதுகாப்பு நிருபர் டேவிட் இ. சாங்கர் (David E. Sanger) ஈரானுடன் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தொடங்கியுள்ள "தேர்ந்தெடுக்கப்பட்ட போர்" (War of Choice) பற்றி ஆய்வை மேற்கொண்டார். டிரம்ப் ஈரானுக்கு எதிராக பெரிய அளவிலான இராணுவ தாக்குதலைத் தொடங்கியுள்ளமை "தேவையில்லாத" அல்லது "தேர்ந்தெடுக்கப்பட்ட" போர் என்றும் விவரித்துள்ளார்.

அதாவது, ஈரானிடமிருந்து உடனடி அச்சுறுத்தல் இல்லாத நிலையில், டிரம்ப் போரைத் தொடங்கியுள்ளார்.

மேலும் ஈரானிய மக்களை அரசாங்கத்தைக் கவிழ்க்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். "உங்கள் சுதந்திரத்திற்கான நேரம் வந்துவிட்டது. நாங்கள் முடித்த பிறகு உங்கள் அரசாங்கத்தை நீங்கள் ஆட்சியை கைப்பற்றுங்கள்" என்று டிரம்ப் தெரிவித்தார். அதே சமயம் தெஹ்ரானில் பாரிய குண்டுகள் விழும் என எச்சரித்து வீட்டிலேயே இருக்கச் சொன்னார்.

தற்போதய ஈரான் மீதான தாக்குதலின் நோக்கம், ஈரானின் இராணுவத்தை அழிப்பது, அணு ஆயுதத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவது, ஆயத்துல்லா அலி கொமெனி தலைமையிலான ஆட்சியை மாற்றுவது என்றும் டிரம்ப் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. ஈரான் அரசின் பலவீனமான இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி, மக்கள் எழுச்சியை ஏற்படுத்தி ஆட்சி மாற்றம் செய்யலாம் என்று டிரம்ப் நம்புவதாகத் தெரிகிறது.

ஆனாலும் இந்த விவகாரத்தில் பல விமர்சனங்களை அரசியல் தலைவர்கள் தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர்.

மேலும் இராணுவ ஆய்வாளர்கள் இதை ஆபத்தானது, அமெரிக்கர்களை ஆபத்தில் ஆழ்த்துவது, காங்கிரஸ் ஒப்புதல் இல்லாமல் தொடங்கப்பட்டது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை இராஜதந்திர வழிகள் முயற்சிக்கப் படவில்லை என்று கூறுகின்றனர். இது ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற முந்தைய போர்களை நினைவூட்டுவதாகவும், அமெரிக்காவைப் பாதுகாப்பற்றதாக ஆக்கும் என்றும் அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் ஈரானில் ஒரு சகாப்தம் முடிவுற்றதாகவே கருதப்படுகிறது. கொமேனிக்கு பின்னரான புதிய தலைமை யார் என்பதை அறிய மேற்குலக நாடுகள் ஆர்வம் காட்டுகின்றன. ஆனால் அடுத்த தலைமையும் கொமேனி பாதையில் பயணிப்பார்களா அல்லது மேற்குலகுடன் ஒத்துப் போகிறார்களா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.





**நாம் எதனை கேட்கிறோம். எதற்காக நாம் போராடி வருகிறோம். நாம் எமது மண்ணில் வரலாற்று ரீதியாக எமக்குச் சொந்தமான நிலத்தில் நாம் பிறந்து வாழ்ந்த எமது தாயகப் பூமியில் நாம் நிம்மதியாக கௌரவமாக, எவரது தலையீடுமின்றிச் சுதந்திரமாக வாழ்வதற்கு விரும்புகின்றோம். நாமும் மனிதர்கள், மனிதர்களுக்காகன அடிப்படை உரிமைகளைக் கொண்ட ஒரு மனித சமூகம். தனித்துவமான பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு தனித்துவமான இனத்தைச் சார்ந்த மனிதர்கள் நாம். எம்மை ஒரு மனித சமூகமாக, தனித்துவப் பண்புகளைக் கொண்ட மக்களாக ஏற்குமாறு கேட்கிறோம். எமது அரசயில் வாழ்வை நாமே தீர்மானித்துகொள்ளும் உரிமை எமக்குண்டு. இந்த உரிமையின் அடிப்படைடயில் நாமே எம்மை ஆளும் வகையில் ஒரு ஆட்சிமுறையை அமைத்து வாழவே நாம் விரும்புகிறோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# வெளிவந்துவிட்டது

## வணிகம்
## VANIKAM
## 2026




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.vanikam.ca

437-345-4203

# ஈரான் போரில் சீனாவின் மௌனம் ஏன்? கச்சாய் எண்ணெய் பொருளாதாரப் போரா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா-











12.03.2026

ஈரானின் நீண்ட கால நெருங்கிய கூட்டாளியான சீனாவின் மௌனம் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. தற்போது தொடரும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து நடத்தி வரும் “ஒபரேஷன் எபிக் பியூரி” (Operation Epic Fury) என்ற அதிரடித் தாக்குதல் மற்றும் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கொமெய்னியின் படுகொலையின் பின்னரும், சீனாவின் மௌனம் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

## சீனாவின் மௌனம் ஏன்?

ஈரானின் பாதுகாப்பு அமைப்புகள் சிதைக்கப்படும் போது, சீனா ஏன் இன்னும் நேரடியாகக் களத்தில் இறங்கவில்லை என்பது குறித்த அதிர்ச்சியூட்டும் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. யுத்தத்தின் நேரடி தாக்கத்தை விடவும், சில நேரங்களில் அதிகார வர்க்கத்தின் மௌனம்தான் அதிக அச்சத்தை உண்டாக்குகிறது.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் ஏவுகணைகள் ஈரான் மண்ணை பிளந்து கொண்டிருக்கும் வேளையில், உலகமே பதற்றத்தில் உறைந்து போயுள்ளது. ஈரானின் 130 இடங்களில் மரண ஓலம் கேட்கிறது. 2000க்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்கள் பலியாகிவிட்டன. இத்தனை கொடூரங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கும் போது, ஆசியாவின் வல்லரசான சீனா மட்டும் ஏன் ஒரு மர்மமான மௌனத்தை கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது என்பது ஆச்சரியமாக உள்ளது.

சீனாவின் இந்த மௌனத்திற்குப் பின்னால் ஒரு மிக முக்கியமான பொருளாதாரக் காரணி ஒளிந்துள்ளதாக அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர். சீனா இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெய்யில் சுமார் 44 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்துதான் வருகிறது. குறிப்பாக, ஈரான் வசம் உள்ள “ஹார்முஸ் நீரிணை” (Strait of Hormuz) வழியாகவே இந்த வர்த்தகம் நடைபெறுகிறது. இந்தப் பகுதியில் போர் மூண்டால், அது சீனாவின் எரிசக்தி பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக முடியும். எனவே, நேரடியாகப் போரில் இறங்குவதை விட, தூதரக ரீதியாகச் சூழலைச் சமாளிப்பதையே சீனா பாதுகாப்பானதாகக் கருதுகிறது.

மேலும் சீனா ஒரு நீண்ட கால ஆட்டத்தை ஆடி வருவதாக அரசியல் - பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அமெரிக்காவின் இந்த நேரடித் தாக்குதல்கள் ஈரானின் தற்போதைய அதிகார அமைப்பை வலுவிழக்கச் செய்யலாம். ஒரு பலவீனமான ஈரான் என்பது சீனாவின் கைகளில் எளிதில் சிக்கக்கூடிய ஒரு நாடாக மாறும். மேலும், அமெரிக்கா நீண்ட காலப் போரில் சிக்கிக் கொள்வது, பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஒரு பாரிய வாய்ப்பாக அமையும் என்பதும் சீனாவின் கணக்காக கூட இருக்கலாம்.

## ஈரானில் சீன ஏவுகணைத் தொழில்நுட்பம்:

ஆனாலும் சீனா ஈரானைத் முழுமையாகக் கைவிட்டுவிடவில்லை என்பதற்கும் சில ஆதாரங்கள் உள்ளன. ஈரானின் ஏவுகணைத் தொழில்நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்புத் துறையில் சீனா இரகசியமாக உதவி வருவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, மேற்கத்திய மென்பொருட்களுக்குப் பதில் தனது சொந்த “BeiDou” வழிசெலுத்தல் அமைப்பு மற்றும் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களை ஈரானுக்குச் சீனா வழங்கி வருகிறது. இது அமெரிக்காவின் மின்னணுத் தாக்குதல்களிலிருந்து ஈரானின் எஞ்சியிருக்கும் இராணுவக் கட்டமைப்பைப் பாதுகாக்க உதவும் ஒரு “நிழல் போர்” (Shadow War) உத்தியாகும்.

சீனாவின் இந்த ஒதுங்கியிருக்கும் போக்கு, சர்வதேச அரங்கில் அதன் நற்பெயருக்கு ஒரு சோதனையாகவும் பார்க்கப்படுகிறது. குறிப்பாக, சவூதி அரேபியா மற்றும் ஈரான் இடையே சமாதானத்தை ஏற்படுத்திய சீனா, இப்போது தனது கூட்டாளியான ஈரான் தாக்கப்படும் போது மௌனமாக இருப்பது, மற்ற நாடுகள் சீனாவின் பாதுகாப்புக் கூட்டணியை (Security Umbrella) நம்பலாமா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. இந்த மௌனம் தொடர்ந்தால், மத்திய கிழக்கில் சீனாவின் செல்வாக்கு குறையக்கூடும் என்றும் எச்சரிக்கப்படுகிறது.

ஏனெனில், சீன-அமெரிக்க மோதல் நேரடியாக வெடிக்காமல், இத்தகைய மறைமுகப் போர்களின் (Proxy Wars) மூலம் விரிவடைவது ஆசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்குப் பெரும் சவாலாக அமையும். இறுதியில், சீனா தனது பொருளாதார நலன்களைக் காத்துக் கொள்ளப் போகிறதா அல்லது தனது “மூலோபாயக் கூட்டாளி” ஈரானைப் பாதுகாக்கத் துணியப் போகிறதா என்பதைப் பொறுத்தே ஆசியாவின் அடுத்தகட்ட அரசியல் அமையும்.

## கச்சாய் எண்ணெய் அரசியல்:

இந்த நிலையில் சீனாவின் மௌனம் தற்செயலானதா, அல்லது பெய்ஜிங்கின் வீதிகளில் இயங்கும் ஒரு இரகசிய வங்கி (Mystery Bank), இந்தப் போரின் போக்கையே மாற்றக்கூடிய ஒரு பெரும் சக்தியாக உருவெடுத்திருக்கிறதா என்பது சீனாவின் மௌனம் ஏன் என்பதை விரைவில் தெரிந்து கொள்ள முடியும். பெய்ஜிங்கில் இயங்கும் அந்த இரகசிய வங்கி பல உண்மைகளை வெளிக்கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போரின் கோர முகத்தால் இலட்சக்கணக்கான ஈரான் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கிறார்கள். மறுபுறம், இந்த மர்ம வங்கியின் நிதி பரிமாற்றங்கள் அமெரிக்கா - ஈரான் மோதலில் ஒரு கண்ணுக்குத் தெரியாத அளவிற்கு மாறியுள்ளதா, பல்லாயிரம் கோடி டாலர் மதிப்பிலான வர்த்தகப் பின்னணியும், கச்சா எண்ணெய் அரசியலும் இந்த மௌனத்திற்குப் பின்னால் ஒளிந்துள்ளனவா என்பதும் தெளிவாகத் தெரியும்.

உலகமே அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையிலான வான் வழித் தாக்குதல்களைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கும் இந்த வேளையில், சீனாவின் மௌனம் ஒரு மிகப்பெரிய மர்மமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த மௌனத்திற்குப் பின்னால் பேங்க் ஆஃப் குன்லுன் (Bank of Kunlun) என்ற ஒரு சிறிய வங்கியும், பல இலட்சம் கோடி மதிப்பிலான இரகசிய வர்த்தக சுழற்சியும் ஒளிந்திருப்பது இப்போது அம்பலமாகியுள்ளது.

சீனா ஈரானிடம் இருந்து வெறும் கச்சா எண்ணெய்யை மட்டும் வாங்கவில்லை. மாறாக அமெரிக்க டாலரைத் தவிர்த்துவிட்டு ஒரு இரகசிய பணப் பரிமாற்ற சங்கிலியை உருவாக்கியுள்ளது. இது குறித்து மேக்னம் ஃபின்வெஸ்ட் சர்வீசஸ் நிறுவனர் சௌரப் ஜெயின் கூறுகையில், அமெரிக்கா ஈரானைத் தாக்குவதற்குப் பின்னால் இருக்கும் உண்மையான காரணம் நீங்கள் நினைப்பது அல்ல. அது பேங்க் ஆஃப் குன்லுன் என்ற யாருக்கும் தெரியாத ஒரு சீன வங்கியைப் பற்றியது” என்கிறார்.

**ஈரானின் பாதுகாப்பு அமைப்புகள் சிதைக்கப்பட்டும் போது, சீனா ஏன் இன்னும் நேரடியாகக் களத்தில் இறங்கவில்லை என்பது குறித்த அதிர்ச்சியூட்டும் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. யுத்தத்தின் நேரடி தாக்கத்தைவிடவும், சில நேரங்களில் அதிகார வர்க்கத்தின் மௌனம்தான் அதிக அச்சத்தை உண்டாக்குகிறது**



## இரகசிய பொருளாதாரப் போர்

சீனா ஒவ்வொரு மாதமும் ஈரானிடமிருந்து சுமார் 1.5 பில்லியன் டாலர் மதிப்பிலான கச்சா எண்ணெய்யை வாங்குகிறது. ஆனால் சீன அரசின் அதிகாரபூர்வ தரவுகளில், இறக்குமதி பட்டியலில் ஈரான் பெயர் இருக்காது. ஈரானிய எண்ணெய் கப்பல்கள் கடலில் வைத்து மலேசிய எண்ணெய் போலச் சான்றிதழ் மாற்றப்பட்டு, மலேசியாவிலிருந்து வருவது போல சீனாவுக்கு அனுப்பப்படுகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த எண்ணெய்க்கான பணத்தை சீனா டாலரில் கொடுப்பது கிடையாது. மாறாக சீனாவின் யுவான் மட்டுமே. தனது சொந்த நாணயமான யுவான் (Yuan) மூலம் குன்லுன் வங்கியில் உள்ள ஈரான் கணக்குகளில் செலுத்துகிறது என்றும் தெரிவிக்கிறார்கள். ஈரானால் அந்த யுவானை வெளியில் எங்கும் பயன்படுத்த முடியாது. எனவே, அந்த பணத்தைக் கொண்டு சீனாவிலேயே இயந்திரங்கள், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் உள்கட்டமைப்பு பொருட்களை ஈரான் வாங்குகிறது. இதன் மூலம் பணம் மீண்டும் சீனாவிற்கே திரும்புகிறது. டாலருக்கு இங்கே வேலையே இல்லை. ஈரானைப் பொறுத்தவரையில் தன்னுடைய எண்ணெய் விற்பனையும் ஆகிறது.

அத்துடன் தனது மற்ற தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. அதுவும் அமெரிக்காவின் தடைக்கு மத்தியில் இப்படியான வாய்ப்பு சாதகமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் சீனாவுக்கோ காசு கொடுத்து வாங்கினாலும், அந்த பணம் தன் நாட்டிற்கே திரும்பவும் வருகிறது. அதன் மூலம் வர்த்தக வளர்ச்சியும் அதிகரிக்கிறது. தனது எண்ணெய் தேவையையும் குறைந்த விலையில் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. மற்ற நாடுகள் பணவீக்கத்தின் சிக்கித் தவித்து வரும் நிலையில், சீனா அதையெல்லாம் தட்டி தூக்கி விட்டுச் சென்று கொண்டிருக்கிறது.

ஈரானில் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், எண்ணெய் விலை ஒரு பீப்பாவுக்கு 100 டாலர்களுக்கு மேல் செல்லும் போது, டாலரை நம்பியிருக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இறக்குமதி செலவு தாறுமாறாக உயரும். ஆனால் சீனாவோ தள்ளுபடி விலையில் இரகசியமாக எண்ணெய் வாங்குவதால் அதன் பொருளாதாரம் பாதிக்கப்படாது.

### ஆசியாவில் சீனா ஆதிக்கம்:

இந்தியாவைப் பொறுத்தவரையில் மத்தளத்திற்கு இரு பக்கமும் அடி என்பது போல, ஒரு புறம் அதிகரித்து வரும் விலைவாசி, அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு எனில், மறுபுறம் டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு பெரும் கவலை அளிக்கும் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

மேலும் டாலரின் தேவை அதிகரிக்கும் போது, இந்திய ரூபாயின் மதிப்பு மேலும் சரிய வாய்ப்புள்ளது. இது இந்தியப் பங்குச் சந்தையிலும் பெரும் அதிர்வுகளை உண்டாக்கலாம். முதலீடுகள் வெளியேறலாம். ஆக சீனா - ஈரான் இடையிலான இந்த இரகசிய கூட்டணி, ஆசியப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை அதிகப்படுத்தும். இது இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வர்த்தக நலன்களுக்கு ஒரு வகையான மறைமுக மிரட்டலாகும்.

சீனாவின் இந்த செயல்பாடானது அமெரிக்காவுக்கும் பிரச்னைதான். ஏனெனில் உலக நாடுகள் கச்சா எண்ணெய் வாங்க டாலரில் பணம் செலுத்தி வரும் நிலையில், சீனா மட்டும் யுவான் மூலம் எண்ணெய் வாங்கி வருகிறது. இது டாலரின் தேவையைக் குறைக்கலாம். இது அமெரிக்காவின் பலனை மெதுவாகக் குறைக்க வழிவகுக்கும். மேலும் அமெரிக்கா ஒரு நாட்டின் மீது தடை விதித்தால், அதை எப்படியேனும் உலக நாடுகளின் நிதிச் சந்தையிலிருந்து ஒதுக்கி வைத்துவிடும். ஆனால் சீனாவின் நடவடிக்கை அமெரிக்காவின் அந்த நிதி ஆயுதத்தை முறியடிக்கத் தொடங்கியுள்ளது.

சொல்லப்போனால் அமெரிக்காவின் எரிசக்தி அரசியலுக்கு, சீனா மறைமுகமாக ஒரு முட்டுக்கட்டையாக அமைகிறது. மேலும் குறைந்த விலையில் எண்ணெய் வாங்குவதோடு, அதைத் தனது உற்பத்தி வளர்ச்சிக்குச் சாதகமாகவும் பயன்படுத்திக் கொள்கிறது. அதேசமயம் ஈரானும் நிதி ரீதியாகப் பின்னடைவைச் சந்திக்காமல் இருக்கவும் இது காரணமாக இருக்கிறது. இந்த சூழல்தான் அமெரிக்காவின் கோபத்திற்கு மறைமுக காரணியாகவும் பார்க்கப்படுவதாக நிபுணர்கள் நம்புகின்றனர். துப்பாக்கிகளால் நடத்தப்படும் போரை விட, இந்த இரகசிய பொருளாதாரப் போர் அமெரிக்காவுக்கு நீண்ட கால அடிப்படையில் மிகப்பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தலாம் என நம்புகிறது.

www.sangathamil.ca

# வட்டுக்கோட்டை தீர்மானம் 1976 மே 14



1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1976 மே 14 ஆந்தேதியன்று வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானம். தவிசாளர் எஸ். ஜே. வி. செல்வநாயகம், கியுசி, பா.உ (காங்கேசன்துறை) 1976 மே 14ஆந் தேதியன்று (வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள) பண்ணாகத்தில் கூடுகின்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு, இலங்கைத் தமிழர்கள் தங்களின் தொன்மைவாய்ந்த மொழியினாலும் மதங்களினாலும் வேறான கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றினாலும் ஐரோப்பிய படையெடுப்பாளர்களின் ஆயுதப்பலத்தினால் அவர்கள் வெற்றி கொள்ளப்படும் வரை பல நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனிவேறான அரசாகச் சுதந்திரமாக இயங்கிய வரலாற்றின் காரணமாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தமது சொந்தப் பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆண்டு கொண்டு தனித்துவமாகத் தொடர்ந்திருக்கும் விருப்பம் காரணமாகவும் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட தனித் தேசிய இனமாகவுள்ளனரென, இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.

மேலும் 1972இன் குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களைப் புதிய காலனித்துவ எசமானர்களான சிங்களவர்களால் ஆளப்படும் ஓர் அடிமைத் தேசிய இனமாக ஆக்கியுள்ளதென்றும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சிப்பிரதேசம், மொழி, பிரசாவுரிமை, பொருளாதார வாழ்க்கை, தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் ஆகியவற்றை இழக்கச்செய்வதற்கு சிங்களவர்கள் தாம் முறைகேடாகப் பறித்துக் கொண்ட அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனரென்றும் அதன்மூலம் தமிழ் மக்களின் தேசியத்திற்கான இயற்பண்புகள் யாவும் அழிக்கப்படுகின்றனவென்றும் இம்மாநாடு உலகுக்கு அறிவிக்கின்றது. மேலும் தமிழ் ஈழம் என்ற தனிவேறான அரசொன்றைத் தாபிப்பதற்கான அதன் ஈடுபாட்டுக்கடப்பாடு தொடர்பில், வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களும் வேலை செய்கின்றவர்களுமான பெரும்பான்மையான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளிப்படுத்திய அதன் ஒவ்வாமைகளைக் கருத்தில் கொள்கின்ற அதேவேளையில், ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமை பொருந்திய, சமயச்சார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீளஉருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உளதாயிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்க முடியாததாகியுள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது. இம்மாநாடு மேலும் பிரகடனப்படுத்துவதாவது:

(அ) தமிழ் ஈழ அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதுடன் இலங்கையின் எந்தப்பகுதியிலும் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற மக்களுக்கும் தமிழ் ஈழத்தின் பிரசாவுரிமையை விரும்பித்தெரிகின்ற உலகின் எப்பகுதியிலும் வசிக்கின்ற ஈழ வம்சாவழித் தமிழர்களுக்கும் முழுமையான, சமமான பிரசாவுரிமைகளை உறுதிப்படுத்தவும் வேண்டும். தமிழ் ஈழத்தின் ஏதேனும் சமயத்தைச் சேர்ந்த அல்லது ஆட்சிப்பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமொன்று வேறு ஏதேனும் பிரிவினரின் மேலாதிக்கத்திற்குட்படாதிருத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பு சனநாயகப் பன்முகப்படுத்தற்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) தமிழ் ஈழ அரசில் சாதி ஒழிக்கப்படவேண்டுமென்பதுடன், பிறப்பின் அடிப்படையில் பின்பற்றப்படும் பெருங்கேடான பழக்கமான தீண்டாமை அல்லது ஏற்றத்தாழ்வு முற்றாக ஒழித்துக் கட்டப்படவும் எவ்வகையிலேனும் அதனைக் கடைப்பிடித்தல் சட்டத்தால் தண்டிக்கப்படவும் வேண்டும்.

(இ) தமிழ் ஈழம் அவ்வரசிலுள்ள மக்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லாச்சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்குகின்ற சமயச்சார்பற்ற ஓர் அரசாக இருக்க வேண்டும்.

(ஈ) தமிழ் அரச மொழியாக இருக்க வேண்டும் எனினும் தமிழ் ஈழத்தில் சிங்களம் பேசுகின்ற சிறுபான்மைகள் அவர்களின் மொழியில் கல்வியையும் அலுவல்களையும் தொடர்வதற்கான உரிமைகள் சிங்கள அரசிலுள்ள தமிழ் பேசும் சிறுபான்மைகள் பாதுகாக்கப்படும் சரி எதிரிடையான அடிப்படையில் பாதுகாக்கப் பட வேண்டும்.

(உ) தமிழ் ஈழத்தில் மனிதனால் மனிதன் சுரண்டப்படுதல் தடை செய்யப்படும். உழைப்பின் மகத்துவம் பாதுகாக்கப்படும். சட்டத்தினால் அனுமதிக்கப்படும் எல்லைகளுக்குள் தனியார் துறையின் இருப்புக்கு அனுமதி வழங்கப்படுகின்ற அதே வேளையில், பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அரச உரிமையின் கீழ் அல்லது அரச கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும். பொருளாதார அபிவிருத்தி சோசலிசத் திட்டமொன்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். ஒரு தனி நபரின் அல்லது குடும்பத்தின் செல்வம் தொடர்பில் உச்சவரம்பு விதிக்கப்படும். இவ்வகையில் தமிழ் ஈழம் ஒரு சமதர்ம அரசாக இருக்க வேண்டும்.

தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயல்திட்டமொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்கவேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவை இம்மாநாடு பணிக்கின்றது. மேலும் இம்மாநாடு, சுதந்திரத்திற்கான இப்புனிதப்போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறைமையுள்ள தமிழ் ஈழ அரசென்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும்படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றது. (இது 1976 மே 15ஆந் தேதியன்று திரு. செல்வநாயகம், கியுசி. பா.உ அவர்கள் தலைமையில் (வட்டுக்கோட்டைத் தொகுதியி லுள்ள) பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் 1ஆவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானம். 1977இல் இதனை முன்வைத்துத் தேர்தலுக்குச் சென்ற த.ஐ.வி.மு. தமிழ் வாக்காளர்களிடமிருந்து அமோகமான ஆணையைப் பெற்றது. இதுவே ஈழத்தமிழர் சனநாயக முறையில் நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில் சுதந்திரமாகத் தமது விருப்பை வெளிப்படுத்துக் கூடுமாயிருந்த இறுதித் தடவையாயிருந்தது.

மூலம்: கலாநிதி ஆ.க. மனோகரன்

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# ஈரான் போரில் ரஷ்ய நிலைபாடு: தெஹ்ரானுக்கு மாஸ்கோவால் உதவ முடியாதா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

08.03.2026

வளைகுடா போரில் ரஷ்யாவின் தற்போதைய நிலைப்பாட்டை தீவிரமான ரஷ்ய இராணுவ ஆய்வாளர்களும், அரசியல் விமர்சகர்களும் காரசாரமாக கண்டித்து வருகின்றனர். குறிப்பாக பனிப்போரின் பின்னர் அமெரிக்க அரசுடன் அமைதியான மென் போக்கையே தொடர்ந்து முன்னெடுத்து வருவதால் ஈரான் போரில் ரஷ்யாவின் கையலாகா நிலையை வெளிப் படுத்தி உள்ளது.

ஆனால் உக்ரைன் போரில் அமெரிக்கா தேவையற்ற நிலையில் கீவ் அரசுக்கு உதவுவதாக ரஷ்யா குற்றஞ்சாட்டி வருகிறது. மேலும் பல ஆண்டுகளாக சர்வதேச நாடுகளின் மீதான அமெரிக்க தாக்குதல்களை ரஷ்யா வெறுமனே மூன்றாந் தரப்பு நிலையில் தான் அவதானித்து வரும் நிலையில் இருந்தது, தற்போதும் இருக்கிறது.

மொஸ்கோ அரசிடம் பிரம்மாண்டமான அணு ஆயுத வளங்கள் இருந்தாலும், அவற்றை பாதுகாக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. எப்போதாவது ரஷ்யா தாக்கப்பட்டால் அதை சமாளிக்க ரஷ்யா தயாராக இருக்கிறதா என்பது சந்தேகமே.



## மாஸ்கோ தலையிடுமா?

போர் நெருக்கடி ஏற்பட்டால் ரஷ்யா கைகொடுக்கும் என ஈரான் நம்பிக்கை வைத்து இருந்தது. ஆனால் ரஷ்ய-ஈரானிய உறவுகள் இந்த நேரத்தில் மிகவும் மோசமாக நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது. மாஸ்கோ இப்போது ஈரானிய தரப்பில் தலையிடும் அளவுக்கு வலுவாக இல்லை என்பதை காட்டுகிறது. மேலும் என்னவென்றால், கிரெம்ளினுக்கு இஸ்ரேலுடன் முறைசாரா ஒப்பந்தம் ஒன்றும் உள்ளதாக கூறப்படுகிறது.

இஸ்ரேல் மேற்கத்திய பொருளாதாரத் தடைகளைப் பின்பற்றி வருவது இல்லை. ரஷ்யாவுடன் பல வர்த்தக ஒப்பந்தங்களை இன்னும் தொடர்ந்து செய்து வருகிறது. அத்துடன் வரலாற்று ரீதியாக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது. அத்துடன் பல ரஷ்ய பெரும் பணக்கார நபர்களுக்கு (ஒலிகார்) டெல் அவிவ் ஒரு புகலிடமாக நீண்டகாலமாக மாறியுள்ளது.

ரஷ்யாவின் நடுநிலைமைக்கு இன்னொரு காரணம், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின், ரஷ்ய-உக்ரைன் மோதல் குறித்த நடுநிலையான நிலைப்பாடும் காரணமாகும். உக்ரைன் போரை நிறுத்த பேச்சுவார்த்தை மேசையில் அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அவரது முயற்சிகளும் ரஷ்ய அரசு டிரம்புடன் நெருங்கிய நட்பான தொடர்பில் இருப்பதாக கூறப்படுகிறது. ஐரோப்பிய தலைவர்கள் உக்ரைன் போரை நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் மாஸ்கோ மாத்திரமன்றி டிரம்ப் அரசும் அதை விரும்பவில்லை என கூறப் படுகிறது.




**ஈரானிய ஆட்சியை ஆதரிக்க உண்மையான விருப்பம் இருந்தாலும், அவ்வாறு செய்வதற்கு ரஷ்யாவிடம் மிகக் குறைந்த திறனே இருக்கிறது. மத்திய கிழக்கில் நீடித்த போர் அமெரிக்க ஆயுதக் கிடங்குகளைக் குறைக்கும். அதனால் உக்ரைனுக்குக் கிடைத்திருக்கும், குறிப்பாக முக்கியமான வான் பாதுகாப்பு ஏவுகணைகள் கண்டிப்பாக குறையும் என ரஷ்ய தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது**



அதேவேளை ஈரானிய ஆட்சியை ஆதரிக்க உண்மையான விருப்பம் இருந்தாலும், அவ்வாறு செய்வதற்கு ரஷ்யாவிடம் மிகக் குறைந்த திறனே இருக்கிறது. ஈரானுக்கு உதவக்கூடிய ஒரே வழி, நான்கு வருட உக்ரைன் போரில் அது உருவாக்கிய இராணுவ தொழில்நுட்ப அறிவு தான். ஆனால் இப்போது உதவினால் அது இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுடனான உறவுகளைப் பாதிக்கக்கூடும் என்று ரஷ்யா நினைக்கிறது.

## எண்ணெய் – எரிவாயு விலை உயர்வு:

அமெரிக்க-இஸ்ரேல் நடவடிக்கை ஈரானுக்கு எதிராக இருப்பது உண்மையில் குறுகிய காலத்தில் ரஷ்யாவுக்கு நன்மை பயக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். போர் ஏற்கனவே எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளில் பாரிய உயர்வை ஏற்படுத்தியுள்ளது, அதாவது ரஷ்ய அரச பொருளாதாரத்திற்கு எரிசக்தி விற்பனையிலிருந்து அதிக வருவாய் கிடைக்கும். அதிக எரிசக்தி விலைகள், தற்போது உக்ரைனின் முக்கிய நிதியளிப்பாளரான ஐரோப்பிய ஒன்றியத்தின், நாட்டின் போர் முயற்சிக்கு நிதியளிக்கும் திறனையும் பாதிக்கும் என ரஷ்யா நம்புகிறது.

மேலும் மத்திய கிழக்கில் நீடித்த போர், அமெரிக்க ஆயுதக் கிடங்குகளைக் குறைக்கும். அவை இல்லையெனில் உக்ரைனுக்குக் கிடைத்திருக்கும், குறிப்பாக முக்கியமான வான் பாதுகாப்பு ஏவுகணைகள் கண்டிப்பாக குறையும் என்று ரஷ்ய தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய கிழக்கில் அமெரிக்கா சிக்கித் தவிப்பது, உக்ரைனுடன் நடந்து வரும் பேச்சுவார்த்தைகளில் மாஸ்கோவுக்கு அதிக செல்வாக்கைப் பெற்றுத் தரும். அமெரிக்க உள்நாட்டிலும், ஈரானில் அழிவு மற்றும் குழப்பத்தின் காட்சிகளிலிருந்து புடின் மேலதிக பயனடைய வாய்ப்புள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இப்போது ஈரானியர்களுக்கு சுதந்திரமான மற்றும் வளமான நாட்டைக் கட்டியெழுப்ப உதவ முடியும் என்று நம்புகிறார்கள். ஆனால் அது சாத்தியமில்லை என்று ரஷ்யா கூறுகிறது. இறுதியில் இந்த போர் ஈராக், ஆப்கான் போரை போல் அமெரிக்கா தோல்வி அடையும் என ரஷ்யா நம்புகிறது.

## மாஸ்கோ கவலை மட்டுமே :

ஈரான் மீதான தாக்குதல் மாஸ்கோவில் கவலைக்குரிய விஷயமாக இருந்தாலும், அது உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு உள்ளிட்ட தனது சொந்த புவிசார் அரசியல் மூலோபாயத்தின் நியாயத்தன்மையையே முதன்மையாக பார்க்கிறது. அமெரிக்க தலைமையிலான மேற்கத்திய நாடுகளை ஒரு கட்டுக்கடங்காத மற்றும் நம்பகத்தன்மையற்ற தலைமை என்ற கிரெம்ளினின் நீண்டகால பார்வையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

மேலும் ஈரானுக்கு எதிரான அமெரிக்க , இஸ்ரேல் கூட்டு படை தாக்குதலில் ரஷ்ய உதவியால் உருவாகிய அணு ஆராய்ச்சி மையம் பலத்த சேதம் அடைந்துள்ளது என ரஷ்ய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.



2003இல் ஈரான் மீதான அமெரிக்கப் போர், 2011 இல் லிபியாவில் நடந்த சம்பவங்களில் ரஷ்யாவின் பங்கு உலகம் அறிந்ததே. இது குறித்து நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டது. அப்போது அமெரிக்க தன்னிச்சையாக இந்த நாடுகளை தாக்கிய போது மொஸ்கோ அரசு மௌனம் சாதித்தது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு இவை நினைவூட்டுவதுடன், அவரது அரசியல் கௌரவத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.



## ரஷ்யாவின் அரசியல் நிலைபாடு:

1980களில் ஈரான் ரஷ்யாவின் முக்கிய கூட்டாளியாக இருந்தது. இந்த உறவுநிலை ஆதரவு வர்த்தக நட்பின் இலட்சியத் தன்மையான செயலாக ஈரானுக்கு பில்லியன் கணக்கான டாலர்கள் மதிப்புள்ள வர்த்தகம் செய்யப்பட்டது. அதுவே சோவியத் கால கட்ட சிக்கலான பொருளாதாரத்தைத் தக்கவைக்க உதவியது என்பதை மறுக்க முடியாது.

தற்போது ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதல்களும், உச்சத் தலைவர் அயதுல்லா அலி கொமேனி படுகொலையும் மாஸ்கோவில் பாரிய அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையே. ஏனெனில் எதிர்காலத்தில் ரஷ்யாவுடன் போர் ஏற்படுவதற்கான சாத்தியக் குறிப்புகளை முக்கிய மேற்கத்திய அதிகாரிகள் வெளிப்படுத்தும் பொறுப்பற்ற அறிக்கைகளில் இருந்து, ரஷ்யா தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

நேட்டோ தலைமையிலான இராணுவத் தலையீடு லிபிய தலைவர் முஅம்மர் கடாபியை ஆட்சியில் இருந்து அகற்றுவதில் இறுதியில் முடிந்தது.

லிபியா மீதான நேட்டோ தாக்குதலின் போது, அப்போதைய அதிபர் டிமிட்ரி மெட்வெடேவ், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் வாக்கெடுப்பின் போது ரஷ்யா வாக்களிப்பதில் இருந்து விலகியிருக்க வேண்டுமென வலியுறுத்தினார். மேலும் இந்த விவகாரத்தில் ரஷ்யா தனது நிலைப்பாட்டை தெளிவாக அறிவிக்கவில்லை. இதனால் அமெரிக்க தலையீட்டை ரஷ்யா ஒப்புக் கொண்டது என்று மேற்குலகால் கூறப்படுகிறது.

இறுதியில் அக்டோபர் 2011 இல், கடாபி கிளர்ச்சியாளர்களால் கொடூரமாக கொல்லப்பட்டார். அவரது மரணத்தின் வீடியோ உலகின் பல்வேறு பகுதிகளில் இணையத்தில் வைரலானது. அப்போது மேற்கத்திய தலைவர்களால் கொண்டாடப்பட்ட அவரது ஆட்சியின் முடிவு, லிபியாவுக்கு மக்களாட்சியையோ செழிப்பையோ இன்னும் கொண்டு வரவில்லை. மாறாக லிபிய நாட்டை உள்நாட்டுப் போரிலும் பிளவிலும் ஆழ்த்தியது.

இதன் பின்னர் மே 2012 இல் ரஷ்யா புட்டின் மீண்டும் தனது அதிபராக பதவியேற்றார். அதற்கு மாஸ்கோவில் பல போராட்டங்களை திட்டவட்டமாக ஒடுக்கியும் இருந்தார்.

2014இல் ரஷ்யாவின் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கையில் ஒரு திருப்புமுனையாக பல மாற்றங்கள் நிகழ்ந்தன. சில ஆண்டுகளுக்குள் உக்ரைனின் மைதான் புரட்சி கலவரத்தில் தலையிட வேண்டிய சூழல் ரஷ்யாவுக்கு ஏற்பட்டது.

## ஈரானில் அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதல்:

இப்போது ஈரானில் தொடரும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது, உக்ரைனில் தனது படைகளின் நடவடிக்கைகள் நியாயமானவை என்று புடின் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் ரஷ்யாவின் நெருங்கிய அண்டை நாட்டிற்கு எதிராக ஒரு போரில் தனது நிலைப்பாட்டை தெளிவாக அறிவித்துள்ளார். புடின் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உலக ஒழுங்கில் தன்னை வலிமையானவராக இன்னும் கருதுகிறார்.

2007 இல் உக்ரைன் மற்றும் ஜோர்ஜியாவை நேட்டோவில் உறுப்பினர்களை அனுமதிக்க முடிவு செய்தபோது, அவை எதிரி பிரதேசமாக ரஷ்யாவிற்கு மாறின. அதன் விளைவாக 2008 இல் ஜார்ஜியாவில் நடந்த குறுகிய கால மோதலின் போது ரஷ்யா தனது வெற்றிகரமான படை நடவடிக்கையை மேற்கொண்டது.

2014 இல் உக்ரைன் மீதான தாக்குதல்களும், பின்னர் 2022 இல் படையெடுப்பும் ரஷ்யாவை மேற்குலகுடன் முரண்பட வைத்துள்ளது. ஆனால் ஈராக், லிபியா மற்றும் சிரியாவில் அமெரிக்க தலைமையிலான படை நடத்திய தாக்குதல்களை ரஷ்யா உதட்டளவில் கண்டித்தாலும், அதனை எதிர்க்க முடியாத நிலையே இருந்தது. ஆனால் சிரியாவில் சிறிய அளவிலான எதிர் தாக்குதலை ரஷ்யா நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது ஈரான் எதிர்கொள்ளும் நெருக்கடியில் அமெரிக்க இராணுவத் தலையீட்டைத் தடுக்கும் விதமாக கிரெம்ளினால் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை உலக அரங்கில் விமர்சிக்கப்படுகிறது.

உக்ரைனை மோதலின் தீர்க்கமான போர்க்கள வெற்றியாக மாற்றுவது, போரின் எந்தவொரு உறுதியான தாக்கத்திலிருந்தும் பெரும்பான்மையான ரஷ்ய மக்களைப் பாதுகாக்க கிரெம்ளின் முயற்சி செய்துள்ளது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடந்த பத்தாண்டு கடினமான உறவுகளைக் கருத்தில் கொண்டு, ரஷ்ய-உக்ரைன் மோதலின் களத்தில் பாரிய தாக்கம் உள்ளது.

இது ரஷ்ய சமூகத்திற்கு தவிர்க்க முடியாத வெற்றி என்று புட்டின் தலைமையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஈரானிய ஆட்சியை ஆதரிக்க உண்மையான விருப்பம் இருந்தாலும், அவ்வாறு செய்வதற்கு ரஷ்யாவிடம் மிகக் குறைந்த திறனே இருக்கிறது. எனவே ஈரான் போரில் ரஷ்ய நிலைபாடு என்பது தெஹ்ரானுக்கு மாஸ்கோவால் உதவ முடியாத நிலை என்பதே உண்மை ஆகும்.

ஆனாலும் மத்திய கிழக்கில் நீடித்த போர் அமெரிக்க ஆயுதக் கிடங்குகளைக் குறைக்கும். அதனால் உக்ரைனுக்குக் கிடைத்திருக்கும், குறிப்பாக முக்கியமான வான் பாதுகாப்பு ஏவுகணைகள் கண்டிப்பாக குறையும் என ரஷ்ய தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

**நாம் ஒன்றுபட்ட மக்களாக - ஒரே சக்தியாக - அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# நிஸ்க் எடு – கொண்டாடு

01.03.2026

கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. வழமையாக சமூகவலைத்தளங்களில் பட்டம் பெற்றவர்களின் கொண்டாட்டப் படங்கள் பகிரப்படும். ஆனால் இம்முறை வேலையற்ற பட்டதாரிகளை முன்வைத்து ஒரு விவாதப் பரப்பு திறக்கப்பட்டது.







பல்கலைக்கழகங்கள் ஆண்டு தோறும் பட்டதாரிகளை உருவாக்குகின்றன. ஆனால் நாட்டில் இப்பொழுது 42,000க்கும் குறையாத வேலையற்ற பட்டதாரிகள் உண்டு. நாட்டில் வேலையில்லாத 365,951 தனி நபர்களில், பட்டதாரிகள் அல்லது அதையொத்த கல்வித் தகமையுடையவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 42,254 என்று பிரதமர் ஹரிணி கடந்த நொவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவர்களை வேலையற்ற பட்டதாரிகள் என்று அழைப்பதை விடவும் அரச வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரிகள் என்று அழைப்பது நல்லது என்று எனது நண்பர் ஒருவர் கூறுவார். கடந்த வாரம் சமூக வலைத்தளங்களில் நிகழ்ந்த வாதப்பிரதிவாதங்களும் அந்த வகைப்பட்டவைதான். பட்டதாரிகள் பட்டம் பெற்ற பின் வேலை இன்றி தெருவில் நிற்கப் போகிறார்கள் அல்லது அரச வேலை கேட்டு ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறார்கள் என்ற பொருளில் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. இத்தகையதோர் பின்னணியில், புதிய தொகுதி பட்டதாரிகள் வெளியேறுவது என்பது வெளியேற்றப்பட்டதாரிகளின் எண்ணிக்கையில் ஒரு புதிய தொகுதி இணைவதைக் குறிக்கும் என்றும் அங்கு விமர்சிக்கப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும்பொழுது வாழ்வின் முக்கிய பேறு ஒன்றை அடைந்து விட்டதாக ஒவ்வொரு பிள்ளையும் பெருமைப்படுகிறது. அது உண்மைதான். பொன்னிறக் கனவுகளோடு அவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் வருகிறார்கள். பட்டம் கிடைத்ததும் அவர்கள் அதைக் கொண்டாடும் விதத்தில், எடுக்கும் ஒளிப்படங்களில் அதை அவர்கள் எந்தளவு பெருமைக்குரியதாகக் கொண்டாடுகிறார்கள் என்பது தெரியும். ஆனால் பட்டம் எடுத்த பின் வேலை தேடி அலையும் போதுதான் அவர்களுடைய பொன் நிறக் கனவுகள் நிறமிழக்கத் தொடங்குகின்றன.

ஆனால் அதற்கு அவர்கள் மட்டும் பொறுப்பல்ல. பின்வரும் அடிப்படைக் காரணங்கள் உண்டு.

முதலாவது, சந்தைப் பெறுமதி மிக்க, தொழில் வாய்ப்புகள் அதிகமுடைய பட்டதாரிகளை உருவாக்கும் விதத்தில் கல்விக் கொள்கை திட்டமிடப்படாமை.

இரண்டாவது, புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் தோல்வியடைந்தமை.

மூன்றாவது, தொழில் தொடர்பாக சமூகத்திடம் இருக்கும் அளவுகோல்கள், பிரமைகள்.

நான்காவது, தொழில் முனைவோரை உருவாக்காத கல்வி முறை. இதை வேறு வார்த்தைகளில் சொன்னால் அரசு அலுவலர்களை அதிகமாக உற்பத்தி செய்யும் கல்வி. அதாவது ரிஸ்க் எடுக்கக் கற்றுக் கொடுக்காத கல்வி.

எனவே பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதற்கு தனிய அவர்கள் மட்டும் பொறுப்பல்ல. மேற்சொன்ன காரணங்களும் பொறுப்பு அது ஒரு கூட்டுத் தோல்வி.

பட்டதாரிகளில் பெரும் பகுதியினர் ஏன் அரச வேலையை நாடுகிறார்கள்? அதற்குப் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவதாக அங்கே கஷ்டப்பட்டு வேலை செய்யத் தேவையில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு. சும்மா இருந்து சம்பளம் எடுக்கலாம், தடை தாண்டிப் பரீட்சைகளில் சித்தி பெறுவதன் மூலம் பதவி உயர்வுகளையும் சம்பள உயர்வுகளையும் பெறலாம் என்று பட்டதாரிகள் நம்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டு.

இரண்டாவது காரணம், ஓய்வூதியம் கிடைக்கும். எனவே முதிய வயதில் பாதுகாப்பு உண்டு.

மூன்றாவது காரணம், அரசாங்கம் என்றால் பலமானது. மக்களைப் பாதுகாப்பது. அதிகாரம் மிக்கது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அரச ஊழியராக இருப்பது அதாவது அரச அதிகாரத்தை சமூகத்தில் அமுல்படுத்துவோராக இருப்பது கௌரவமானது, உயர்வானது என்ற சமூக நம்பிக்கை.

நான்காவது காரணம், அரசாங்கத்தை மட்டுமல்ல யாரையும் பார்த்துக் கொண்டிருக்காமல், யாரிடமும் கையேந்தாமல் தன் திறமைகளை நம்பி, தான் கற்றவைவைகளை அடிப்படையாக வைத்து தொழில் முனைவோராக மேல் எழத் தேவையான துணிச்சலும் வைராக்கியமும் இல்லாமல் இருப்பது.

இந்த நான்கு காரணங்களிலும் முக்கியமானது நாலாவது. பட்டதாரிகள் ஏன் தொழில் முனைவோராக மேலெழ முடியவில்லை? அல்லது மேலெழ விரும்பவில்லை? இந்தக் கேள்விக்குப் பதில், கல்வி முறையின் தோல்விக்குள் இருக்கிறது. நமது கல்வி முறைமை தொழில் முனைவோருக்குத் தேவையான துணிச்சலையும் படைப்புத்திறனையும் தெரிவுகளையும் பட்டதாரிகளுக்கு வழங்கத் தவறிவிட்டதா?

அரச ஊழியத்துக்குள் கிடைக்கும் பாதுகாப்பு, அரசு ஊழியர் என்பதால் கிடைக்கும் மரியாதை இவை இரண்டையும் தவிர ஒரு தொழில் முனைவோர் அல்லது புதிதாகச் சிந்திக்கும் ஒரு பட்டதாரி அதிகம் சம்பாதிக்கலாம், அதிகம் சாதிக்கலாம், அதிகம் பிரபல்யமாகலாம் என்பதற்கு நமது சமூகத்துக்குள்ளேயே உதாரணங்கள் உண்டு.

ஆனால் பட்டங்கள் தொடர்பாகவும் தொழில் தெரிவுகள் பொறுத்தும் தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் இறுகிக் கட்டிபத்திய சிந்தனைகளை உடைத்துக் கொண்டு வெளிவர பெரும்பாலான பட்டதாரிகள் தயாராக இல்லை. ஒரே வசனத்தில் சொன்னால் ரிஸ்க் எடுக்கத் தயாரில்லை.

ஒரு காலம் யுத்த களத்தில் அதி உச்ச ரிஸ்க் எடுத்த ஒரு சமூகம். அதைவிட முக்கியமாக அவ்வாறு ரிஸ்க் எடுக்கலாம் என்ற முன்னுதாரணத்தை காட்டிய பெரும்பாலானவர்கள் முறைசார் கல்விக்கூடாக வந்தவர்கள் அல்ல. ஆயுதப் போராட்டம் தமிழ் சமூகத்தில் பல வெடிப்புகளை ஏற்படுத்தியது. சமூகத்தின் பாரம்பரியக் கல்வி தொடர்பான நம்பிக்கைகளை அது தகர்த்தெறிந்தது. கல்வித் தகமைக்கும் துணிச்சலுக்கும், கல்வித் தகமைக்கும் சாதனைகளுக்கும் இடையே கண்டிப்பாகத் தொடர்பு இருக்கத் தேவையில்லை என்பதையும் அது நிரூபித்தது. பட்டப் படிப்புக்களை அடிப்படைத் தகைமைகளாகப் போற்றாத விடுதலை இயக்கங்கள் சமூகத்தின் தலைவிதியைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டன. சமூகத்தின் மூன்றில் ஒரு பகுதியை புலம்பெயர வைத்தன. உலகமே வியக்கும் தியாகங்களையும் வீரத்தையும் நிரூபித்த ஒரு போராட்டம் அது.

ஆயுதப் போராட்டத்தின் தொடக்கத்தில் “சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது”, “கல்வித் தகுமையற்ற போராளிகள் வெற்றிபெற மாட்டார்கள்” என்றெல்லாம் விவாதிக்கப்பட்டது. ஆனால் கடந்த நான்கு நூற்றாண்டு காலப்பகுதிக்குள் அரசற்ற தமிழ் மக்கள் மத்தியில் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் நிலைத்திருந்த கருநிலை அரசானது மேற்படி நம்பிக்கைகளை விவாதத்துக்கு உள்ளாக்கியது. எனினும் ஆயுதப் போராட்டத்தின் தோல்விக்கு பின் மீண்டும் படிப்பு, செல்வம், செல்வாக்கு... போன்றவை தலைமையைத் தீர்மானிக்கும் அளவுகோல்களாக மேலெழுந்தன. அதிகம் பட்டப் படிப்புகள் இல்லாதவர்கள் நடத்திய போராட்டம் தோல்வியடைந்தது என்று கூறுவோர் இப்பொழுது உண்டு.

ஆனால் அவர்கள் வசதியாக மறந்துவிடும் ஒரு விடயம் என்னவென்றால், ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் பின்னருமான அப்புக்காத்துக்களின் அரசியல் தமிழ் மக்களை மட்டுமல்ல, அவர்களுடைய கட்சிகளையே எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது? என்பதுதான். ஆங்கிலம் தெரிந்த, சிங்களம் தெரிந்த, கற்றறிந்த தமிழ்த் தலைவர்களும் இறுதி வெற்றியைப் பெறவில்லை. அவர்களை மீறி எழுந்த ஆயுதப் போராட்டமும் இறுதி வெற்றியைப் பெறவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல், பொருளாதார, சமூக உளவியல் பின்னணிக்குள், கடந்த 16ஆண்டுகளையும் தொகுத்துப் பார்த்தால் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் இருந்து அடுத்து வந்த தலைமுறை கற்றுக்கொண்டவை எவை? என்று கேள்வி வலிமையாக மேல் எழுகிறது. ஆயுதப் போராட்டம் கற்றுக்கொடுத்த துணிச்சல், தியாக முன்னுதாரணம், ரிஸ்க் எடுக்கும் மனோநிலை போன்றவற்றில் இருந்து பட்டதாரிகள் எந்தளவுக்குக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்?

அவர்கள் உயிரைக் கொடுக்க வேண்டாம். பெரிய அளவில் அர்பணிக்கவும் வேண்டாம். தொழில் ரீதியாக ரிஸ்க் எடுத்தாலே, துணிகர தொழில் முயற்சிகளில் இறங்கினாலே போதும். செல்வந்தர்களாகலாம். புதிய முன்னுதாரணங்கள் ஆகலாம். ஆனால் ஏன் தங்களுடைய சௌகரிய வலையங்களை விட்டு வெளியே வரப் பயப்படுகிறார்கள்?

“துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிற்பது கப்பலுக்குப் பாதுகாப்பானது. ஆனால் கப்பல் அதற்காகக் கட்டப்படுவதில்லை” என்று ஆங்கில மேற்கோள் ஒன்று உண்டு. அது போலவே “அமைதியான கடல் சிறந்த படகோட்டிகளை உருவாக்குவதில்லை” என்றும் ஆங்கிலம் மேற்கோள் ஒன்று உண்டு. இந்த இரண்டு மேற்கோள்களில் இருந்தும் கற்றுக் கொண்டால் பட்டதாரிகளுக்கு அவர்களுடைய பட்டங்களே சிறைகளாக மாறாது.

நன்றி: நிலாந்தன்

**தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள், தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–



# உலகின் மிகப்பெரிய போர்க் கப்பல்: ஆபிரகாம் லிங்கன் கப்பலை ஈரான் தாக்கியதா? பேர்ல் ஹார்பரை தாக்கிய ஜப்பான!

05.03.2026

தொடக்கூடாத இடத்தை தொட்டு விட்டதா ஈரான், ஜப்பான் செய்த அதே தவறை மீண்டும் ஈரான் செய்து விட்டதா என்று தெரிய வில்லை. ஈரானின் உச்ச தலைவர் கமேனி கொல்லப்பட்டதற் குப் பதிலடியாக, அமெரிக்காவின் பிரம்மாண்ட விமானம் தாங்கிக் கப்பலான “USS ஆபிரகாம் லிங்கன்” (USS Abraham Lincoln) மீது நான்கு பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசித் தாக்கியதாக ஈரான் ராணுவம் (IRGC) அறிவித்துள்ளது.



ஈரானின் இந்த நடவடிக்கை, நிலைமையை மிக மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. இதுவரை நிழல் யுத்தம் (Proxy War) நடத்தி வந்த ஈரான், இப்போது அமெரிக்காவுடன் நேரடியாக மோதுகிறது. இந்த நேரடி மோதல் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆனால் அமெரிக்காவோ அந்த ஏவுகணைகள் கப்பலுக்கு அருகில் கூட வரவில்லை, என மறுத்தாலும் ஈரான் தொடுத் திருக்கும் இந்த “நேரடி மோதல்” ஒரு பயங்கரமான வரலாற்று நிகழ்வை பக்கத்தை நினைவுபடுத்துகிறது.

அதுவே பேர்ல் ஹார்பர் (Pearl Harbor) தாக்குதலாகும். பேர்ல் ஹார்பரில் அன்று ஜப்பான் தாக்கியது போல இன்று ஈரானால் அமெரிக்க பாரிய கப்பல் தாக்கப்பட்டுள்ளது.

## பேர்ல் ஹார்பரை தாக்கிய ஜப்பான்:

1941இல் அமெரிக்காவின் பேர்ல் ஹார்பர் தளத்தின் மீது ஜப்பான் ஒரு திடீர் தாக்குதலை நடத்தியது. இரண்டாம் உலகப் போரில் அன்றுவரை அமைதியாக இருந்த அமெரிக்கா, அந்த ஒரே ஒரு தாக்குதலால் ஆக்ரோஷமடைந்து இரண்டாம் உலகப் போரில் குதித்தது. அதன் விளைவு என்னவென்று ஜப்பானுக் குத் தெரியும். ஹிரோஷிமா, நாகசாகியை அணு ஆயுதங்கள் மூலம் தாக்கியதை உலகம் மறக்காது.

1945-இல் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா நடத்திய அணு ஆயுதத் தாக்குதல், ஜப்பானை நிலைகுலையச் செய்த ஒரு வரலாற்றுப் பேரழிவாகும். சில நிமிடங்களில் இரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொல் லப்பட்டனர். நகரங்கள் அனைத்தும் சாம்பலாகிப் போயின.

அணுகுண்டு வீச்சின் கொடூரம் அதோடு முடியவில்லை. கதிர்வீச்சின் தாக்கம் (Radiation) காரணமாக, தப்பிப்பிழைத் தவர்களும் புற்றுநோய் மற்றும் கொடூரமான நோய்களால் பல தசாப்தங்களாக அவதிப்பட்டனர்.

பிறக்கும் குழந்தைகளுக்குக் கூட ஊனங்கள் ஏற்பட்டன. ஜப் பானின் பொருளாதாரம் மற்றும் இராணுவ பலம் முற்றிலுமாக சிதைந்தது. இதனால் இரண்டாம் உலகப்போரில் அந்த நாடு சரணடைய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது. இன்றும் அந்தத் தழும்புகள் ஜப்பானியர்களின் மனதில் நீங்காத வடுக்க ளாக உள்ளன.

## அதே தவறை ஈரான் செய்ததா ?

இன்று அதே போன்ற ஒரு தவறை ஈரான் செய்திருப்பதாகக் கருதப்படுகிறது. ஒரு விமானம் தாங்கிக் கப்பல் என்பது அமெரிக்காவைப் பொறுத்தவரை மிதக்கும் ஒரு தீவு. அதன் மீது தாக்குதல் நடத்துவது என்பது நேரடியாக அமெரிக்காவின் இறையாண்மை மீது கை வைப்பதற்குச் சமம் என்பது மட்டு மல்ல, அமெரிக்காவின் கௌரவம் மீதான அடியாகும்.

அமெரிக்காவின் “Operation Epic Fury” ஏற்கனவே ஈரானைத் தொடர்ந்து தாக்கி வரும் நிலையில், லிங்கன் கப்பலைத் தாக்க முற்பட்டதன் மூலம் ஈரான் தனது அழிவுக்குத் தானே சுழி போட்டுள்ளது.

அதுவே ஈரானின் தப்புக்கணக்கா என்று பலரும் சந்தேகம் எழுப்புகின்றனர்.

ஈரான் ஒருவேளை தற்காப்புக்காக தனது அணுசக்தி ரகசியங் களைப் பயன்படுத்த முயன்றால், அதற்குப் பதிலடியாக அமெரிக்கா தனது அணு ஆயுதங்களை (Tactical Nukes) ஏவத் தயங்காது. அணு ஆயுத மிரட்டலை ஈரான் தொடர்ந்து செய்தால் பாரிய அழிவே மிச்சமாகும்.

ஆனால் உலகப்போர், அணு ஆயுத போர் என்ற வாதங்கள் எழுமாயின், உலக நாடுகளின் அணிவகுப்பு இரு முனையாக மாறிவிடும். ஒருபுறம் அமெரிக்கா-இஸ்ரேல், மறுபுறம் ரஷ்யா-சீனா-ஈரான் என உலகம் இரண்டு பிளவுகளாகப் பிரியத் தொடங்கும். ஆனால் அது மூன்றாம் உலகப்போரின் அணு ஆயுத அத்தியாயமாக மாறும் என்று கூறமுடியாது.

ஏனெனில் ஈரான் தனது உள்நாட்டு மக்களின் கோபத்தைத் திசைதிருப்பவே இதுபோன்ற அதிரடி அறிவிப்புகளை வெளி யிடுகிறது. ஆனால், அமெரிக்கா இதைப் போருக்கான ஒரு காரணமாக எடுத்துக்கொண்டால், ஈரானின் பொருளாதார நிலைமை மேலும் சிதைக்கப்படும் என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள்.



ஏற்கனவே வெனிசுலா அதிபரை கடத்த கைது செய்து சிறையில் அடைத்து டிரம்ப், இப்போது ஈரானின் மையப்பகுதியையே சிதைத்து வருகிறார். ஆபிரகாம் லிங்கன் மீதான தாக்குதல் எரியும் நெருப்பில் எண்ணெய்யை ஊற்றிய கதையாகத் தான் இருக்கிறது.

## உலகின் மிகப்பெரிய போர் கப்பல்:

அமெரிக்காவின் விமானம் தாங்கி ஏபிரகாம் லிங்கன் போர்க்கப்பல் (USS Abraham Lincoln) மீது, ஈரானின் புரட்சிகரக் காவல்படை நான்கு பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி தாக்கி யிருப்பதாக, ஈரான் அரச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

**ஆபிரகாம் லிங்கன் உலகின் மிகப்பெரிய போர் கப்பல்களில் ஒன்றாகும். இது பாரிஸ் ஈபுள் கோபுர உயரத்தை விட நீள-மானது. இந்த கப்பலின் நீளம் சுமார் 333 மீட்டர். கப்பல் உயர் கோபுரத்தின் உயரம் சுமார் 324 மீட்டர் ஆகும். அத்துடன் இந்த கப்பல் அணுசக்தியால் இயங்குகிறது. இதில் இரண்டு அணு உலைகள் உள்ளன. இதனால் இது நீண்ட தூரம் எரிபொருள் நிரப்பாமல் பயணம் செய்ய முடியும். கப்பலில் உள்ள விமான ஓடுதளங்கள் மூலம் போர் விமானங்கள் கடலில் இருந்த படியே புறப்படவும் தரையிறங்கவும் முடியும்**

இந்த கப்பல் உலகின் மிகப்பெரிய போர் கப்பல்களில் ஒன் றாகும். இது பாரிஸ் ஈபுள் கோபுர உயரத்தை விட நீளமானது இந்த கப்பலின் நீளம் சுமார் 333 மீட்டர். கப்பல் உயர்



கோபுரத்தின் உயரம் சுமார் 324 மீட்டர் ஆகும். அத்துடன் இந்த கப்பல் அணுசக்தியால் இயங்குகிறது. இதில் இரண்டு அணு உலைகள் உள்ளன. இதனால் இது நீண்ட தூரம் எரிபொருள் நிரப்பாமல் பயணம் செய்ய முடியும்.கப்பலில் உள்ள விமான ஓடுதளங்கள் (சரறெயல) மூலம் போர் விமானங்கள் கடலில் இருந்தபடியே புறப்படவும் தரையிறங்கவும் முடியும்.

கப்பலில் இருக்கும் விமானங்களில் F-35 Lightning II போன்ற, ரேடாரில் எளிதில் கண்டறிய முடியாத stealth தொழில்நுட்பம் கொண்ட போர் விமானங்களும் அடங்கும். இந்த விமானம் தாங்கி கப்பல் பொதுவாக ஒரு பெரிய கடற்படை குழுவுடன் இயங்குகிறது. அதனை அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலும் தொடர்ந்து செல்கிறது.

இந்த குழுவில் நிலத் தளங்களில் உள்ள இலக்குகளைத் தாக்கக் கூடிய Tomahawk போன்ற நீண்ட தூர ஏவுகணைகளும் இருக் கும். இத்தகைய விமானம் தாங்கி கப்பல்கள் கடலில் மிதக்கும் இராணுவத் தளங்களாக செயல்பட்டு, அமெரிக்காவின் உலக ளாவிய இராணுவப் பிரசன்னத்தில் முக்கிய பங்கு வகிக் கின்றன.

### மத்திய கிழக்கில் தொடரும் போர்:

அமெரிக்கத் தளங்கள் மற்றும் தூதரகங்கள் மீது ஈரான் சரமாரித் தாக்குதல் நடத்தி வருகிறது.

அயத்துல்லா அலி கொமெனி அமெரிக்கத் தாக்குதலில் கொல் லப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய கிழக்கில் பல முனைகளில் போர் வெடித்துள்ளது. ஈரானின் புரட்சிகரக் காவல்படை, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா ஆகிய தரப்புக ளுக்கு இடையே நடந்து வரும் நேரடி மோதல்களால் உலக நாடுகள் அதிர்ச்சியில் உறைந்துள்ளன.

கொமெனியின் மரணத்திற்குப் பழிவாங்கும் நோக்கில், ஈரானின் உக்கிரமான பதிலடி தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகிறது. ஈரான் தனது அதிரடித் தாக்குதல்களைத் தொடங் கியதால் பஹ்ரைனில் உள்ள "ஷேக் ஈசா" (Sheikh Isa) அமெரிக்க விமானப்படைத் தளத்தின் மீது 20 ஆளில்லா விமானங்கள் (Drones) மற்றும் ஏவுகணைகளை வீசி ஈரான் மிகப்பெரிய தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் அமெரிக்கத் தளத்தின் முக்கியக் கட்டளை மையம் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டதாக ஈரானின் புரட்சிகரக் காவல்படை பெரு மிதத்துடன் அறிவித்துள்ளது.

### குறிவைக்கப்பட்ட அமெரிக்கத் தூதரகங்கள்:

வளைகுடா நாடுகள் முழுவதும் உள்ள அமெரிக்க இலக்குகள் கடுமையான தாக்குலுக்கு உள்ளாகியுள்ளன. சவுதி அரேபியா வில் ரியாத் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அங்கு தீ விபத்து ஏற் பட்டதை அடுத்து, அமெரிக்கக் குடிமக்களுக்கான சேவைகள் ரத்து செய்யப்பட்டுத் தூதரகம் உடனடியாக மூடப்பட்டது.

குவைத் தலைநகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து கரும்புகை வெளியேறுவது காணப்பட்ட நிலையில், மறு அறிவிப்பு வரும் வரை அந்தத் தூதரகமும் முற்றிலுமாக மூடப் பட்டுள்ளது. ஈரானின் தாக்குதல்களுக்கு அமெரிக்காவும் இஸ் ரேலும் சற்றும் சளைக்காமல் பதிலடி கொடுத்து வருகின்றன:

இதேவேளை அமெரிக்காவின் பதிலடி தாக்குதலில் பல ஈரான் வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஈரானுக்குள் ஊடுருவி, அங் குள்ள புரட்சிகரக் காவல்படையின் கட்டளை மையங்கள், ஏவு கணை ஏவுதளங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புக ளைத் தரைமட்டமாக்கி விட்டதாக அமெரிக்க இராணுவம் (Centcom) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.



இஸ்ரேலின் இருமுனைத் தாக்குதலில் ஈரானின் தலைநகர் தெஹ்ரான் மற்றும் லெபனான் தலைநகர் பெய்ரூட் ஆகிய இரண்டு நகரங்கள் மீதும் ஒரே நேரத்தில் வான்வெளித் தாக்



குதல்களைத் தொடங்கியுள்ளது. பெய்ரூட் நகரம் முழுவதும் கரும்புகை சூழ்ந்துள்ள பதற்றமான காட்சிகள் வெளியாகி யுள்ளன. இதற்கிடையில், இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப் பும் 3 இராணுவத் தளங்களைக் குறிவைத்துத் தாக்கியுள்ளது.

### ஆயுதப் பற்றாக்குறையில் அமெரிக்கா:

ஒருபுறம் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க உள்நாட்டு அரசியலிலும் இது புயலைக் கிளப்பியுள்ளது. அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், போரை எதிர்கொள்ள அமெரிக்காவிடம் போதிய நவீன ஆயுதங்கள் கையிருப்பில் இல்லை என வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னாள் அதிபர் ஜோ பைடன் உக்ரைனுக்கு ஆயுதங்களை நன்கொடையாக அள்ளிக் கொடுத்ததே இந்த நிலைக்குக் காரணம் என அவர் தனது அதிருப்தியைப் பதிவு செய்துள்ளார். சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத் மற்றும் அல்-கார்ஜ் நகரங்களை நோக்கிப் பறந்து வந்த எட்டு ஆளில்லா விமா னங்களைச் சவுதி இராணுவம் நடுவானிலேயே இடைமறித்து அழித்துள்ளது.

**எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# டிரம்பின் போர் வெற்றிப் பெருமிதம்! ஈரானின் போர் நிறுத்த நிபந்தனை சாத்தியமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா-

12.03.2026

நாங்கள் வெற்றி பெற்றோம் என ஈரானுடனான போரில் டிரம்ப்பின் வெற்றி அறிவிப்புகள் யதார்த்தத்தை மீறுகின்றனவாகவே இருக்கின்றன. எப்போதும் அமெரிக்க ஜனாதிபதி தனது தவறுகளை அரிதாகவே ஒப்புக்கொள்வார். இம்முறையும் அதுவே நடந்துள்ளது. ஆனால் ஈரானுடன் தேவையற்ற போர் என சிஐஏ எச்சரிக்கை விடுத்துள்ளது.

## டிரம்ப்பின் வெற்றிக் கொக்கரிப்பு:

ஈரானுடனான போர் தொடங்கியதில் இருந்து டிரம்ப் வெளியிடும் செய்திகள் அனைத்தும் முரண்பாடகவே உள்ளது. அரசியல் பயணம் தொடங்கி அவரது ஆட்சியிலும் வாய்ச்சவாடல் எப்போதும் உண்மைக்கு புறம்பானதாகவே இருக்கும். ஈரான் மீதான அமெரிக்க தாக்குதலில் அவரது அணுகுமுறை இம்முறையும் வேறுபட்டதல்ல.

என்னதான் டிரம்ப் வெற்றிக் கொக்கரிப்பை கூவினாலும், மத்திய கிழக்கு முழுவதும் ஈரான் புதிய தாக்குதல்களை நடத்தி வருகிறது.

எப்போதும் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தான் வெற்றி பெறுவதாகச் சொல்லும் பழக்கம் கொண்டவர். அவர் பொருளாதாரம் பற்றி விவாதித்தாலும் சரி அல்லது சர்வதேச அரசியல் பற்றி விவாதித்தாலும் சரி, அடிப்படை உண்மைகள் மிகவும் நுணக்கமாக இருந்தாலும் சரி, அவர் பெரும்பாலும் வெற்றியை அறிவிக்கும் வழக்கம் கொண்டவர் என்பது வெளிப்படை.

ஆனால் ஈரானுடனான நடந்து வரும் போரை "வெற்றி" என்று அவர் அடிக்கடி கூறுவது குறிப்பிடத்தக்க அபாயங்களை உருவாக்கி இருக்கிறது என பென்டகன் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோதலை நிர்வகிப்பது குறித்த பொதுமக்களின் கருத்துக்கு மட்டுமல்ல, அவரது பரந்த இராஜதந்திர உத்திக்கும் இது பாரிய தோல்வியை விளைவுக்கும் சாத்தியங்கள் உள்ளன.

இந்த போரின் முதல் நாளிலேயே அமெரிக்க வெற்றி பெற்றது என்று டிரம்ப் கூறியுள்ளார். ஈரானில் வான்வழித் தாக்குதல்கள் தொடங்கிய 12 நாட்களுக்குப் பிறகும் அதனையே டிரம்ப் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். "நாங்கள் வென்றோம். நாங்கள் பந்தயத்தில் வெற்றி பெற்றோம். முதல் ஒரு மணி நேரத்திலேயே ஈரான் முடிந்துவிட்டது" என டிரம்ப் கூறிய வார்த்தைகள் உலகளவில் நகைப்புக்கிடமாகி உள்ளது.

## வான் தாக்குதல்கள் தீவிரம்:

அதேவேளை அமெரிக்க - இஸ்ரேலிய வான் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ள நிலையில், ஈரான் வெளியிட்டுள்ள போர் நிறுத்த நிபந்தனைகள் வெறுமனே ஒரு பேச்சுவார்த்தை ஆவணமாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக அது அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை போல் தெரிகிறது என ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

போரை நிறுத்த ஈரான் முன்வைத்துள்ள கோரிக்கைகள் ஒவ்வொன்றும் வளைகுடா நாடுகளின் அரசியல் களத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தெஹ்ரான் அரசின் முக்கிய போர் நிறுத்த நிபந்தனைகள் தொடர்பாக அரபு நாடுகள் தங்கள் நிலைப்பாட்டை இன்னும் தெரிவிக்கவில்லை. ஆனால் பல ஆசிய, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்துள்ளன.

## ஈரானின் பதில் தாக்குதல் வியூகம்:

ஈரானின் பதில் தாக்குதல் என்பது போரை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு வியூகத்தை பிரதிபலிக்கிறது. போரில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளை தோற்கடிக்க முயற்சிப்பதற்கு பதிலாக, ஈரான் மோதலை புவியியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் விரிவுபடுத்துவதாகத் தெரிகிறது.

ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் மட்டுமல்லாமல், ஈரான் அரசின் ஆதரவு பெற்ற குழுக்கள் பல்வேறு கட்ட தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன. லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலிய படைகளுக்கு எதிராக துப்பாக்கி ஏந்தியுள்ளது. அதே நேரத்தில் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஈரான் ஆதரவு பெற்ற போராளி குழுக்கள் மேற்கத்திய இராணுவ நிலைகள் குறி வைத்து தகர்த்து வருகின்றன.

இந்த முறை ஈரான் கணிக்க முடியாத தாக்குதலை நம்பியிருப்பதை காட்டுவதாக சர்வதேச ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். போர்க்களத்தை விரிவுபடுத்துவதன் மூலம், எதிரிகளுக்கு அரசியல் மற்றும் பொருளாதார பேரிழப்புகளை ஏற்படுத்த முடியும் என ஈரான் நம்புகிறது.



**ஈரான் போரின் முதல் நாளிலேயே அமெரிக்க வெற்றி பெற்றது என்று டிரம்ப் கூறியுள்ளார். ஈரானில் வான்வழித் தாக்குதல்கள் தொடங்கிய 12 நாட்களுக்குப் பிறகும் அதனையே டிரம்ப் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். "நாங்கள் வென்றோம். நாங்கள் பந்தயத்தில் வெற்றி பெற்றோம். முதல் ஒரு மணி நேரத்திலேயே ஈரான் முடிந்துவிட்டது" என டிரம்ப் கூறிய வார்த்தைகள் உலகளவில் நகைப்புக்கிடமாகி உள்ளது**

## ஈரான் போர் நிறுத்த நிபந்தனை

ஈரானின் போர் நிறுத்த நிபந்தனைகளாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் (ICC) ஒப்படைக்க வேண்டும், இஸ்ரேல் தனது படைகளை அக்டோபர் 7-க்கு முந்தைய எல்லைகளுக்குத் திரும்பப் பெற வேண்டும் என்பன முக்கியமானவையாகும்.

அத்துடன் அரபு மண்ணில் உள்ள அனைத்து அமெரிக்க இராணுவ தளங்களும் உடனடியாக அகற்றப்பட வேண்டும். இதுவரை விதிக்கப்பட்ட அனைத்து பொருளாதாரத் தடைகளுக்கும் ஈரான் இழப்பீடு பெற வேண்டும் மற்றும் அதிபர் டிரம்ப், ஈரானியத் தலைவரிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என ஈரான் அரசு வலியுறுத்தியுள்ளது.

மற்றொரு முக்கிய நிபந்தனையாக அதிபர் டிரம்ப்பின் காசா திட்டத்தை (Gaza plan) இரத்து செய்ய வேண்டும். ஈரான் மீதான அனைத்து பொருளாதாரத் தடைகளையும் நீக்கி, முடக்கப்பட்ட நிதியைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஈரானின் அணுசக்தி உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். லெபனான், சிரியா மற்றும் ஏமன் நாடுகளிலிருந்து (வெளிநாட்டுப் படைகள்) வெளியேற வேண்டும். அதிபர் டிரம்ப், அயதுல்லா காமேனியிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று ஈரான் போர் நிறுத்த நிபந்தனைகளை விதித்துள்ளது.

அத்துடன் வளைகுடாவில் நீண்ட காலமாப பொருளாதார தடைகளை எதிர்த்து போராடிய ஈரான், இதுவரை விதிக்கப்பட்ட ஒவ்வொரு பொருளாதாரத் தடைக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளது.

2026-ஆம் ஆண்டின் மார்ச் மாதம் உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக மாறியுள்ளது. இப்போது கத்தார் நாட்டில் உள்ள அமெரிக்காவின் அதிநவீன ரேடார் அமைப்புகளை ஈரான் செயலிழக்கச் செய்ததும், ஹார்முஸ் ஜலசந்தியை (Strait of Hormuz) தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததும் மத்திய கிழக்கின் அதிகார மையத்தையே மாற்றி அமைத்துள்ளது.

## ஈரான் வெல்ல முடியாத சக்தியா?

பொருளாதாரத் தடைகள், ஏவுகணைத் தாக்குதல்கள் என அனைத்தையும் தாண்டி, தற்போது தங்களை ஒரு "வெல்ல முடியாத சக்தியாக" அவர்கள் கருதுகிறார்கள். அத்துடன் அவர்கள் எதற்கும் துணிந்துவிட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. மேலும் அமெரிக்காவின் நவீன போர் தொழில்நுட்பங்களையே (Radar blinding) முடக்கிய பிறகு, அவர்களுக்கு இந்த நிபந்தனைகள் சாத்தியமற்றதாகத் தெரியவில்லை.

தற்போது உலகம் ஒரு விளிம்பில் நிற்கிறது. ஈரானின் இந்த நிபந்தனைகளை ஏற்றால், அது பல தசாப்தங்களாக நிலவி வந்த மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும். மறுபுறம், இதை நிராகரித்தால் உலகளாவிய எரிசக்தி விநியோகம் (Energy Supply) முடங்கி, உலகப் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியைச் சந்திக்கும் அபாயம் உள்ளது.

ஈரான் இப்போது வெறும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை அவர்கள் மேற்குலக நாடுகளின் கைகளை முறுக்கி தங்களுக்குச் சாதகமாகச் செயல்பட வைக்கிறார்கள். மேற்குலகின் மிரட்டல் காலம் முடிந்துவிட்டது, இப்போது வளைகுடாவில் ஈரான் அரசியலை தீர்மானிக்கும் காலம் தொடங்கிவிட்டது என்றும் சில அரபு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிபந்தனைகளை அமெரிக்கா அப்படியே ஏற்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், இவற்றை முழுமையாக நிராகரிக்கவும் முடியாத ஒரு இக்கட்டான சூழலில் உலகம் இருக்கிறது.

## தேவையற்ற போரென சிஐஏ எச்சரிக்கை!

சிஐஏ முன்னாள் இயக்குநர் ஈரான் மீது அமெரிக்க தாக்குதல் குறித்து மிகவும் கடுமையாக விமர்சித்துள்ளார். ஜோன் ஓ பிரன்னன் (John O. Brennan) நடைபெறும் யுத்தம் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய தவறு என்றும். அமெரிக்கா இந்த நூற்றாண்டில் இரண்டு மிகப்பெரிய தவறுகளை செய்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஒன்று 2003 இல் நடைபெற்ற ஈராக் மீதான யுத்தம், மற்றொன்று இப்போது ஈரான் மீது நடத்தப்படும் தாக்குதல். அவரின் கருத்துப்படி, ஈராக் போரின் தவறை மீண்டும் அமெரிக்க செய்யும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த போர் தேவையற்றது, இந்த தாக்குதல் தேவையற்ற உயிரிழப்புகளை அதிகமாக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார். மேலும் டிரம்ப் அரசாங்கம் காரணங்களை உருவாக்குகிறது என்பது அவரின் குற்றச்சாட்டாகும். ஈரானால் உடனடி ஆபத்து (imminent threat) இல்லை. ஆனாலும் போரை நியாயப்படுத்த அமெரிக்க நிர்வாகம் காரணங்களை உருவாக்குகிறது. இதுவே இஸ்ரேல் மேற்கொள்ளும் அரசியல் தாக்கம் காரணமாக அமெரிக்க தேவையற்ற போரை நடாத்துகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு நீண்ட காலமாக ஈரான் மீது தாக்குதல் நடத்த விரும்பினார். அவர் டிரம்பை இந்தப் போர் நடவடிக்கைக்கு இழுத்துள்ளார். இதனால் மத்திய கிழக்கு நிலைமை மேலும் மோசமாகும் என்பது அவரின் எச்சரிக்கையாகும்.

ஈரான் ஒரு பெரிய நாடும், 90 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். இந்த போர் பல வருடங்களுக்கு நீடித்தால், பிராந்திய குழப்பத்தை உருவாக்கலாம். ஈரான் போர் ஒரு பெரிய அரசியல் தவறு.

இது 2003 ஈராக் போரின் போதான தவறுகளை மீண்டும் அமெரிக்கா செய்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த போர் தேவையற்றது. போருக்கான காரணங்கள் இஸ்ரேலிய அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்டவை. மத்திய கிழக்கில் நீண்டகாலக் குழப்பம் ஏற்படும் வகையில் இந்த போர் தொடங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.


ஈகைச்சுடர்
அன்னை பூபதி
தமிழீழத்தில் அமைதிப்படை என்ற போர்வையில்
இந்தியப்படை புரிந்திட்ட அடக்குமுறைக்கு எதிராக
19.03.1988 அன்றிலிருந்து 19.04.1988
வரையிலான சாகும்வரை உண்ணா நோன்புப்
போராட்டத்தில் உயிர் நீத்த நாட்டுப்பற்றாளர்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்